லெனின்

மார்க்ஸ் • எங்கெல்ஸ் மார்க்ஸியம்



- 5 MAR 1985
MADRAS



Rs. 2-50

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

5 MAR 1985
MADRAS

வி. இ. லெனின்

மார்க்ஸ் எங்கெல்ஸ் மார்க்ஸியம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ • 1976

பதிப்பாளர் குறிப்பு

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் குழுவைச் சேர்ந்த மார்க்ஸிய-லெனினியக் கழகம் வெளியிட்ட வி. இ. லெனின், நூல் திரட்டு, ஐந்தாம் பதிப்பிலிருந்து இந்த மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

В. И. ЛЕНИН

МАРКС — ЭНГЕЛЬС — МАРКСИЗМ

На тамильском языке

© தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1976

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-580}{014(01)-76}$ 1129—75

பொருளடக்கம்

கார்ல் மார்க்ஸ் 5

ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் 62

மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் 77

மார்க்ஸியமும் திருத்தல்வாதமும் 87

''பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்'' எனும் நூலிலிருந்து 101

மார்க்ஸியத்தினுடைய வரலாற்று வளர்ச்சியின் சில இயல்புகள் 108

வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம் 117

''சோஷலிஸப் புரட்சியும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும்'' (ஆய்வுரைகள்) எனும் கட்டுரையிலிருந்து 123

''போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்'' எனும் நூலிலிருந்து 133

''அரசும் புரட்சியும்'' எனும் நூலிலிருந்து 145

'' 'இடதுசாரி' கம்யூனிஸம்—இளம் பருவக் கோளாறு'' எனும் நூலிலிருந்து 174

இளைஞர் கழகங்களின் பணிகள் 179

''போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து'' எனும் கட்டுரையிலிருந்து 206

பதிப்பாளர் குறிப்புகள் 223

பெயர்க் குறிப்பகராதி 253

கார்ல் மார்க்ஸ்

(மார்க்ஸியத்தைப் பற்றிய விரிவுரையுடன்
அமைந்த வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்)

- 5 MAR 1986
MADRAS

முன்னுரை

இன்று தனியாக அச்சேறி வெளிவரும் கார்ல் மார்க்ஸ் பற்றிய கட்டுரையை நான் (என் நினைவுக்கு எட்டியவரையில்) 1913ம் ஆண்டில் கிரனுட் என்ஸைக்லோபீடியா என்ற கலைக் களஞ்சியத்திற்காக எழுதினேன். அந்தக் கட்டுரையின் முடிவில் மார்க்ஸ் பற்றி வெளிவந்த, பெரும்பாலும் வெளிநாடுகளைச் சேர்ந்த நூல்களை ஓரளவுக்கு விரிவாகக் குறிக்கும் பட்டியலை யும் இணைத்திருந்தேன். இந்தப் பதிப்பில் இந்த நூல் பட்டி யல் விடப்பட்டுள்ளது. மார்க்ஸ் பற்றிய கட்டுரையின் இறு திப் பகுதி அவருடைய புரட்சிகரமான போர்த்தந்திரங்களை விளக்கும் பகுதியாகும். தணிக்கை முறையை உத்தேசித்துக் கலைக்களஞ்சியத்தின் ஆசிரியர்கள் அந்த இறுதிப் பகுதியைத் தாங்களாகவே வெட்டியெடுத்து விட்டார்கள். துரதிர்ஷ்ட வசமாக அந்தப் பகுதியை மீண்டும் வெளியிட இயலாத நிலைமையில் இருக்கிறேன். காரணம், அதன் முதல் நகல் கிராக்கவ் நகரில் அல்லது ஸ்விட்சர்லாந்தில் எங்கோ என் தஸ்தாவேஜுகளுடன் தங்கிவிட்டது. ஒன்றுதான் எனக்கு நினைவு இருக்கிறது: அக்கட்டுரையின் கடைசிப் பகுதியில், மற்ற விஷயங்களைச் சொன்னது போக, 1856ம் ஆண்டு ஏப்ரல் 16ம் தேதி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத் திலுள்ள ஒரு வாசகத்தை மேற்கோள் காட்டியிருந்தேன். அதில் மார்க்ஸ் எழுதியதாவது: ''ஜெர்மனியின் நிலைமை யெல்லாம் விவசாயப் போர் இரண்டாம் தடவையாக ஏற் பட்டுப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பின்பலம் அளிக்க வாய்ப்பு ஏற்படுமா என்பதைத்தான் பொறுத்திருக்கிறது. அப்படி ஏற்படுமேயானால் நிலைமை அற்புதமாக இருக்கும்.'' சோஷலிஸத்துக்கு முற்றுகத் துரோகம் செய்வதிலும், முத லாளி வர்க்கத்தின் பக்கம் கட்சி மாறிச் சென்று விடுவதிலும் இன்று இறங்கியிருக்கும் நமது மென்ஷிவிக்குகள் இதைத் தான் 1905ம் ஆண்டுமுதல் புரிந்து கொள்ளத் தவறினார்கள்.

நி. லெனின்

மாஸ்கோ,
1918, மே 14

கார்ல் மார்க்ஸ் (ரைனிஷ் பிரஷ்யாவிலுள்ள) டிரியர் நகரில் 1818ம் ஆண்டு மே மாதம் 5ம் தேதியன்று பிறந்தார். அவரது தகப்பனுர் ஒரு வழக்குரைஞர், ஒரு யூதர்; 1824ம் ஆண்டில் புரோட்டஸ்டென்ட் மதத்தில் சேர்ந்தார். இக் குடும்பம் வசதியான நிலையில் இருந்தது; நாகரிகப் பண்பாடு மிக்கதாய் இருந்தது. ஆனுல் புரட்சி மனப்பான்மை கொண் டதல்ல. டிரியர் நகரில் உயர்நிலைப் பள்ளியில் படிப்பை முடித்த பிறகு சட்ட இயலைப் படிப்பதற்காக மார்க்ஸ் முதலில் பான் பல்கலைக்கழகத்திலும் பிறகு பெர்லின் பல் கலைக்கழகத்திலும் சேர்ந்தார். ஆனுல் முக்கியமாய் வரலா றும் தத்துவஞானமும் பயின்றுர். 1841ம் ஆண்டில் படிப்பை முடித்து, எபிக்கூரஸ் தத்துவஞானத்தைப் பற்றி பல்கலைக் கழகப் பட்டத்திற்கு வேண்டிய தமது ஆராய்ச்சியுரையைச் சமர்ப்பித்தார். அந்தக் காலத்தில் தமது கருத்துப் போக்கு களில் மார்க்ஸ் ஹெகல் வகைப்பட்ட கருத்துமுதல்வாதியாக இருந்தார். (புரூனே பௌவர் என்பவரும் மற்றவர்களும் சேர்ந்திருந்த) ''இடதுசாரி ஹெகல்வாதிகளின்'' குழுவில் மார்க்ஸும், பெர்லினில் இருக்கையில், சேர்ந்திருந்தார். ஹெகலுடைய தத்துவஞானத்திலிருந்து நாத்திக முடிவுகளுக் கும் புரட்சிகரமான முடிவுகளுக்கும் வர இந்தக் குழுவினர் முயன்று வந்தார்கள்.

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பிறகு மார்க்ஸ் பான் நகருக்குச் சென்றுர். பேராசிரியராய்ப் பணியாற்றலாம் என்று நினைத்துத்தான் அவர் அங்குச் சென்றுர். ஆனுல் ஜெர்மன் அரசாங்கத்தின் கொள்கை பிற்போக்கானதாக இருந்தது. 1832ல் அது லுத்விக் ஃபாயர்பாகைப் பேராசிரி

யர் பதவியிலிருந்து நீக்கியது; மீண்டும் அந்தப் பல்கலைக் கழகத்துக்கு 1836ல் அவர் திரும்பி வருவதை அனுமதிக்க மறுத்துவிட்டது. இளம் பேராசிரியராகிய புரூனோ பௌவர் பான் பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்தாதபடி அது 1841ல் தடை செய்தது. இந்தப் பிற்போக்கான கொள்கையின் காரணமாக, மார்க்ஸ் ஆராய்ச்சித் துறையில் பணியாற்ற லாம் என்ற கருத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. அந்தக் காலத்தில் இடதுசாரி ஹெகல்வாதக் கருத்துக்கள் ஜெர்மனி யில் வெகுவேகமாக முன்னேறிக்கொண்டிருந்தன. குறிப்பாக 1836ம் ஆண்டுக்குப் பின் லுத்விக் ஃபாயர்பாக் இறையியலை விமர்சிக்கவும் பொருள்முதல்வாதத்தின் பக்கம் திரும்ப வும் தொடங்கினார். 1841ல் அவரிடம் பொருள்முதல்வாதம் மேலோங்கி விட்டது (அவர் எழுதிய கிறித்தவ மதத்தின் சாரம் என்ற நூலைப் பார்க்க). எதிர்காலத் தத்துவஞானத் தின் கோட்பாடுகள் என்று தலைப்பிட்ட அவருடைய நூல் 1843ல் வெளியாயிற்று. இந்த நூல்களைப் பற்றி எங்கெல்ஸ் பின்னால் எழுதும் போது, இவை "தளை அறுத்து விடுவிப்பன வாய் இருந்ததை அவரவர் தாமே அனுபவித்து உணர வேண்டிய ஒன்றாகும்" என்று எழுதினார். "நாங்கள் எல்லோ ரும்" (அதாவது, மார்க்ஸ் உள்ளிட்ட இடதுசாரி ஹெகல் வாதிகள்) "உடனே ஃபாயர்பாக்வாதிகளானோம்"[1] என்கி றார் எங்கெல்ஸ். அந்தக் காலத்தில் இடதுசாரி ஹெகல்வாதி களுடன் சில விஷயங்களில் நெருங்கியிருந்த தீவிரவாத ரைனிஷ் முதலாளித்துவக் கருத்தினர் (பூர்ஷ்வாக்கள்) கொலோன் நகரில் ஓர் எதிர்க்கட்சிப் பத்திரிகையை நிறு வினர். அதன் பெயர் ரைனிஷ் ஸைடுங் என்பதாகும் (1842 ஜனவரி 1ம் தேதி அதன் முதல் இதழ் வெளியாயிற்று). அதில் முக்கிய விஷயதானம் அளிப்பவர்களாக இருக்கும்படி மார்க் ஸும் புரூனோ பௌவரும் அழைக்கப்பட்டார்கள். 1842 அக்டோபர் மாதத்தில் மார்க்ஸ் அதன் தலைமை ஆசிரியராகி பான் நகரிலிருந்து கொலோன் நகருக்குப் போனார். மார்க்ஸ் ஆசிரியராய் இருந்த போது அந்தப் பத்திரிகையின் புரட்சிகர மான ஜனநாயகப் போக்கு மேலும் மேலும் வெளிப்படை யாயிற்று. அரசாங்கம் அந்தப் பத்திரிகையை இரட்டைத் தணிக்கைக்கும் மும்முறைத் தணிக்கைக்கும் முதலில் உட் படுத்தி, பிறகு 1843 ஜனவரி 1ம் தேதியன்று அதை அடி

யோடு தடை செய்து விடுவதென்று முடிவு செய்தது. அந்தத் தேதிக்கு முன்பே மார்க்ஸ் தமது ஆசிரியர் பதவியை விட்டு விலக வேண்டியதாயிற்று. ஆனல் அவர் விலகியுங்கூட அந்தப் பத்திரிகையைக் காப்பாற்ற முடியவில்லை. 1843 மார்ச்சு மாதத்தில் அது மூடப்பட்டுவிட்டது. ரைனிஷ் ஜைடுங்குக்கு மார்க்ஸ் எழுதிய முக்கியமான கட்டுரைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளோடுகூட (பார்க்க: நூல் பட்டியல்)[2] மோசெல் பள்ளத்தாக்கில் திராட்சை பயிரிடும் விவசாயிகளின் நிலைமையைப் பற்றிய ஒரு கட்டுரையையும்[3] எங்கெல்ஸ் குறிப்பிடுகிருர். பத்திரிகை வேலை, அரசியல் பொருளாதாரத் துறையில் அவருக்குப் போதிய பழக்கம் இல்லை என்று மார்க்ஸுக்குக் காட்டியது. அவர் அதைக் கண்ணுங்கருத்துமாகப் பயில்வதிலே முனைந்தார்.

1843ம் ஆண்டில் கிரைட்ஸ்நாக் நகரில் ஜென்னி வான் வெஸ்ட்ஃபாலென் என்ற மங்கையை மார்க்ஸ் மணம் புரிந்தார். பிள்ளைப் பிராயத்திலேயே அவ்விருவரும் நண்பர்களாக இருந்தவர்கள்; மார்க்ஸ் மாணவராக இருந்த காலத்திலேயே இருவரும் மண உறுதி ஒப்பந்தம் செய்திருந்தனர். அவர் மனைவியார் பிரஷ்யப் பிரபுத்துவ வம்சத்தின் ஒரு பிற்போக்கான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தமையனர் மிகப் பிற்போக்கான கட்டமான 1850-58ல் பிரஷ்யாவின் உள்நாட்டு அமைச்சராக இருந்தார். 1843 இலையுதிர் காலத்தில் மார்க்ஸ் பாரிஸ் நகருக்குச் சென்ருர். ஆர்னல்ட் ரூகே (பிறப்பு 1802, மறைவு 1880; ஓர் இடதுசாரி ஹெகல்வாதி; 1825-30ல் சிறைவாசம்; 1848க்குப் பின் அரசியல் காரணங்களுக்காக நாடுகடத்தப்பட்டவர்; 1866-70க்குப் பின் பிஸ்மார்க்கின் ஆதரவாளர்) என்பவருடன் சேர்ந்து தீவிரப் போக்குள்ள ஒரு சஞ்சிகையை வெளிநாட்டில் வெளியிடுவதற்காகத்தான் மார்க்ஸ் பாரிஸுக்குப் போனர். டேய்ச்-பிரான்சோசிஷ் யார்பூகர் என்ற இந்தச் சஞ்சிகையின் முதல் இதழ் மட்டும்தான் வெளியாயிற்று. ஜெர்மனியில் இரகசியமாக அந்தச் சஞ்சிகையை வினியோகம் செய்வதிலிருந்த கஷ்டத்தின் காரணமாகவும், ரூகேயுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டதின் காரணமாகவும் அந்தச் சஞ்சிகை நிறுத்தப்பட்டது. அதில் மார்க்ஸ் வரைந்த கட்டுரைகளில் அவர் ஏற்கெனவே ஒரு புரட்சியாளராகக் காணப்



Karl Marx

படுகிறார். ''ஆயுதங்களின் விமர்சனம்''[4] அடங்கலாய் ''நடப்பில் இருந்து வருகிற எல்லாவற்றையும் ஈவிரக்கமின்றி விமர்சனம் செய்ய வேண்டும்'' என்று வாதிக்கிறார். பொது மக்களுக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் வேண்டுகோள் விடுக்கிறார்.

1844 செப்டம்பர் மாதத்தில் ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் சில நாட்கள் தங்குவதற்கு என்று பாரிஸுக்கு வந்தார். அது முதலாய் அவர் மார்க்ஸின் உயிருக்குயிரான நண்பரானார். பாரிஸில் இருந்த புரட்சிகரக் குழுக்களின் கொந்தளிப்பான அன்றைய வாழ்வில் இருவரும் மிகத் தீவிரமாகப் பங்கு கொண்டார்கள் (அந்நாளில் புரூதோனின் போதனை சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தது; 1847ல் வெளிவந்த மெய்யறிவின் வறுமை என்ற தமது நூலிலே மார்க்ஸ் இதைத் தகர்த்தெறிந்தார்). சிறு முதலாளித்துவ சோஷலிஸத்தின் பல்வேறு போதனைகளைத் தீவிரமாக எதிர்த்துப் போர் புரிந்தபடியே புரட்சிகரமான பாட்டாளி வர்க்க சோஷலிஸத்தின் அல்லது கம்யூனிஸத்தின் (மார்க்ஸியத்தின்) தத்துவத்தையும் போர்த்தந்திரங்களையும் உருவாக்கினார். நூல்பட்டியலில் 1844-48 காலப் பகுதியைச் சேர்ந்த மார்க்ஸின் நூல்களைப் பார்க்க. பிரஷ்ய அரசாங்கத்தின் உறுதியான கோரிக்கையின் பேரில் மார்க்ஸ் ஓர் ஆபத்தான புரட்சியாளர் என்று 1845ல் பாரிஸ் நகரிலிருந்து நாடுகடத்தப்பட்டார். அவர் பிரஸ்ஸெல்ஸ் நகரம் போய்ச் சேர்ந்தார். 1847 வசந்த காலத்தில் மார்க்ஸும் எங்கெல்ஸும் ''கம்யூனிஸ்டுச் சங்கம்''[5] என்ற இரகசியமான பிரச்சார சங்கத்தில் சேர்ந்தார்கள். (லண்டன் மாநகரில் 1847 நவம்பர் மாதத்தில் நடந்த) அச்சங்கத்தின் இரண்டாம் பேராயத்தில் இருவரும் மிக முக்கியமான பங்கு கொண்டு, அச்சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் புகழ் பெற்ற கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை எழுதி முடித்தனர். அது 1848 பிப்ரவரி மாதத்தில் வெளியாயிற்று. இந்த நூல் மாமேதைக்குரிய தெளிவுடனும் ஒளிச் சிறப்புடனும் ஒரு புதிய உலகக் கண்ணோட்டத்தை விவரிக்கிறது; சமுதாய வாழ்வுத் துறையையும் அணைத்து நிற்கும் முரணற்ற பொருள்முதல்வாதம், வளர்ச்சியைப் பற்றிய மிகவும் முழுமையான ஆழ்ந்த போதனையான இயக்கவியல், வர்க்கப் போராட்டத்தைப் பற்றியும், புதிய, கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் படைப்பாளி என்கிற வகையில் பாட்டாளி

வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, புரட்சிகரமான பாத்திரத்தைப் பற்றியும் அமைந்த ஒரு தத்துவம் ஆகியவை இந்த உலகக் கண்ணோட்டத்தில் அடங்கியவை.

1848 பிப்ரவரி புரட்சி[6] மூண்ட போது மார்க்ஸ் பெல்ஜியத்திலிருந்து நாடுகடத்தப்பட்டார். அவர் பாரிஸுக்குத் திரும்பி வந்து, மார்ச்சு மாதப் புரட்சிக்குப்[7] பிறகு அங்கிருந்து ஜெர்மனிக்கு, கொலோன் நகருக்குப் போனார். அங்கே 1848 ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து 1849 மே பத்தொன்பதாம் தேதிவரை நியூ ரைனிஷ் ஸைடுங் என்ற பத்திரிகை வெளியாகியது. மார்க்ஸ்தான் அதன் தலைமை ஆசிரியர். 1848-49ம் ஆண்டுகளில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகளின் போக்கு இப்புதிய தத்துவத்தை மிகச் சிறந்த முறையில் நிரூபித்து உறுதிப்படுத்தியது. அதே போல் அக்காலம் முதல் எல்லா உலக நாடுகளிலும் நிகழ்ந்த பாட்டாளி வர்க்க, ஜனநாயக இயக்கங்கள் எல்லாம் அதை மெய்ப்பித்து உறுதிப்படுத்தியுள்ளன. வெற்றி பெற்ற எதிர்ப்புரட்சி முதலில் மார்க்ஸ் மீது வழக்குத் தொடரத் தூண்டிவிட்டது (1849 பிப்ரவரி 9ம் தேதி வழக்கு தள்ளப்பட்டது); பிறகு அவரை ஜெர்மனியிலிருந்து (1849 மே 16ம் தேதியன்று) நாடுகடத்தியது. மார்க்ஸ் முதலில் பாரிஸுக்குச் சென்றார். அங்கே 1849 ஜூன் 13ம் தேதி நடந்த ஆர்ப்பாட்டத்துக்குப்[8] பின்னால் மீண்டும் நாடுகடத்தப்பட்டார். பிறகு அவர் லண்டன் நகருக்கு வந்தார். மறைவெய்தும் நாள்வரை அவர் லண்டனிலேயே வாழ்ந்து வந்தார்.

அரசியலுக்காக நாடுகடத்தப்பட்டு அவர் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் கடுமையானது. (1913ல் வெளியான) மார்க்ஸ், எங்கெல்ஸ் கடிதப்போக்குவரத்து[9] இதைத் தெளிவாகக் காட்டுகிறது. மார்க்ஸும் அவர் குடும்பத்தினரும் கொடிய வறுமையில் சிக்கித் துன்பப்பட்டார்கள். எங்கெல்ஸ் மட்டும் தன்னலமறுப்புடன் எப்போதும் பண உதவி செய்து கொண்டே இருந்திராவிட்டால் மார்க்ஸ் மூலதனம் என்ற நூலை எழுதி முடித்திருக்க முடியாது என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாதபடி அவர் வறுமையால் மடிந்திருப்பார். மேலும் சிறு முதலாளித்துவ போக்கான சோஷலிஸத்தின், பொதுவாகவே பாட்டாளி வர்க்கச் சார்பற்ற சோஷ

லிஸத்தின் போதனைகளும் தத்துவப் போக்குகளும் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலைமையில் மார்க்ஸ் ஓர் இடையருத, ஈவிரக்கமற்ற போர் நடத்திக் கொண்டிருக்கும்படி நிர்ப்பந்திருக்கப்பட்டார்; சில சமயங்களில் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக, வெறித்தனமாக, அவரைத் தனிப்பட்ட முறையில் தாக்கும்படியான தாக்குதல்களையும் (*Herr Vogt*)[10] அவர் முறியடிக்க வேண்டியிருந்தது. அரசியலுக்காக நாடு கடத்தப்பட்டுள்ளவர்களின் வட்டாரங்களிலிருந்து ஒதுங்கி இருந்து கொண்டு மார்க்ஸ் தமது பொருள்முதல்வாதத் தத்துவத்தை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நூல்களில் (பார்க்க: நூல் பட்டியல்) விவரித்தார்; அரசியல் பொருளாதாரத்தை ஆராய்ந்து அறிவதில் முதன்மையாகத் தமது முயற்சிகளை ஈடுபடுத்தி வந்தார். இந்த விஞ்ஞானத்தை மார்க்ஸ் புரட்சிகரமானதாக்கினர் ("மார்க்ஸின் போதனை" என்கிற பகுதியைக் கீழே பார்க்க.) அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு (1859) என்ற நூல் வாயிலாகவும், மூலதனம் (முதல் தொகுதி, 1867) என்ற நூல் வாயிலாகவும் இதைச் செய்தார்.

1850-60 வருடங்களின் இறுதிக் காலமும் 1860-70க்கு இடைப்பட்ட காலகட்டமும் ஜனநாயக இயக்கங்கள் மீண்டும் தலைதூக்கிய ஆண்டுகளாகும். அது மார்க்ஸை மறுபடியும் நடைமுறை இயக்க வேலைகளில் ஈடுபடும்படி செய்தது. 1864ல் (செப்டம்பர் 28ம் தேதி) லண்டன் நகரில் "சர்வதேசத் தொழிலாளர் சங்கம்"—இதுதான் புகழ்பெற்ற முதலாவது அகிலம்—நிறுவப்பட்டது. மார்க்ஸ் இச்சங்கத்தின் இதயமாகவும் ஆன்மாவாகவும் விளங்கினர். அதன் முதல் அறிக்கையையும்[11] எண்ணற்ற தீர்மானங்களையும், பிரகடனங்களையும், கொள்கையறிக்கைகளையும் அவர்தான் வரைந்தார். பல்வேறு நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தை ஒன்றுபடுத்தியும் (மாஜினி, புரூதோன், பக்கூனின், இங்கிலாந்திலுள்ள மிதவாதத் தொழிற்சங்கவாதம், ஜெர்மனியில் லஸ்ஸால்வாதிகளின் வலதுசாரிப் பக்கமான ஊசலாட்டங்கள் முதலான) பாட்டாளி வர்க்க ரீதியில் அமையாத, மார்க்ஸுக்கு முந்திய சோஷலிஸத்தின் பல்வேறு வடிவங்களைக் கூட்டு நடவடிக்கைப் பாதையில் வழிநடத்திச் செல்ல முயற்சித்தும், இந்தப் பிரிவுகள், போக்குகள் ஆகிய யாவற்றின்

தத்துவங்களையும் எதிர்த்துப் போராடியும், பல்வேறு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திற்கு ஒரே மாதிரியான போர்த்தந்திர முறைகளை மார்க்ஸ் உருவாக்கினார். பாரிஸ் கம்யூன்[12] வீழ்ச்சியுற்றதை (1871) அடுத்தும்—இக்கம்யூனைப் பற்றி மார்க்ஸ் மிகவும் ஆழமாகவும், தெட்டத்தெளிவாகவும், ஒப்பற்றவாறும், பயன்மிக்கதான புரட்சிகரப் பகுத்தாராய்வை அளித்தார் (1871ல் வெளிவந்த பிரான்ஸில் உள்நாட்டுப் போர் என்ற நூலில்)—பக்கூனின்வாதிகள்[13] முதலாவது அகிலத்தைப்[14] பிளவுபடுத்தியதை அடுத்தும் இச்சங்கம் ஐரோப்பாவில் இருந்து வரச் சாத்தியமில்லாமற் போயிற்று. (1872ல்) ஹேக் நகரில் நடந்த அதன் பேராயக் கூட்டத்துக்குப் பிறகு மார்க்ஸ் அதன் பொதுக்குழு (ஜெனரல் கவுன்சில்) நியூயார்க் நகருக்கு மாற்றப்படும்படி செய்தார். முதலாவது அகிலம் தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை நிறைவேற்றிவிட்டது. உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம் அளவிடற்கரிய முறையில் மாபெரும் வளர்ச்சி பெறும் காலப்பகுதிக்கு அது வழிகோலிவிட்டது. இந்தக் காலப்பகுதி உண்மையிலே தொழிலாளர் இயக்கம் விரிவடைந்து வளர்ந்த காலப்பகுதியாகும்; தனித்தனி தேசிய அரசுகளில் திரளான சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சிகள் நிறுவப்பட்ட காலப்பகுதியாகும்.

அகிலத்தில் மார்க்ஸ் ஆற்றிய கடுமையான பணியும், அதைவிடக் கடுமையாக அவர் தத்துவத் துறையில் ஆற்றிய பணியும் அவருடைய உடல்நிலையை அடியோடு பலவீனப் படுத்திவிட்டன. அவர் அரசியல் பொருளாதாரத்துக்குப் புத்துரு அளித்திடும் பணியையும், மூலதனத்தை எழுதி முடிக்கும் பணியையும் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். ஏராளமான புதிய விவரங்களைச் சேகரித்தார், பல மொழிகளை (எடுத்துக் காட்டாக, ருஷ்ய மொழியை) பயின்று வந்தார். ஆனால் அவரது மோசமான உடல்நிலை மூலதனத்தை முடிக்க முடியாதபடி தடுத்துவிட்டது.

1881ம் ஆண்டு டிசெம்பர் 2ம் தேதியன்று அவருடைய மனைவியார் காலமானார். 1883 மார்ச்சு 14ம் தேதியன்று நாற்காலியில் சாய்ந்தவாறே அமைதியோடு மார்க்ஸ் இயற்கை எய்தினார். லண்டனிலுள்ள ஹைகேட் இடுகாட்டில் அவர் தம் மனைவியாருடன் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

லண்டனில் கொடிய வறுமையால் அவர் குடும்பம் அல்லலுற்ற காலத்தில் மார்க்ஸின் குழந்தைகளில் சில இறந்து போயின. மூன்று புதல்வியர் ஆங்கிலேய, பிரெஞ்சு சோஷலிஸ்டுகளை மணந்து கொண்டனர். இப்புதல்வியர் வருமாறு: எலியனோர் ஏவ்லிங், லௌரா லபார்க், ஜென்னி லொங்கே. ஜென்னி லொங்கேயின் மகன் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் அங்கத்தினராக இருக்கிறார்.

மார்க்ஸின் போதனை

மார்க்ஸின் கருத்துக்களின், போதனையின் முழுத் தொகுப்புமுறையே மார்க்ஸியம். 19ம் நூற்றாண்டில் மூன்று முக்கியமான தத்துவப் போக்குகள் இருந்தன. அவை மூன்றும் மனிதகுலத்திடையே முன்னேற்றத்தில் தலைசிறந்த மூன்று நாடுகளைச் சேர்ந்தவையாகும். அவை, மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம், மூலச்சிறப்புள்ள ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பொதுவாக பிரெஞ்சுப் புரட்சிப் போதனைகளுடன் கூடவே பிரெஞ்சு சோஷலிஸம் என்பனவாம். இந்த மூன்று தத்துவப் போக்குகளையும் தொடர்ந்து ஆராய்ந்து அவற்றிற்கு முழுநிறைவு அளித்த மேதைதான் மார்க்ஸ். மார்க்ஸின் கருத்துக்கள் குறிப்பிடத்தக்க முறையில் முரணற்ற தன்மையும் முழுமையும் பெற்றிருப்பவை. அவரது எதிரிகள்கூட இதை ஒப்புக் கொள்கின்றனர். இந்தக் கருத்துக்கள் முழுவதுமாகச் சேர்ந்துதான் நவீன காலத்திய பொருள் முதல்வாதமாகவும் நவீனகாலத்திய விஞ்ஞான சோஷலிஸமாகவும் உள்ளன. இவ்விரண்டும் உலகிலுள்ள நாகரிக நாடுகளிலெல்லாம் தொழிலாளர் இயக்கத்தின் தத்துவமாகவும் வேலைத்திட்டமாகவும் திகழ்கின்றன. இப்படி மார்க்ஸின் கருத்துக்கள் முரணற்ற தன்மையும் முழுமையும் கொண்டிருப்பதனால், மார்க்ஸியத்தின் முதன்மையான உள்ளடக்கமாகிய மார்க்ஸின் பொருளாதாரப் போதனையை விரித்துச் சொல்லுமுன்னர், அவரது உலகக் கண்ணோட்டத்தைப் பற்றிப் பொதுப்படையான கட்டுரையைத் தீட்ட வேண்டிய கடமை நமக்கு ஏற்படுகிறது.

தத்துவஞானப் பொருள்முதல்வாதம்

1844-45 ஆண்டுக் காலத்தில் மார்க்ஸின் கருத்துக்கள் உருவம் பெற்றன. அக்காலம் முதல் அவர் ஒரு பொருள் முதல்வாதி; லு.ஃபோயர்பாக் என்பவரைப் பின்பற்றியவர். ஃபோயர்பாகின் பொருள்முதல்வாதம் போதுமான அளவுக்கு முரண்பாடின்றியும் முழுமை எய்தியும் இருக்கவில்லை என்பது மட்டுமே ஃபோயர்பாகின் பலவீனமாகுமென்று பிற்காலத் திலுங்கூட மார்க்ஸ் கருதினார். ஹெகலின் கருத்துமுதல் வாதத்திலிருந்து மனத் திண்மையுடன் தொடர்பை அறுத்துக் கொண்டு பொருள்முதல்வாதத்தை ஃபோயர்பாக் பிரகடனம் செய்தார்; இந்தப் பொருள்முதல்வாதம் ''ஏற்கெனவே பதினெட்டாம் நூற்றாண்டில், குறிப்பாக பிரான்ஸில், அன்று இருந்து வந்த அரசியல் நிறுவனங்களையும்... மதத் தையும் இறையியலையும் மட்டும் எதிர்த்துப் போர் புரிந்து கொண்டிருக்கவில்லை; மேலும்... எல்லா இயக்கமறுப்பு இயலையும்'' (''நிதானப் புத்தியுள்ள தத்துவஞானம்'' என்பதிலிருந்து திட்டமாக வேறுபட்டிருக்கும்படியான ''போதையேறிய தத்துவ விசாரம்'' என்ற அர்த்தத்தைத் தான் இது இங்கே குறிக்கிறது) ''எதிர்த்து அது போர் புரிந்து கொண்டிருந்தது''. (லிடெராரிஷேர் நாக்லஸ் என்ற சஞ்சி கையில் **புனிதக் குடும்பத்தைப்** பார்க்க.) அதில்தான் ஃபோயர்பாக் உலக வரலாற்றுக்குரிய ''சகாப்தகரமான'' முக்கியத்துவம் பெறுகிறார் என்று மார்க்ஸ் கருதினார். ''ஹெகலுக்கு... சிந்தனையின் இயக்கப் போக்கு என்பது—அதற்கு 'மூலக்கருத்து' என்று பெயர் சூட்டி அதை ஒரு சுயேச்சையான அகப்பொருளாக உருமாற்றிவிடும் அளவுக்கு ஹெகல் சென்றுவிடுகிறார்—எதார்த்த உலகைப் படைக்கும் படைப்பாளியாக, அகப்பொருளாக இருக்கிறது.... அதற்கு மாறாக, கருத்து என்பது மனித மனத்தில் பிரதிபலித்துச் சிந்தனையின் வடிவங்களாக உருவம் பெறும் பொருளாயத உலகமே தவிர வேறு எதுவுமில்லை என்பது என் கருத்து'' என்று மார்க்ஸ் எழுதினார். (மூலதனம், தொகுதி 1, இரண் டாம் பதிப்பின் முன்னுரை.) மார்க்ஸின் இந்தப் பொருள் முதல்வாதத் தத்துவஞானத்தை முற்றாகப் பின்பற்றி எங் கெல்ஸ் விளக்குகையில், **டூரிங்குக்கு மறுப்பு** என்ற நூலில்—

இந்நூலின் கையெழுத்துப் பிரதியை மார்க்ஸ் வாசித்துப் பார்த்திருக்கிறார்—பின்வருமாறு எழுதினார்: ''...உலகின் ஒற்றுமை என்பது அதன் வாழ்நிலையில் அடங்கியிருக்கவில்லை.... உலகின் உண்மையான ஒற்றுமை அதன் பொருளாயதத் தன்மையில் அடங்கியிருக்கிறது. தத்துவஞானம், இயற்கை விஞ்ஞானம் ஆகியவற்றின் நீண்ட நெடிய வளர்ச்சி... இதை நிரூபிக்கிறது....'' ''இயக்கம் என்பது பொருளின் வாழ் முறையாகும். இயக்கம் இல்லாமல் பொருள் எங்கும் என்றைக்கும் இருந்ததில்லை. அதேபோல் பொருளின்றி இயக்கம் என்பதும் எங்கும் என்றைக்கும் இருந்ததில்லை. அப்படி அவை இருக்கவும் முடியாது.... ஆனால்... சிந்தனை, உணர்வு என்பவை என்ன, அவை எங்கிருந்து தோன்றுகின்றன என்று கேள்வி கேட்டுக் கொள்வோமேயானால், அவை மனித மூளை விளைக்கும் பொருட்களே என்பதும், மனிதனே இயற்கையில் அதன் சூழ்நிலையுடன் கூடவே வளர்ந்து வந்திருக்கிற ஒரு விளைபொருள்தான் என்பதும் தெளிவாகத் தெரிந்துவிடுகிறது. இதிலிருந்து இன்னொன்றும் வெளிப்படையாகிறது; அதாவது, முடிவுவரை பகுத்தாராயும் போது, மனித மூளையின் விளைபொருட்கள் இயற்கையின் விளைபொருட்களாகவே இருப்பதினால் அவை இயற்கையின் மற்றெல்லா அம்சங்களோடும் முரண்பட்டிருக்கவில்லை; அதற்கு மாறாக அவற்றுக்குப் பொருத்தமாகவே அமைந்துள்ளன.'' ''ஹெகல் கருத்து முதல்வாதி. அதாவது, அவரது மனத்திற்குள் இருக்கும் எண்ணங்கள் யதார்த்தமான பொருட்களின், இயக்கப் போக்குகளின் ஓரளவு சூட்சும உருவங்கள் (Abbilder என்றால் உரு நிழல்கள், சில சமயம் எங்கெல்ஸ் ''பதிவுகள்'' என்றும் சொல்கிறார்) அல்ல என்பது அவர் கருத்து; அதற்கு மாறாக, உலகம் தோன்றுவதற்கு முன்பிருந்தே எங்கோ ஓர் இடத்தில் இருந்து வந்திருக்கிற 'மூலக்கருத்து' என்பது யதார்த்த வடிவம் பெற்றதின் உருவங்கள்தான் பொருட்களும் அவற்றின் வளர்ச்சியும் என்று அவர் கருதினார்.'' லுத்விக் ஃபாயர்பாக் என்ற தமது நூலில் எங்கெல்ஸ் ஃபாயர்பாகின் தத்துவஞானத்தைப் பற்றித் தாமும் மார்க்ஸும் கொண்டுள்ள கருத்துக்களை விளக்கி விவரித்தார். ஹெகல், ஃபாயர்பாக் பற்றியும் வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டம் பற்றியும் 1844-45ல் மார்க்ஸும் தாமும் சேர்ந்து

எழுதியிருந்த பழைய கையெழுத்துப் பிரதியைத் திரும்பவும் படித்த பிறகுதான் எங்கெல்ஸ் இந்நூலை அச்சகத்துக்கு அனுப்பி வைத்தார். இந்நூலில் ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதுகிருர்: ''எல்லாத் தத்துவஞானத்துக்கும், குறிப்பாக அண்மைக்காலத்திய தத்துவஞானத்திற்கெல்லாம், அடிப்படையான மாபெரும் கேள்வியாக இருப்பது சிந்தனைக்கும் வாழ்நிலைக்குமிடையேயுள்ள உறவு சம்பந்தப்பட்ட விஷயமே, ஆன்மாவுக்கும் இயற்கைக்குமிடையேயுள்ள உறவு சம்பந்தப்பட்ட விஷயமே... இவ்விரண்டில் ஆன்மா முதலில் இருந்ததா, இயற்கை முதலில் இருந்ததா என்ற விஷயமேயாகும்.... இந்தக் கேள்விக்குத் தத்துவஞானிகள் தந்த விடைகள் அவர்களை இரண்டு மாபெரும் முகாம்களாகப் பிரித்துவிட்டன. ஆன்மாதான் இயற்கைக்கு முன் இருந்து வந்தது என்று அடித்துப் பேசி, அதன் காரணமாக, முடிவில், உலகம் யாரோ ஒருவரால் படைக்கப்பட்டது என்று ஏதாவது ஒரு வடிவத்தில் அனுமானம் செய்து கொண்ட நபர்கள் எல்லோரும்... கருத்துமுதல்வாத முகாமைச் சேர்ந்தவர்கள். இயற்கைதான் முதலில் இருந்து வந்தது என்று கருதிய மற்றவர்கள் பொருள்முதல்வாதத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாயினர்.'' (தத்துவஞான ரீதியான) கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்ற கருத்து வடிவங்களை வேறு எந்த விதத்தில் உபயோகித்தாலும் குழப்பம்தான் உண்டாகும். ஏதாவது ஒரு வழியில் மதத்தோடு எப்போதும் சம்பந்தப்பட்டிருக்கும்படியான கருத்துமுதல்வாதத்தை மார்க்ஸ் தீர்மானமாகத் தள்ளிவிட்டார் என்பது மட்டுமல்ல; குறிப்பாக நம் காலத்தில் பரவலாகக் காணக்கிடக்கும் ஹியூம், கான்ட் என்போரின் கருத்துக்களையும் பல்வேறு வடிவங்களிலுள்ள அறியொணுவாதத்தையும் விமர்சனவாதத்தையும் நேர்காட்சிவாதத்தையும் அவர் தீர்மானமாகத் தள்ளிவிட்டார். இந்த விதத் தத்துவஞானம் எல்லாம் கருத்துமுதல்வாதத்துக்கு விட்டுக்கொடுக்கும் ஒரு ''பிற்போக்கான'' சலுகையேயாகும் என்று மார்க்ஸ் கருதினுர்; மிகச் சிறந்த நிலையிலும் இந்த விதமான தத்துவஞானம் ''பொருள்முதல்வாதத்தைப் பகிரங்கமாக மறுத்துவிட்டு இரகசியமாய் அதை ஏற்றுக் கொள்ளும் வெட்ககரமான போக்காகும்''[15] என்று மார்க்ஸ் கருதினுர். இந்தப்

பிரச்சினை சம்பந்தமாக மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் மேலே சொன்ன நூல்களோடுகூடவே 1866 டிசெம்பர் 12 என்று தேதியிட்டு மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. அந்தக் கடிதத்தில் மார்க்ஸ் தாமஸ் ஹக்ஸ்லி என்ற பிரபலமான இயற்கை விஞ்ஞானி ஆற்றிய வழக்கத்தைவிட "அதிக அளவு பொருள்முதல்வாதப் போக்கு கொண்ட" உரையைக் குறிப்பிட்டு, அத்துடன் "உண்மையில் நாம் கவனித்துக் கொண்டும் சிந்தித்துக் கொண்டும் இருக்கும் வரை பொருள்முதல்வாதத்திலிருந்து விலகிச் செல்வது சாத்தியமல்ல" என்று அவர் ஏற்றுக் கொள்வதையும் சுட்டிக்காட்டி, ஹக்ஸ்லி அறியொணுவாதத்துக்கும் ஹியூம்வாதத்துக்கும் "தப்பிக்கும் வழி" ஒன்றை விட்டு வைப்பதற்காக அவரை மார்க்ஸ் கடிந்து கொள்கிறார். சுதந்திரத்துக்கும் அவசியத்துக்கும் இடையேயுள்ள உறவு பற்றி மார்க்ஸ் கொண்டிருந்த கருத்தைக் குறிப்பிடுவது சிறப்பான முக்கியத்துவமுள்ளதாகும். "அவசியத்தை அறிந்தேற்றுக் கொள்வதுதான் சுதந்திரம் என்பது. 'அவசியம் என்பது நாம் புரிந்து கொள்ளாதவரையில் மட்டுமே கண்மூடித்தனமானதாக இருக்கும்' " (எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு). இதற்கு அர்த்தம், இயற்கையிலுள்ள புறநிலை வகைப்பட்ட விதியை ஏற்றுக் கொள்வது, அவசியம் என்பது இயக்கவியல் ரீதியிலே சுதந்திரமாக மாற்றம் பெறுவதை ஏற்றுக் கொள்வது என்பதுதான் (அறியப்படாததாயிருந்தும், அறியப்படக் கூடியதான "தானேயாகிய பொருள்" [a thing in itself] என்பது "நமக்கான பொருளாக" [a thing for us] எப்படி மாற்றம் அடைகிறதோ, "பொருட்களின் சாராம்சம்" எனப்படுவது "தோற்றங்களாக" எப்படி மாற்றம் அடைகிறதோ, அதுபோலத்தான்). ஃபாயர்பாகின் பொருள்முதல்வாதத்தை (அதைவிட அதிக அளவில் புஹ்னர், ஃபோக்ட், மொலிஷோட் என்போர்களின் "விஞ்ஞானக்கேடான" பொருள்முதல்வாதத்தை) உள்ளிட்ட "பழைய" பொருள்முதல்வாதத்தின் அடிப்படையான குறைபாடு பின்வருமாறு என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் கருதினர்: (1) இந்தப் பொருள்முதல்வாதம் "பெரும்பாலும் இயந்திரவகைப்பட்டது"; இரசாயனவியல் துறையிலும், உயிரியல் துறையிலும் (நம் காலத்திற்கு வரும் போது, பொருளைப் பற்றிய மின்

தத்துவத்திலும் என்று சேர்த்துக் கொள்வது அவசியமாகும்) ஏற்பட்டிருக்கிற மிகமிக நவீனமான முன்னேற்றங்களை அது கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறுகிறது; (2) பழைய பொருள்முதல்வாதம் வரலாற்றுக்குப் புறம்பானது, இயக்க இயலுக்குப் புறம்பானது (இயக்க இயலுக்கு விரோதமானது என்ற அர்த்தத்தில் இயக்க மறுப்பு இயல் வகைப்பட்டது); வளர்ச்சியைப் பற்றிய கண்ணோட்டத்தை அது முரணின்றியும் முழுமையாகவும் பின்பற்றவில்லை; (3) ''மனித சாரம்'' என்கிற விஷயத்தைச் சூட்சுமமாகப் பார்த்ததேயொழிய, (வரலாறு வகையில் ஸ்தூலமாக வரையறுக்கப் பெற்ற சகல ''சமுதாய உறவுகளின்'' ஒரு ''சேர்மமே'' இந்த ''மனித சாரம்'' என்று அது கருதவில்லை; ஆகவே உலகத்தை ''மாற்றியமைப்பதே'' முதன்மையான வேலையாயிருக்கையில், அது உலகத்தைப் பற்றி இவ்வாறு ''வியாக்கியானம்'' செய்வதோடு நின்றுவிட்டது. அதாவது, ''புரட்சிகரமான நடைமுறை நடவடிக்கையின்'' முக்கியத்துவத்தை அது புரிந்து கொள்ளவில்லை.

இயக்கவியல்

ஹெகலின் இயக்கவியல், வளர்ச்சியைக் குறித்து மிகவும் முழுமையான, உள்ளடக்கத்தில் மிகமிக வளம் நிறைந்த, மிகுந்த ஆழமுள்ள தத்துவம் என்ற முறையிலே மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் மிகப் பெரிய சாதனையாகும் என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் கருதினர். வளர்ச்சி, பரிணாமம் சம்பந்தமான கோட்பாட்டைப் பற்றிய மற்ற வரையறுப்புக்கள் எல்லாம் ஒருதலைப்பட்சமானவை, உள்ளடக்கத்தில் வளக்குறைவுள்ளவை, இயற்கையிலும் சமுதாயத்திலும் உள்ள (அடிக்கடி திடீர்ப் பாய்ச்சல்கள் மூலமாக, பெருவிபத்துகள் மூலமாக, புரட்சிகள் மூலமாக முன்னே போகும்படியான) வளர்ச்சியின் உண்மையான போக்கைத் திரித்துக் காட்டுபவை, உருக்குலைப்பவை என்று அவர்கள் கருதினார்கள். (ஹெகல்வாதம் அடங்கலான கருத்துமுதல்வாதத்தால் அழிக்கப்படுவதிலிருந்து) ''உணர்வுபூர்வமான இயக்க இயலைக் காப்பாற்றி அதனை இயற்கை பற்றிய பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலே நடைமுறைக்குக் கொண்டு

வந்தவர்கள் அநேகமாக மார்க்ஸும் நானும் மட்டும்தான்.... இயக்கவியலைப் பரீட்சிப்பது இயற்கைதான். அந்தப் பரீட்சைக்கு மிகவும் வளம் பொருந்திய விஷயாதாரங்களை, தினசரி பெருகிக் கொண்டே போகும் விஷயாதாரங்களை, நவீனகால இயற்கை விஞ்ஞானம் தந்துகொண்டேயிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்'' (ரேடியம், மின்னணுக்கள், தனிமங்கள் ஒன்று மற்றொன்றாக மாற்றப்படுவது, முதலானவை கண்டுபிடிக்கப்பட்ட காலத்துக்கு முன்பே எழுதப்பட்டது இது); ''அப்படி விஷயாதாரங்களைத் தந்து, முடிவில் இயற்கையின் இயக்கப் போக்கு இயக்க இயல் வகைப்பட்டதே தவிர இயக்க மறுப்பு இயல் வகைப்பட்டதல்ல என்று நவீனகால இயற்கை விஞ்ஞானம் நிரூபித்துள்ளது என்றுதான் நாம் சொல்ல வேண்டும்.''[16]

எங்கெல்ஸ் எழுதுகிறார்: ''அப்படியப்படியே தயார் நிலையில் கிடைக்கும் பொருட்களின் தொகுதியாக உலகத்தைப் புரிந்துகொள்ளக் கூடாது, இயக்கப் போக்குகளின் ஒரு தொகுதியாகத்தான் அதைப் புரிந்து கொள்ள வேண்டும்; இந்த இயக்கப் போக்குகளின் தொகுதியிலே மாற்றம் அடையாதவை போல் வெளிக்குத் தோன்றுகிற பொருட்களும், அதேபோல் அந்தப் பொருட்களைப் பற்றி மூளைக்குள்ளே நிழலாடுகிற சிந்தனையுருவங்களும், அதாவது கருத்துருவங்களும், தோன்றியபடியும் மறைந்தபடியும் இருக்கும்படியான இடையறாத மாறுதலுக்கு உட்படுகின்றன—இது மகத்தான அடிப்படைக் கருத்தாகும்.... குறிப்பாக ஹெகல் காலத்திற்குப் பிறகு இந்த மகத்தான அடிப்படைக் கருத்து மனிதர்களின் பொது உணர்வில் முற்றாகப் பரவிப் பதிந்துவிட்டிருக்கிறபடியால் பொதுவான ரீதியிலே இதை யாரும் அநேகமாக மறுப்பதேயில்லை. ஆனால் இந்த அடிப்படைக் கருத்தைச் சொல்லளவிலே ஏற்றுக் கொள்வது ஒன்று, அதை ஒவ்வோர் ஆராய்ச்சித் துறையிலும் யதார்த்தத்தில் செயற்படுத்துவது வேறொன்று.'' ''இயக்க இயல் வகைத் தத்துவ ஞானத்துக்கு இறுதியானதோ, பரமமானதோ, புனிதமானதோ எதுவுமே கிடையாது. எல்லாவற்றின் தாற்காலிகத் தன்மையையும் அது வெளிப்படுத்துகிறது. எல்லாவற்றிற்குள்ளேயுமுள்ள தாற்காலிகத் தன்மையையும் அது வெளிப்படுத்துகிறது. உருவாகிக் கொண்டும் மறைந்து கொண்டும்

இருக்கிற, கீழ் நிலையிலிருந்து மேல் நிலைக்கு முடிவில்லாமல் ஏறிச் சென்றபடியேயிருக்கிற, இடையறாத இயக்கப் போக்கு ஒன்றைத் தவிர வேறு எதுவும் அதன்முன் நிலைத்து நிற்க முடியாது. மேலும் இயக்க இயல் வகைத் தத்துவஞானம் என்பதே சிந்திக்கும் மூளையில் தோன்றுகிற இந்த இயக்கப் போக்கின் உருநிழலே தவிர வேறில்லை.'' எனவே, மார்க்ஸின் கருத்துப்படி, இயக்க இயல் என்பது ''புற உலகு, மனித சிந்தனை என்ற இரண்டினுடைய இயக்கத்தின் பொதுவான விதிகளைப் பற்றிய விஞ்ஞானம்''[17] ஆகும்.

ஹெகல் தத்துவஞானத்தின் இந்தப் புரட்சிகரமான அம்சத்தை மார்க்ஸ் ஏற்றுக்கொண்டு அதை வளர்த்தார். இயக்க இயல் பொருள்முதல்வாதத்துக்கு ''இதர விஞ்ஞானங்களுக்கு மேலே நின்று கொண்டிருக்கும்படியான தத்துவ ஞானம் ஒன்றும் இனிமேல் தேவையில்லை''. முந்திய கால தத்துவஞானத்தில் மிச்சமுள்ளது ''சிந்தனை, அதன் விதிகள் பற்றிய தத்துவம்—அதாவது, விதிமுறைத் தர்க்க இயலும் இயக்கவியலும்தான்.''[18] மேலும் மார்க்ஸின் கருத்துப்படியும், ஹெகலுக்குப் பொருத்தமான விதத்திலும் இயக்க இயலில் இப்பொழுது அறிவியல் அல்லது 'எபிஸ்டமாலஜி' என்று சொல்லப்படுவதும் அடங்கும். அறிவு பற்றிய இந்தத் தத்துவமுங்கூடத் தானெடுத்துக் கொள்ளும் ஆராய்ச்சி விஷயத்தை வரலாற்றுரீதியாகத்தான் கவனித்துத் தீர வேண்டும்; அறிவின் தோற்றுவாய், வளர்ச்சி, அறிவுக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்து அறிவு நிலைக்கு மாறிவருவது ஆகியவற்றை அது பரிசீலித்துப் பயின்று பொதுமைப்படுத்த வேண்டும்.

இப்போதெல்லாம் வளர்ச்சி பற்றிய, பரிணாமம் பற்றிய கருத்து அநேகமாக சமுதாய உணர்வு முழுவதிலும் நுழைந்துவிட்டிருக்கிறது; ஆனால் ஹெகல் தத்துவஞானத்தின் வழியாக அல்ல, வேறான வழிகளில். எனினும் ஹெகலின் அடிப்படையில் மார்க்ஸும் எங்கெல்ஸும் வரையறுத்தபடி அமைந்துள்ள இந்தக் கருத்து இன்று வழக்கிலுள்ள பரிணாமக் கருத்தைவிட எவ்வளவோ முழுமையானது, உள்ளடக்கத்தில் எவ்வளவோ வளம் பொருந்தியது. ஏற்கெனவே தாண்டிவிட்ட கட்டங்களே திரும்ப வந்து கொண்டிருப்பது போலத் தோன்றினாலும் அந்தக் கட்டங்கள் வேறு வகையில், முந்திய

தைவிட மேல் படியில் திரும்ப வந்து கொண்டிருப்பதான வளர்ச்சி (''நிலைமறுப்பின் நிலைமறுப்பு''); ஒரு வகையில் சொல்லப் போனால் செங்குத்தாக இல்லாமல் சுழன்று சுழன்று மேலேறும் வளர்ச்சி;—திடீர்ப் பாய்ச்சல்கள், பெருவிபத்துகள், புரட்சிகள் மூலம் ஏற்படும் வளர்ச்சி;—''தொடர்ச்சியில் துண்டிப்புகள்''; அளவு பண்பாக உருமாறுதல்;—குறிப்பிட்ட பொருளின் மீதோ, குறிப்பிட்ட தோற்றத்துக்குள்ளோ, குறிப்பிட்ட சமுதாயத்துக்குள்ளோ செயல்படுகிற பல்வேறு சக்திகள், போக்குகள் ஆகியவற்றின் முரண்பாட்டினாலும் மோதலினாலும் ஏற்படுகிற வளர்ச்சிக்கான உள்தூண்டுதல்கள்;—(வரலாறு புதிய புதிய அம்சங்களை என்றென்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கையிலேயே) ஒவ்வொரு தோற்றத்தின் எல்லா அம்சங்களும் ஒன்றையொன்று சார்ந்து நின்று ஒன்றோடொன்று மிகவும் நெருக்கமான, பிரிக்க முடியாத தொடர்பு கொண்டிருப்பது, இந்தத் தொடர்பு நியதிக்குட்பட்ட, உலகு முழுவதற்குமுரிய பொதுமையான இயக்கத்தின் ஓர் இயக்கப் போக்கை ஏற்படுத்தித் தருகிறது—இவையெல்லாம் வளர்ச்சியைப் பற்றிய (வழக்கமானவற்றைக் காட்டிலும்) அதிக வளம் பொருந்திய தத்துவமான இயக்கவியலின் இயல்புகளில் சிலவாகும் (1868 ஜனவரி 8ம் தேதி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க; அதில் அவர் ஷ்டைன் என்பவரின் ''இறுகிப் போன முப்பிரிவுகள்'' பற்றி கேலி செய்கிறார்; அவற்றைப் பொருள்முதல்வாத இயக்க இயலுடன் போட்டுக் குழப்புவது அபத்தமாகும்).

வரலாற்றைப் பற்றிய
பொருள்முதல்வாதக் கருத்தோட்டம்

பழைய பொருள்முதல்வாதத்தின் முரண்பாடுள்ள தன்மையையும், முழுமையற்ற தன்மையையும், ஒரு சார்பான தன்மையையும் உணர்ந்து கொண்ட பிறகு மார்க்ஸ் ''சமுதாயத்தைப் பற்றிய விஞ்ஞானத்தை... பொருள்முதல்வாத அடிப்படைக்கு இணக்கமாகக் கொண்டுவந்து இந்த அடிப்படை மீது அதை மீண்டும் அமைப்பது''[19] அவசியம் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி கண்டார். வாழ்நிலை

யிலிருந்து உணர்வு தோன்றுகிறதேயன்றி உணர்விலிருந்து வாழ்நிலை தோன்றுவதில்லை என்று பொருள்முதல்வாதம் பொதுவாக விளக்குகிறதாகையால் மனிதகுலத்தின் சமுதாய வாழ்வு விஷயத்திலும், சமுதாய உணர்வு சமுதாய வாழ்நிலை யிலிருந்தே தோன்றுகிறது என்று பொருள்முதல்வாதம் விளக்கித் தீரவேண்டியிருக்கிறது. மார்க்ஸ் எழுதுகிறார் (மூலதனம், தொகுதி 1): ''தொழில்நுட்பவியல் மனிதன் இயற்கையுடன் கொண்டுள்ள தொடர்புகளுக்கான வழிமுறையை, மனிதன் உயிர்வாழ்வதற்குரிய உற்பத்தி முறையை வெளிப்படுத்துவதுடன், அதன் மூலம் அவனது சமுதாய உறவுகளின் அமைப்பு முறையையும் அந்த உறவுகளிலிருந்து தோன்றும் மனக் கருத்துருவங்களையும் புலப்படுத்துகிறது.''[20] தமது **அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு** என்கிற நூலின் முன்னுரையில் மனித சமுதாயத்தையும் அதன் வரலாற்றையும் பற்றிய பொருள் முதல்வாதத்தின் அடிப்படையான கோட்பாடுகளைக் குறித்துப் பின்வரும் சொற்களில் மார்க்ஸ் ஒரு முழுமையான வரையறுப்பு தருகிறார்:

''மனித வாழ்வில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமுதாய உற்பத்தியில் குறிப்பிட்ட உறவுகளில் மனிதர்கள் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அத்தியாவசியமானவை; மனிதர்களின் சித்தத்தின்படி அமையாமல் சுதந்திரமாகஅமைபவை. இந்த உற்பத்தி உறவுகள் அவர்களது பொருளாயத உற்பத்திச் சக்திகளுடைய வளர்ச்சியின் ஒரு திட்டவட்டமான கட்டத்துக்குப் பொருத்தமாக அமைகின்றன.

''இந்த உற்பத்தி உறவுகளின் மொத்தத் தொகைதான் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பாக ஏற்படுகிறது; உண்மையான அடித்தளமாக அமைகிறது. அதன்மீதுதான் சட்டம், அரசியல் வகைப்பட்ட மேல்கட்டுமானம் எழுகிறது. அந்த அடித்தளத்துக்குப் பொருத்தமாகத்தான் சமுதாய உணர்வின் குறிப்பிட்ட வடிவங்கள் ஏற்படுகின்றன. பொருளாயத வாழ்வின் உற்பத்தி முறைதான் பொதுவாகவே சமுதாய-அரசியல்-அறிவுத்துறை வாழ்வின் இயக்கப் போக்கை வரையறுக்கிறது. மனிதர்களின் உணர்வு அவர்களின் வாழ்நிலையை வரையறுப்பதில்லை; அதற்கு மாறாக, அவர்களுடைய சமுதாய வாழ்நிலைதான் அவர்களின் உணர்வை வரையறுக்

கிறது. சமுதாயத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடையும் போது, அவை நடப்பிலிருக்கும் உற்பத்தி உறவுகளுடன் அல்லது—அதையே சட்ட மொழியில் குறிப்பிடுவதென்றால்—அவை அதுவரை எவற்றுக்குள் இயங்கி வந்தனவோ அந்தச் சொத்து உறவுகளுடன் மோதுகின்றன. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினுடைய வடிவங்களாக இருந்து வந்த இந்த உற்பத்தி உறவுகள் அந்த உற்பத்திச் சக்திகளுக்கே விலங்குகளாக மாறிவிடுகின்றன. அதன் பிறகுதான் சமுதாயப் புரட்சியின் சகாப்தம் துவங்குகிறது. பொருளாதார அடித்தளத்தின் மாற்றத்துடன் கூடவே பிரம்மாண்டமான மேல்கட்டுமானம் முழுவதும் ஏறத்தாழ விரைவாக மாற்றமடைகிறது. இத்தகைய மாற்றங்களைக் கவனிக்கும் போதெல்லாம், உற்பத்தியின் பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் பொருளாயத மாற்றத்தையும்—இதை இயற்கை விஞ்ஞானமானது துல்லியமாக வரையறுக்க முடியும்—சட்டம், அரசியல், மதம், அழகு இயல் அல்லது தத்துவஞானம் போன்றவற்றில்—சுருங்கச் சொன்னால், எந்தச் சித்தாந்த வடிவங்களில் மனிதர்கள் இந்த மோதலை உணர்ந்து போராடித் தீர்க்கிறார்களோ அந்தச் சித்தாந்த வடிவங்களில்—ஏற்படும் மாற்றத்தையும் வேறு பிரித்துக் காண வேண்டும்.

''ஒரு மனிதனைப் பற்றிய நமது கருத்து அவன் தன்னைப் பற்றித் தானே கொண்டிருக்கும் நினைப்புக்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை. அதே மாதிரிதான், மாறுதலடைகிற இத்தகைய ஒரு காலப்பகுதியைப் பற்றியும் அக்காலப் பகுதிக்குரிய உணர்வைக் கொண்டு தீர்ப்புச் சொல்ல முடியாது. அதற்கு மாறாக, சரியான முறையில் விளக்குவதற்கு, பொருளாயத வாழ்விலுள்ள முரண்பாடுகளைக் கொண்டுதான், சமுதாய உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையே இருந்து வருகிற சண்டையைக் கொண்டுதான் அவ்வுணர்வை விளக்க வேண்டும்.... பொதுவாகப் பார்க்குமிடத்து, ஆசிய உற்பத்தி முறை, பண்டைக்கால உற்பத்தி முறை, நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறை, நவீன—முதலாளித்துவ—உற்பத்தி முறை ஆகியவற்றைச் சமுதாயத்தின் பொருளாதார அமைப்பில் வளர்ந்து முன்னேறிய சகாப்தங்கள் என்று கூறலாம்.''

(1866 ஜூலை 7ம் தேதி மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் தந்துள்ள சுருக்கமான வரையறுப்பை ஒப்பு நோக்குக: ''உழைப்பின் ஒழுங்கமைப்பை உற்பத்திச் சாதனங்களே நிர்ணயிக்கின்றன என்ற நமது தத்துவம்.'')

வரலாறு பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தோட்டத்தைக் கண்டுபிடித்ததானது, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், பொருள்முதல்வாதத்தைச் சமுதாயத் தோற்றங்கள் என்ற துறையிலும் தொடர்ந்து செலுத்தி விரிவுபடுத்தியதானது, முந்தைய வரலாற்றுத் தத்துவங்களிலே இருந்த இரண்டு முதன்மையான குறைபாடுகளை நீக்கிவிட்டது. முதலாவதாக, அந்த முந்தைய வரலாற்றுத் தத்துவங்கள்—மிகச் சிறந்த நிலையிலுங்கூட—மனிதர்களின் வரலாற்று நடவடிக்கைகளின் சித்தாந்த நோக்கங்களை மட்டுமே ஆராய்ந்தனவேயன்றி இந்த நோக்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவற்றைப் பரிசீலிக்கவே இல்லை; சமுதாய உறவுகளின் அமைப்பு முறையின் வளர்ச்சியை ஆளும் புறநிலை விதிகளைப் புரிந்து கொள்ளவே இல்லை; பொருளாயத உற்பத்தி அடைந்துள்ள வளர்ச்சிநிலையில் இந்தச் சமுதாய உறவுகளின் மூலவேர்கள் இருப்பதைக் கண்டறிந்து கொள்ளவே இல்லை. இரண்டாவதாக, முந்தையத் தத்துவங்கள் மக்கள் திரளின் நடவடிக்கைகளைப் பரிசீலிக்கவேயில்லை. வரலாறு வகைப்பட்ட பொருள்முதல்வாதம்தான், மக்கள் திரளினுடைய வாழ்க்கையின் சமுதாய நிலைமைகளையும், இந்த நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்களையும் இயற்கை விஞ்ஞானத்தின் துல்லியத்துடன் பரிசீலித்தறிவதை முதல் முதலாகச் சாத்தியமாக்கியது. மார்க்ஸுக்கு முந்தைய ''சமுதாய விஞ்ஞானமும்'', வரலாற்றியலும்—மிக உயர்வாகச் சொல்வதென்றால்—இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பொறுக்கிச் சேர்த்த பச்சையான விபரங்களின் ஒரு திரட்டைத் தந்தன; வரலாற்றின் இயக்கப் போக்கின் தனிப்பட்ட சில அம்சங்களைச் சித்திரித்தன. எதிரெதிரான எல்லாப் போக்குகளின் முழுத்தொகை முறையையும் பரிசீலித்ததின் மூலமாகவும், சமுதாயத்திலுள்ள பல்வேறு வர்க்கங்களின் வாழ்வு, உற்பத்தி பற்றிய திட்டமாக வரையறுக்கக் கூடிய நிலைமைகளாக அந்தப் போக்குகளை வகுத்துத் தந்ததின் மூலமாகவும், தனிப்பட்ட ''தலையாய'' கருத்துக்களைப்

பொறுக்குவதிலும், அல்லது அவற்றை விளக்குவதிலும் அகநிலைப் பார்வையையும் தான்தோன்றித்தனத்தையும் கைவிட்டதின் மூலமாகவும், விதி விலக்கு எதுவுமின்றி எல்லாக் கருத்துக்களும் பல்வகையான எல்லாப் போக்குகளும் பொருளாயத உற்பத்திச் சக்திகளின் நிலைமையிலேதான் வேர் கொண்டிருக்கின்றன என்பதை வெளிப்படுத்தியதின் மூலமாகவும், சமுதாய-பொருளாதார அமைப்பு முறைகளின் தோற்றம், வளர்ச்சி, நலிவு என்ற இயக்கப் போக்கைப் பற்றி முழுதளாவிய, முழுமையான பரிசீலனைக்கு மார்க்ஸியம் வழி காட்டியது. மக்கள் தங்களுடைய வரலாற்றைத் தாங்களே உண்டாக்கிக் கொள்கின்றனர். ஆனால் மனிதர்களின், மக்கள் பெருந்திரளின் செயல் காரணங்களை நிர்ணயிப்பது எது? எதிரெதிரான கருத்துக்கள், வேட்கைகளுக்கு இடையே மோதலை உண்டாக்கி வைப்பது எது? மனித சமுதாயங்களின் மொத்தத் திரளின் இந்த எல்லா மோதல்களினுடையவும் மொத்தத் தொகை என்ன? மனிதனின் வரலாற்று நடவடிக்கை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக அமைகிற பொருளாயத வாழ்வின் உற்பத்திக்கான புறநிலைமைகள் யாவை? இந்தப் புறநிலைமைகளின் வளர்ச்சிக்குரிய விதி எது?—இவற்றின் மீதெல்லாம் மார்க்ஸ் நமது கவனத்தைத் திருப்பி, வரலாறு பல்வகை வேறுபாடுகளும் முரண்பாடுகளும் கொண்டிருந்த இயக்கப் போக்காயிருந்த போதிலும் அதை விதிக்குட்பட்ட, ஒரு சீரான இயக்கப் போக்காக விஞ்ஞான அடிப்படையிலே பயில்வதற்கு வழி காட்டினார்.

வர்க்கப் போராட்டம்

எந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலும் அதன் சில உறுப்பினர்களின் வேட்கைகள், இதர உறுப்பினர்களின் வேட்கைகளுடன் மோதிக்கொள்கின்றன என்பதும், சமுதாய வாழ்வில் முரண்பாடுகள் மலிந்து கிடக்கின்றன என்பதும், தேசங்களுக்கிடையிலும் சமுதாயங்களுக்கிடையிலும் அதே போல் அவற்றிற்கு உள்ளேயும் போராட்டம் நடப்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது என்பதும், அது தவிர, புரட்சிக் காலப்பகுதி, பிற்போக்குக் காலப்பகுதி ஆகியவை, போர்க் காலப்பகுதி, சமாதான காலப்பகுதி ஆகியவை,

தேக்கக் காலப்பகுதி, வேகமான முன்னேற்றக் காலப்பகுதி அல்லது நலிவுக் காலப்பகுதி ஆகியவை என்று காலப்பகுதிகள் மாறிமாறி வருவதையும் வரலாறு வெளிப்படுத்துகிறது என்பதும் எல்லோரும் அறிந்த விவரங்களாகும். தடமறியாக் குகைப் பாதை போல், குழப்படிபோல் தோன்றும் இதை ஆளும் விதிகள் என்னவென்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு வழிகாட்டியை, அதாவது வர்க்கப் போராட்டம் என்ற தத்துவத்தை, மார்க்ஸியம் தருகிறது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின், அல்லது சமுதாயத் தொகுதியின் எல்லா உறுப்பினர்களுடைய வேட்கைகளின் மொத்தத் தொகை முறையைப் பரிசீலிப்பதின் வழியாகத்தான் இந்த வேட்கைகளின் விளைவைப் பற்றி ஒரு விஞ்ஞான வகைப்பட்ட வரையறுப்புக்கு வந்து சேர முடியும். மேலும், வர்க்கங்களாகப் பிளவுண்டிருக்கிற ஒவ்வொரு சமுதாயத்திலும் அந்த வர்க்கங்கள் வகிக்கும் நிலை, வாழ்வு நிலைமை ஆகியவற்றில் இருக்கும் வேறுபாட்டில்தான் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் வேட்கைகளின் தோற்றுவாய் இருக்கிறது. ''இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும்'' என்று கம்யூனிஸ்டு அறிக்கையில் மார்க்ஸ் எழுதினார் (புராதனச் சமுதாயத்தின் வரலாறு தவிர என்று பின்னால் எங்கெல்ஸ் சேர்த்துக் கொண்டார்.) ''சுதந்திரமுடையானும் அடிமையும், பட்ரீஷிய உயர்குலச் சீமானும் பிலெபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரபுவும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும் கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப் பகை கொண்டோராய், ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும், இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று.... பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளிலிருந்து முளைத்தெழுந்துள்ள தற்கால முதலாளித்துவச் சமுதாயம் வர்க்கப் பகைமைகளுக்கு முடிவுகட்டிவிடவில்லை; பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும், புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டியிருக்

கிறதே அன்றி வேறில்லை. ஆயினும் நமது சகாப்தமாகிய இந்த முதலாளித்துவ வர்க்கச் சகாப்தத்தின் ஒரு தனி இயல்பு என்னவெனில், வர்க்கப் பகைமைகளை இது சுருக்கி எளிமையாக்கியுள்ளது: சமுதாயம் ஒட்டுமொத்தமாய் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய், எதிரும் புதிருமான இரு பெரும் வர்க்கங்களாய்—முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமுமாய்—பிளவுண்டு வருகிறது.'' மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் காலந்தொட்டு ஐரோப்பிய வரலாறானது நிகழ்ச்சிகளுக்கு உண்மையிலே அடிப்பரப்பாக உள்ள வர்க்கப் போராட்டத்தை, பல நாடுகளிலே மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. பிரான்ஸில் முடியரசு முறையை மீண்டும் ஏற்படுத்திய காலப்பகுதி,[21] (தியெரீ, கிஸோ, மின்யே, தியேர் போன்ற) பல வரலாற்றாசிரியர்களை ஏற்கெனவே தோற்றுவித்திருக்கிறது. அவர்கள் நிகழ்ச்சிகளின் ஆதாரத்தில் பொது உண்மைகளைக் காணப் புறப்பட்டபொழுது வர்க்கப் போராட்டம்தான் பிரெஞ்சு வரலாறு முழுவதையும் புரிந்து கொள்வதற்குரிய அடிப்படை என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. நவீன சகாப்தம்—முதலாளி வர்க்கத்தின் பூர்ண வெற்றியைக் குறிக்கும் சகாப்தமாகும்; பிரதிநிதித்துவ நிறுவனங்கள், (எல்லோருக்கும் இல்லாவிட்டாலும்) பரந்த அளவில் உள்ள வாக்குரிமை, மலிவான, மக்களைக் கவர்ந்த தினப் பத்திரிகைகள் முதலானவை இருக்கிற சகாப்தமாகும்; எப்போதும் விரிவடைந்து கொண்டே போகும், பலம் வாய்ந்த தொழிலாளர் சங்கங்கள், முதலாளிகள் சங்கங்கள் முதலானவை இருக்கிற சகாப்தமாகும். இந்தச் சகாப்தம் (சில சமயங்களில் மிகவும் ஒருசார்பான, ''அமைதியான'', ''சட்ட அமைப்புக்குட்பட்ட'' வடிவத்திலே இருந்தாலும்), வர்க்கப் போராட்டம் தான் நிகழ்ச்சிகளின் மூலவிசை என்று முன்னைவிட மிகத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டிருக்கிறது. ஒவ்வொரு வர்க்கத்தின் வளர்ச்சிக்குரிய நிலைமைகளைப் பற்றிய பகுப்பாய்வு சம்பந்தமாக, நவீன சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு வர்க்கமும் வகிக்கும் நிலையைப் பற்றிய புறநிலைப் பகுப்பாய்வு விஷயத்தில் சமுதாய விஞ்ஞானம் என்ன செய்ய வேண்டுமென்று மார்க்ஸ் எதிர்பார்த்தார் என்பதை மார்க்ஸின் **கம்யூனிஸ்டுக் கட்சி** அறிக்கையிலிருக்கிற பின்வரும் வாசகம்

நமக்குக் காட்டுகிறது: ''இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சியின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன, பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது. மத்தியதர வர்க்கத்தின் கீழ்ப் பகுதிகளாகிய சிறு பட்டறையாளர், கடைக்காரர், கைவினைஞர், விவசாயி இவர்கள் எல்லோரும் தொடர்ந்து தாம் மத்தியதர வர்க்கக் கூறுகளாய் நீடித்திருப்பதற்காக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஆகவே இவர்கள் பழமைப் பற்றாளர்களே அன்றி புரட்சித்தன்மை வாய்ந்தோரல்லர். அது மட்டுமல்ல, இவர்கள் பிற்போக்கானவர்களும் கூட; ஏனெனில் வரலாற்றின் சக்கரத்தை இவர்கள் பின்னோக்கி உருளச் செய்ய முயலுகிறார்கள். சந்தர்ப்பவசமாய் இவர்கள் புரட்சிகரமாய் இருப்பார்களாயின், இவர்கள் பாட்டாளி வர்க்கத்தக்குப் போய்விடும் தறுவாயில் இருக்கிறார்கள் என்பதே அதற்குக் காரணம்; இவ்வாறு இவர்கள் பாதுகாப்பது தமது எதிர்கால நலன்களையே அன்றி நிகழ்கால நலன்களை அல்ல; பாட்டாளி வர்க்கத்தின் நோக்குநிலையை ஏற்கும் பொருட்டு, தமது சொந்த நோக்குநிலையைக் கைவிடுகிறார்கள்.'' வரலாற்றுத் துறையிலான பல நூல்களில் (பார்க்க: நூல் பட்டியல்) பொருள் முதல்வாத வகைப்பட்ட வரலாற்றியலுக்கு மார்க்ஸ் ஒளி மிகுந்த, ஆழம் மிக்க எடுத்துக்காட்டுகள் தருகிறார்; ''ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமாக'' ஏன், எப்படி இருக்கிறது என்று தெளிவாகக் காட்டும் வண்ணம் ஒவ்வொரு தனித்தனி வர்க்கத்தின் நிலையைப் பற்றியும், சில சமயங்களில் ஒரே வர்க்கத்திற்குள்ளிருக்கும் பல்வேறு குழுக்களின், பகுதிகளின் நிலையைப் பற்றியும் பகுப்பாய்வுக்கு மார்க்ஸ் ஒளி மிகுந்த, ஆழம் மிக்க எடுத்துக் காட்டுகள் தருகிறார். வரலாற்று வளர்ச்சியின் மொத்த விளைவை நிர்ணயிப்பதற்காகச் சமுதாய உறவுகளையும் ஒரு வர்க்கத்திலிருந்து மற்றொரு வர்க்கத்துக்கு, இறந்த காலத்திலிருந்து வருங்காலத்துக்கு மாறும் போதுள்ள இடைநிலைப் பகுதிகளையும் கொண்ட எத்தகைய சிக்கலான வலைப்

பின்னலே மார்க்ஸ் பகுத்தாராய்கிருர் என்பதற்கு மேலே காட்டிய வாசகம் ஓர் உதாரணமாகும்.

மார்க்ஸின் தத்துவத்தை மிகவும் ஆழ்ந்த, முழுமையான வகையிலும், விபரமாயும் உறுதிப்படுத்திச் செயல்படுத்த வழி காட்டுவது அவருடைய பொருளாதாரப் போதனைதான்.

மார்க்ஸின் பொருளாதாரப் போதனை

மூலதனம் என்ற நூலின் முன்னுரையில் மார்க்ஸ் சொல்வதாவது: ''நவீன சமுதாயத்தின்'' (அதாவது முதலாளித்துவ, பூர்ஷ்வா சமுதாயத்தின்) ''இயக்கத்திற்குரிய பொருளாதார விதியை வெளிப்படுத்திக் காட்டுவதுதான் இந் நூலின் இறுதியான நோக்கமாகும்''. வரலாற்றின் வழியே வரையறுக்கப்பட்ட, குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தின் உற்பத்தி உறவுகளை அவற்றின் தோற்றம், வளர்ச்சி, நலிவு ஆகிய கட்டங்களிலே பரிசீலனை செய்வது—இதுதான் மார்க்ஸின் பொருளாதாரப் போதனையின் உள்ளடக்கம். முதலாளித்துவ சமுதாயத்தில் ஆட்சி செலுத்துவது **பண்டங்களின்** உற்பத்திதான்; ஆகவே மார்க்ஸின் பகுப்பாய்வு பண்டத்தைப் பரிசீலிப்பதிலிருந்து தொடங்குகிறது.

மதிப்பு

பண்டம் என்பது, முதன் முதலாக மனிதத் தேவையை நிறைவாக்குகிற ஒரு பொருளாகும். இரண்டாவதாக, அது இன்னொரு பொருளுடன் பரிமாற்றம் செய்து கொள்ளக் கூடிய பொருளாகும். ஒரு பொருளின் பயன்தரும் தன்மை அதை **பயன்பாடு மதிப்பு** ஆக்குகிறது. பரிமாற்ற மதிப்பு என்பது (அல்லது, வெறுமே மதிப்பு என்றே குறிப்பிடலாம்) முதலில் ஒரு விதத்தைச் சேர்ந்த, குறிப்பிட்ட அளவிலான பயன்பாடு மதிப்புக்களை மற்ரெரு விதத்தைச் சேர்ந்த, குறிப்பிட்ட அளவிலான பயன்பாடு மதிப்புகளுடன் பரிமாற்றம் செய்து கொள்வதிலிருக்கிற அளவுப் பொருத்தமாகவும் அல்லது விகிதமாகவும் தென்படுகிறது. இப்படிப்பட்ட கோடானு கோடியான பரிமாற்றங்கள், எல்லா வகையான பயன்பாடு மதிப்புகளை, முற்றிலும் வேறு வேருனவையும்

ஒப்பிடவே முடியாதவையுமான பயன்பாடு மதிப்புகளைக் கூட, ஒன்றுடன் ஒன்று எப்போதும் சமப்படுத்திய வண்ணமா யிருக்கின்றன என்பதை அன்றாட அனுபவம் நமக்குக் காட்டு கிறது. இனி, பலவகைகளைச் சேர்ந்த இந்தப் பொருட்களுக்கு, சமுதாய உறவுகளின் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையில் ஒன்றோடொன்று எப்போதும் சமப்படுத்தப்பட்டு வரும் இந்தப் பொருட்களுக்குப் பொதுவாயுள்ள அம்சம் எது? அவற்றின் பொது அம்சம் என்னவென்றால் அவை எல்லாம் உழைப்பின் உற்பத்திப் பொருட்களாக இருப்பதுதான். உற்பத்திப் பொருட்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் போது உழைப்பின் பல்வேறு விதங்களை மக்கள் ஒன்றோ டொன்று சமப்படுத்துகிறார்கள். பண்ட உற்பத்தி என்பது சமுதாய உறவுகளின் அமைப்பு முறை; அந்த அமைப்பு முறையில் தனித்தனி உற்பத்தியாளர்கள் பல வகைப்பட்ட உற்பத்திப் பொருட்களைச் செய்கிறார்கள் (சமுதாய வழியி லான உழைப்புப் பிரிவினை); அந்த அமைப்பு முறையில் இந்த உற்பத்திப் பொருட்களெல்லாம் பரிமாற்றம் மூலமாக ஒன்றோடொன்று சமப்படுத்தப்படுகின்றன. ஆகவே, எல்லாப் பண்டங்களுக்கும் பொதுவாயுள்ள அம்சம் ஒரு குறிப்பிட்ட உற்பத்தித் துறையைச் சேர்ந்த ஸ்தூலமான உழைப்பு அல்ல; ஒரு குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த உழைப்பு அல்ல; ஆனால் அவற்றிற்குப் பொதுவாயுள்ள அம்சம் சூட்சுமமான மனித உழைப்புத்தான், அதாவது, பொதுப்படையான மனித உழைப்புத்தான். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உழைப் புச் சக்தி முழுவதும், எல்லாப் பண்டங்களின் மதிப்புகளின் மொத்தத் தொகையிலே பிரதிநிதித்துவப்படுகிற ஒரே மனித உழைப்புச் சக்திதான். கோடிக் கணக்கிலே நடை பெறும் பரிமாற்றங்கள் இதை நிரூபிக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு குறிப்பிட்ட பண்டம், சமுதாய வழியில் அவசிய மான உழைப்பு நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட பண்டத்தை, குறிப்பிட்ட பயன்பாடு மதிப்பை உற்பத்தி செய்வதற்குச் சமுதாய வழியில் அவசியமான உழைப்பின் அளவைக் கொண்டுதான், சமுதாய வழியில் அவசியமான உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டுதான், அம்மதிப்பின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. ''பரிமாற்றம் மூலமாக வகைவகை

யான நமது உற்பத்திப் பொருட்களை மதிப்புகளாகச் சமப் படுத்தும் பொழுதெல்லாம் அதே செய்கையின் வாயிலாக அவற்றின் உற்பத்திக்குச் செலவழிக்கப்பட்ட உழைப்பின் பல்வேறு விதங்களையும் ஒரே மனித உழைப்பு என்ற முறையில் சமப்படுத்திவிடுகிறோம். இதை நாம் உணர்வதில்லை; இருந்தாலும் செய்கிறோம்.''[22] பழைய பொருளாதாரவாதிகளில் ஒருவர் சொன்னது போல், மதிப்பு என்பது இரண்டு நபர்களிடையே இருக்கும் உறவுதான்; அத்துடன், அந்த உறவு பொருட்களிடையே இருக்கும் உறவாக மாறுவேஷம் கொண்டிருக்கிறது என்றும் அவர் சேர்த்துச் சொல்லியிருக்க வேண்டும். குறிப்பிட்ட வரலாறு வகைப்பட்ட சமுதாய அமைப்பில் இருக்கிற சமுதாய உற்பத்தி உறவுகளின் தொகுப்பு முறையை நோக்குநிலையாகக் கொண்டு பார்த்தால் மட்டுமே மதிப்பு என்பது என்ன என்று நாம் புரிந்து கொள்ள முடியும்; மேலும், இந்த உறவுகள் பெருவாரியாக நடைபெறுகிற பரிமாற்றத்திலே தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன, இந்தப் பரிமாற்றம் என்ற நிகழ்ச்சி கோடிக் கணக்கான முறை திரும்பத் திரும்ப நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. ''மதிப்புகள் என்ற முறையில், எல்லாப் பண்டங்களுமே உறைந்து கெட்டியான உழைப்பு நேரத்தின் குறிப்பிட்ட திரள்களே ஆகும்.''[23] பண்டங்களில் அடங்கியுள்ள உழைப்பின் இருவகைத் தன்மையை விபரமாகப் பகுத்தாராய்ந்த பின் மார்க்ஸ் மதிப்பின் வடிவத்தையும் பணத்தையும் பகுத்தாராய்வதில் முனைகிறார். மதிப்பின் பண வடிவத்தின் தோற்றத்தைப் பரிசீலிப்பது, (ஒரு பண்டத்தின் குறிப்பிட்ட அளவு மற்றொரு பண்டத்தின் குறிப்பிட்ட அளவுக்கு மாற்றிக் கொள்ளப்படுவதான ''மதிப்பின் ஆரம்ப அல்லது தற்செயலான வடிவம்'' என்ற) தனியான, தற்செயலான பரிமாற்றங்களிலிருந்து தொடங்கி, குறிப்பிட்ட ஒரு பண்டத்துக்குப் பல்வேறு வகையான பண்டங்கள் மாற்றிக் கொள்ளப்படுவதான, மதிப்பின் முழுதளாவிய வடிவத்திற்கும், பின்பு தங்கம் இந்தக் குறிப்பிட்ட பண்டமாக, முழுதளாவிய ஈடாக ஏற்பட்ட காலத்திலுண்டான மதிப்பின் பண வடிவத்திற்குமாகப் பரிமாற்றம் வளர்ந்து வந்தது பற்றிய வரலாறு வகைப்பட்ட இயக்கப் போக்கைப் பரிசீலிப்பதே இங்கு மார்க்ஸின் பிரதான நோக்கம். பரிமாற்றம், பண்ட உற்பத்தி

ஆகியவற்றின் வளர்ச்சியில் மிக உயர்ந்த விளைவாயிருப்பதன் காரணமாக, பணம் என்ன செய்கிறது? எல்லாத் தனித்தனி வேலைகளிலும் அடங்கியிருக்கும் சமுதாயத் தன்மையை, சந்தையின் மூலம் ஒன்றுக்கப்பட்டுள்ள தனித்தனி உற்பத்தியாளர்களுக்கிடையே நிலவும் சமுதாய உறவை, அது மூடிமறைக்கிறது. பணத்தின் பல்வேறு செயற்கூறுகளை மார்க்ஸ் மிகவும் விபரமாகப் பகுத்தாராய்கிறுர். (பொதுவாக மூலதனத்தின் ஆரம்ப அத்தியாயங்களில் போலவே) இங்கே குறிப்பாக ஒன்றைக் கவனிப்பது அத்தியாவசியம்: அதாவது, இங்கே மார்க்ஸின் விளக்கமுறை சூட்சுமமானதாக இருக்கிறது; சில நேரங்களில் அது சுத்தமாக உய்த்தறியும் வகைப்பட்டதாயும் தோன்றும். ஆனால் உண்மையிலே அந்த விளக்கமுறை பரிமாற்றம், பண்ட உற்பத்தி ஆகியவற்றின் வளர்ச்சி வரலாற்றைப் பற்றிய விபரவிஷயங்களைப் பிரம்மாண்டமான அளவில் திரட்டித் தருகிறது. ''பணத்தைக் கவனிப்போமாஞல், அது வழக்கிலிருப்பது பண்டப் பரிமாற்றத்தின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தையே உட்கிடையாகக் குறிக்கிறது. பண்டங்களின் வெறும் ஈடாக மட்டுமோ, புழக்கத்திற்குரிய சாதனமாகவோ, செலுத்துவதற்குரிய சாதனமாகவோ, சேமிப்பாகவோ, முழுதளாவிய பணமாகவோ பணம் செய்கிற குறிப்பிட்ட செயற்கூறுகள் எல்லாம், அவற்றில் ஒவ்வொன்றின் அளவையும், ஒன்றைவிட மற்ருென்று எந்த அளவுக்கு மேலோங்கியிருக்கிறது என்பதையும் பொறுத்து, சமுதாய உற்பத்தி இயக்கப் போக்கின் மிகவும் வேறுபட்ட கட்டங்களையே குறிக்கின்றன.'' (மூலதனம், தொகுதி 1.)[24]

மிகுதி மதிப்பு

பண்ட உற்பத்தி வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பணம் மூலதனமாக மாறுகிறது. பண்டப் புழக்கத்தின் பொதுச் சூத்திரம் பின்வருமாறு: பண் (பண்டம்)—ப(பணம்)—பண் (பண்டம்); அதாவது ஒரு பண்டத்தை வாங்குவதற்காக மற்ருெரு பண்டத்தை விற்பது என்பதாம். இதற்கு மாருக, மூலதனத்தின் பொதுச் சூத்திரம் ப—பண்—ப; அதாவது (இலாபத்துக்கு) விற்பதற்காகவே வாங்குவது

என்பதாம். புழக்கத்திற்குக் கொண்டுவரும் பணத்தின் ஆரம்ப மதிப்பில் ஏற்படுகிற அதிகரிப்பை மார்க்ஸ் மிகுதி மதிப்பு என்று அழைக்கிறார். முதலாளித்துவப் புழக்கத்தின் போது பணத்தில் இவ்வாறு ''பெருக்கம்'' ஏற்படுகிறது என்ற உண்மை எல்லோரும் அறிந்ததே. இந்தப் ''பெருக்கம்'' தான் பணத்தை மூலதனமாக மாற்றுகிறது; உற்பத்தியின் ஒரு தனி, வரலாற்று வழிப்பட்ட, சமுதாய உற்பத்தி உறவு என்ற முறையிலே அமைகிற மூலதனமாக மாற்றுகிறது. பண்டப் புழக்கத்திலிருந்து மிகுதி மதிப்பு தோன்ற முடியாது; ஏனெனில், பண்டப் புழக்கம் ஈடுகளின் பரிமாற்றத்தைத் தான் கண்டிருக்கிறது. விலையைக் கூட்டிவிடுவதிலிருந்தும் மிகுதி மதிப்பு தோன்ற முடியாது; ஏனெனில் வாங்குபவர்கள், விற்பவர்களுடைய பரஸ்பர நஷ்டங்களும் இலாபங்களும் ஒன்றையொன்று சமமாக்கிச் சரி செய்துவிடும். ஆனால் இங்கே நாம் பார்ப்பது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; பெருந்திரளாய் நடந்தேறும் சராசரியான, சமுதாய நிகழ்ச்சியாகும். மிகுதி மதிப்பு பெறுவதன் பொருட்டு, பணத்தின் சொந்தக்காரன் ''மதிப்பைத் தோற்றுவிக்கும் தோற்றுவாயாய் அமையும் சிறப்பு இயல்புடைய பயன்பாடு மதிப்புள்ள ஒரு பண்டத்தைச் சந்தையில்... தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்''[25]—அதாவது, அந்தப் பண்டத்தின் நுகர்கிற இயக்கப் போக்கு மதிப்பைப் படைக்கும் இயக்கப்போக்காயும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பண்டம் ஒன்று உண்டு. அது தான் மனிதனின் உழைப்புச் சக்தி. அதன் நுகர்வு தான் உழைப்பு; உழைப்பு மதிப்பைப் படைக்கிறது. பணத்தின் சொந்தக்காரன் உழைப்புச் சக்தியை அதன் மதிப்புப்படி வாங்கிக் கொள்கிறான். மற்ற ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பு போலவே இந்த மதிப்பும் இதன் உற்பத்திக்கு வேண்டிய, சமுதாய வழியில் அவசியமான உழைப்பு நேரத்தினாலேயே நிர்ணயிக்கப்படுகிறது (அதாவது, அது அந்தத் தொழிலாளியும் அவனது குடும்பமும் பிழைத்திருப்பதற்கு வேண்டிய செலவு ஆகும்). உழைப்புச் சக்தியை வாங்கிய பணச் சொந்தக்காரனுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ள உரிமையுண்டு: அதாவது, அந்த உழைப்புச் சக்தியை நாள் முழுவதும்—பன்னிரண்டு மணி நேரம் என்று வைத்துக் கொள்வோம்—வேலை வாங்க அவனுக்கு உரிமையுண்டு. இருந்தாலும்,

ஆறு மணி நேரத்தில் (''அவசியமான'' உழைப்பு நேரம்) தொழிலாளி தனது பிழைப்புச் செலவைச் சரிக்கட்டுமளவுக்கு உற்பத்திப் பொருளைச் செய்கிறான்; அடுத்த ஆறு மணி நேரத்தில் (''மிகுதி'' உழைப்பு நேரம்) ''மிகுதி'' உற்பத்திப் பொருளை அல்லது மிகுதி மதிப்பைச் செய்கிறான். இதற்கு முதலாளி அந்தத் தொழிலாளிக்குப் பணம் கொடுப்பதில்லை. எனவே உற்பத்தியின் இயக்கப்போக்கிலிருந்து பார்க்கையில் மூலதனத்தில் காணக்கூடிய இரு பகுதிகளை வேறுபடுத்துவது அவசியமாகும்: அதாவது, (இயந்திரங்கள், உழைப்புக் கருவிகள், கச்சாப் பொருட்கள் முதலிய) உற்பத்திச் சாதனங்களுக்காகச் செலவாகிற நிலையான மூலதனம்; இதன் மதிப்பு கொஞ்சமேனும் மாறுபடாமல் (ஒரே மொத்தமாகவோ பகுதி பகுதியாகவோ) தயாரான உற்பத்திப் பொருளின்பால் மாற்றப்படுகிறது; அடுத்தது, மாறுபடும் மூலதனம்: இது உழைப்புச் சக்திக்காகச் செலவழிக்கப்படுகிறது. இந்த மூலதனத்தின் மதிப்பு ஒரு நிலையாயிருப்பதில்லை; உழைப்பின் இயக்கப் போக்கில் அது மிகுதி மதிப்பைப் படைத்த வண்ணம் வளர்கிறது. ஆகவே உழைப்புச் சக்தியை மூலதனம் சுரண்டுகிற அளவைக் காட்ட வேண்டுமானால் மிகுதி மதிப்பை மொத்த மூலதனத்தோடு ஒப்புநோக்கலாகாது; மாறுபடும் மூலதனத்துடன் மட்டுமே ஒப்புநோக்க வேண்டும். ஆகவே, நமது உதாரணத்தில், மிகுதி மதிப்பின் விகிதம் என்று மார்க்ஸ் அழைக்கிற இந்த விகிதம் 6:6, அதாவது 100 சதவிகிதம் ஆகும்.

மூலதனத்தின் தோற்றத்திற்கு வரலாற்று வழிப்பட்ட முன்தேவைகளாவன: முதலாவதாக, தனிநபர்களின் கையிலே ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பணம் குவியவும், அதே சமயத்தில் பொதுவாகவே பண்ட உற்பத்தியின் வளர்ச்சி சார்புநோக்கில் உயர்ந்த தரத்திற்கு வளர்ந்திருக்கவும் வேண்டும்; இரண்டாவதாக, இரண்டு அர்த்தங்களில் ''சுதந்திரமான'' உழைப்பாளி இருக்க வேண்டும்—அதாவது, தனது உழைப்புச் சக்தியை விற்பதில் எல்லா விதமான கட்டுப்பாடுகளிலிருந்தும் தடைகளிலிருந்தும் விடுபட்டவன் என்ற அர்த்தத்திலும், நிலத்திலிருந்தும் பொதுவாக எல்லா உற்பத்திச் சாதனங்களிலிருந்தும் விடுபட்டவன் என்ற அர்த்தத்திலும். யாருடனோ எதனுடனோ இணைக்கப்படாத

கட்டறுந்த உழைப்பாளி, அதாவது தனது உழைப்புச் சக்தியை விற்பதைத் தவிர வேறெந்த வழியிலும் பிழைக்க முடியாத ''பாட்டாளி'' இருக்க வேண்டும்.

இரண்டு அடிப்படையான முறைகளின் மூலமாக மிகுதி மதிப்பை அதிகப்படுத்த முடியும்: அதாவது, வேலை நேரத்தை அதிகப்படுத்துவது (''தனிமநிலை மிகுதி மதிப்பு''), அவசிய மான வேலை நேரத்தைக் குறைப்பது (''சார்புநிலை மிகுதி மதிப்பு''). முதல் வழியை மார்க்ஸ் பகுத்தாராய்கையில், வேலை நேரத்தைக் குறைப்பதற்காகத் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தைப் பற்றியும், வேலை நேரத்தை அதிகமாக்குவதற்காகவும் (14ம் நூற்றுண்டிலிருந்து 17ம் நூற்றுண்டு வரை), வேலை நேரத்தைக் குறைப்பதற்காகவும் (19ம் நூற்றுண்டின் ஆலைச் சட்டங்கள்) அரசாங்கம் தலை யிட்டு வந்ததைப் பற்றியும் ஆழப்பதியும் சித்திரம் ஒன்றை நமக்குத் தருகிருர். மூலதனம் வெளிவந்த காலந்தொட்டு இந்தச் சித்திரத்தை மேலும் விரிவாக்கும் விதத்திலே பல்லா யிரக் கணக்கான புதிய விபரங்களை எல்லா நாகரிக நாடு களிலுமுள்ள தொழிலாளர் இயக்கத்தின் வரலாறு தந்திருக் கிறது.

சார்புநிலை மிகுதி மதிப்பின் உற்பத்தியைப் பகுத்தாராய் கையில் மார்க்ஸ், முதலாளித்துவம் எந்த மூன்று கட்டங்கள் மூலமாக உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய் திருக்கிறதோ, அந்த மூன்று வரலாற்றுக் கட்டங்களையும் பரி சீலிக்கிருர். அவையாவன: 1) சாதாரணக் கூட்டுறவு; 2) உழைப் பின் பிரிவினையும் பட்டறைத் தொழிலும்; 3) இயந்திரங் களும் பெருமளவான தொழிலும். முதலாளித்துவ வளர்ச்சி யின் அடிப்படையான, எடுத்துக்காட்டான முனைப்புக்கூறுகளை மார்க்ஸ் இங்கே எவ்வளவு ஆழமாக வெளிப்படுத்திருக் கிருர் என்பதை ருஷ்யாவின் ''குடிசைத்'' தொழில் என்று சொல்லப்படுவதைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேலே குறித் துள்ள முதல் இரண்டு கட்டங்களை விளக்கிக் காட்டுவதற்கு ஏராளமான விபரங்களைத் தந்துள்ளன என்ற உண்மை காட்டு கிறது என்று போகிற போக்கில் குறிக்கலாம். பெருமள வான இயந்திரத் தொழிலின் எந்தப் புரட்சிகரமாக்கும் செயல்தன்மையை மார்க்ஸ் 1867ல் விவரித்தாரோ, அந்தச் செயல்தன்மை (ருஷ்யா, ஜப்பான் முதலிய) பலப்பல புதிய

நாடுகளிலே கடந்த அரை நூற்றுண்டில் வெளியாகியிருக்கிறது.

மேலே தொடர்வோம். மிக மிகப் புதுமையானதும் முக்கியமானதும் மூலதனத்தின் திரட்டல் பற்றிய மார்க்ஸின் பகுப்பாய்வாகும். மூலதனத்தின் திரட்டல் என்ருல் மிகுதி மதிப்பின் ஒரு பகுதி மூலதனமாக மாற்றப்படுவது; மிகுதி மதிப்பை முதலாளியின் சொந்தத் தேவைகளேயோ, மன விருப்பங்களேயோ நிறைவு செய்வதற்காகப் பயன்படுத்தாமல் புதிய உற்பத்திக்காகப் பயன்படுத்துவது. (ஆதாம் ஸ்மித் முதல்) முந்தைய மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதார வாதிகள் எல்லோரும் செய்த தவறை மார்க்ஸ் வெளிப்படுத்திஞர். அவர்கள் எல்லோரும் மூலதனமாக மாற்றப்படும் மிகுதி மதிப்பு முழுவதும் மாறுபடும் மூலதனமாகும் என்று எண்ணிக் கொண்டார்கள். ஆஞல் உண்மையிலேயே மிகுதி மதிப்பு உற்பத்திச் சாதனங்களுக்கு ஒரு பங்காகவும், மாறுபடும் மூலதனத்துக்கு மற்ருெரு பங்காகவும் பிரிக்கப்படுகிறது. (மூலதனத்தின் மொத்தத் தொகையில்) மாறுபடும் மூலதனத்தின் பங்கைவிட நிலேயான மூலதனத்தின் பங்கு அதிக வேகத்துடன் வளர்ச்சி பெறுவது முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கிலும், முதலாளித்துவம் சோஷலிஸமாக மாறுவதற்கான இயக்கப்போக்கிலும் மகத்தான முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மூலதனத்தின் திரட்டல், தொழிலாளர்களுக்குப் பதிலாய் இயந்திரங்களேக் கொண்டு வேலேகளே முடித்துக் கொள்ளும் போக்கை விரைவுபடுத்தி, ஒரு கோடியில் செல்வத்தையும் இன்னெரு கோடியில் வறுமையையும் உண்டாக்கித் ''தொழிலாளர்களின் சேமப் பட்டாளம்'' என்று சொல்லப்படுவதை, ''சார்புநிலே மிகுதியான'' தொழிலாளர்களே அல்லது ''முதலாளித்துவ மிகை மக்கள் தொகைப் பெருக்கை'' தோற்றுவிக்கிறது. இந்நிகழ்ச்சியானது பல வகைப்பட்ட வடிவங்களில் ஏற்பட்டு, மூலதனம் மிகமிக வேகமாக உற்பத்தியை விரிவாக்குவதைச் சாத்தியமாக்குகிறது. இங்கே ஒன்று சொல்லலாம். இந்நிலேமையும் கடன் வசதிகளும், உற்பத்திச் சாதனங்களிலே ஏற்படும் மூலதனத் திரட்டலும் முதலாளித்துவ நாடுகளில் அவ்வப்போது ஏற்பட்ட மிகை உற்பத்தி நெருக்கடிகளின் காரணகாரியங்களேப் புரிந்து

கொள்வதற்குத் தடயம் தருகின்றன. இந்த நெருக்கடிகள் முதலில் சராசரி பத்தாண்டுகளுக்கு ஒரு தடவையாக ஏற்பட்டுக் கொண்டிருந்தன; பிறகு, இதைவிட நீண்ட, அவ்வளவாகத் திட்டமாகச் சொல்ல முடியாத கால இடைவெளி விட்டு நிகழ்ந்தன. முதலாளித்துவத்தின்கீழ் ஏற்படுகிற மூலதனத் திரட்டல் வேறு, துவக்கக்கால மூலதனத் திரட்டல் என்று சொல்லப்படுவது வேறு என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். துவக்கக்கால மூலதனத் திரட்டல் என்பது என்ன? உற்பத்திச் சாதனங்களிலிருந்து உழைப்பாளியைப் பலாத்காரமாகப் பிரித்துவிடுவது, நிலத்திலிருந்து விவசாயிகளைத் துரத்திவிடுவது, சமுதாயப் பொது நிலங்களைத் திருடிக் கொள்வது, காலனிகள், தேசியக் கடன்கள், காப்பு வரிகள், முதலான பல ஏற்பாடுகள் துவக்கக்கால மூலதனத் திரட்டலின் முனைப்புக்கூறுகளாம். ''துவக்கக்கால மூலதனத் திரட்டல்'' என்பது ஒரு கோடியில் ''சுயேச்சையான'' பாட்டாளியைத் தோற்றுவித்து, மற்றொரு கோடியில் பணச் சொந்தக்காரனை, முதலாளியை, தோற்றுவிக்கிறது.

''முதலாளித்துவ மூலதனத் திரட்டலின் வரலாற்று வழிப்பட்ட போக்கைப்'' பின்வரும் புகழ் பெற்ற சொற்களில் மார்க்ஸ் விவரிக்கிறார்: ''நேரடியான உற்பத்தியாளர்களின் சொத்தைப் பறிமுதல் செய்யும் வேலை, ஈவிரக்கமற்ற படுமூர்க்கத்துடன், மிகமிக வெட்கக்கேடான, மிகமிக ஆபாசமான, மிகமிக அற்பத்தனமான, மிகமிக இழிவான, அருவருக்கத்தக்க வெறியுணர்ச்சிகளால் தூண்டப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. தனியான, சுயேச்சையான உழைப்பாளியும், அவனுடைய உழைப்புக்குரிய நிலைமைகளும் ஒன்றாக இணைவதை அடிப்படையாகக் கொண்டதென்று சொல்லக் கூடிய சொந்த சம்பாத்தியமாகிய தனிச்சொத்து'' (விவசாயி, கைத்தொழில் செய்வோன் ஆகியோர்களின் தனிச் சொத்து) ''நீக்கப்பட்டு அதன் இடத்தில் முதலாளித்துவத் தனிச்சொத்து ஏற்றி வைக்கப்படுகிறது. இந்த முதலாளித்துவத் தனிச்சொத்து, பிறருடைய, பெயரளவில் சுயேச்சையான உழைப்பைச் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.... இப்பொழுது சொத்து பறிமுதல் செய்யப்பட வேண்டியவன் தனக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும்

உழைப்பாளியல்ல, பல தொழிலாளிகளைச் சுரண்டிக் கொண்டிருக்கிற முதலாளிதான். முதலாளித்துவ உற்பத்தியின் இயல்பான உள் விதிகள் செயல்படுவதன் மூலமாக, மூல தனம் ஒரு மையத்தில் சேகரிக்கப்படும் போக்கின் மூலமாக, இந்தச் சொத்துப் பறிமுதல் நிறைவேற்றப்படுகிறது. எப்பொழுதுமே ஒரு முதலாளி பல முதலாளிகளைக் கொல்கிறான். இவ்வாறு ஒரு மையத்தில் மூலதனம் சேகரிக்கப்படும் போக்கோடுகூடவே, அல்லது பல முதலாளிகளின் சொத்தைச் சில முதலாளிகள் பறிமுதல் செய்வதோடுகூடவே, உழைப்பு முறையின் கூட்டுறவு வடிவமும், விஞ்ஞானத்தை உணர்வுபூர்வமான தொழில்நுட்பப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதும், விளைநிலத்தைத் திட்டப்படி பண்படுத்தி வருவதும், உழைப்புக் கருவிகள் எல்லோரும் பொதுவாக உபயோகிக்கும்படியாக மட்டுமே அமைந்த உழைப்புக் கருவிகளாக மாற்றம் அடைவதும், எல்லா உற்பத்திச் சாதனங்களையும் ஒன்றிணைந்த, சமுதாய மயமான உழைப்பின் உற்பத்திச் சாதனங்களாக உபயோகிப்பதன் மூலமாக அவற்றைச் சிக்கனம் செய்வதும், உலகச் சந்தை என்ற வலையில் எல்லா நாடுகளைச் சேர்ந்த மக்களையும் சிக்க வைப்பதும், அத்துடன் முதலாளித்துவ அரசாட்சியின் சர்வதேசத் தன்மையும், மேலும்மேலும் விரிவான அளவில் வளர்கின்றன. மூலதன அதிபர்களின் எண்ணிக்கை இடையறுது குறைந்து கொண்டே போகிறது; இந்த மாற்றத்திஞல் கிடைக்கிற அனுகூலங்கள் எல்லாவற்றையும் அவர்களே கைப்பற்றி ஏகபோகமாக்கிக் கொள்கின்றனர். இந்தப் போக்குடன் கூடவே, வறுமையும் ஒடுக்குமுறையும் அடிமைத்தனமும் இழிநிலையும் சுரண்டலும் மலைபோல் வளர்கின்றன. ஆனல், இத்துடன் கூடவே தொழிலாளி வர்க்கத்தின் கிளர்ச்சியும் வளர்கின்றது. தொழிலாளி வர்க்கம் எப்போதும் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டேயிருக்கும் வர்க்கமாகும்; மேலும் முதலாளித்துவ உற்பத்திப் போக்கிலேயே அந்த வர்க்கம் கட்டுப்பாடும் ஒற்றுமையும் ஒழுங்கமைப்பும் பெறுகிறது. எந்த உற்பத்தி முறை மூலதனத்தின் ஏகபோகத்துடன்கூடவே முளைத்து, அதனுடனேயே, அதன் அடியிலேயே தழைத்துச் செழித்ததோ, அந்த உற்பத்தி முறைக்கு மூலதனத்தின் ஏகபோகமே விலங்காகிவிடுகிறது. உற்பத்திச் சாதனங்

களின் ஓரிடக் குவியலும், உழைப்பின் சமுதாயமயமாக்குதலும் கடைசியிலே ஒரு நிலையை எட்டியதும் அவற்றிற்கும் அவற்றின் முதலாளித்துவ மேலோட்டுக்கும் பொருத்த மற்றுப் போய்விடுகிறது. இந்த மேலோடு உடைத்தெறியப்படுகிறது. முதலாளித்துவத் தனிச் சொத்துக்குச் சாவுமணி அடிக்கப்படுகிறது. பறிமுதல் செய்வோர்களின் சொத்து பறிமுதல் செய்யப்படுகிறது.'' (மூலதனம், தொகுதி 1).[26]

மூலதனத்தின் இரண்டாம் தொகுதியில் மொத்த சமுதாய மூலதனத்தின் மறு உற்பத்தியைப் பற்றி மார்க்ஸ் செய்யும் பகுப்பாய்வு மிகமிக உயர்ந்த அளவிலே புதுமையாயும் முக்கியமானதாயும் உள்ளது. இங்கேயும்கூட மார்க்ஸ் தனியொரு நிகழ்ச்சியை ஆராயாமல் வெகுவாகக் காணக் கிடக்கிற நிகழ்ச்சியையே ஆராய்கிருர்; சமுதாயத்தினுடைய பொருளாதாரத்தின் ஏதோ ஒரு சிறு பகுதியை ஆராயாமல் அந்தப் பொருளாதாரம் முழுவதையுமே ஆராய்கிருர். மூலச் சிறப்புள்ள பொருளாதாரவாதிகள் செய்த மேற்கூறிய தவறைத் திருத்தி, சமுதாய உற்பத்தி முழுவதையும்: 1) உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி, 2) நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி என்று இரண்டு பெரும் பகுதிகளாக மார்க்ஸ் பிரிக்கிருர்; மேலும், முந்தைய அளவுகளிலே மறு உற்பத்தி விஷயத்திலும் சரி, குவியல் விஷயத்திலும் சரி மொத்த சமுதாய மூலதனம் புழங்கி வந்ததைப் பற்றி மார்க்ஸ் எண் கணித உதாரணங்களுடன் விபரமாகப் பரிசீலனை செய்கிருர். மதிப்பின் விதியை அடிப்படையாகக் கொண்டு, இலாபத்தின் சராசரி விகிதம் அமையும் பிரச்சினையை மூலதனத்தின் மூன்றும் தொகுதி தீர்த்து வைக்கிறது. வெகுவாகக் காணக் கிடக்கிற பொருளாதாரத் தோற்றங்களைப் பார்க்கும் நிலையிலேதான், சமுதாயப் பொருளாதாரம் முழுவதையும் பார்க்கும் நிலையிலேதான், மார்க்ஸ் தமது பகுப்பாய்வை நடத்திச் செல்கிருர். விஞ்ஞானக்கேடான அரசியல் பொருளாதாரமோ, அல்லது நவீன காலத்திய ''இறுதிநிலைப் பயன்பாட்டுத் தத்துவமோ''[27] அடிக்கடி செய்வது போல, தனித்தனி விஷயங்களை எடுத்துக் கொண்டு, அல்லது போட்டியின் வெளித்தோற்றமாயுள்ள, மேலெழுந்தவாரியான அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டு பார்க்கும் நிலையுடன் மார்க்ஸ் நின்றுவிடவில்லை. பொருளாதார விஞ்ஞானத்தில் மார்க்ஸ்

ஏற்படுத்திய பெருத்த முன்னேற்றம் இதில் அடங்கியிருக்கிறது. மிகுதி மதிப்பின் தோற்றத்தை மார்க்ஸ் முதலில் பகுத்தாராய்கிறார்; பிறகு அது இலாபமாகவும், வட்டியாகவும், நில வாடகையாகவும் பிரிவதைக் கவனிக்கப் புகுகிறார். இலாபம் என்பது மிகுதி மதிப்புக்கும், ஒரு தொழில் நிலையத்தில் போடப்பட்ட மொத்த மூலதனத்திற்கும் இடையேயுள்ள விகிதமேயாகும். ''உயர்வான உள்ளமைப்பு'' [high organic composition] உள்ள (அதாவது, நிலையான மூலதனம் மாறுபடும் மூலதனத்தைக் காட்டிலும் சமுதாய சராசரிக்கும் மேல் அதிகமாயிருப்பதான) மூலதனம், சராசரியைவிடக் குறைந்த இலாபவிகிதத்தைத் தருகிறது. ''தாழ்ந்த உள்ளமைப்பு'' [low organic composition] உள்ள மூலதனம் சராசரியைக் காட்டிலும் அதிகமான இலாபவிகிதத்தைத் தருகிறது. மூலதனங்களிடையேயுள்ள போட்டி, ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு அந்த மூலதனங்கள் மாறிச் செல்வதற்குப் பெற்றுள்ள சுதந்திரம்—இவையிரண்டும் இலாப விகிதத்தைச் சராசரிக்குச் சமப்படுத்திவிடுகின்றன. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் எல்லாப் பண்டங்களுடைய மதிப்புகளின் மொத்தத் தொகை பண்டங்களுடைய விலைகளின் மொத்தத் தொகையோடு ஒத்திருக்கிறது; ஆனால், போட்டியின் காரணமாக, தனித்தனி தொழில் நிலையங்களிலும் தனித்தனி உற்பத்திக் கிளைகளிலும் அவற்றின் மதிப்புகளுக்குச் சமமாகப் பண்டங்கள் விற்கப்படுவதில்லை; அதற்குப் பதிலாக அவற்றின் உற்பத்தி விலைகளுக்குச் சமமாகத்தான் விற்கப்படுகின்றன. இந்த உற்பத்தி விலைகள் செலவழிக்கப்பட்ட மூலதனமும் சராசரி இலாபமும் சேர்ந்த கூட்டுத் தொகைக்குச் சமமாகும்.

இவ்வாறு விலைகளுக்கும் மதிப்புகளுக்குமிடையே வேற்றுமையுள்ளது என்ற மறுக்கமுடியாத, எல்லோருக்கும் தெரிந்த உண்மையையும், இலாபங்கள் ஒன்றோடொன்று சமப்படுத்தப்படுகின்றன என்ற மறுக்கமுடியாத, எல்லோருக்கும் தெரிந்த உண்மையையும் மார்க்ஸ் மதிப்பின் விதியை அடிப்படையாகக்கொண்டு முற்றாக விளக்கிவைக்கிறார்; ஏனெனில், எல்லாப் பண்டங்களுடைய மதிப்புகளின் மொத்தத்தொகையும் விலைகளின் மொத்தத் தொகையோடு ஒத்திருக்கின்றது. என்ற போதிலும், (சமுதாய) மதிப்பு (தனிப்பட்ட) விலைகளு

டன் சரி சமமாக்கப்படுவது அவ்வளவு எளிதாக, நேரடியாக நடைபெறுகிற விஷயமல்ல; அது மிகச் சிக்கலான முறையிலே நடைபெறுகிற காரியமாகும். சந்தையால் மட்டுமே ஒன்ருக இணைக்கப்பட்டிருக்கிற தனித்தனி பண்ட உற்பத்தியாளர்களைக் கொண்ட சமுதாயத்தில் விதியானது சராசரியான, சமுதாய அளவிலான, பெரு வழக்கான விதியாகத்தான் வெளிப்பட முடியும் என்பது மிகமிக இயல்பானதொரு விஷயமாகும்; இந்த விதியிலிருந்து இந்தப் பக்கமோ, அந்தப் பக்கமோ விலகிச் செல்லும் தனித்தனி திரிபுகள் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன.

உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்கிறது என்பதின் உட்கிடை நிலையான மூலதனம் மாறுபடும் மூலதனத்துடன் ஒப்பிடும் போது வேகமாக அதிகரிக்கிறது என்பதுதான். மிகுதி மதிப்போ, மாறுபடும் மூலதனத்தின் செயற்கூறு மட்டுமே; ஆகவே, இலாப விகிதம் (மிகுதி மதிப்புக்கும் மொத்த மூலதனத்துக்கும்—அதன் மாறுபடும் பகுதிக்கு மட்டுமல்ல—இடையேயுள்ள விகிதத்தை இது குறிக்கிறது) இறங்கும் போக்குள்ளது வெளிப்படை. இந்த இறங்கும் போக்கையும், இதை மூடிமறைக்கிற, அல்லது இதற்கு எதிராகச் செயல்படுகிற பல சூழ்நிலைமைகளையும் மார்க்ஸ் விபரமாகப் பகுத்தாராய்கிருர். கடும் வட்டி மூலதனம், வியாபார மூலதனம், பண மூலதனம் ஆகியவற்றைப் பரிசீலிக்கும் மூலதனத்தின் மூன்ரும் தொகுதியிலுள்ள மிகமிகச் சுவாரசியமான பகுதிகளைப் பற்றிச் சொல்ல முற்படாமல், அதில் மிக மிக முக்கியமான பகுதியாகிய நில வாடகையின் தத்துவம் பற்றிய பகுதியைக் கவனிப்பதில் முனேவோம். நிலப்பரப்பு ஒரு வரையறைக்குட்பட்டது; முதலாளித்துவ நாடுகளில் இந்த நிலப்பரப்பு முழுவதையும் தனித்தனி சொந்தக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டிருக்கிருர்கள். இந்தக் காரணத்திஞல் விவசாய விளைபொருட்களின் உற்பத்தி விலை நிர்ணயிக்கப்படுவது, சராசரி ரக விளைநிலத்தில் அல்ல, அடிமட்ட ரக விளைநிலத்தில் ஏற்படும் உற்பத்திச் செலவைக் கொண்டு, —விளைபொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கான சராசரி வசதி நிலைமைகளைக் கொண்டல்ல, படுமோசமான நிலைமைகளைக் கொண்டு. இந்த விலைக்கும், மேலான விளை நிலத்தில் (அல்லது மேலான நிலைமைகளில்) ஆகும் உற்பத்தி

விலேக்கும் உள்ள வேறுபாடுதான் **வேற்றுமைநிலே வாடகை** ஆகும். இதை விபரமாகப் பகுத்தாராய்ந்து, வெவ்வேறு நிலப்பகுதிகளின் செழுமையிலே இருக்கிற வேறுபாட்டிலிருந் தும் நிலத்தில் ஈடுபடுத்தும் மூலதனத்தின் அளவில் இருக்கிற வேறுபாட்டிலிருந்தும் இந்த வாடகை எப்படித் தோன்று கிறது என்பதை எடுத்துக்காட்டிய மார்க்ஸ், ரிக்கார்டோ வின் தவறை முற்ருக அம்பலப்படுத்துகிருர் (**மிகுதி மதிப்பு பற்றிய தத்துவங்கள்** என்ற நூலேப் பார்க்க; இதிலுள்ள ரோட் பெர்டஸ் பற்றிய விமர்சனம் குறிப்பாகக் கவனிக்கத்தக்கது). நிலம் மேலான நிலேயிலிருந்து படிப்படியாக மோசமான நிலேக்கு மாறிச் செல்லும் போதுதான் வேற்றுமைநிலே வாட கை பெறப்படுகிறது என்று ரிக்கார்டோ தவருகக் கருதிஞர். இதற்கு மாருக, கீழ்நிலேயிலிருந்து மேல்நிலேக்கும் நிலங்கள் மாறக் கூடும் (விவசாயத் தொழில் நுணுக்கத்தில் ஏற்படும் முன்னேற்றம், நகரங்களின் வளர்ச்சி முதலிய காரணங்க ளால்) நிலம் ஒரு ரகத்திலிருந்து இன்ஞெரு ரகத்துக்கு மாறக் கூடும். "குன்றிச் செல்லும் விளேவு விதி" [law of diminishing returns] என்ற கெட்ட பெயர் பெற்ற விதி முற்றிலும் தவருனதாகும். இது, முதலாளித்துவத்தின் குறைபாடுகளே யும் வரையறைகளேயும் முரண்பாடுகளேயும் இயற்கையின் மீது சுமத்துகிறது. மேலும், தொழிலின் எல்லாத் துறைகளி லும், பொதுவாக தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் இலாபம் சரிசமமாக்கப்பட வேண்டுமாஞல் போட்டியிடுவதில் முழுச் சுதந்திரமும் ஒரு கிளேயிலிருந்து இன்ஞெரு கிளேக்கு மூலதனம் தங்குதடையின்றி ஓடிக் கொண்டிருப்பதும் அவசியம் இருந்து தீரவேண்டும். ஆஞல் நிலத்திலுள்ள தனியுடைமை ஏகபோகத்தைத் தோற்றுவிக் கிறது. இந்த ஏகபோகம் மூலதனம் இப்படி ஒரு கிளேயி லிருந்து இன்ஞெரு கிளேக்குத் தங்குதடையின்றி ஓடுவதற்கு இடையூருக அமைந்துவிடுகிறது. தாழ்ந்த உள்ளமைப்புள்ள மூலதனத்தையும், அதன் பயஞகத் தனித்த முறையில் உயர் தர இலாப விகிதத்தையும் சிறப்பியல்பாகக் கொண்ட விவ சாயத்தின் விளேபொருட்கள் இந்த ஏகபோகத்தின் காரணத் தால், இலாப விகிதத்தைச் சரிசமமாக்கி வைக்கும் முழுச் சுயேச்சையுள்ள இயக்கப் போக்கில் பங்கு கொள்வதில்லே. நிலச்சுவான்தார் ஏகபோக உரிமையாளஞக இருப்பதிஞல்

விலையைச் சராசரிக்கு மேலாகவே உயர்த்தி வைத்திருக்க முடியும். இந்த ஏகபோக விலைதான் தனிமநிலை வாடகையை உண்டாக்குகிறது. முதலாளித்துவ முறையின்கீழ் வேற்றுமை நிலை வாடகையை ஒழித்துவிட முடியாது, ஆனால் தனிமநிலை வாடகையை ஒழித்துவிட முடியும்; உதாரணமாக, நிலத்தைத் தேசியமயமாக்குவதின் மூலமாக, நிலத்தை அரசு உடைமையாகச் செய்வதின் மூலமாக, அதை ஒழிக்க முடியும். நிலத்தை அரசு உடைமையாகச் செய்துவிடுவது தனி நிலச்சுவான்தார்களின் ஏகபோகத்தைப் பலவீனப்படுத்தும், விவசாயத் துறையிலும் போட்டியிடுவதற்குரிய சுதந்திரம் முன்னை விட முரணின்றி முழுமையாகச் செயல்படுவதில் கொண்டு போய்விடும். எனவேதான், நிலத்தைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற இந்த முற்போக்கான முதலாளித்துவக் கோரிக்கையைத் தீவிரவாத முதலாளி வர்க்கத்தினர் வரலாற்றுப் போக்கிலே திரும்பத் திரும்ப வெளியிட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் கோரிக்கை பெரும்பாலான முதலாளி வர்க்கத்தினரைக் கிலியடைந்தோடச் செய்கிறது. ஏனென்றால் அது இன்னொரு ஏகபோகத்தை—தற்காலத்தில் குறிப்பிடத் தக்க முக்கியத்துவமுள்ள, ''தொட்டால் சிணுங்கியான'' ஏகபோகத்தை, அதாவது பொதுவாக உற்பத்திச் சாதனங்களிலுள்ள ஏகபோகத்தை—மிகவும் நெருங்கிய முறையில் ''பாதிக்கிறது''. (மூலதனத்தின்மேல் கிடைக்கிற இலாபத்தின் சராசரி விகிதம் பற்றிய தமது தத்துவத்தைக் குறித்தும், தனிமநிலை நில வாடகை பற்றிய தமது தத்துவத்தைக் குறித்தும் 1862 ஆகஸ்ட் 2ம் தேதி எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ் மக்களுக்குப் புரியும்படியான, சுருக்கமான, தெளிவான விளக்கத்தைத் தருகிறார். கடிதப் போக்குவரத்து, மூன்றும் தொகுதி, 77-81ம் பக்கங்களைப் பார்க்க. மேலும் இதே தொகுதியில் 86-87ம் பக்கங்களில் தரப்பட்டுள்ள 1862 ஆகஸ்ட் 9ம் தேதியிட்ட கடிதத்தையும் பார்க்க.) உழைப்பு வாடகை எவ்வாறு படிப்படியாக மாறி முதலாளித்துவ வாடகையாக உருப்பெறுகிறது என்பதைக் காட்டும் மார்க்ஸின் பகுப்பாய்வைக் கவனிப்பதும் நில வாடகையின் வரலாற்றுக்கு முக்கியமானதாகும்: (விவசாயி நிலப்பிரபுவின் நிலத்தில் பாடுபட்டு மிகுதி விளைபொருளை உண்டாக்குவதான) உழைப்பு வாடகையானது, (விவசாயி தன் சொந்த

நிலத்தில் மிகுதி விளைபொருளை உண்டாக்கி, ''பொருளாதாரச் சார்பற்ற நிர்ப்பந்தம்'' காரணமாக அதை நிலப்பிரபுவிடம் ஒப்படைத்துவிடுவதான) விளைபொருள் வாடகை அல்லது பண்ட வாடகையாகவும், பின்பு (பண்ட உற்பத்தி வளர்ச்சியின் காரணமாக, பண்ட வாடகை பணமாக மாறுவதான, ருஷ்யாவில் வழங்கிய ''ஒப்ரோக்'' முறை போன்ற) பண வாடகையாகவும் மாறுகிறது; முடிவில், கூலி உழைப்பின் உதவியால் சாகுபடி செய்யும் விவசாயத் துறை முதலாளி விவசாயியை அகற்றி விட்டு அவன் இடத்தில் அமர்ந்து கொள்ளும் போது முதலாளித்துவ வாடகையாக மாறுகிறது என்று மார்க்ஸின் பகுப்பாய்வு காட்டுகிறது. ''முதலாளித்துவ நில வாடகையின் தோற்றம்'' பற்றிய இந்தப் பகுப்பாய்வு சம்பந்தமாக மார்க்ஸ் விவசாயத் துறையில் முதலாளித்துவத்தின் பரிணமம் பற்றித் தருகிற, (ருஷ்யாவைப் போன்ற பிற்பட்ட நாடுகளுக்குத் தனி முக்கியத்துவம் வாய்ந்த) பல ஆழ்ந்த கருத்துக்களைக் குறிப்பிட்டாக வேண்டும். ''பண்ட வாடகை பண வாடகையாக மாறுவதுடன் கூடவே கூலிக்கு வேலை செய்பவர்களான சொத்தில்லாத கூலி ஆட்களின் வர்க்கம் ஒன்று அவசியம் உருவாகிவிடுகிறது என்பது மட்டுமல்ல; அந்த வர்க்கம் உருப்பெறுவதே அதை முன்னறிவிக்கிறது. இந்தக் கூலி வேலையாட்கள் தோன்றிக் கொண்டிருக்கும் காலப்பகுதியில், இந்தப் புதிய வர்க்கம் இங்குமங்குமாய்த் தோன்றிக் கொண்டிருக்கையிலேயே, நல்ல நிலைமையிலுள்ள, மேல்வாரம் செலுத்தும் விவசாயிகளிடையே தங்களது சொந்த அனுகூலத்துக்காகவே விவசாய உழைப்பாளிகளைச் சுரண்டுகிற வழக்கமும், நிலப்பிரபுத்துவ காலத்தில் அதிகச் செல்வம் படைத்த பண்ணையடிமைகள் தங்களுடைய சொந்த அனுகூலத்துக்காக மற்ற பண்ணையடிமைகளை வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தது போலவே, அவசியமாக வளர்கிறது. இந்த முறையிலே அவர்கள்—நல்ல நிலைமையிலுள்ள, மேல்வாரம் செலுத்தும் விவசாயிகள்—ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் செல்வத்தைச் சேகரிப்பதற்கும் எதிர் காலத்தில் முதலாளிகளாகக்கூட மாறிவிடுவதற்கும் படிப்படியாக வாய்ப்பு பெறுகின்றனர். சுயமாக உழைத்து வந்த பழைய நிலச் சொந்தக்காரர்கள் இப்படித்தான் தங்கள் மத்தியிலிருந்தே முதலாளித்துவக் குத்தகைதாரர்களை வளர்க்

கும் ஒரு வளர்ப்புப் பண்ணையை உண்டாக்கி வைக்கிறார்கள். இந்த முதலாளித்துவக் குத்தகைதாரர்களின் வளர்ச்சி நாட்டுப்புறங்களுக்கு வெளியேயுள்ள முதலாளித்துவ உற்பத்தியின் பொது வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது''. (மூலதனம், தொகுதி 3, பக்கம் 332.)[28] ''விவசாயி மக்களில் ஒரு பகுதியினரின் சொத்தைப் பறிமுதல் செய்து அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றி விடுவதானது தொழில் மூல தனத்திற்கு வேண்டிய உழைப்பாளிகளும், அவர்களுடைய பிழைப்புக்கான சாதனங்களும், உழைப்பதற்குரிய பொருள் களும் தங்குதடையின்றிக் கிடைக்கும்படி செய்தது. அது மட்டுமல்ல, அது உள்நாட்டு சந்தையையும் உண்டாக்கி யது.'' (மூலதனம், தொகுதி 1, பக்கம் 778.)[29] விவசாயி மக்கள் ஏழ்மைப்பட்டுச் சீரழிந்ததன் விளைவாக ஏற்படு கிறது என்னவென்றால் மூலதனத்திற்கு ஒரு சேமத் தொழி லாளர் பட்டாளம் உருவாகிறது. ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் ''விவசாயி மக்களின் ஒரு பகுதி, நகர, அதாவது பட்டறைத் தொழில் முறையைச் சேர்ந்த (விவசாயம் தவிர மற்றெல்லாத் தொழில்களையும் இது குறிக்கும்) பாட்டாளி வர்க்கமாக மாறிப் போகும் நிலையில் எப்பொழுதும் இருந்து வருகிறது.... இப்படியாக, சார்புநிலை மிகை மக்கள் தொகைப் பெருக்குக்குரிய இந்த ஊற்றுக்கண் எப்பொழுதும் பெருகியோடிக் கொண்டேயிருக்கிறது.... ஆகவே விவசாயத் தொழிலாளி எப்பொழுதுமே குறைந்தபட்சக் கூலிக்குத் தான் வேலை செய்ய வேண்டியதாகிறது; பஞ்சைத்தனம் என்ற சேற்றுக் குழியிலே ஒரு காலை வைத்துக் கொண்டிருக் கிற நிலையிலேயே அவன் எப்போதும் நிற்கிறான்'' (மூலதனம், தொகுதி 1, பக்கம் 668)[30]. தானே பாடுபடுகிற நிலத்தில் விவசாயிக்கிருக்கிற தனியுடைமை சிற்றளவான உற்பத் திக்கு அடிப்படையாயும், அது செழுமை பெறவும், சுத்த மான முழு வடிவம் பெறவும் தேவைப்படுகிற நிபந்தனையாக வும் இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட சிற்றளவான உற் பத்தி ஒரு குறுகிய துவக்ககால உற்பத்திக் கட்டுக்கோப்புக் கும் சமுதாயக் கட்டுக்கோப்புக்கும் மட்டுமே பொருத்தமு டையது. முதலாளித்துவத்தின்கீழ் ''விவசாயிகளைச் சுரண்டு வது இயந்திரத் தொழிலில் வேலை செய்து வரும் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதிலிருந்து வடிவத்தில் மட்டும்தான்

மாறுபட்டிருக்கிறது. சுரண்டுவது என்னவோ ஒன்றே ஒன்று தான்: மூலதனம். தனித்தனி முதலாளிகள் தனித்தனி விவசாயிகளை அடமானம் மூலமாகவும், கடும் வட்டி மூலமாகவும் சுரண்டுகிறார்கள்; முதலாளி வர்க்கமானது விவசாயி வர்க்கத்தை அரசாங்க வரிகள் மூலமாகச் சுரண்டுகிறது.'' (பிரான்ஸில் வர்க்கப் போராட்டம்.)[31] ''விவசாயியின் சிறு நிலப்பண்ணையானது, இலாபங்களையும் வட்டியையும் வாடகையையும் முதலாளிகள் விளைநிலத்திலிருந்து பெறுவதை அனுமதிப்பதற்குரிய ஒரு சாக்காக மட்டுமே இன்று இருக்கிறது; அதே சமயத்தில், நிலத்தை உழுபவன் தனக்குக் கூலி எப்படிக் கிடைக்கும் என்பதைத் தானே பார்த்துக் கொள்ளும்படி விட்டுவிடப்படுகிறான்.'' (பதினெட்டாவது புரூமேர்.)[32] சாதாரணமாகவே முதலாளித்துவச் சமுதாயத்துக்கு, அதாவது முதலாளி வர்க்கத்துக்கு, விவசாயி தனது கூலியிலும்கூட ஒரு பங்கை ஒப்படைத்து ''அயர்லாந்து குத்தகை விவசாயியின் நிலைக்கு...'' இழிந்துவிடுகிறான், ''...எல்லாம் தனிப்பட்ட நிலச் சொந்தக்காரன் என்ற வெளிப்பூச்சுக்குள்ளே.'' (பிரான்ஸில் வர்க்கப் போராட்டம்.)[33] ''முதலாளித்துவ உற்பத்தி முறை அமையப் பெற்றுள்ள நாடுகளைக் காட்டிலும் சிறு விவசாயிகள் மேலோங்கியிருக்கின்ற நாடுகளில் தானியங்களின் விலையைக் குறைத்து வைத்திருக்கிற காரணங்களில் ஒன்று'' எது? (மூலதனம், தொகுதி 3, பக்கம் 340.) அந்தக் காரணம், விவசாயி தனது மிகுதி விளைபொருளின் ஒரு பகுதியைச் சமுதாயத்துக்கு (அதாவது, முதலாளி வர்க்கத்துக்கு) இலவசமாக ஒப்படைத்துவிடுகிறான் என்பதுதான். ''(தானியங்கள், இதர விவசாய விளைபொருட்கள் ஆகியவற்றின்) இந்தக் குறைந்த விலையானது உற்பத்தியாளர்களின் வறுமையின் ஒரு விளைவே தவிர நிச்சயமாக அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறனின் விளைவு அல்ல.'' (மூலதனம், தொகுதி 3, பக்கம் 340.) சிறு நில உடைமை முறை என்பது சிற்றளவான உற்பத்தியின் சகஜமான வடிவமாகும். முதலாளித்துவத்தின் கீழ் அது சீர்குலைந்து, சரிந்து, நாசமடைகிறது. ''சிறு விவசாயிகளின் சொத்து அதன் இயல்பின் காரணமாகவே உழைப்பின் சமுதாய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும், உழைப்பின் சமுதாய வடிவங்களுக்கும், மூலதனங்கள் சமுதாய வழியில்

குவிவதற்கும், பரந்த அளவிலே கால்நடைகளை வளர்ப்பதற்கும், விஞ்ஞானத்தை மேலும் மேலும் செயல்படுத்துவதற்கும் இடம் கொடுப்பதில்லை. கடும்வட்டி முறையும் வரிவிதிப்பு முறையும் அதை எங்கும் ஏழ்மைக்குள்ளாக்கித் தீரவேண்டும். நிலத்தின் விலைக்காக மூலதனத்தைச் செலவழிப்பதானது அந்த மூலதனத்தைச் சாகுபடியில் ஈடுபடுத்தாமல் தடை செய்கிறது. அத்துடன் உற்பத்திச் சாதனங்கள் அளவின்றி சிதறடிக்கப்பட்டு வீணாக்கப்படுகின்றன, அந்த உற்பத்தியாளர்களே தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.'' (கூட்டுறவுச் சங்கங்கள், அதாவது சிறுவிவசாயிகளின் சங்கங்கள், மிகவும் முற்போக்கான முதலாளித்துவப் பாத்திரத்தை வகித்து வருகிற பொழுதே, இந்தப் போக்கை ஒழிக்காமல் பலவீனப்படுத்துகின்றன, அவ்வளவுதான்; மேலும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல நிலைமையிலுள்ள விவசாயிகளுக்கு நிறைய உதவுகின்றன; ஆனால் திரள்திரளான ஏழை விவசாயிகளுக்கு மிகச் சொற்பமாகத்தான் உதவுகின்றன, அநேகமாக உதவுவதில்லை என்றே சொல்லிவிடலாம்; பிறகு இந்தச் சங்கங்களே கூலியுழைப்பைச் சுரண்டுபவையாகவும் ஆகிவிடுகின்றன என்பதை மறந்துவிடக் கூடாது.) ''மேலும், மனித சக்தி பிரம்மாண்டமான அளவுக்கு வீணாக்கப்படுகிறது. உற்பத்தி நிலைமைகள் மேலும் மேலும் சீர்குலைவதும் உற்பத்திச் சாதனங்களின் விலை ஏற்றப்படுவதும் சிறு விவசாயிகளுடைய சொத்தின் அவசியமான விதியாகும்.''[34] தொழில் துறையில் செய்வது போலவே விவசாயத் துறையிலும் ''உற்பத்தியாளனைப் பலியிட்டுத்தான்'' விலையாகப் பெற்றுத் தான் முதலாளித்துவம் உற்பத்தியின் இயக்கப் போக்கை மாற்றியமைக்கிறது. ''கிராமப்புறத்து உழைப்பாளிகள் அதிகப் பரவலான பிரதேசங்களுக்குச் சிதறடிக்கப்படுதல் இந்த உழைப்பாளிகளின் எதிர்ப்புச் சக்தியை உடைத்தெறிகிறது; ஆனால் நகரத் தொழிலாளர்களிடையே குவியும் தன்மையோ அவர்களுடைய எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்துகிறது. நகரத் தொழில்களைப் போலவே நவீனகால விவசாயத்திலும் ஈடுபடுத்தப்படுகிற உழைப்பின் அதிகரித்த உற்பத்தித் திறனும் அளவும் உழைப்புச் சக்தியை வீணடித்தும், நோய்நொடிகள் மூலமாக நாசப்படுத்தியும் உண்டாக்கப்படுகின்றன. மேலும், முதலாளித்துவ முறையிலான

விவசாயத்தில் ஏற்படும் முன்னேற்றமெல்லாம் உழைப்பாளியைக் கொள்ளையடிக்கும் கலையில் மட்டுமல்ல, விளைநிலத்தைக் கொள்ளையடிக்கும் கலையிலும் ஏற்படுகிற முன்னேற்றமாகும்.... ஆகவே, எல்லாச் செல்வங்களுக்கும் அசல் ஊற்றுக் கண்ணுயுள்ள விளைநிலத்தையும் உழைப்பாளியையும் உறிஞ்சிவிடுவதின் மூலமாக மட்டுமே முதலாளித்துவ உற்பத்தியானது உற்பத்திக் கலையை வளர்க்கவும், பல்வேறு இயக்கப் போக்குகளை ஒரு சமுதாய முழுமையில் இணைத்து வைக்கவும் செய்கிறது.'' (மூலதனம், தொகுதி 1, 13ம் அத்தியாயத்தின் இறுதி.)

சோஷலிஸம்

மேலே சொன்னதிலிருந்து வெளிப்படையாவது இதுதான்: முற்றிலும் இன்றைய சமுதாயத்தின் பொருளாதார இயக்க விதியிலிருந்தே மார்க்ஸ், முதலாளித்துவச் சமுதாயம் சோஷலிஸ்டு சமுதாயமாக மாற்றமடைவது தவிர்க்க முடியாததாகும் என்ற முடிவுக்கு வருகிறார். உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது பல்லாயிரக்கணக்கான வடிவங்களிலே முன்னைவிட அதிக வேகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறது; மேலும் மார்க்ஸ் மறைந்தபின் கழிந்துள்ள இந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் பெருமளவான உற்பத்தியின் வளர்ச்சியிலும், முதலாளிகளின் கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகளின் வளர்ச்சியிலும், நிதி மூலதனத்தின் அளவுகளிலும் சக்தியிலும் ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான அதிகரிப்பிலும் இது—அதாவது, உழைப்பு சமுதாயமயமாக்கப்படுவது—வெகு தெளிவாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது, தவிர்க்க முடியாதபடி சோஷலிஸம் வந்து சேருவதற்கு இதுதான் முதன்மையான பொருளாயத அடிப்படையாகும். இந்த மாற்றத்திற்கு அறிவுத் துறையிலும் ஒழுக்கநெறித் துறையிலும் விசைச் சக்தியாக விளங்குவதும், நேரடியாக இருந்து இம்மாற்றத்தை நிறைவேற்றும் செயலாளியாக விளங்குவதும், பாட்டாளி வர்க்கமே. இந்த வர்க்கத்துக்கு முதலாளித்துவமே பயிற்சியளிக்கிறது. முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகிற போராட்டம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படு

கிறது; அந்த வடிவங்களின் உட்பொருள் வளமும் மேலும் மேலும் அதிகரிக்கிறது; தவிர்க்க முடியாத முறையிலே இந்தப் போராட்டம் அரசியல் ஆட்சியதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் கைப்பற்றுவதை (''பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை'') நோக்கமாகக் கொண்ட அரசியல் போராட்டமாகின்றது. உற்பத்தி சமுதாயமயமாக்கப்படுவதன் விளைவாக உற்பத்திச் சாதனங்கள் சமுதாயச் சொத்தாக மாற்றப்படுவது, ''பறிமுதல் செய்வோர்களின் சொத்தைப் பறிமுதல் செய்வது'' நிகழ்ந்தே தீரும். உழைப்பின் உற்பத்தித் திறனில் மகத்தான அதிகரிப்பு, வேலை நேரத்தைக் குறைப்பது, துவக்கக்கால, சிதறிய நிலையிலேயுள்ள, சிற்றளவான உற்பத்தி அழிந்ததிலே மிஞ்சிக் கிடக்கிற மிச்சசொச்சங்களை நீக்கிவிட்டு கூட்டு முறையிலமைந்த, மேம்படுத்தப்பட்ட உழைப்பை நிலைநாட்டுவது—இவையெல்லாம் இந்த மாற்றத்தினுல் நேரடியாக அடையும் விளைவுகளாகும். விவசாயத்துக்கும் தொழிலுக்குமிடையேயுள்ள ஒட்டுறவை முதலாளித்துவம் இறுதியாக வெட்டிவிடுகிறது. அதே சமயத்தில், முதலாளித்துவம் மேலும் வளர வளர இந்த ஒட்டுறவிற்குரிய புதிய அம்சங்களையும் தயாரிக்கிறது; உணர்வுபூர்வமாக விஞ்ஞானத்தை நடைமுறையில் செயல்படுத்துவது, கூட்டு முறையில் உழைப்பை இணைப்பது, உலகு மக்கள் தொகையை மறுவினியோகம் செய்வது (கிராமப்புறங்களின் ஒதுங்கிக்கிடக்கிற நிலைக்கும், தனிமைப்பட்டிருக்கிற நிலைக்கும், அநாகரிக நிலைக்கும், அதே சமயத்தில் பெரிய பட்டணங்களில் பெருந்திரளான மக்கள் தொகை இயற்கைக்கு விரோதமாய்க் குவிந்து கிடக்கிற நிலைக்கும் இது ஒருங்கே முற்றுப் புள்ளி வைக்கும்)—இவற்றின் அடிப்படையில் தொழிலுக்கும் விவசாயத்துக்குமிடையே இணைப்புக்குரிய புதிய அம்சங்களை அது தயாரிக்கிறது. புதிய வடிவத்தில் அமைந்த குடும்பம், பெண்களின் நிலையிலும் இளந்தலைமுறையைப் பராமரித்து வளர்ப்பதிலும் புதிய நிலைமைகள்—இவற்றை முதலாளித்துவத்தின் உச்ச வடிவங்கள் தயாரித்துக் கொண்டிருக்கின்றன: பெண் மக்கள், குழந்தைகளின் உழைப்பு, தந்தை வழிக் குடும்பத்தை முதலாளித்துவம் உடைத்தெறிவது—இவையெல்லாம் நவீனகால சமுதாயத்தில் தவிர்க்க முடியாதபடிக பயங்கரமான, நாசகரமான, வெறுக்கத்தக்க வடிவங்

களைப் பெறுகின்றன. இருந்த போதிலும், "...குடும்பத் துறைக்கு வெளியே, உற்பத்தி முறையில், பெண்களுக்கும், இளைஞர்களுக்கும், ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தை களுக்கும் ஒரு முக்கியமான பாத்திரத்தைத் தருவதின் மூல மாக நவீன இயந்திரத் தொழில் முந்தியதைவிட உயர்வான குடும்ப வடிவத்துக்கு, பால் உறவு வடிவத்துக்குப் புதிய பொருளாதார அடித்தளத்தை உண்டாக்குகிறது. பண்டைக் கால ரோமானிய, பண்டைக்கால கிரேக்க, அல்லது கிழக்கத் திய குடும்ப வடிவங்களைப் பரமமானவை, இறுதியானவை என்று கொள்வது எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத்தமாகும் டியூட்டானிக்-கிறித்தவக் குடும்ப வடிவமும் பரமமானதென்றோ இறுதியானதென்றோ கருதுவதும். தவிரவும், மேலே சொன்ன குடும்ப வடிவங்களையெல்லாம் மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால் அவையெல் லாம் வரலாற்று வளர்ச்சியில் ஒன்றின்பின் ஒன்றாய்த் தோன் றிய ஒரு வரிசையாக அமைகின்றன. மேலும், கூட்டாகச் சேர்ந்து வேலை செய்யும் குழுவானது இரு பாலாராலும் எல்லா வயதினராலும் ஆனதென்னும் உண்மை தக்க நிலை மைகளில் மனிதத்துவ வளர்ச்சிக்கு நிச்சயமாய் ஒரு தோற்றுவாயாகிவிடும் என்பது தெளிவு. ஆனால் அதன் தன் னியல்பாய் வளர்ந்த கொடிய முதலாளித்துவ வடிவத்தில்—உற்பத்தி வேலை முறைக்கே தொழிலாளியே தவிர தொழிலா ளிக்காக உற்பத்தி வேலை முறையில்லை என்ற முதலாளித் துவ வடிவத்தில்—அது ஊழலுக்கும் அடிமைத்தனத்துக்கும் கேடுகெட்ட அபாயகரமான தோற்றுவாயாகிவிடுகிறது." (மூலதனம், தொகுதி 1, 13ம் அத்தியாயத்தின் இறுதி.) ஆலை முறையில் நாம் பார்ப்பது "எதிர்காலத்தியக் கல்வி யின் கரு, குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டிருக்கிற ஒவ் வொரு குழந்தை விஷயத்திலும் அந்தக் கல்வி பாட போதனை, உடற்பயிற்சி ஆகியவற்றோடு உற்பத்தியாற்றலுள்ள உழைப்பையும் இணைத்து வைக்கும்—உற்பத்தியின் வினைத் திறமையைக் கூடுதலாக்குவதற்குள்ள வழிகளில் அதுவும் ஒன்று என்பதற்காக மட்டுமல்ல, முழுவளர்ச்சி பெற்ற மனி தர்களை உண்டாக்குவதற்கும் அது ஒன்றுதான் வழி என்பதற் காக" (அதே நூல்). தேசிய இனம், அரசு என்ற பிரச்சினை களையும் அதே வரலாற்று அடிப்படையில்தான் மார்க்ஸிய

சோஷலிஸம் வைக்கிறது—சென்ற காலத்தை விளக்குவது என்ற அர்த்தத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்தை அச்சமின்றி முன்னறிந்து கூறி, அதனைச் சாதிப்பதற்குத் தைரியமான நடைமுறைப் பணி மேற்கொள்வது என்ற அர்த்தத்திலும். தேசங்கள் என்பவை சமுதாய வளர்ச்சியைச் சேர்ந்த முதலாளித்துவ சகாப்தத்தில் தவிர்க்க முடியாதபடி உண்டாகிற ஒரு விளைபொருள், ஒரு வடிவம் ஆகும். தொழிலாளி வர்க்கம், ''தன்னையும் தேசத்துக்குள் ஒரு பகுதியாக்கிக் கொள்ளாமல்'', தானும் ''தேசியத் தன்மை'' பெறாமல் (''இந்தச் சொல்லின் முதலாளித்துவ அர்த்தத்தில் அல்ல''), அது பலம் பெற முடியவில்லை, பக்குவம் பெற முடியவில்லை, உருவாக முடியவில்லை. ஆனால் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மேலும் மேலும் தேசியத் தடைகளை உடைத்தெறிகிறது, தேசியத் தனி வாழ்வை அழிக்கிறது, தேசியப் பகைமைகளுக்குப் பதிலாக வர்க்கப் பகைமைகளை ஏற்படுத்துகிறது. ஆகவே, வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில், ''தொழிலாளிகளுக்குத் தேசம் ஒன்றும் கிடையாது'' என்பது முழுக்க முழுக்க உண்மையாகும்; மேலும், குறைந்தபட்சம் நாகரிகமடைந்துள்ள நாடுகளிலாவது இருக்கும்படியான தொழிலாளிகளின் ''ஒன்றுபட்ட செய்கையானது''.... ''பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்குத் தேவையான முதல் நிபந்தனைகளில் ஒன்றாகும்'' (கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை) என்பதும் முழுக்க முழுக்க உண்மை. அரசு என்பது ஒழுங்கமைப்பு பெற்ற பலாத்காரம் ஆகும். சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமரசப்படுத்த முடியாத வர்க்கங்களாகச் சமுதாயம் பிளவுண்ட போது, வெளிப் பார்வைக்குச் சமுதாயத்துக்கு மேலே நின்று கொண்டும் ஓரளவுக்குச் சமுதாயத்திலிருந்து விலகியும் இருக்கிற ''அதிகாரம்'' இல்லாமல் சமுதாயம் வாழ முடியாத போது, அரசு தவிர்க்க முடியாதபடி தோன்றியது. அரசு என்பது, வர்க்க முரண்பாடுகளுக்குள்ளிருந்தே உதித்து, ''மிகவும் வலிமை வாய்ந்த, பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகிற வர்க்கத்தின் அரசாக ஆகிறது; அந்த வர்க்கம், அரசின் மூலமாக, அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக ஆகிறது; இந்த வழியிலே ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஒடுக்கி வைத்துச் சுரண்டிக் கொண்டிருப்பதற்கு அது புதிய சாதனங்களைப் பெறுகிறது.

339010

இப்படித்தான் பண்டைக் காலத்திய அரசு, எல்லாவற்றிற்கும் மேலாக, அடிமைகளை ஒடுக்கி வைத்திருப்பதற்கமைந்த அடிமையுடைமையாளரின் அரசாக இருந்தது; அதேபோலத் தான் நிலப்பிரபுத்துவ அரசு என்பதும் பண்ணையடிமை களாகிய விவசாயிகளையும் ஒடுக்கி வைத்திருப்பதற்கமைந்த பிரபுவம்சத்தினரின் அரசாக இருந்தது; அதே போலத்தான், நவீனகாலப் பிரதிநிதித்துவ அரசும் கூலியுழைப்பை மூல தனம் சுரண்டுவதற்கமைந்த கருவியாகும்.'' (எங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலைப் பார்க்க. இந்த நூலில் எங்கெல்ஸ், தம்முடைய கருத்துக்களையும் மார்க்ஸின் கருத்துக்களையும் விளக்குகிறார்.) முதலாளித்துவ அரசின் மிகமிகச் சுதந்திர மான, மிகமிக முற்போக்கான வடிவம் என்றுள்ள ஜனநாயகக் குடியரசுகூட இந்த உண்மையை எந்த விதத்திலும் அழிக்க வில்லை, ஆனால் வெறுமனே அதன் வடிவத்தை மாற்றுகிறது (அரசாங்கத்துக்கும் பங்கு மார்க்கெட்டுக்கும் உள்ள தொடர்பு; அரசாங்க அலுவலர்களிடையேயும் பத்திரிகைக் காரர்களிடையேயும்—நேர்முகமாகவும் மறைமுகமாகவும்—இருக்கிற ஊழல் முதலியன). வர்க்கங்களை ஒழிப்பதில் கொண்டுபோய்விடுவதின் மூலமாக சோஷலிஸம் அரசை ஒழிப்பதிலும் கொண்டுபோய் விடும். டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலில், ''எந்த முதல் செய்கையிலே அரசானது உண்மையிலே சமுதாயம் முழுவதின் பிரதிநிதியாக முன்வரு கிறதோ—அதாவது, சமுதாயத்தின் சார்பில் உற்பத்திச் சாதனங்களைப் பறிமுதல் செய்கிறதோ—அதே முதல் செய் கைதான் அரசு என்ற முறையில் அது சுதந்திரமாகச் செய் யும் கடைசிச் செய்கையுமாகும். ஒரு துறைக்குப் பின் ஒரு துறையாக, சமுதாய உறவுகளில் அரசாட்சி தலையிடுவது அனாவசியம் என்று ஆகிக் கொண்டு வந்து, பிறகு தானாகவே அற்றுப்போகிறது. மனிதர்களை ஆளுவது என்பது போய் அதன் இடத்தில் பொருள் விவகாரங்களை நிர்வகிப்பது, உற்பத்தி இயக்கப்போக்குகளை நடத்துவது என்பது ஏற்படு கிறது. அரசு 'ஒழிக்கப்படுவதில்லை', அது தானாகவே 'உலர்ந்து உதிர்ந்து போகிறது.' '' ''உற்பத்தியாளர்களின் சுதந்திர மான, சமமான சங்கம் என்ற அடிப்படையில் உற்பத்தியை ஒழுங்கமைத்திடும் சமுதாயம் அரசு இயந்திரம் முழுவதை

யும் அப்போது அது இருக்க வேண்டிய இடத்தில், அதாவது பண்டைக் காலப் பொருட்களை வைத்திருக்கும் காட்சிசாலையில், கைராட்டை, வெண்கலக் கோடாலி ஆகியவற்றின் பக்கத்தில் கொண்டுபோய் வைத்துவிடும்.'' (எங்கெல்ஸ் எழுதிய குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்.)

கடைசியாக: பறிமுதல் செய்வோர்களின் சொத்தைப் பறிமுதல் செய்கிற காலப்பகுதியில் தொடர்ந்து இருந்து வரப்போகிற சிறு விவசாயிகளின்பால் மார்க்ஸிய சோஷலிஸம் காட்டும் அணுகு முறை சம்பந்தப்பட்ட வரையில் மார்க்ஸின் கருத்துக்களை வெளியிடும்படியான எங்கெல்ஸின் ஒரு பிரகடனத்தை நாம் குறிப்பிட வேண்டும்: ''...அரசதிகாரம் எங்கள் கையில் இருக்கும் காலத்தில் நாங்கள் சிறு விவசாயிகளின் சொத்தைப் பலவந்தமாகப் பறிமுதல் செய்வதைப் பற்றிச் (நஷ்ட ஈடு கொடுத்துச் செய்வதா, கொடாமலே செய்வதா என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை) சிந்திக்கவும் மாட்டோம்; பெரிய நிலச்சுவான்தார்களின் விஷயத்தில் தான் நாங்கள் அப்படிச் செய்து தீரவேண்டும். சிறு விவசாயி சம்பந்தமாக நமது பணி என்னவென்றல், முதலில், அவனது தனியாள் உற்பத்தியையும் தனியுடைமையையும் கூட்டுறவு உற்பத்தியாகவும் கூட்டுறவு உடைமையாகவும் மாற்றுவது தான்; இதைப் பலாத்காரமாகச் செய்யாமல், உதாரணத்தைக் கொண்டும், இந்த நோக்கத்துக்காகச் சமுதாய உதவியைத் தந்தும் செய்து வைப்போம். அதன் பிறகு சிறு விவசாயிக்கு இன்றைக்குக் கூட வெளிப்படையாகத் தெரிந்திருக்க வேண்டிய எதிர்கால அனுகூலங்களைக் காட்டுவதற்கு நிச்சயமாக நம்மிடம் நிறைய வழிவகைகள் இருக்கத்தான் போகின்றன.'' (பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை என்ற எங்கெல்ஸின் நூல், பக்கம் 17, அலெக்ஸேயெவா பதிப்பு; ருஷ்ய மொழிபெயர்ப்பில் பிழைகள் உள்ளன. அசல் பிரதி *Neue Zeit* என்ற பத்திரிகையில் உள்ளது).[35]

பாட்டாளிகளது வர்க்கப் போராட்டத்தின் போர்த்தந்திரம்

நடைமுறைப் புரட்சி நடவடிக்கைகளின் சூழ்நிலைமைகளைப் புரிந்து கொள்ளவோ, அதன் முக்கியத்துவத்தை

மதிப்பிடவோ முந்தையப் பொருள்முதல்வாதம் திறனற்றிருந்தது; அதன் பிரதான குறைபாடுகளில் இதுவும் ஒன்றுகும். இந்தக் குறைபாட்டை மார்க்ஸ் 1844-45ம் ஆண்டுகளிலே ஆராய்ந்து விளக்கிவிட்டார். ஆகவே அவர் தத்துவ சம்பந்தமான தமது வேலையோடு கூடவே, பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் பற்றிய போர்த்தந்திரப் பிரச்சினைகளிலே தமது வாழ்க்கை நெடுகிலும் அயராத கவனம் செலுத்தி வந்தார். மார்க்ஸின் எல்லா நூல்களிலும், குறிப்பாக 1913ம் ஆண்டில் வெளியிடப்பட்ட மார்க்ஸ், எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்தின் நான்கு தொகுதிகளிலும், இது பற்றி ஏராளமான விஷயாதாரங்கள் உள்ளன. இவ்விஷயாதாரங்களைத் திரட்டுவதும், தொகுப்பதும், ஆராய்வதும், பரிசீலிப்பதும் போதிய அளவில் செய்யப்படாமலே இருந்து வருகிறது. ஆகவே, இங்கே நாம் சில மிகமிகப் பொதுவான, மிகமிகச் சுருக்கமான குறிப்புகளைச் சொல்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியிருக்கும், இந்த அம்சத்தைத் தன்னகத்தே கொண்டிராத பொருள்முதல்வாதம் உறுதியற்றதாய், ஒருதலைப்பட்சமானதாய், உயிரற்றதாய் இருக்கும் என்று மார்க்ஸ் முழு நியாயத்தோடு கருதினுர் என்பதை வலியுறுத்துகிறேம். மார்க்ஸ் தமது பொருள்முதல்வாத-இயக்க இயல் உலகக் கண்ணேட்டத்தின் எல்லா ஆதாரக் கூறுகளோடும் கருராகப் பொருந்தும்படியாகத்தான் பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரத்தின் பிரதான கடமையை வரையறுத்தார். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களையும் விதிவிலக்கின்றி எடுத்துக் கொண்டு அவ்வர்க்கங்களிடையேயுள்ள பரஸ்பர உறவுகளின் மொத்தத் தொகையை யதார்த்த ரீதியிலே கருத்தில் கொள்வது—அதன் விளைவாக அந்தச் சமுதாயத்தின் யதார்த்த வளர்ச்சிக் கட்டத்தையும் அந்தச் சமுதாயத்துக்கும் இதர சமுதாயங்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவுகளையும் கருத்தில் கொள்வது—இது ஒன்றுதான் முன்னணி வர்க்கத்தின் சரியான போர்த்தந்திரத்துக்கு அடிப்படையாக இருக்க முடியும். அதே சமயத்தில், எல்லா வர்க்கங்களையும், எல்லா நாடுகளையும் நிலையமைதியில் பார்க்காமல் இயக்க நிலையில் பார்க்கிறேம்; அதாவது, அவற்றை அசையாத நிலையிலே பார்க்காமல் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையிலே பார்க்கிறேம்

(இந்த இயக்கத்தின் விதிகளை நிர்ணயிப்பவை ஒவ்வொரு வர்க்கத்தின் பொருளாதார வாழ்வுநிலைமைகள்தான்). பிறகு, இயக்கத்தைப் பார்க்கும் போதும் சென்ற காலத்தைப் பற்றிய பார்வையுடன் மட்டும் அதைப் பார்க்காமல் எதிர்காலத்தைப் பற்றிய பார்வையுடனும் இயக்கத்தைப் பார்க்கிறோம். அதே சமயத்தில், அப்படிப் பார்க்கையில், மெதுவாக நடைபெறுகிற மாறுதல்களை மட்டும் பார்க்கிற ''பரிணாமவாதிகளின்'' விஞ்ஞானக்கேடான கருத்தோட்டத்துக்கு இணங்க நாம் இயக்கத்தைப் பார்ப்பதில்லை; அதற்குப் பதிலாக, இயக்க இயல் வகையில் அதை நாம் பார்க்கிறோம்; ''இத்தகைய பிரம்மாண்டமான வளர்ச்சிகளிலே இருபது ஆண்டுகள் என்பது ஒரு நாளுக்கு மேல் இல்லை. இருந்தாலும், பின்னால் இருபது ஆண்டுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள நாட்களும் வரக் கூடும்'' என்று மார்க்ஸ் எங்கெல்ஸுக்கு எழுதினார். (கடிதப் போக்குவரத்து, தொகுதி 3, 127ம் பக்கம்.)[36] வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு கணத்திலும் பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திரம், யதார்த்த ரீதியிலே, தவிர்க்க முடியாததாயுள்ள மனித வரலாற்றின் இயக்க இயலைக் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும்: ஒரு புறம், அரசியல் தேக்கம் உள்ள அல்லது மந்தமான, ''அமைதியானதாகச்'' சொல்லப்படும் வளர்ச்சி நிலவும் காலப்பகுதிகளை, முன்னணி வர்க்கத்தின் உணர்வையும் பலத்தையும் போர்த்திறனையும் வளர்ப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; மற்றொரு புறம், இப்படிப் பயன்படுத்திக் கொள்ளும் வேலை அனைத்தையும் இந்த வர்க்கத்தினுடைய இயக்கத்தின் ''இறுதி இலட்சியத்தை'' அடைவதற்காக, ''இருபது ஆண்டுகளைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள'' மகத்தான நாட்களில் மகத்தான பணிகளை நடைமுறையில் நிறைவேற்றி வைப்பதற்குரிய திறனை அந்த வர்க்கத்தினிடையே உண்டாக்கி வைப்பதற்காக நடத்திக் கொண்டு போக வேண்டும். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மார்க்ஸின் இரண்டு வாதங்கள் குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்தவை: அவற்றில் ஒன்று மெய்யறிவின் வறுமை என்ற நூலிலே உள்ளது; அது பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம், பொருளாதார நிறுவனங்கள் சம்பந்தமானது; மற்றொரு வாதம் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்

இருக்கிறது; இது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பணிகள் சம்பந்தமானது. முதல் வாதம் பின்வருமாறு: ''பெருமளவான உற்பத்தி, ஒருவரை ஒருவர் அறிந்திராத மக்களைத் திரளாக ஓர் இடத்தில் குவிக்கிறது. போட்டி அவர்களின் நலன்களைப் பிரிக்கிறது. ஆனால், தங்கள் முதலாளிக்கு எதிராக அவர்களுக்கு இருக்கும் பொது நலனை கூலியைக் காப்பாற்றிக்கொள்வது என்பது, அவர்களை எதிர்ப்பு என்ற பொதுச் சிந்தனையிலே—இணைப்பிலே—ஒன்றுபடுத்துகிறது.... முதலில் தனித்தனியாக இருந்து வந்த இணைப்புக்கள் குழுக்களாக அவர்களை அமைக்கின்றன... எப்பொழுதுமே ஒன்றுபட்டு நிற்கிற மூலதனத்தின் எதிரே அவர்களுக்கு [அதாவது தொழிலாளிகளுக்கு] இந்த இணைப்பை நிலைநிறுத்துவது கூலியை நிலைநிறுத்துவதைவிட அதிக அவசியமாகிவிடுகிறது.... இந்தப் போராட்டத்தில்—இது உண்மையிலே ஓர் உள்நாட்டுப் போர்தான்—வரப்போகும் போருக்குத் தேவையான எல்லா அம்சங்களும் ஒற்றுமைப்படுத்தப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இந்தக் கட்டத்தை எட்டிய மாத்திரத்தில் கூட்டணியானது அரசியல் தன்மை பெற்றுவிடுகிறது.'' இங்கேதான் பொருளாதாரப் போராட்டத்துக்கும், தொழிற்சங்க இயக்கத்துக்கும் வரப்போகும் சில பத்தாண்டுகளுக்கு வேண்டிய வேலைத்திட்டமும் போர்த்தந்திரமும் நமக்குக் கிடைக்கின்றன. பாட்டாளி வர்க்கம் ''வரப்போகும் போருக்குத்'' தனது சக்திகளைத் திரட்டிக் கொள்கிற நீண்ட காலப்பகுதி முழுவதற்கும் இவை போதும். இதன் பக்கத்திலேயே மார்க்ஸும் எங்கெல்ஸும் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் உதாரணத்தைப் பற்றித் தந்துள்ள பல மேற்கோள் குறிப்புகளை வைத்தாக வேண்டும். தொழில் துறையிலுள்ள ''செழுமை'' எப்படி ''தொழிலாளர்களை விலைக்கு வாங்குவதற்கான'' முயற்சிகளிலும் (கடிதப் போக்குவரத்து, தொகுதி 1, பக்கம் 136),[37] அவர்களைப் போராட்டத்திலிருந்து திருப்புவதற்கான முயற்சிகளிலும் கொண்டுபோய் விடுகிறது; எப்படி இந்தச் செழுமை பொதுவாகவே ''தொழிலாளர்களை உறுதி குலையச் செய்கிறது'' (தொகுதி 2, பக்கம் 218);[38] எப்படி பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கம் ''முதலாளித்துவ மனோபாவமுள்ளதாக'' ஆகிவிடுகிறது—''மற்றெல்லாவற்றையும்விட மிகமிக முதலாளித்துவத் தன்மை உள்ள

இந்த தேசம்'' (இங்கிலாந்து) ''இறுதியிலே முதலாளி வர்க்கத்தோடு முதலாளித்துவ போக்குள்ள பிரபுவம்சத்தையும் முதலாளித்துவப் போக்குள்ள பாட்டாளி வர்க்கத்தையும் அமைத்துக்கொள்வதிலே குறியாயிருக்கிறது போல் தோன்றுகிறது'' (தொகுதி 2, பக்கம் 290);[39] எப்படி அந்த வர்க்கத்தின் ''புரட்சிகரமான ஊக்கம்''[40] ஒழுகியோடிவிடுகிறது (தொகுதி 3, பக்கம் 124); எப்படி ''பிரிட்டிஷ் தொழிலாளர்கள் வெளித்தோற்றத்தில் தெரிகிற, தங்களைப் பீடிக்கும் முதலாளித்துவத் தொத்துவியாதியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளுவதற்கு'' முன்பாக ஏறத்தாழ நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்கும் (தொகுதி 3, பக்கம் 127);[41] எப்படி பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்திடம் ''சார்ட்டிஸ்டுகளின் வீரியம் இல்லை'' (1866; தொகுதி 3, பக்கம் 305);[42] எப்படி பிரிட்டிஷ் தொழிலாளர்களின் தலைவர்கள் ''தீவிர முதலாளி வர்க்கத்தாருக்கும் தொழிலாளிக்கும்'' இடைநிலையிலேயுள்ள ரகமாக ஆகி வருகிறார்கள் (இது ஹோலியோக் என்பவரைக் குறித்துச் சொன்னது; தொகுதி 4, பக்கம் 209);[43] பிரிட்டிஷ் ஏகபோகத்தின் காரணமாக, இந்த ஏகபோகம் இருக்கிற வரைக்கும், எப்படி ''பிரிட்டிஷ் தொழிலாளி அசைந்து கொடுக்க மாட்டான்'' (தொகுதி 4, பக்கம் 433);[44] என்றெல்லாம் அந்த மேற்கோள்கள் குறிக்கின்றன. தொழிலாளர் இயக்கத்தின் பொதுவான போக்கு (அதன் விளைவும்கூட) சம்பந்தமாக, பொருளாதாரப் போராட்டத்தின் போர்த்தந்திரம் இங்கே மிகமிக விரிவான, முழுமையான, இயக்கவியல் முறையான, உண்மையாகவே புரட்சிகரமான நோக்குநிலையிலிருந்து கவனிக்கப்பட்டுள்ளது.

அரசியல் போராட்டத்தின் போர்த்தந்திரம் சம்பந்தமான அடிப்படை மார்க்ஸியக் கோட்பாட்டைக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை வெளியிட்டது: ''உடனடியான இலட்சியங்களைச் சாதிப்பதற்காக, தொழிலாளி வர்க்கத்தின் தற்காலிக நலன்களை நிறைவேற்றுவதற்காகக் கம்யூனிஸ்டுகள் போராடுகிறார்கள்; ஆனாலும் கூட, நிகழ்கால இயக்கத்திலேயே அவர்கள் அந்த இயக்கத்தின் எதிர்காலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திக் கவனித்துக்கொள்கிறார்கள்.'' அதனால்தான் 1848ம் ஆண்டில் போலந்தில் ''விவசாயப் புரட்சிக்'' கட்சியை,

''1846ல் நடந்த கிராக்கவ் எழுச்சியைத் தூண்டிய அந்தக் கட்சியை,''[45] மார்க்ஸ் ஆதரித்தார். 1848லும், 1849லும் ஜெர்மனியில் அதிதீவிரமான புரட்சிகர ஜனநாயகத்தை மார்க்ஸ் ஆதரித்தார்; அப்போது போர்த்தந்திரத்தைக் குறித்துத் தாம் சொன்னதைப் பின்னால் அவர் என்றைக்கும் மறுத்துத் திரும்பப் பெறவேயில்லை. ஜெர்மானிய முதலாளி வர்க்கத்தை ''ஆரம்பத்திலிருந்தே மக்களுக்குத் துரோகம் செய்யும் எண்ணங் கொண்டிருந்ததும்'' (விவசாயி மக்களுடன் ஒன்றாக இணைந்திருந்தால்தான் முதலாளி வர்க்கம் தனது பணிகளை முழுமையாகச் சாதித்துக் கொள்ள முடிந்திருக்கும்) ''பழைய சமுதாயத்தின் முடிசூடிய பிரதிநிதிகளுடன் சமரசம் செய்து கொள்ளும் எண்ணங் கொண்டிருந்தது மான'' ஓர் அம்சமாகத்தான் மார்க்ஸ் கருதினார். முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சகாப்தத்தில் ஜெர்மன் முதலாளி வர்க்கம் வகித்த வர்க்க நிலை பற்றிய மார்க்ஸின் பகுப்பாராய்ச்சியின் சுருக்கத்தை இங்கே தருகிறோம்; இடையே ஒன்றைச் சொல்லலாம்: சமுதாயத்தை இயக்க நிலையிலே பரிசீலிக்கும் —அது மாத்திரமல்ல, இயக்கத்தின் பின்னோக்கிச் செல்லும் பக்கத்திலிருந்து மட்டும் பரிசீலிக்காத—பொருள்முதல் வாதத்திற்கு இந்தப் பகுப்பாராய்ச்சி ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.... ''தன்னிடத்திலும் நம்பிக்கை கிடையாது, மக்களிடத்திலும் நம்பிக்கை கிடையாது, மேல்நிலையிலுள்ளோரைக் கண்டு முணுமுணுப்பது, கீழ்நிலையிலுள்ளோரைக் கண்டு நடு நடுங்குவது,... உலகப் புயலைக் கண்டு பயப்படுவது,... எந்த விதத்திலும் ஊக்கம் கிடையாது, எல்லா விதங்களிலும் சிந்தனைத் திருட்டு,... முன்முயற்சியே கிடையாது,... திடகாத்திரமான மக்களின் வாலிப இதயத்தின் துடிப்புகளைத் தனது சொந்தக் கிழட்டு நலன்களுக்காக வழிகாட்டித் தடம் புரளச் செய்யும் வேலை தனக்கு விதித்திருப்பதாகப் பாவித்துக் கொள்ளும் சாபத்தீடான கிழட்டுக் கட்டை....'' (நியூ ரைனிஷ் ஜைடுங், 1848; லிடெராரிஷேர் நாக்லஸ், தொகுதி 3, பக்கம் 212ஐப் பார்க்க.)[46] இருபது ஆண்டுகளுக்குப் பின்னால் எங்கெல்ஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் (கடிதப் போக்குவரத்து, தொகுதி 3, பக்கம் 224) 1848ம் ஆண்டுப் புரட்சி தோல்வியுற்றதற்குக் காரணம், சுதந்திரத்துக்காகப் போராடுவதைவிட அடிமைத்தனத்தோடு கூடிய

சமாதானமே மேலென முதலாளி வர்க்கம் கருதியதுதான் என்று மார்க்ஸ் பிரகடனப்படுத்தினர். 1848-49ம் ஆண்டு களின் புரட்சி சகாப்தம் முடிவுற்ற போது புரட்சி செய்வது போலப் போக்குக் காட்டும் ஒவ்வொரு முயற்சியையும் மார்க்ஸ் எதிர்த்தார் (ஷாப்பர், வில்லிஹ் என்பவர்களை எதிர்த்து மார்க்ஸ் செய்த போராட்டம்); மேலும், வெளிப் பார்வைக்கு ''அமைதியானதாகத்'' தோன்றும் வழியில் புதிய புரட்சிகளுக்குத் தயார் செய்ய வேண்டிய இந்தப் புதிய கட்டத்தில் வேலை செய்யத் திறமை பெற்றிருக்க வேண்டும் என்று மார்க்ஸ் வற்புறுத்தி வந்தார். இந்த வேலையை எந்த முறையிலே நடத்திக் கொண்டு போக வேண்டுமென்று மார்க்ஸ் விரும்பினர் என்பதைப் பிற்போக் கின் இருள் மண்டிய காலமான 1856ல் ஜெர்மனியிலிருந்த நிலைமையைப் பற்றி அவர் தந்த மதிப்பீடு காட்டுகிறது: ''ஜெர்மனியின் நிலைமையெல்லாம் விவசாயப் போர் இரண் டாம் தடவையாக ஏற்பட்டுப் பாட்டாளி வர்க்கப் புரட் சிக்குப் பின்பலம் அளிக்க வாய்ப்பு ஏற்படுமா என்பதைத் தான் பொறுத்திருக்கிறது.'' (கடிதப் போக்குவரத்து, தொகுதி 2, பக்கம் 108.)[47] ஜெர்மனியில் ஜனநாயக (முதலாளித்துவ) புரட்சி முடிவு பெருத வரையில், விவசாயிகளின் ஜனநாயக ஆற்றலை வளர்ப்பதற்கான போர்த்தந்திரத்தில் சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின் கவனத்தை ஒன்றுகுவியச் செய்து வந்தார். லஸ்ஸாலினுடைய கண்ணேட்டம் ''யதார்த் தத்திலே... தொழிலாளர் இயக்கம் முழுவதையும் பிரஷ்யா வுக்குக் காட்டிக்கொடுப்பதுதான்'' என்று மார்க்ஸ் கருதினர் (தொகுதி 3, பக்கம் 210).[48] பிரஷ்யப் பெரு நிலப்பிர புக்களுக்கும் தேசியவாதத்துக்கும் லஸ்ஸால் உடந்தையாக இருந்ததே இதற்குக் காரணம். பத்திரிகைகளுக்கு விடுவதற் கான ஒரு கூட்டறிக்கை விஷயமாக மார்க்ஸோடு கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ளும் போது 1865ல் எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினர்: ''விவசாயமே மிகப் பெரும்பாலும் உள்ள ஒரு நாட்டில், மாபெரும் நிலப்பிரபுத்துவ வம்சத் தோரின் சாட்டையின்கீழ் கிராமப்புறப் பாட்டாளி வர்க்கம் தந்தைவழி முறையிலே சுரண்டப்படுவதைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் இயந்திரத் தொழிலில் வேலை செய்யும் பாட்டாளி வர்க்கத்தின் பேரால் முதலாளி

வர்க்கத்தை மட்டும் தாக்கி வருவது நீசத்தனமாகும்.'' (தொகுதி 3, பக்கம் 217.)[49] ஜெர்மனியில் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை நிறைவுபடுத்தும் சகாப்தம் முடிவுக்கு வந்து கொண்டிருந்த காலத்தில், இந்தப் புரட்சியை மேலே இருந்து ஏதாவதொரு வழியில் நிறைவுபடுத்துவதற்குப் பிரஷ்யாவையும் ஆஸ்திரியாவையும் சேர்ந்த சுரண்டும் வர்க்கங்கள் போராடிக் கொண்டிருந்த சகாப்தம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கையில், அதாவது 1864ம் ஆண்டிலிருந்து 1870ம் ஆண்டு வரை, பிஸ்மார்க்குடன் குலாவிக் கொண்டிருந்த லஸ்ஸாலே மார்க்ஸ் கண்டித்ததோடு மட்டுமல்லாமல், ''ஆஸ்திரிய பக்திவாதத்தின்'' பக்கமாகவும் தனித்தன்மை வாதத்தை ஆதரிப்பதின் பக்கமாகவும் சாய்ந்து கொண்டிருந்த லீப்க்னெஹ்டையும் கண்டித்துத் திருத்தினர். பிஸ்மார்க்கையும் ஆஸ்திரிய பக்திவாதிகளையும் எதிர்த்து ஒரே மாதிரியாக ஈவிரக்கமின்றிப் போர் புரிவதற்குரிய புரட்சிகரமான போர்த்தந்திரத்தை மார்க்ஸ் கோரினர்; ''வெற்றி வீரனை'' பிரஷ்ய நிலப்பிரபுத்துவத்துக்கு வேண்டிய மாதிரி அமைந்திராமல், அதற்குப் பதிலாகப் பிரஷ்ய ராணுவ வெற்றிகள் உண்டாக்கித் தந்த அடிப்படையிலே அவர்களை எதிர்த்து உடனடியாகப் புரட்சிப் போராட்டத்தை மீண்டும் நடத்துவதற்கேற்ற போர்த்தந்திரத்தையே மார்க்ஸ் கோரினர். (கடிதப் போக்குவரத்து, தொகுதி 3, பக்கங்கள் 134, 136, 147, 179, 204, 210, 215, 418, 437, 440—441.)[50] அகிலத்தின் 1870 செப்டம்பர் 9ம் தேதிய பெயர் பெற்ற அறிக்கையில், காலப் பொருத்தமற்ற எழுச்சியைச் செய்யக்கூடாது என்று பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தை மார்க்ஸ் எச்சரித்தார்; ஆனல், அவர் சொல்லியிருந்த போதிலும் 1871ல் எழுச்சி நடைபெற்ற போது ''விண்ணைச் சாடுகின்ற'' மக்களின் புரட்சிகரமான முன்முயற்சியை மார்க்ஸ் உற்சாகத்தோடு கொண்டாடி வரவேற்ருர் (குகல்மனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம்).[51] இந்த நிலைமையிலும் சரி, இதர பல நிலைமைகளிலும் சரி, மார்க்ஸிய இயக்கவியல் வகைப்பட்ட பொருள்முதல்வாதத்தின் நிலையில் நின்று பார்க்கும் போது, ஏற்கெனவே கைப்பற்றியிருந்த நிலையைக் கைவிடுவதைவிட, போராடாமலே சரணகதி அடைவதைவிட, புரட்சிகரமான செயல் தோல்வியடைவதானது பாட்டாளி

வர்க்கப் போராட்டத்தின் பொதுவான போக்குக்கும் இறுதி விளைவுக்கும் குறைந்த தீங்கேயாகும். அப்படிப்பட்ட சரணு கதி பாட்டாளி வர்க்கத்தின் உறுதியைக் குலைத்திருக்கும், அதன் போர்த்திறனைப் பலவீனப்படுத்தியிருக்கும். அரசியல் தேக்கம் நிலவி முதலாளித்துவச் சட்டக் கட்டுப்பாடு மேலோங்கியிருக்கும்படியான காலப்பகுதிகளில் சட்டபூர்வ மான போராட்ட வழிவகைகளைப் பயன்படுத்துவதை மார்க்ஸ் பூர்ணமாக உணர்ந்து கொண்டு, தனிப்பட்ட சோஷ லிஸ்டு-எதிர்ப்புச் சட்டம்[52] அமுலுக்கு வந்த பிறகு, 1877-1878 ஆண்டுகளில் மோஸ்த் என்பவருடைய ''புரட்சிகர மான சொல்லடுக்குகளைத்'' தீவிரமாகக் கண்டித்தார்; ஆனால், அதைவிடத் தீவிரமாயில்லாவிட்டாலும் அதற்கு எந்த விதத்திலும் குறைச்சலில்லாத தீவிரத்துடன் அதிகார பூர்வமான சமூக-ஜனநாயகக் கட்சியில் தற்காலிகமாக ஆதிக் கம் பெற்றிருந்த சந்தர்ப்பவாதத்தையும் மார்க்ஸ் கண்டித் தார்; ஏனெனில் சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்துக்குப் பதிலளிக்கும் முறையில், அந்தக் கட்சி உடனே மனோ திடத் தையும், உறுதியையும், புரட்சிகரமான உணர்ச்சியையும், சட்டவிரோதமான போராட்டத்தில் இறங்குவதற்குத் தயாராயிருக்கும் போக்கையும் வெளிப்படுத்தவில்லை. (கடிதப் போக்குவரத்து, தொகுதி 4, பக்கங்கள் 397, 404, 418, 422, 424;[53] சோர்கே என்பவருக்கு எழுதிய கடிதங்களையும் பார்க்க.)

1914 ஜூலை-நவம்பரில்
எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 26,
பக்கங்கள் 43-81

ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ்

எத்தகைய அறிவுச் சுடர் விளக் கவிந்தது;
எத்தகைய அன்பு மலர் நெஞ்சு நின்றது![54]

1895ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் தேதியன்று ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் லண்டன் மாநகரில் காலமானார். (1883ம் ஆண்டில் மறைந்த) அவருடைய நண்பர் கார்ல் மார்க்ஸுக்கு அடுத்தபடி நாகரிக உலகெங்கும் நவீனகால பாட்டாளி வர்க்கத்தின் தலைசிறந்த அறிஞராகவும் ஆசானாகவும் விளங்கியவர் எங்கெல்ஸ் ஆவார். கார்ல் மார்க்ஸையும் ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸையும் விதி ஒன்றுசேர்த்து வைத்த காலத்திலிருந்து அவ்விரு நண்பர்களும் தமது வாழ்வை இருவருக்கும் பொதுவான இலட்சியத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டனர். ஆகவே, பாட்டாளி வர்க்கத்திற்கு ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் ஆற்றிய பணியைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் தற்காலத்திய தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியில் மார்க்ஸின் போதனையும் பணியும் வகிக்கும் முக்கியத்துவத்தைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். தொழிலாளி வர்க்கமும் அதன் கோரிக்கைகளும் இன்றையப் பொருளாதார அமைப்பு முறையிலிருந்து விளைந்த அவசியமான விளைவே என்றும், இந்தப் பொருளாதார அமைப்பு முறையும் முதலாளி வர்க்கமும் சேர்ந்து தவிர்க்க முடியாத வகையிலே பாட்டாளி வர்க்கத்தை உண்டாக்கி, அதனை ஒழுங்கமைத்து அணிதிரட்டுகின்றன என்றும் முதன் முதலாக எடுத்துக் காட்டியவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருமே. இன்று மனித குலத்தை ஒடுக்கி வதைத்து வரும் தீமைகளிலிருந்து அதை விடுவிக்க வல்லது ஒழுங்கமைத்துக் கொண்டு அணிதிரண்டு நிற்கும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமே தவிர உயர்ந்த சிந்தனை படைத்த தனிநபர்கள் சிலரின் நல்லெண்ண மிக்க முயற்சிகள் அல்ல என்று அவ்விருவரும்

எடுத்துக் காட்டினார்கள். சோஷலிஸம் என்பது ஏதோ கனவு காண்பவர்களுடைய கற்பனைப் பொருள் அல்ல; நவீன சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகளுடைய வளர்ச்சியின் கடைசிக் குறிக்கோளும், தவிர்க்க முடியாத விளைவும் ஆகும் அது என்று தங்கள் விஞ்ஞான நூல்களிலே மார்க்ஸும் எங்கெல்ஸும் முதன்முதலாக விளக்கினர். இது வரை ஏட்டிலேறியுள்ள வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டத்தின் வரலாறுதான், ஒன்றன் பின்னொன்றாய்த் தொடர்ந்து சில சமுதாய வர்க்கங்கள் மற்ற வர்க்கங்களின்மீது வெற்றி கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளதின் வரலாறுதான். வர்க்கப் போராட்டத்துக்கும், வர்க்கத்திற்குரிய ஆதிக்கத்துக்கும் அடிப்படைகளாயுள்ள தனிச்சொத்தும், அராஜகமான சமுதாய உற்பத்தியும் மறைந்தொழிகிற வரையில் இது நீடித்தே தீரும். இந்த அடிப்படைகளை அழித்துவிட வேண்டும் என்று பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் கோருகின்றன. எனவே, ஒரே அணியில் திரண்ட தொழிலாளிகளின் உணர்வு பூர்வமான வர்க்கப் போராட்டம் இவ்வடிப்படைகளுக்கு எதிராகச் செலுத்தப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் அரசியல் போராட்டமேயாகும்.

இவை மார்க்ஸ், எங்கெல்ஸின் கருத்துக்களாகும். பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராடும் பாட்டாளிகள் அனைவரும் இந்தக் கருத்துக்களை ஏற்றுத் தமதாக்கிக் கொண்டுள்ளனர். ஆனால், 1840-50ம் ஆண்டுகளில், இவ்விரு நண்பர்களும் அந்தக் காலத்திய சோஷலிஸ்டு இலக்கியத்திலும் சமுதாய இயக்கங்களிலும் பங்கு கொண்ட பொழுது இப்படிப்பட்ட கருத்துக்கள் முற்றிலும் புதியனவாயிருந்தன. அந்தக் காலத்தில் திறனுள்ளவர்களாயும் திறனற்றவர்களாயும், நேர்மையுள்ளவர்களாயும் நேர்மையற்றவர்களாயும் இருந்த பல பேர் அரசியல் விடுதலைப் போராட்டத்தில், ஜார் மன்னர்களின், போலீஸின், பாதிரிமார்களின் யதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் போராட்டத்தில் முழுக்க ஈடுபட்டிருந்த போதிலும் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் இடையேயுள்ள பகைமையைப் பார்க்கத் தவறினார்கள். சுதந்திரமான சமுதாயச் சக்தியாகத் தொழிலாளர்கள் செயல் புரிவதென்ற கருத்துக்கு அவர்கள் இடங்கொடுக்க மறுத்தார்கள். மற்றொரு

பக்கத்தில் கனவு காண்போர் பலர் இருந்தார்கள்; அவர்களில் சிலர் மேதைகள்கூட; நவீன சமுதாய அமைப்பு முறை அநியாயமானது என்று ஆட்சியாளர்களுக்கும் ஆட்சி செலுத்தும் வர்க்கங்களுக்கும் புரிய வைப்பது ஒன்றுதான் வேலை, அதைச் செய்துவிட்டால் பிறகு இந்த மண்ணுலகில் அமைதியையும் பொதுவான நல்வாழ்வையும் நிறுவுவது சுலபம் என்று அவர்கள் எண்ணினார்கள். போராட்டமில்லாமலே சோஷலிஸம் வரும் என்று அவர்கள் கனவு கண்டார்கள். கடைசியாக ஒன்று. அந்தக் காலத்தைச் சேர்ந்த அநேகமாக எல்லா சோஷலிஸ்டுகளும், பொதுவாகத் தொழிலாளி வர்க்கத்தின் நண்பர்களும், பாட்டாளி வர்க்கம் ஒரு சீழ்வடியும் புண் என்று கருதினர்; இயந்திரத் தொழிலின் வளர்ச்சிக்கு ஏற்ப இந்தப் புண்ணும் வளர்ந்து கொண்டே போவதை அவர்கள் பீதியுடன் கவனித்தார்கள். ஆகவே, இயந்திரத் தொழிலின் வளர்ச்சியையும் பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியையும் எப்படித் தடுத்து நிறுத்துவது, ''வரலாற்றின் சக்கரத்தை'' எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதிலேயே அவர்கள் அனைவரின் கவனமும் சென்றது. பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியைப் பற்றிப் பொதுவாக நிலவிய பயபீதிகளுக்கு ஆளாவதற்குப் பதிலாக மார்க்ஸும் எங்கெல்ஸும் பாட்டாளி வர்க்கத்தின் இடைவிடாத வளர்ச்சியின்மீதே தங்கள் நம்பிக்கைகளனைத்தையும் வைத்தார்கள். பாட்டாளிகளின் எண்ணிக்கை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு புரட்சிகரமான வர்க்கம் என்ற வகையிலே அவர்களின் வலிமை அதிகமாகும், அவ்வளவுக்கவ்வளவு சோஷலிஸம் நெருங்குவது சாத்தியமாகும். தொழிலாளி வர்க்கத்துக்கு மார்க்ஸும் எங்கெல்ஸும் ஆற்றிய பணியைப் பற்றி ஒரு சில சொற்களிலே பின்வருமாறு சொல்லிவிடலாம்: தொழிலாளி வர்க்கம் தன்னைத்தானே அறிந்து கொள்ளுமாறு, தன்னைப் பற்றிய உணர்வு கொள்ளுமாறு அவர்கள் போதித்தார்கள்; மேலும், கனவுகள் இருந்த இடத்தில் விஞ்ஞானத்தை நிலைநாட்டினார்கள்.

ஆகவேதான் எங்கெல்ஸின் பெயரும் வாழ்க்கையும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரிந்திருக்க வேண்டும். நமது எல்லா வெளியீடுகளையும் போலவே இந்தச் சஞ்சிகையின் நோக்கமும் ருஷ்யத் தொழிலாளர்களிடையே வர்க்க உணர்

– 5 MAR 1985

F. Engels

வைத் தூண்டுவதேயாகும். அதனுல்தான் இச்சஞ்சிகையில் நவீன கால பாட்டாளி வர்க்கத்தின் மகத்தான இரு ஆசான்களில் ஒருவராகிய ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸின் வாழ்க்கையையும் பணியையும் நாம் சித்திரித்துக் காட்ட வேண்டும்.

எங்கெல்ஸ் பிரஷ்ய முடியரசில் ரைன் மாகாணத்தைச் சேர்ந்த பார்மென் என்ற ஊரில் 1820ம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தகப்பனுர் ஓர் ஆலைச் சொந்தக்காரர். உயர் நிலைப் பள்ளியில் தமது கல்வியை முடிக்காமலே குடும்ப நிலைமைகளின் நிர்ப்பந்தம் காரணமாக 1838ல் எங்கெல்ஸ் பிரெமனில் ஒரு வர்த்தக நிலையத்தில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். வர்த்தக விவகாரங்கள் விஞ்ஞான-அரசியல் கல்வியைப் பயில்வதினின்று எங்கெல்ஸைத் தடுத்துவிடவில்லை. உயர்நிலைப் பள்ளியில் இருந்த காலத்திலேயே யதேச்சாதிகாரத்தையும் அரசாங்க அதிகாரிகளின் தான் தோன்றித் தனத்தையும் எங்கெல்ஸ் வெறுக்கலானுர். தத்துவஞானப் பயிற்சி அவரை மேலும் முன்னுக்குக் கொண்டு சென்றது. அந்தக் காலத்தில் ஜெர்மன் தத்துவஞானத்தில் ஹெகலின் போதனை ஆதிக்கம் வகித்தது. எங்கெல்ஸ் ஹெகலைப் பின்பற்றிச் சென்ருர். பிரஷ்ய அரசின் சேவகத்தில் பெர்லின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த ஹெகல் யதேச்சாதிகாரத்தனமான பிரஷ்ய அரசை நடப்பில் மெச்சிக் கொண்டாடி வந்த போதிலும் ஹெகலின் போதனை புரட்சிகரமானது. மனித அறிவின் மீதும் மனித உரிமைகள் மீதும் ஹெகல் நம்பிக்கை கொண்டிருந்தார். உலகம் இடையருத மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் உட்பட்டது என்பது ஹெகல் தத்துவஞானத்தின் அடிப்படையான ஆய்வுரையாகும். இந்த பெர்லின் தத்துவஞானியின் சீடர்களிலே, நடப்பு நிலைமையை ஏற்க மறுத்தவர்கள் இருந்தார்கள். நடப்பு நிலைமையை எதிர்த்துப் போராட வேண்டும், நடப்பிலிருந்த அநீதியையும் மேலோங்கியிருந்த தீமையையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்பதும் முடிவின்றி நிரந்தரமாய் வளர்ந்து செல்வதென்ற அனைத்துலகத்துக்கும் பொதுவான விதியிலே வேர்கொண்டுள்ளது என்ற கருத்தை ஹெகலின் மேற்கூறிய நம்பிக்கையும் ஹெகலின் தத்துவஞானத்தின் மேற்கூறிய அடிப்படை ஆய்வுரையும் இச்சீடர்களின் மனத்திலே உருவாகச் செய்தன. எல்லாமே வளர்ச்சியுறுகின்றன

என்றால், சில நிறுவனங்கள் மறைந்து அவையிருந்த இடத்தில் வேறு நிறுவனங்கள் அமைகின்றன என்றால், பிரஷ்ய மன்னனின் யதேச்சாதிகாரமோ, ருஷ்ய ஜார்மன்னனின் யதேச்சாதிகாரமோ, மிகப் பெரும்பான்மையோராயுள்ளவர்களைச் சுரண்டி அற்பசொற்பமான ஒரு சிறுபான்மைக் கூட்டத்தார் செல்வர்களாவதோ, மக்களின் மீது முதலாளி வர்க்கம் ஆதிக்கம் வகிப்பதோ ஏன் நிரந்தரமாக நீடிக்க வேண்டும்? ஹெகலுடைய தத்துவஞானம் ஆன்மாவின் வளர்ச்சியைப் பற்றி, கருத்துக்களின் வளர்ச்சியைப் பற்றிப் பேசிற்று. இந்தத் தத்துவஞானம் கருத்துமுதல்வாதரீதியானது. ஆன்மாவின் வளர்ச்சியிலிருந்து அது இயற்கையின் வளர்ச்சியையும், மனிதனின் வளர்ச்சியையும், மனித, சமுதாய உறவுகளின் வளர்ச்சியையும் அனுமானித்தது. மார்க்ஸூம் எங்கெல்ஸூம் வளர்ச்சியின் நிரந்தரமான இயக்கப் போக்கு பற்றிய ஹெகலின் கருத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு* முன்சிந்தனைப்படி அமைந்த கருத்துமுதல்வாதக் கருத்தை நிராகரித்து ஒதுக்கி விட்டார்கள். வாழ்வின் உண்மைகளை ஆராய்ந்து, இயற்கையின் வளர்ச்சியை விளக்குவது மனத்தின் வளர்ச்சியல்ல என்றும், அதற்கு மாறாக மனத்தைப் பற்றிய விளக்கமே இயற்கையிலிருந்துதான், பருப்பொருளிலிருந்துதான் பெறப்பட வேண்டும் என்றும் அவர்கள் கண்டார்கள்.... ஹெகலையும், ஹெகலைப் பின்பற்றும் மற்றவர்களையும் போலல்லாமல், மார்க்ஸூம் எங்கெல்ஸூம் பொருள்முதல்வாதிகள். உலகத்தையும் மனிதகுலத்தையும் அவர்கள் பொருள்முதல்வாத நிலையிலிருந்து பார்த்து இயற்கையின் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாகப் பொருளாயதக் காரணங்கள் எப்படி அமைந்துள்ளனவோ, அதேபோல் மனித சமுதாயத்தின் வளர்ச்சியும் பொருளாயத வகைப்பட்ட உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால் வரையறுக்கப்படுகிறது என்று அறிந்து கொண்டனர். மனிதத் தேவைகளை நிறைவு செய்

* தங்களுடைய அறிவு வளர்ந்து விரிவடைவதிலே மகத்தான ஜெர்மன் தத்துவஞானிகளுக்கு—ஹெகலுக்கு—தாங்கள் மிகவும் கடன்பட்டிருப்பதாக மார்க்ஸூம் எங்கெல்ஸூம் அடிக்கடி குறிப்பிட்டுள்ளனர். ''ஜெர்மன் தத்துவஞானம் இல்லாமல் விஞ்ஞான வழிப்பட்ட சோஷலிஸம் தோன்றியேயிருக்காது'' என்கிறார் எங்கெல்ஸ்.[55]

வதற்குரிய பொருட்களை உற்பத்தி செய்வதிலே மனிதர்கள் பரஸ்பரமாக ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கின்றன. சமுதாய வாழ்வின் எல்லாத் தோற்றங்களுக்கும், மனித ஆவலாதிகளுக்கும், கருத்துக்களுக்கும், சட்டங்களுக்கும் உரிய விளக்கம் இந்த உறவுகளிலேதான் பொதிந்திருக்கிறது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது தனிச் சொத்தின் அடிப்படையில் அமைந்த சமுதாய உறவுகளைப் படைக்கிறது. ஆனால், உற்பத்திச் சக்திகளின் அதே வளர்ச்சி பெரும்பான்மையானவர்களின் சொத்தைப் பறித்து அற்பசொற்பமான சிறுபான்மையோரிடம் அதைச் சேர்த்துக் குவித்து வைக்கிறதை நாம் இன்று காண்கிறோம். நவீனகாலத்திய சமுதாய அமைப்பு முறைக்கு அடிப்படையாக உள்ள சொத்து என்பதை அது அழிக்கிறது; சோஷலிஸ்டுகள் தங்களுக்கென்று வகுத்துக் கொண்ட அதே இலட்சியத்தை நோக்கி அதுவும் தானாகச் செல்ல முயற்சிக்கிறது. சோஷலிஸ்டுகள் செய்ய வேண்டியிருப்பதெல்லாம்—சமுதாயச் சக்திகளில் எது நவீன சமுதாயத்தில் தான் வகிக்கும் நிலையின் காரணமாக, சோஷலிஸத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் அக்கறை கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து கொண்டு அந்தச் சக்திக்கு அதன் நலன்களைப் பற்றிய உணர்வையும், அதன் வரலாற்று வழிப்பட்ட கடமையைப் பற்றிய உணர்வையும் ஊட்டுவதேயாகும். இந்தச் சக்திதான் பாட்டாளி வர்க்கம். அதை இங்கிலாந்தில், பிரிட்டிஷ் இயந்திரத் தொழிலுக்குக் கேந்திரமாயிருந்த மாஞ்செஸ்டரில், எங்கெல்ஸ் அறியலானார். மாஞ்செஸ்டரில் அவர் 1842ம் ஆண்டில் குடியேறி, தமது தகப்பனார் பங்குதாரராகச் சேர்ந்திருந்த வர்த்தக நிலயத்தில் வேலையில் அமர்ந்தார். அங்கே சும்மா அலுவலகத்தில் எங்கெல்ஸ் உட்கார்ந்துவிடவில்லை. தொழிலாளர்கள் அடைந்து கிடந்த ஆபாசமான சேரிகளில் சுற்றி அலைந்தார். அவர்களின் வறுமையையும் துன்பதுயரங்களையும் கண்கூடாகக் கண்டார். ஆனால் சுயமாகக் கண்டறிவதோடு அவர் நின்றுவிடவில்லை. பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை பற்றி ஏற்கெனவே வெளியாகியிருந்த விஷயங்களையெல்லாம் அவர் படித்தார்; கைக்கு அகப்பட்ட அதிகார பூர்வமான எல்லா ஆவணங்களையும் அவர் கவனமாகப் பரிசீலித்துப் படித்தார்.

இப்படிப் பார்த்தறிந்தவற்றின், படித்தறிந்தவற்றின் பலனாக விளைந்ததுதான் 1845ம் ஆண்டில் வெளியான இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற நூல் ஆகும். இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்னும் நூலின் ஆசிரியர் என்ற முறையில் எங்கெல்ஸ் ஆற்றிய முக்கியமான பணியைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். எங்கெல்ஸுக்கு முன்பே மிகப் பலர் பாட்டாளி வர்க்கத்தின் துன்பதுயரங்களை வர்ணித்து, அதற்கு உதவி புரியவேண்டியதின் அவசியத்தை எடுத்துச்சொல்லியுள்ளனர். பாட்டாளி வர்க்கம் துன்பதுயரங்களை அனுபவிக்கும் வர்க்கம் மட்டுமல்ல, உண்மையிலே பாட்டாளி வர்க்கத்தின் வெட்கக் கேடான பொருளாதார நிலைமை தடுக்க முடியாத வகையில் அதை முன்தள்ளிச் செல்கிறது, தனது இறுதி விடுதலைக் காகப் போராடும்படி நிர்ப்பந்திக்கிறது என்று எங்கெல்ஸ் தான் முதன்முதலாகச் சொன்னவர். மேலும், போராடும் பாட்டாளி வர்க்கம் தன் கையையே தனக்குதவியாகக் கொள்ளும். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கம் தங்களது விமோசனம் சோஷலிஸத்தில் மட்டுமே உள்ளது என்று தொழிலாளர்கள் அறியும் நிலைக்குத் தவிர்க்க முடியாத படி கொண்டுபோய்விடும். மறு பக்கத்தில், தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தின் இலட்சியமாக ஆகும் போதுதான் சோஷலிஸம் ஒரு சக்தியாக ஆகும். ஆங்கிலேய தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை பற்றிய எங்கெல்ஸ் நூலிலுள்ள பிரதான கருத்துக்கள் இவைதான். சிந்தனை யுள்ள, போராடிக் கொண்டிருக்கிற பாட்டாளிகள் எல்லோ ரும் இந்தக் கருத்துக்களை இப்போது ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். ஆனால் அந்தக் காலத்தில் அவை முழுக்க முழுக்கப் புதியனவாயிருந்தன. சிந்தனையைக் கவரும் நடையில் எழு தப்பட்ட இந்நூலில் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட் டன. பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தின் துன்பதுயரங்களைப் பற்றிய முற்றிலும் உண்மையான, அதிர்ச்சியுண்டாக்கத் தக்க சித்திரங்கள் இந்நூலிலே நிறைந்துள்ளன. இந்த நூல் முதலாளித்துவ அமைப்பின் மீதும் முதலாளி வர்க்கத்தின் மீதும் மிகப் பயங்கரமான குற்றச்சாட்டாக விளங்கியது. மக்களின் மனத்தில் அது பசுமரத்தாணி போல் பதிந்தது. எங்கெல்ஸின் நூல் நவீனகாலப் பாட்டாளி வர்க்கத்தின்

நிலைமையைப் பற்றிய மிகச் சிறந்த சித்திரத்தை வழங்குகிறது என்று இதிலிருந்து எங்கும் மேற்கோள் காட்டத் தொடங்கினார்கள். உண்மையிலே பார்த்தால், 1845ம் ஆண்டுக்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, தொழிலாளி வர்க்கத்தின் துன்ப துயரங்களைப் பற்றி இவ்வளவு வியக்கத்தக்க உண்மையான சித்திரம் வெளிவந்தது கிடையாது.

இங்கிலாந்துக்கு வந்த பிறகுதான் எங்கெல்ஸ் சோஷலிஸ்டு ஆனார். அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களுடன் மாஞ்செஸ்டரில் எங்கெல்ஸ் தொடர்பு கொண்டார்; பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் பத்திரிகைகளில் எழுதத் துவங்கினார். 1844ம் ஆண்டில், ஜெர்மனிக்குத் திரும்பி வரும் வழியில், பாரிஸ் நகரில் அவர் மார்க்ஸைச் சந்தித்துப் பழகினார். மார்க்ஸுடன் ஏற்கெனவே அவர் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தவர்தான். பாரிஸில் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின், பிரெஞ்சு வாழ்க்கையின் செல்வாக்கின்கீழ் மார்க்ஸும் சோஷலிஸ்டு ஆகிவிட்டார். இங்கே அவ்விரு நண்பர்களும் சேர்ந்து **புனிதக் குடும்பம் அல்லது விமர்சன வகைப்பட்ட விமர்சனத்தின் விமர்சனம்** என்று தலைப்பிட்ட ஒரு நூலை எழுதினார்கள். இங்கிலாந்தில் **தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை** என்ற நூல் வெளியாவதற்கு ஒரு வருடத்துக்கு முன்பே இது வெளிவந்தது. இதன் பெரும் பகுதியை மார்க்ஸ் தாம் எழுதினார். இந்நூலில் புரட்சிகரமான பொருள்முதல்வாத சோஷலிஸத்தின் அடிப்படைகள்—அதன் முதன்மையான கருத்துக்களை மேலே விளக்கிச் சொல்லியிருக்கிறோம்—அடங்கியுள்ளன. ''புனிதக் குடும்பம்'' என்பது தத்துவஞானிகளான பௌவர் சகோதரர்களையும், அவர்களைப் பின்பற்றியோரையும் குறிக்கும் கேலிப் பெயராகும். எல்லா வகையான யதார்த்தத்திற்கும் அப்பாற்பட்ட, கட்சிகளுக்கும் அரசியலுக்கும் அப்பாற்பட்ட ஒரு விமர்சனத்தை இந்தக் கனவான்கள் பிரச்சாரம் செய்தார்கள். எல்லாவிதமான நடைமுறை நடவடிக்கைகளையும் அது நிராகரித்தது; நம்மைச் சூழ்ந்துள்ள உலகையும், அதில் நடந்து வரும் நிகழ்ச்சிகளையும் பற்றி அந்த விமர்சனம் வெறுமே ''விமர்சன'' கண் கொண்டு பார்ப்பதோடு நின்றுவிட்டது. இந்தக் கனவான்கள்—பௌவர் சகோதரர்கள்—பாட்டாளி வர்க்கம் விமர்சனப் பார்வையற்ற கும்பல் என்று

இழிவுபடுத்தினார்கள். சுத்த அபத்தமான, தீங்கு விளைவிக்கக் கூடிய இந்தப் போக்கை மார்க்ஸும் எங்கெல்ஸும் தீவிரமாக எதிர்த்தார்கள். ஆளும் வர்க்கங்களாலும் அரசாலும் மிதித்து நசுக்கப்பட்டு வரும் தொழிலாளி என்ற அசல் மனிதப் பிறவியின் சார்பாக வீண் சிந்தனை அல்ல, மேம்பட்ட சமுதாய அமைப்பு முறைக்காகப் போராட்டம் நடத்த வேண்டும் என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் கோரினார்கள். இந்தப் போராட்டத்தை நடத்துவதில் அக்கறை கொண்டுள்ள சக்தியாக, இந்தப் போராட்டத்தை நடத்துவதற்குத் திறன் பெற்றுள்ள சக்தியாக, பாட்டாளி வர்க்கத்தை அவர்கள் கருதினார்கள் என்பதில் ஐயமில்லை. **புனிதக் குடும்பம்** வெளிவருவதற்கு முன்பே, மார்க்ஸும் ரூகேயும் நடத்திய **டேய்ச்-பிரான் சோசிஷ் யார்பூகரில்** **அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சன வுரைக்கு ஒரு நகல்**[56] என்ற தொடரை எங்கெல்ஸ் வெளியிட்டார். அக்கட்டுரைகளில் தனிச்சொத்தின் ஆதிக்கத்தால் ஏற்பட்டுத் தீரும் விளைவுகள் என்ற முறையில், நவீன காலப் பொருளாதார அமைப்பு முறையின் முதன்மையான தோற்றங்களை சோஷலிஸ நோக்குநிலையிலிருந்து பரிசீலித்தார். அரசியல் பொருளாதாரத்தைப் பயில்வதென்று மார்க்ஸ் முடிவு செய்ததற்கு அவர் எங்கெல்ஸுடன் தொடர்பு கொண்டிருந்தது ஒரு காரணம் என்பதில் சந்தேகமேயில்லை. அரசியல் பொருளாதாரம் என்ற விஞ்ஞானத் துறையில் மார்க்ஸ் அசல் புரட்சியையே உண்டாக்கிவிட்டார்.

1845லிருந்து 1847 வரை எங்கெல்ஸ் பிரஸ்ஸெல்ஸிலும் பாரிஸிலும் வாழ்ந்தார். விஞ்ஞானப் பயிற்சியோடுகூடவே பிரஸ்ஸெல்ஸ், பாரிஸ் நகரங்களிலுள்ள ஜெர்மன் தொழிலாளர்களிடையே நடைமுறை நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டிருந்தார். இங்கே இரகசியமாயிருந்த ஜெர்மன் ''கம்யூனிஸ்டுச் சங்கம்'' என்ற நிறுவனத்துடன் மார்க்ஸும் எங்கெல்ஸும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் வரையறுத்து விவரித்துள்ள சோஷலிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கும்படி அந்தச் சங்கம் அவர்களைப் பணித்தது. இவ்வழியேதான் மார்க்ஸும் எங்கெல்ஸும் எழுதிய **கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை** என்ற புகழ்பெற்ற நூல் 1848ல் வெளிவந்தது. இந்தச் சிறு பிரசுரம் மிகப் பெரிய நூல் தொகுதிகளுக்குச் சமமானது. அதன் உணர்ச்சி நாகரிக

உலகில் ஒழுங்கமைப்பு பெற்று அணி திரண்டு போராடி வரும் பாட்டாளி வர்க்கம் முழுவதையும் இன்றைக்கும்கூட ஊக்குவித்து இயக்கிச் செல்கிறது.

முதன் முதலாக பிரான்ஸில் தோன்றி, பின்னர் மற்ற மேலைய ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவிய 1848ம் ஆண்டுப் புரட்சி மார்க்ஸையும் எங்கெல்ஸையும் தங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பி வரச் செய்தது. இங்கே, ரைனிஷ் பிரஷ்யாவில், கொலோன் நகரிலிருந்து வெளிவந்த ஜனநாயகத் தன்மையுள்ள நியூ ரைனிஷ் ஜைடுங் என்ற பத்திரிகையை அவர்கள் தங்கள் பொறுப்பில் எடுத்து நடத்தினார்கள். ரைனிஷ் பிரஷ்யாவில் எல்லாப் புரட்சிகர ஜனநாயக வேட்கைகளின் இதயமாக, ஆன்மாவாக இவ்விரு நண்பர்களும் விளங்கினர். மக்களின், சுதந்திரத்தின் நலன்களைப் பாதுகாத்து அவர்கள் பிற்போக்குச் சக்திகளைக் கடைசிவரை எதிர்த்துப் போராடினர்; பிற்போக்குச் சக்திகளின் கை மேலோங்கியது என்பது நாமறிந்த சங்கதிதான். நியூ ரைனிஷ் ஜைடுங் தடை செய்யப் பட்டது. நாடுகடத்தப்பட்ட காலத்தில் தமது பிரஷ்யக் குடியுரிமையை இழந்துவிட்டிருந்த மார்க்ஸ் பிரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆயுதந்தாங்கிய மக்கள் எழுச்சியில் எங்கெல்ஸ் பங்கு கொண்டார், சுதந்திரத்துக்காக மூன்று முனைகளில் போர் புரிந்தார். கலகக்காரர்கள் தோல்வியுற்ற பிறகு சுவிட்ஸர்லாந்து வழியே லண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

மார்க்ஸும் அங்கேயே குடியமைத்துக் கொண்டார்; எங்கெல்ஸ் மீண்டும் ஒரு குமாஸ்தா ஆகிவிட்டார். கொஞ்ச காலம் கழித்து, தாம் 1840-1850ம் ஆண்டுகளில் வேலை பார்த்த அதே மாஞ்செஸ்டர் வர்த்தக நிலையத்திலேயே பங்குதாரராக ஆனார். 1870 வரை அவர் மாஞ்செஸ்டரிலேயே வாழ்ந்து வர, மார்க்ஸ் லண்டனில் வாழ்ந்து வந்தார். இருந்த போதிலும் அவ்விருவரும் பரஸ்பரம் உற்சாகம் பொங்கும் அறிவுத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை அது தடுக்கவில்லை. அநேகமாக தினந்தோறும் ஒருவருக்கொருவர் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். இந்தக் கடிதப்போக்குவரத்து மூலம் இவ்விரு நண்பர்களும் தங்கள் கருத்துக்களையும் கண்டுபிடிப்புகளையும் பரஸ்பரம் பரிமாறிக் கொண்டார்கள், விஞ்ஞான சோஷலிஸத்தை வகுத்துக் கொடுப்பதில் இணைந்து

பணி புரிவதைத் தொடர்ந்தார்கள். 1870ம் ஆண்டில் எங்கெல்ஸ் லண்டனுக்கு வந்து அங்கேயே தங்கிவிட்டார். கடும் உழைப்பு நிறைந்த அவர்களுடைய பொதுவான அறிவுத் துறை வாழ்க்கை 1883ம் ஆண்டு வரை நீடித்தது; 1883ம் ஆண்டில் மார்க்ஸ் காலமானார். மார்க்ஸ் பங்குக்கு இந்தப் பொதுவான அறிவுத் துறை வாழ்க்கையின் பலன் மூலதனம் என்ற நூலாகும்; நமது சகாப்தத்திலேயே அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய நூல்கள் யாவற்றிலும் தலை சிறந்த நூல் இதுதான். எங்கெல்ஸைப் பொறுத்தமட்டில் அதன் பலன் பல பெரிய, சிறிய நூல்கள் எழுதியதுதான். முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சிக்கல் நிறைந்த தோற்றங்களைப் பற்றிய பகுப்பாராய்ச்சியிலே மார்க்ஸ் ஈடு பட்டார். எங்கெல்ஸ் எளிய நடையில் எழுதிய நூல்களில், அடிக்கடி எதிர்வாதங்களைச் சந்திக்கிழுத்துத் தாக்கும் நூல்களில் வரலாறு பற்றிய பொருள்முதல் வாதக் கருத் தோட்டத்தையும் மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவத் தையும் செயல்படுத்திய வழியிலே, மிகப் பொதுவான விஞ் ஞானப் பிரச்சினைகளையும், பல வகைப்பட்ட சென்றகால, நிகழ்கால நிகழ்ச்சிகளையும் விளக்கினார். எங்கெல்ஸின் இந்நூல்களில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவோம்: டூரிங்குக்கு மறுப்பாக எழுதிய வாதவடிவங் கொண்ட நூல் (இந்நூலில் தத்துவஞானம், இயற்கை விஞ்ஞானம், சமுதாய விஞ்ஞானங்கள் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட மாபெரும் பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன)*; குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூல் (இது ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டு செயின்ட் பீட்டர்ஸ்பர் கில் வெளியிடப்பட்டது. மொழிபெயர்ப்பின் மூன்றும் பதிப்பு 1895ல் வெளிவந்தது); லுத்விக் ஃபாயர்பாக்[59] என்ற நூல் (இதன் ருஷ்ய மொழிபெயர்ப்பு கி. பிளெஹானவ் குறிப்புகளுடன் ஜினீவாவில் 1892ல் வெளிவந்தது);

---

* இது அற்புதமான முறையில் கருத்து மிக்க, படிப்பினை நிறைந்த நூலாகும்.[57] துரதிர்ஷ்டவசமாக, அதன் ஒரு சிறு பகுதிதான் ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது (விஞ் ஞான சோஷலிஸத்தின் வளர்ச்சி, 2ம் பதிப்பு, ஜினீவா, 1892[58]). அந்தப் பகுதியில் சோஷலிஸத்தின் வளர்ச்சி பற்றிய ஒரு வரலாற்றுக் கட்டுரை தரப்பட்டுள்ளது.

ருஷ்ய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய ஒரு கட்டுரை (ஜினீவாவில் வெளிவந்த சோத்ஸியல்-தெமொக்ராத் என்ற பத்திரிகையின் 1,2 இதழ்களில் ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டது);[60] குடியிருப்புப் பிரச்சினையைப் பற்றிய சில குறிப்பிடத்தக்க கட்டுரைகள்;[61] கடைசியாக, ருஷ்யாவின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி எழுதப்பட்ட இரண்டு சிறிய, ஆனால் மதிப்பு மிகுந்த கட்டுரைகள் (ருஷ்யாவைப் பற்றி ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் என்ற நூல், ருஷ்ய மொழியில் வேரா ஸஸூலிச் பெயர்த்தது, ஜினீவா, 1894).[62] மூலதனத்தைப் பற்றிய தமது விரிவான வேலையை முடிக்கு முன்னர் மார்க்ஸ் காலமானார். இருந்தாலும், நகல் குறிப்புகள் வடிவத்தில் அது ஏற்கெனவே எழுதி முடிக்கப்பட்டிருந்தது. தமது நண்பர் மறைந்த பிறகு மூலதனத்தின் இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளைத் தயாரித்து வெளியிடும் சிரமமிக்க வேலையை எங்கெல்ஸ் மேற்கொண்டார். அதன் இரண்டாம் தொகுதியை 1885ம் ஆண்டிலும், மூன்றும் தொகுதியை 1894ம் ஆண்டிலும் அவர் வெளியிட்டார் (அவரது மரணம் நான்காம் தொகுதியைத் தயாரிப்பதைத் தடுத்துவிட்டது).[63] இவ்விரு தொகுதிகள் விஷயத்தில் எங்கெல்ஸ் அபாரமாக உழைக்க வேண்டியிருந்தது. மூலதனத்தின் இரண்டாவது, மூன்றாவது தொகுதிகளை வெளியிட்டதன் மூலம் எங்கெல்ஸ் தமது நண்பராகிய மேதைக்கு மாண்புமிக்க நினைவுச் சின்னம் நிறுவினர்; அந்த நினைவுச் சின்னத்தில் தம்மையறியாமலேயே தமது பெயரையும் அழியாத வகையில் பொறித்துவிட்டார் என்று ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதி ஆட்லெர் குறிப்பிட்டது மிகவும் சரி. உண்மையிலே மூலதனத்தின் இவ்விரு தொகுதிகளும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருடைய பணியேயாகும். மனத்தையுருக்கும் நட்பைக் குறித்துப் பல உதாரணங்கள் காட்டும் பழங்கதைகள் உண்டு. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் தனது விஞ்ஞானத்தைப் படைத்தவர்கள் இரண்டு அறிஞர்கள், இரண்டு போராட்ட வீரர்கள், அவர்களிடையே நிலவிய உறவு முன்னேர்கள் மனிதநட்பு பற்றி எழுதியுள்ள நெஞ்சையள்ளும் கதைகளையெல்லாம் மிஞ்சக் கூடியதாயிருந்தது என்று சொல்லிக் கொள்ளலாம். எங்கெல்ஸ் எப்பொழுதுமே—மொத்தத்தில், நியாயமாகத்தான்—மார்க்ஸுக்கு

முதன்மை கொடுத்தார். பழைய நண்பர் ஒருவருக்கு எழுது கையில் ''மார்க்ஸ் வாழ்ந்திருந்த காலத்தில் நான் அவருக்குப் பக்கவாத்தியம் வாசித்துக் கொண்டிருந்தவன்தான்'' என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டார்.[64] மார்க்ஸ் உயிரோடிருக்கும் போது அவர்மீது எங்கெல்ஸ் வைத்திருந்த பாசத்துக்கும், மறைந்த மார்க்ஸின் நினைவு பற்றி அவர் வைத்திருந்த புனித மதிப்புக்கும் எல்லையே கிடையாது. இந்தக் கடினசித்த முள்ள போராட்ட வீரருக்கு, கட்டுப்பாடு மிகுந்த சிந்தனையாளருக்கு, ஆழ்ந்த அன்பு செலுத்தும் இதயம் இருந்தது.

1848-1849ம் ஆண்டுகளில் நடைபெற்ற இயக்கத்துக்குப் பிறகு நாடுகடத்தப்பட்ட காலத்தில் மார்க்ஸும் எங்கெல்ஸும் விஞ்ஞானத்தைப் பயில்வதோடு நின்றுவிடவில்லை. 1864ல் மார்க்ஸ் ''சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை'' நிறுவினார். அதைப் பத்தாண்டுக் காலத்துக்கு அவர் தலைமை வகித்து நடத்தினார். அதன் விவகாரங்களில் எங்கெல்ஸும் தீவிரமாகப் பங்கு கொண்டார். மார்க்ஸின் கருத்துப்படி அந்தச் சர்வதேச சங்கம் எல்லா நாட்டுப் பாட்டாளிகளையும் ஒன்றுபடுத்தியது; தொழிலாளர் இயக்கத்தை வளர்த்ததில் அது ஆற்றிய பணி பிரம்மாண்டமான முக்கியத்துவம் கொண்டது. 1870-80ம் ஆண்டுகளில் அந்தச் சங்கம் மூடப்பட்ட பின்னரும்கூட மார்க்ஸும் எங்கெல்ஸும் ஆற்றிய, ஒற்றுமை ஏற்படுத்தும் பணி முடிந்துவிடவில்லை. மாறாக, தொழிலாளர் இயக்கத்தின் அறிவுத் துறைத் தலைவர்கள் என்ற வகையிலே அவர்களின் முக்கியத்துவம், இயக்கம் இடையறாது எந்த அளவுக்கு வளர்ந்ததோ அந்த அளவுக்கு மேலும் மேலும் வளர்ந்தது. மார்க்ஸ் மறைந்த பிறகு எங்கெல்ஸ் தனியே நின்று ஐரோப்பிய சோஷலிஸ்டுகளின் ஆலோசகராகவும் தலைவராகவும் விளங்கினார். ஜெர்மன் அரசாங்கத்தின் அடக்குமுறை இருந்த போதிலும் வேகமாக இடையறாது மேன்மேலும் வலுவடைந்த ஜெர்மன் சோஷலிஸ்டுகளும், அதே போல் தமது முதல் நடவடிக்கைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து எடைபோட்டுத் தீரவேண்டியிருந்த ஸ்பெயின், ருமேனியா, ருஷ்யா போன்ற பிற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் அவரது ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் நாடினர். வயது முதிர்ந்த எங்கெல்ஸின் வளமான

அறிவு அனுபவக் களஞ்சியத்தை அவர்கள் எல்லோரும் பயன்படுத்தினர்.

மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருக்கும் ருஷ்ய மொழி தெரியும்; ருஷ்ய நூல்களைப் படித்தார்கள். இருவருமே ருஷ்ய விஷயத்தில் உற்சாகத்துடன் அக்கறை காட்டி வந்தார்கள், ருஷ்யப் புரட்சி இயக்கத்தை அனுதாபத்துடன் கவனித்து வந்தார்கள், ருஷ்யப் புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். சோஷலிஸ்டுகளாக ஆவதற்குமுன் அவ்விருவரும் ஜனநாயகவாதிகளாக இருந்தவர்கள். எனவே, அரசியல் கொடுங்கோன்மையின் மீது பகைமை கொள்ளும் ஜனநாயக உணர்ச்சி அவ்விருவரிடமும் மிகவும் பலமாக இருந்தது. இந்த நேரடியான அரசியல் உணர்ச்சியும் அரசியல் கொடுங்கோன்மைக்கும் பொருளாதார ஒடுக்குமுறைக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றிய ஆழ்ந்த தத்துவ ரீதியான அறிவும், அதோடு வாழ்க்கையில் அவர்கள் பெற்றிருந்த வளமிக்க அனுபவமும் சேர்ந்து மார்க்ஸையும் எங்கெல்ஸையும் குறிப்பாக அரசியல் வழியில் அசாதாரண நுண்ணுணர்வுடன் செயல்படுவோராக்கின. அதனுல்தான், மிகப் பலம் வாய்ந்த ஜாரிஸ்ட் அரசாங்கத்தை எதிர்த்து விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சில ருஷ்யப் புரட்சியாளர்கள் நடத்திய வீரமிக்க போராட்டம் இவ்விரு முதிர்ந்த அனுபவம் வாய்ந்த புரட்சியாளர்களின் இதயத்திலே அனுதாபமிக்க எதிரொலியைக் கிளப்பியது. மறு புறத்தில், கானல் நீர் போன்ற பொருளாதார அனுகூலங்களை உத்தேசித்து, ருஷ்ய சோஷலிஸ்டுகளின் மிக உடனடியான, முக்கியமான இலட்சியமாகிய அரசியல் சுதந்திரம் போராடிப் பெறுவது எனும் இலட்சியத்தைக் கைவிட்டு விலகிச் செல்லும் போக்கு அவர்களுக்குச் சந்தேகங்களை உண்டாக்கியது இயல்புதான்; அது சமுதாயப் புரட்சி என்ற மகத்தான இலட்சியத்துக்கு நேரடியாகத் துரோகம் புரிவதாகும் என்றுகூட அவர்கள் கருதினுர்கள். ''பாட்டாளி வர்க்கத்தின் விடுதலை பாட்டாளி வர்க்கத்தின் பணியாகவே இருக்க வேண்டும்''[65] என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் இடையருது போதித்து வந்தார்கள். மேலும் பாட்டாளி வர்க்கம் தனது பொருளாதார விடுதலைக்குப் போராட வேண்டுமென்றுல் தனக்கென்று சில அரசியல் உரிமைகளைப் பெற வேண்டும். தவிரவும், ருஷ்யாவில்

ஏற்படும் அரசியல் புரட்சி மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்துக்கும் பிரம்மாண்டமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மார்க்ஸும் எங்கெல்ஸும் தெளிவாகக் கண்டார்கள். யதேச்சாதிகார ருஷ்யா ஐரோப்பியப் பிற்போக்குக்கெல்லாம் எப்போதும் ஓர் அரணாக இருந்து வந்தது. 1870ல் நடந்த போர் ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்குமிடையே நீண்ட காலத்துக்குப் பிணக்கு ஏற்படுத்திவிட்டது. அந்தப் போரின் விளைவாக ருஷ்யா ஒரு மிக அனுகூலமான சர்வதேச நிலையை வகித்து வந்தது. அதனால் பிற்போக்கான சக்தி என்ற வகையில் யதேச்சாதிகார ருஷ்யாவின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கவே செய்தது. சுதந்திரமான ருஷ்யா தான், போலிஷ் மக்களையும், பின்னிஷ் மக்களையும், ஜெர்மானியர்களையும், ஆர்மீனியர்களையும், பிற சிறிய இனத்தவர்களையும் ஒடுக்க வேண்டிய தேவையில்லாத ருஷ்யாதான், அல்லது பிரான்ஸையும் ஜெர்மனியையும் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ளும்படி எப்பொழுதும் தூண்டிக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லாத ருஷ்யாதான், நவீன ஐரோப்பா தன்னை போர்ச் சுமைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதைச் சாத்தியமாக்கும், ஐரோப்பாவிலுள்ள எல்லாப் பிற்போக்கு அம்சங்களையும் பலவீனப்படுத்தும், ஐரோப்பியத் தொழிலாளி வர்க்கத்தின் சக்தியை அதிகரிக்கச் செய்யும். எனவேதான், மேற்கத்திய தொழிலாளர் இயக்கத்தின் வெற்றிக்காக ருஷ்யாவில் அரசியல் சுதந்திரம் நிலைநாட்டப்படுவதை எங்கெல்ஸ் ஆர்வத்துடன் விரும்பினார். அவரது மறைவால் ருஷ்யப் புரட்சியாளர்கள் தமது மிகச் சிறந்த நண்பரை இழந்துவிட்டனர்.

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் போராட்ட வீரரும் ஆசானும் ஆகிய ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸின் நினைவு என்றென்றும் பசுமையாய் நிலைத்திடுக!

1895 இலையுதிர்காலத்தில்
எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 2
பக்கங்கள் 5-14

மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்[66]

மார்க்ஸின் போதனை, நாகரிக உலகெங்கிலும் அதிகாரத் தரப்பினதும், மிதவாதிகளதும் ஆகிய இரு வகையான முதலாளித்துவ விஞ்ஞானம் அனைத்திடமிருந்தும் அளவற்ற பகைமையையும் வெறுப்பையும் கிளப்பிவிடுகிறது. மார்க்ஸியம் ஒரு வகையான ''நச்சுத்தன்மை கொண்ட குறுங்குழுவாதம்'' என்று அது கருதுகின்றது. அதனிடமிருந்து வேறு எந்த விதமான போக்கையும் எதிர்பார்க்க முடியாதுதான். ஏனெனில், வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில் ''ஒருசார்பற்ற'' சமுதாய விஞ்ஞானம் எதுவும் இருக்க முடியாது. அதிகாரத் தரப்பைச் சேர்ந்த விஞ்ஞானம் அனைத்தும், மிதவாதிகளது விஞ்ஞானம் அனைத்தும் ஏதாவதொரு விதத்தில் கூலி அடிமை முறையை ஆதரிக்கிறது. மார்க்ஸியமோ கூலி அடிமை முறையை ஈவிரக்கமின்றி எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்துள்ளது. மூலதனத்துக்குக் கிடைக்கும் இலாபத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தலாமா என்ற பிரச்சினையில் முதலாளிகள் ஒருசார்பற்றவர்களாய் இருப்பார்களென எதிர்பார்ப்பது எப்படி அசட்டுத் தனமாகுமோ, ஏமாளித் தனமாகுமோ, அப்படித்தான் கூலி அடிமை முறைச் சமுதாயத்தில் விஞ்ஞானம் ஒருசார்பற்றதாய் இருக்குமென எதிர்பார்ப்பதும் அசட்டுத்தனமாகும், ஏமாளித்தனமாகும்.

இது மட்டுமல்ல. தத்துவஞானத்தின் வரலாறும் சரி, சமுதாய விஞ்ஞானத்தின் வரலாறும் சரி, மார்க்ஸியத்தில் ''குறுங்குழுவாதம்'' போன்றதெதுவும் கிடையாது என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன. அதாவது, அது ஒரு இறுகிப்போன வரட்டுத் தத்துவமல்ல; உலக நாகரிக

வளர்ச்சியின் ராஜபாட்டையின் வழியே வராமல் அதனின்று விலகி வேறொரு வழியே முளைத்த போதனை அல்ல. மாறாக, மனிதகுலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கெனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்ஸ் விடைகள் தந்தார் என்பதில்தான் குறிப்பாக அவருடைய மேதாவிலாசம் அடங்கியுள்ளது. தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிஸம் ஆகியவற்றின் தலைசிறந்த பிரதிநிதிகளுடைய போதனைகளின் நேரடியான, உடனடியான தொடர்ச்சியாகத் தான் மார்க்ஸின் போதனை எழுந்தது.

மார்க்ஸின் போதனை மெய்யானது, பிழையற்றது; அதனால்தான் அது எல்லாம் வல்ல தன்மை பெற்றிருக்கிறது. அது முழுமையான, உள்ளிணக்கம் கொண்ட போதனை. ஒரு ஒன்றிணைந்த உலகப் பார்வையை அது மக்களுக்கு அளிக்கிறது. எந்த வடிவத்திலுமமைந்த மூடநம்பிக்கைகளோ, பிற்போக்கோ, முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு ஆதரவோ இந்த உலகப் பார்வையுடன் ஒத்துவர முடியாது. ஜெர்மானியத் தத்துவஞானம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிஸம் என்ற வடிவத்தில் 19ம் நூற்றாண்டில் மனிதகுலம் படைத்துத் தந்த தலைசிறந்த படைப்புகளின் உரிமை பெற்ற வாரிசுதான் மார்க்ஸியம்.

இவை மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களாகும், மூன்று உள்ளடக்கக் கூறுகளாகும். இவற்றைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

1

பொருள்முதல்வாதம்தான் மார்க்ஸியத்தின் தத்துவ ஞானமாகும். பொருள்முதல்வாதம் ஒன்றுதான் முரணற்ற தத்துவஞானமாகும், இயற்கை விஞ்ஞானங்களுடைய எல்லாப் போதனைகளுக்கும் ஏற்புடையதாகும், மூட நம்பிக்கைகளுக்கும் பகட்டுக்கும் பசப்புக்கும் இன்ன பிறவற்றுக்கும் தீராப் பகையாகும் என்பது ஐரோப்பாவின் நவீனகால வரலாறு பூராவிலும், இன்னும் முக்கியமாய் மத்திய காலக் குப்பைக் கூளங்களை எதிர்த்தும் நிறுவனங்களிலும் கருத்துக்களிலும் ஆட்சி புரிந்த பிரபுத்துவத்தை எதிர்த்தும் நடைபெற்ற முடிவான கடும் போரின் களனயிருந்த பிரெஞ்சு நாட்டில் 18ம்

நூற்றுண்டின் இறுதியிலும் தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டது. ஆகவே பொருள்முதல்வாதத்தை ''மறுப்பதற்கும்,'' பல வீனப்படுத்துவதற்கும், பழிப்பதற்கும், ஜனநாயகத்தின் எதிரிகள் முழுமூச்சுடன் முயன்று பார்த்தார்கள். தத்துவ ஞானக் கருத்துமுதல்வாதத்தின் பல வகை வடிவங்களை இவர்கள் ஆதரித்தனர். இவ்வகைக் கருத்துமுதல்வாதம் ஏதாவது ஒரு வழியில் எப்பொழுதும் மதத்தைப் பாது காக்கவோ ஆதரிக்கவோ தான் செய்கிறது.

மார்க்ஸும் எங்கெல்ஸும் தத்துவஞானப் பொருள் முதல்வாதத்தை மிகுந்த மனத்திண்மையோடு ஆதரித்துப் பாதுகாத்தனர். இந்த அடிப்படையிலிருந்து விலகிச் செல் லும் ஒவ்வொரு திரிபும் மிகவும் தவறுயிருப்பதை அவர்கள் அடிக்கடி விளக்கி வந்தார்கள். எங்கெல்ஸ் எழுதிய லுத்விக் ஃபாயர்பாக், டூரிங்குக்கு மறுப்பு என்கிற நூல்களில் அவர்களுடைய கருத்துக்கள் மிகத் தெளிவாகவும் முழுமை யாகவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. கம்யூனிஸ்டு அறிக்கை என்கிற நூலைப் போலவே இவ்விரண்டு நூல்களும் வர்க்க உணர்வு பெற்ற ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவசிய மான கைப் புத்தகங்களாகும்.

18ம் நூற்றுண்டின் பொருள்முதல்வாதத்துடன் மார்க்ஸ் நின்றுவிடவில்லை. அவர் தத்துவஞானத்தை முன்னேறச் செய் தார். மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானம் திரட்டிய செல்வங்களைக் கொண்டு, குறிப்பாக ஹெகலின் தத்துவ முறை—இதிலிருந்தே ஃபாயர்பாகின் பொருள்முதல்வாதம் தோன்றியது —திரட்டிய செல்வங்களைக் கொண்டு, அவர் பொருள்முதல்வாதத்தை வளப்படுத்திஞர். இந்தச் செல் வங்களில் பிரதானமாக விளங்குவது இயக்கவியல்தான். இயக்கவியல் என்பது மிகமிக முழுமையான, ஆழமான, ஒரு தலைப்பட்சமில்லாத வடிவத்தில் வளர்ச்சியைப் பற்றி விளக்கி விவரிக்கும் போதனையாகும்; நிரந்தரமாக வளர்ச்சியுற்ற வண்ணமுள்ள பருப்பொருளை நமக்குப் பிரதிபலித்துக் காட் டும் மனித அறிவின் சார்புநிலையை வலியுறுத்தும் போதனை யாகும். ரேடியம், மின்னணுக்கள், தனிமங்களில் ஒன்று மற் றென்ருக மாறுவது—இவைபோன்ற இயற்கை விஞ்ஞானத் தின் மிக நவீன கண்டுபிடிப்புகளெல்லாம் மார்க்ஸின் இயக்க வியல் பொருள்முதல்வாதமே சரியானது என்று வியக்கத்தக்க

முறையில் உறுதிப்படுத்தியுள்ளன. அழுகிப்போன பழைய கருத்துமுதல்வாதத்தைப் பற்றிய ''புதிய'' மறுவியாக்கியானங்களைக் கொண்டு முதலாளித்துவத் தத்துவஞானிகள் தந்த போதனைகளால் இதைத் தடுக்க முடியவில்லை.

தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை மார்க்ஸ் ஆழமாக்கி வளர்த்து நிறைவு பெறச் செய்தார். இயற்கை பற்றிய அதன் ஞானத்தை மனித சமுதாயம் பற்றிய அறிவாகவும் விரிவாக்கினார். மார்க்ஸின் வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம் விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. முன்பெல்லாம் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்துக்களில் குழப்பமும் தான்தோன்றித்தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய், வியப்பூட்டும் அளவுக்கு ஒருமித்த முழுமையும் உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்துவிட்டது. வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதம் என்ற இந்தத் தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட உயர்தரமான இன்னொரு சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை—உதாரணமாக, நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பு முறையிலிருந்து முதலாளித்துவச் சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை—அது காட்டுகிறது.

இயற்கை என்பது—அதாவது வளர்ச்சி பெற்றுக்கொண்டேயிருக்கும் பருப்பொருள் என்பது—மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது. அதே போலத்தான் மனிதனின் சமுதாய அறிவு எனப்படுவதும் (அதாவது தத்துவஞானம், மதம், அரசியல் முதலானவை சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும்) சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கிறது. அரசியல் நிறுவனங்கள் என்பவையெல்லாம் பொருளாதார அடித்தளத்தின் மீது நிறுவப்பட்ட மேல்கட்டுமானமேயாகும். உதாரணமாக, நவீன ஐரோப்பிய அரசுகளின் பல்வேறு அரசியல் வடிவங்கள் எல்லாம் பாட்டாளி வர்க்கத்தின்மேல் முதலாளி வர்க்கம் செலுத்தி வரும் ஆதிக்கத்தைப்

பலப்படுத்த எப்படி பயன்படுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்.

மார்க்ஸின் தத்துவஞானம் முழுநிறைவு பெற்ற தத்துவ ஞானப் பொருள்முதல்வாதமாகும். இந்தப் பொருள்முதல் வாதம் மனிதகுலத்திற்கு, குறிப்பாகத் தொழிலாளி வர்க் கத்துக்கு, மகத்தான அறிவுச் சாதனங்களை வழங்கியிருக் கிறது.

2

பொருளாதார அமைப்பு முறை என்ற அடித்தளத்தின் மீதுதான் அரசியல் மேல்கட்டுமானம் கட்டப்படுகிறது என்று தெளிந்து ஏற்றுக் கொண்டவுடன், மார்க்ஸ் தமது பெரும்பாலான கவனத்தை இந்தப் பொருளாதார அமைப்பு முறையின்மீது செலுத்தினார். மார்க்ஸின் பிரதான நூலாகிய மூலதனம் நவீன காலத்திய—அதாவது, முதலாளித்துவ—சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையை ஆராயும் நூலாகும்.

மார்க்ஸுக்கு முற்பட்ட மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரம் முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலும் அதிக வளர்ச்சி பெற்றிருந்த இங்கிலாந்திலே உருவாயிற்று. ஆதாம் ஸ்மித்தும் டேவிட் ரிக்கார்டோவும் பொருளாதார அமைப்பு முறையை ஆராய்ந்து மதிப்பு பற்றிய உழைப்புத் தத்துவத்துக்கு அஸ்திவாரமிட்டார்கள். அவர்களுடைய பணியை மார்க்ஸ் தொடர்ந்து நடத்தினார். இந்தத் தத்து வத்தை அவர் திட்டமாக நிரூபித்து முரணற்ற வகையில் விவரித்தார். ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்வதில் செலவழிக்கப்பட்ட சமுதாய ரீதியில் அவசியமான உழைப்பு நேரத்தின் அளவைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது என்று அவர் விளக்கிக் காட்டினார்.

முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள், பொருட்கள் இடையிலான (ஒரு பண்டம் மற்றொன்றுடன் பரிமாற்றம் செய்து கொள்ளப்படும்) உறவு என்பதாக விவரித்ததில் மனிதர்கள் இடையிலான உறவு நிலவுவதை மார்க்ஸ் புலப் படுத்தினார். பண்டப் பரிமாற்றம் தனித்தனியான உற்பத்தி யாளர்களிடையே சந்தை மூலமாக ஏற்படும் பிணைப்பைக்

காட்டுகிறது. பணம் என்பது இந்தப் பிணைப்பு தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் பிரிக்க முடியாதபடி முழுமொத்தமாக இணைத்து மேலும் மேலும் நெருக்கமாவதைக் குறிக்கிறது. மூலதனம் என்பது இந்தப் பிணைப்பு மேலும் வளர்ச்சியுறுவதைக் குறிக்கிறது; அதாவது மனிதனின் உழைப்புச் சக்தியே ஒரு பரிமாற்றப் பண்டமாகிவிடுவதைக் குறிக்கிறது. கூலி பெறும் உழைப்பாளி நிலம், ஆலைகள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றின் சொந்தக்காரர்களிடம் தனது உழைப்புச் சக்தியை விற்கிறான். தொழிலாளி வேலை நாளின் ஒரு பகுதியைத் தன்னையும் தனது குடும்பத்தையும் பராமரித்துக் கொள்வதற்கு வேண்டிய செலவுக்காக(அதாவது, கூலிக்காக) உழைப்பதில் கழிக்கிறான். மறு பகுதியில் ஊதியமின்றியே உழைத்து முதலாளிக்கு மிகுதி மதிப்பை உண்டாக்கித் தருகிறான். இந்த மிகுதி மதிப்புத்தான் இலாபத்துக்குத் தோற்றுவாய், அதுதான் முதலாளி வர்க்கத்தின் செல்வத்துக்குத் தோற்றுவாய்.

மிகுதி மதிப்பைப் பற்றிய போதனைதான் மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவத்துக்கு மூலக்கல் ஆகும்.

தொழிலாளியின் உழைப்பால் உண்டாக்கப்பட்ட மூலதனம் சிறு உற்பத்தியாளர்களை அழித்து வேலையில்லாதோர் பட்டாளத்தைப் படைப்பதின் மூலமாகத் தொழிலாளியை நெருக்குகிறது. தொழில் துறையில், பெருமளவான உற்பத்தி பெறுகிற வெற்றி பளிச்சென்று தெரிகிறது. ஆனால், இதே நிகழ்ச்சியை விவசாயத் துறையிலும் நாம் பார்க்க முடியும். பெருமளவான முதலாளித்துவ விவசாயத்தின் உயர்நிலை அதிகமாகிக் கொண்டே போகிறது; விவசாயத்தில் இயந்திரங்களை உபயோகிப்பதும் அதிகரிக்கிறது; பண மூலதனத்தின் சுருக்குக் கயிற்றில் விவசாயப் பொருளாதாரம் சிக்கிக் கொள்கிறது; அது தனது பிற்பட்ட தொழில்நுணுக்கத்தின் சுமையால் அழுத்தப்பட்டு அழிகிறது. விவசாயத் துறையில் சிற்றளவான உற்பத்தியின் சீர்குலைவுக்குரிய வடிவங்கள் வேறாயிருப்பினும், இச்சீர்குலைவு ஏற்படுவது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மூலதனம் சிற்றளவான உற்பத்தியை ஒழிப்பதன் மூலம், உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கும் பெரிய முதலாளிகளின் கூட்டுகளுக்கு ஏகபோக நிலை படைப்பதற்

கும் வகை செய்கிறது. உற்பத்தியே மேலும் மேலும் சமுதாயத் தன்மை பெறுகிறது: ஒரு முறையான பொருளாதார ஒழுங்கமைப்பிலே இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான தொழிலாளர் பிணைக்கப்பட்டு விடுகின்றனர். ஆனால் அந்தக் கூட்டு உழைப்பின் உற்பத்திப் பொருளை விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில முதலாளிகள் உடைமையாக்கிக் கொள்கிறார்கள். உற்பத்தியில் அராஜகம் வளர்கிறது; அதேபோல் நெருக்கடிகளும் வளர்கின்றன; சந்தைகளைப் பிடித்துக் கொள்வதற்கான ஆவேச வேட்டையும் அதிகமாகிறது; திரளான மக்களின் வாழ்க்கைக் காப்புறுதியின்மையும் அதிகரிக்கிறது.

தொழிலாளர்கள் மூலதனத்தை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையை முதலாளித்துவ முறை தீவிரப்படுத்தும் அதே சமயத்தில் ஒன்றுதிரண்ட உழைப்பு எனும் மாபெரும் பலத்தையும் பிறப்பித்துவிடுகிறது.

பரிமாற்றப் பண்டப் பொருளாதாரத்தின் ஆரம்ப வித்துக்களிலிருந்து, சாதாரணப் பரிமாற்றத்திலிருந்து தொடங்கி, மிக உயர்ந்த வடிவங்கள் வரையில், பெருமளவான உற்பத்தி வரையில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை மார்க்ஸ் ஆராய்ந்து காட்டினார்.

பழையவையும் புதியவையும் அடங்கலான எல்லா முதலாளித்துவ நாடுகளின் அனுபவமும் இந்த மார்க்ஸியத் தத்துவம் பிழையற்றதாகும் என்பதை ஆண்டுதோறும் மேலும் மேலும் கூடுதலான தொழிலாளர்களுக்குத் தெளிவாக நிரூபித்துக் காட்டி வருகிறது.

உலகெங்கும் முதலாளித்துவம் வெற்றி பெற்றுவிட்டது. ஆனால் இந்த வெற்றி மூலதனத்தின்மீது உழைப்பு காணப் போகும் வெற்றியின் முன்னறிவிப்பே ஆகும்.

3

நிலப்பிரபுத்துவ அமைப்பு முறை வீழ்த்தப்பட்டு ‘‘சுதந்திரமான’’ முதலாளித்துவச் சமுதாயம் இப்பூவுலகில் தோன்றிய பொழுது இந்தச் சுதந்திரம் உழைப்பாளிகளை ஒடுக்கவும் சுரண்டவும் அமைந்த புதியதோர் அமைப்பு முறையையே குறித்தது என்பது உடனே தெளிவாக விளங்

கலாயிற்று. இந்த ஒடுக்குமுறையின் பிரதிபலிப்பாகவும் இதற்கான கண்டனமாகவும் பல்வேறு சோஷலிஸப் போதனை கள் உடனே தலைதூக்கத் தொடங்கின. ஆனால் ஆரம்ப காலத்திய சோஷலிஸம் கற்பனா சோஷலிஸமாகத்தான் இருந் தது. அது முதலாளித்துவச் சமுதாயத்தை விமர்சித்தது, கண்டித்தது, சபித்தது; அந்தச் சமுதாயத்தை ஒழிக்க வேண்டும் என்று கனாக் கண்டது; அதை விட மேலான ஓர் அமைப்பு முறையைப் பற்றி ஆகாயக் கோட்டை கட்டி வந்தது; சுரண்டுவது ஒழுக்கக்கேடான செயல் என்று பணக் காரர்களுக்கு உணர்த்த முயற்சித்தது.

ஆனால் கற்பனா சோஷலிஸத்தினால் விடுதலைக்கான மெய் யான வழியைக் காட்ட முடியவில்லை. முதலாளித்துவத்தில் நிலவும் கூலி அடிமை முறையின் சாராம்சத்தை அதனால் விளக்க முடியவில்லை. முதலாளித்துவ முறையின் வளர்ச்சி பற்றிய விதிகளை அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு புதிய சமுதாயத்தின் படைப்பாளியாக அமைய வல்ல சமுதாயச் சக்தியை அதனால் சுட்டிக் காட்டவும் முடிய வில்லை.

இதற்கிடையில், நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியையும் பண்ணை அடிமை முறையின் வீழ்ச்சியையும் தொடர்ந்து ஐரோப்பா முழுவதிலும், குறிப்பாக பிரான்ஸில், ஏற்பட்ட புயல் போன்ற புரட்சிகள், வர்க்கங்களின் போராட்டம்தான் எல்லா வளர்ச்சிக்கும் ஆதாரமாயும் உந்து விசையாகவும் உள்ளது என்பதை மேலும் மேலும் தெளிவாக வெளிப் படுத்தின.

நிலப்பிரபுத்துவ வர்க்கத்துக்கெதிராய் அரசியல் சுதந் திர இலட்சியத்துக்குக் கிடைத்த எந்த ஒரு வெற்றியும் அவ்வர்க்கத்தின் மூர்க்கமான எதிர்ப்பில்லாமல் கிடைத்து விடவில்லை. முதலாளித்துவச் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களிடையே ஜீவமரணப் போராட்டம் இல்லாமல் எந்த முதலாளித்துவ நாடும் ஓரளவு சுதந்திரமான, ஜனநாயக அடிப்படையில் வளர்ச்சியுற்றுவிடவில்லை.

வேறு எவருக்கும் முன்பாக மார்க்ஸுக்குத்தான் உலக வரலாறு போதிக்கும் முடிவை இதிலிருந்து கண்டறியவும், அந்த முடிவை முரணின்றிச் செயல்படுத்தவும் முடிந்தது. இதில்தான் அவருடைய மேதாவிலாசம் இருக்கிறது.

வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய போதனைதான் அந்த முடிபாகும்.

நீதி, மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லா விதச் சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும் வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவதொரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டு கொள்ள மக்கள் தெரிந்து கொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள். பழைய ஏற்பாடு ஒவ்வொன்றும் எவ்வளவுதான் அநாகரிகமானதாகவும் அழுகிப்போனதாகவும் தோன்றிய போதிலும் ஏதாவது ஓர் ஆளும் வர்க்கத்தின் சக்திகளைக் கொண்டு அது நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத்தங்கள், மேம்பாடுகள் ஆகியவற்றின் ஆதரவாளர்கள் இதை உணராத வரையில் பழைய அமைப்பு முறையின் பாதுகாவலர்கள் அவர்களை என்றென்றும் முட்டாள்களாக்கிக் கொண்டேயிருப்பார்கள். இந்த வர்க்கங்களின் எதிர்ப்பைத் தகர்த்து ஒழிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்ன? பழைமையைத் துடைத்தெறியவும் புதுமையைப் படைக்கவும் திறன் பெற்றவையும் சமுதாயத்தில் தங்களுக்குள்ள நிலையின் காரணமாக அப்படிப் படைத்துத் தீரவேண்டிய கட்டாயத்திலிருக்கிறவையுமான சக்திகளை நம்மைச் சூழ்ந்துள்ள இதே சமுதாயத்திற்குள்ளேயே நாம் கண்டுபிடித்து, அந்தச் சக்திகளுக்கு அறிவொளியூட்டிப் போராட்டத்திற்கு ஒழுங்கமைத்துத் திரட்ட வேண்டும். இது ஒன்றேதான் வழி.

மார்க்ஸின் தத்துவஞானப் பொருள்முதல்வாதம் ஒன்றுதான் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களெல்லாம் அதுவரை உழன்று கொண்டிருந்த ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்து வெளியேறும் வழியைப் பாட்டாளி வர்க்கத்திற்குக் காட்டியிருக்கிறது. மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவம் ஒன்றுதான் பொதுவான முதலாளித்துவ அமைப்பு முறையில் பாட்டாளி வர்க்கத்தின் உண்மை நிலையை விளக்கியுள்ளது.

அமெரிக்காவிலிருந்து ஜப்பான் வரை, ஸ்வீடனிலிருந்து தென்னாப்பிரிக்கா வரை, உலகமெங்கும் பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையான நிறுவனங்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. தனது வர்க்கப் போராட்டத்தை நடத்திச் செல்

வதன் வாயிலாகப் பாட்டாளி வர்க்கம் அறிவொளியும் கல்வியும் பெற்று வருகிறது; முதலாளித்துவச் சமுதாயத்திற்குரிய சார்புக் கருத்துகளினின்று தன்னை விடுவித்துக் கொண்டு வருகிறது; தன் அணிகளை நெருக்கமாகத் திரட்டிச் சேர்த்து வருகிறது; தனது வெற்றிகளின் வீச்சை அளந்தறியக் கற்றுக் கொண்டு வருகிறது; தன் சக்திகளை எஃகு போல் திடப்படுத்தி வருகிறது; தடை செய்ய முடியாதபடி வளர்ந்து வருகிறது.

1913 மார்ச்சில்
வெளி வந்தது

நூல் திரட்டு,
தொகுதி 23,
பக்கங்கள் 40-48

வடிவகணித வெளிப்படை உண்மைகள் மனித நலன்களைப் பாதிக்குமாயின் அவற்றை மறுக்க நிச்சயம் முயற்சி செய்வார்களெனக் கூறும் பிரபல முதுமொழி ஒன்று உண்டு. இறையியலின் பழங் காலத் தப்பெண்ணங்களுக்கு முரணான இயற்கை-வரலாற்றுத் தத்துவங்ளுக்கு வெறித்தனமான எதிர்ப்பு காட்டப்பட்டது, இன்னமும் காட்டப்பட்டு வருகிறது. ஆகவே மார்க்ஸியத் தத்துவம்—தற்காலச் சமுதாயத்தின் மிகவும் முன்னேறிய வர்க்கத்துக்கு அறிவொளி ஊட்டி அதை ஒழுங்கமைக்க நேரடியாய் உதவுவதும், இந்த வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளைச் சுட்டிக்காட்டுவதும், தற்போதுள்ள அமைப்பு (பொருளாதார வளர்ச்சி காரணமாய்) தவிர்க்க முடியாதபடி வீழ்த்தப்பட்டு அதனிடத்தில் ஒரு புதிய அமைப்பு தோன்றுமென்பதை நிரூபிப்பதுமான மார்க்ஸியத் தத்துவம்—அதன் வாழ்வு முழுதும் போராடியே ஒவ்வொரு அடியாய் முன்னேற வேண்டியிருந்துள்ளது என்பதில் வியப்பு ஏதுமில்லை.

முதலாளித்துவ விஞ்ஞானமும் தத்துவஞானமும் பற்றி கூறத் தேவையில்லை. சொத்துடைத்த வர்க்கங்களின் வளரும் தலைமுறையை மழுங்கடிக்கவும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களுக்கு எதிராய் அதைப் ''பயிற்றுவிக்கவும்'' அதிகார பூர்வமான பேராசிரியர்களால் அதிகாரவர்க்க முறையிலே இவை போதிக்கப்படுகிறவை. இந்த விஞ்ஞானம் மார்க்ஸியம் என்பதாய் ஒன்று இருப்பதைக் கேட்பதற்குக்கூட மறுக்கிறது; மார்க்ஸியம் ஏற்கனவே பொய்யென நிரூபிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டுவிட்டதெனக் கூறுகிறது. சோஷலிசத்தை மறுத்துப் பிழைப்பு தேடிக் கொள்

ளும் இளம் விஞ்ஞானிகளும், காலாவதியாகிவிட்ட எல்லா வித ''அமைப்புகளின்'' மரபுகளையும் பாதுகாத்து நிற்கும் தள்ளாத கிழவர்களும் ஒருங்கே துடித்தெழுந்து மார்க்ஸைத் தாக்குகின்றனர். மார்க்ஸியத்தின் முன்னேற்றமானது, தொழிலாளி வர்க்கத்தினரிடையே அதன் கருத்துக்கள் பரவி வேரூன்றி உறுதி பெறுவதானது, மார்க்ஸியத்தின் மீதான இந்த முதலாளித்துவத் தாக்குதல்களின் வேகத்தையும் கடுமையையும் தவிர்க்க முடியாதபடி அதிகரிக்கச் செய்கிறது. அதிகாரபூர்வமான விஞ்ஞானத்தால் ''அழித்தொழிக்கப் படும்'' ஒவ்வொரு தரமும் மார்க்ஸியம் மேலும் மேலும் வலுவும் உறுதியும் உயிர்துடிப்பும் பெற்று ஓங்குகிறது.

தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் தொடர்பு கொண்டு பிரதானமாய்ப் பாட்டாளி வர்க்கத்திடம் நிலவும் தத்துவங்களிடையேகூட மார்க்ஸியம் தனது நிலையை எடுத்த யெடுப்பிலே உறுதியாய் நாட்டிக் கொண்டுவிடவில்லை. அதன் வாழ்வின் முதல் அரைநூற்றுண்டில் (1840ஆம் ஆண்டுகளி லிருந்து தொடங்கி) மார்க்ஸியம் அடிப்படையிலேயே தனக்கு விரோதமான தத்துவங்களுக்கு எதிராய்ப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. நாற்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் மார்க்ஸூம் எங்கெல்ஸூம் தத்துவஞானம் பாற்பட்ட கருத்து முதல்வாதக் கண்ணேட்டத்தினராய் இருந்த தீவிர இளம் ஹெகல்வாதிகளுடன் கணக்குத் தீர்த்துக்கொண்டனர். நாற் பதாம் ஆண்டுகளின் முடிவில் பொருளாதாரத் தத்துவத் துறையில் புரூதோனியத்தை[67] எதிர்த்துப் போராட்டம் ஆரம்பமாயிற்று. கொந்தளிப்பு மிக்க 1848ல் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட கட்சிகளையும் தத்துவங்களையும் பற்றிய விமர்சனத்தின் வாயிலாய் ஐம்பதாம் ஆண்டுகளில் இந்தப் போராட்டம் முடிவடையலாயிற்று. அறுபதாம் ஆண் டுகளில் போராட்டம் பொதுத் தத்துவத் துறையிலிருந்து நேரடியான தொழிலாளர் இயக்கத்துக்கு மேலும் நெருங் கிய ஒரு துறைக்கு மாற்றப்பட்டது; அகிலத்திலிருந்து பக் கூனியம்[68] வெளியேற்றப்பட்டது. எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சிறிது காலத்துக்குப் புரூதோன் ஆதரவாள ரான முல்பெர்கரும், எழுபதாம் ஆண்டுகளின் கடைப் பகுதியில் நேர்காட்சிவாதி டூரிங்கும் ஜெர்மனியில் முக்கிய மாயிருந்தனர். ஆனல் அப்பொழுதே பாட்டாளி வர்க்கத்திடம்

இருவருக்கும் மிகச் சொற்ப செல்வாக்கே இருந்தது. தொழிலாளர் இயக்கத்தில் ஏனைய எல்லா சித்தாந்தங்களின் மீதும் இதற்குள்ளாகவே மார்க்ஸியம் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி வெற்றி கண்டு வந்தது.

தொண்ணூறும் ஆண்டுகளுக்குள் இந்த வெற்றி பிரதானமாய் நிறைவு எய்திவிட்டது. புரூதோனிய மரபுகள் வேறு எங்கேயும்விட மிக அதிகக் காலத்துக்கு நிலைத்திருந்த லத்தினிய நாடுகளிலுங்கூட, தொழிலாளர் கட்சிகள் தமது வேலைத் திட்டங்களையும் போர்த்தந்திரங்களையும் நடைமுறையில் மார்க்ஸிய அடித்தளங்கள் மீதுதான் வகுத்துக் கொண்டன. தொழிலாளர் இயக்கத்தின் புத்துயிர் பெற்ற சர்வதேச நிறுவனம்—காலத்துக்குக் காலம் கூடிய சர்வதேசக் காங்கிரஸ்களின் வடிவில் அமைந்த இது—தொடக்கத்திலிருந்து அனேகமாய்ப் போராட்டமின்றியே மார்க்ஸியக் கருத்தோட்டத்தையே முக்கியமான எல்லாக் கூறுகளிலும் ஏற்றுக் கொண்டிருந்தது. இவ்விதம் மார்க்ஸியம் தனக்கு விரோதமான ஏறக்குறைய ஒருமித்ததாய் அமைந்த தத்துவங்கள் யாவற்றையும் வெளியேற்றியபின், அந்தத் தத்துவங்களில் அடங்கிய போக்குகள் பிற வழிகளில் தலைகாட்ட முற்பட்டன. போராட்டத்தின் வடிவங்களும் முகாந்திரங்களும் மாறினவேயன்றி போராட்டம் தொடர்ந்து நடைபெற்றே வந்தது. மார்க்ஸியத்தின் வாழ்வில் இரண்டாவது அரைநூற்றுண்டானது (தொண்ணூறும் ஆண்டுகளிலிருந்து) மார்க்ஸியத்துக்கு விரோதமாய் மார்க்ஸியத்தினுள்ளிருந்தே செயல்பட்ட ஒரு போக்கிற்கு எதிரான போராட்டத்துடன் தொடங்கிற்று.

ஒரு காலத்தில் சுத்தமான மார்க்ஸியவாதியாய் இருந்த பெர்ன்ஷ்டைன் பெயரை இப்போக்கு[69] தாங்கியுள்ளது. அவர் மிக்க ஆரவாரம் எழுப்பியவர்; மார்க்ஸுக்குத் திருத்தங்கள் செய்வதின், மார்க்ஸைத் திருத்துவதின், திருத்தல்வாதத்தின் மிக முனைப்பான வெளிப்பாடாய் இருந்தவர். ருஷ்யாவிலுங்கூட, பொருளாதாரத்தில் நாட்டின் பிற்பட்ட நிலை காரணமாகவும், பண்ணையடிமை முறையின் மீதமிச்சங்களின் சுமையால் ஒடுக்கப்பட்ட விவசாயிகள் மக்கள்தொகையில் மிகப் பெரும்பான்மையோராய் இருப்பதன் காரணமாகவும் மார்க்ஸியமல்லாத சோஷலிசம் இயல்பாகவே

வேறெங்கேயும்விட மிக நெடுங் காலத்துக்கு நிலைத்திருந்துள்ள ருஷ்யாவிலுங்கூட, தெட்டத் தெளிவாய் நம் கண் முன்னே இது திருத்தல்வாதமாய் மாறிக் கொண்டிருக்கிறது. நிலப் பிரச்சினையிலும் (நிலம் அனைத்தையும் ஊர் ஆட்சிக்குட்படுத்தும் திட்டத்திலும்) மற்றும் வேலைத்திட்டம், போர்த்தந்திரம் பற்றிய பொதுப் பிரச்சினைகளிலும் நமது சமூக-நரோத்னிக்குகள் பழைய கருத்தமைப்பின்—இந்தப் பழைய கருத்தமைப்பு தனக்குரிய வழியில் ஒருமித்ததாய் அமைந்து அடிப்படையிலேயே மார்க்ஸியத்துக்குப் பகைமையானதாய் இருந்தது—அழுகிப்போன, காலாவதியாகிவிட்ட மீதமிச்சங்களுக்குப் பதிலாய் மார்க்ஸுக்குத் ''திருத்தங்கள்'' செய்வதை மேலும் மேலும் கைக்கொண்டு வருகின்றனர்.

மார்க்ஸியத்துக்கு முற்பட்ட சோஷலிஸம் நொறுக்கப்பட்டுவிட்டது. முன்பு போல தனது சொந்த அடிப்படையிலிருந்து போராடுவதற்குப் பதிலாய், இப்பொழுது அது மார்க்ஸியத்தின் பொது அடிப்படையிலே நின்று, திருத்தல்வாதமாய்ப் போராட்டத்தை நடத்தி வருகிறது. ஆகவே திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தைப் பரிசீலனை செய்வோம்.

தத்துவஞானத் துறையில் திருத்தல்வாதமானது முதலாளித்துவப் பேராசிரியர் பாணியைச் சேர்ந்த ''விஞ்ஞானத்தைப்'' பின்தொடர்ந்து சென்றது. பேராசிரியர்கள் ''கான்ட்டுக்குத் திரும்பிச் சென்றனர்''—திருத்தல்வாதம் உடனே நவீன-கான்ட் வழியினரின்[70] வாலைப் பற்றிக் கொண்டு பின்சென்றது. தத்துவஞானப் பொருள்முதல்வாதத்தை எதிர்த்துப் பாதிரிமார்கள் ஆயிரம் தரம் கூறி வந்திருக்கும் வழக்கமான வெற்றுரைகளைப் பேராசிரியர்கள் திருப்பிக் கூறினர்—உடனே திருத்தல்வாதிகளும் இளக்காரமாய் நகைத்துக் கொண்டு பொருள்முதல்வாதம் நெடுங் காலத்துக்கு முன்பே ''தவறென நிரூபிக்கப்பட்டுவிட்டதே'' என்று (கடைசியாய் வெளிவந்த Handbuchகிலிருந்து சொல்லுக்குச் சொல் அப்படியே திருப்பிக் கூறி) முணுமுணுத்தனர். பேராசிரியர்கள் ஹெகலைச் ''செத்த நாய்''[71] என ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதே போதில் ஹெகலினுடையதைவிட ஆயிரம் மடங்கு அற்பமான, படுமட்டமான கருத்துமுதல்வாதத்தை உபதேசம் செய்தபடியே மிக அலட்சியமாய் இயக்கவியலிடமிருந்து

முகத்தைத் திருப்பிக் கொண்டனர்—உடனே திருத்தல்வாதிகள் அவர்கள் பின்னால் ஓடி, ''தந்திரமான'' (மற்றும் புரட்சிகரமான) இயக்கவியலைக் கைவிட்டு அதற்குப் பதில் ''எளிய'' (மற்றும் அமைதியான) ''பரிணாமத்தைக்'' கைக்கொண்டு, விஞ்ஞானத்தைத் தத்துவஞான வழியில் கொச்சையாக்கி இழிவுபடுத்தும் சகதிக் குழியிலே சிக்கித்தவித்தனர். பேராசிரியர்கள் தமது கருத்துமுதல்வாத, ''விமர்சன'' அமைப்புகளை ஆதிக்கத்திலிருந்த மத்திய காலத்திய ''தத்துவஞானத்துக்கு'' (அதாவது இறையியலுக்கு) உகந்தவாறு சரிசெய்து கொள்வதின் வழியே ஆட்சியாளர்களிடமிருந்து தமது சம்பளங்களைச் சம்பாதித்துக் கொண்டனர்—திருத்தல்வாதிகளும் உடனே அவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டனர், தற்கால அரசு சம்பந்தமாய் அல்லாமல் முன்னேறிய வர்க்கத்தின் கட்சி சம்பந்தமாய் மதத்தை அவரவரது ''தனிப்பட்ட விவகாரமாக்க'' முயன்றனர்.

இவ்வாறு மார்க்ஸைத் திருத்தும் ''திருத்தங்களுக்கு'' வர்க்க முறையில் மெய்யான பொருள் என்னவென்பது கூறாமலே விளங்கும். சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தில் பிளெஹானவ் ஒருவர்தான் திருத்தல்வாதிகளுடைய படுமோசமான இந்த வெற்றுரைகளை முரணற்ற இயக்கவியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து விமர்சித்துக் கண்டித்த மார்க்ஸியவாதி என்பதை மட்டும் இங்குக் குறிப்பிடுவோம். பிளெஹானவின் போர்த்தந்திரச் சந்தர்ப்பவாதத்தை விமர்சிக்கிறதாய் வேஷம் போட்டுக் கொண்டு பழைய பிற்போக்குத் தத்துவஞானக் குப்பைக்கூளத்தைக் கள்ளத்தனமாய் உள்ளே கொண்டுவர மிகவும் தவறான முயற்சிகள் செய்யப்படும் இத்தருணத்தில் இதை மேலும் அழுத்தந்திருத்தமாய் வலியுறுத்துவது அவசியமாகும்.*

---

* பக்தானவ், பஸாரவ் மற்றும் சிலர் எழுதும் மார்க்ஸிய தத்துவஞானம் பற்றிய கட்டுரைகள் என்னும் புத்தகத்தைப் பார்க்கவும். இப்புத்தகத்தைப் பரிசீலிக்க இதுவல்ல இடம். நவீன-கான்ட்வழிப்பட்ட திருத்தல்வாதிகளைப்[72] பற்றி மேலே நான் கூறியுள்ளவை யாவும் இந்தப் ''புதிய'' நவீன-ஹியூம்-பெர்க்கிலி வழிப்பட்ட திருத்தல்வாதிகளுக்கும் சாராம்சத்தில் பொருந்தும் என்பதை வருங்காலத்தில் கூடிய சீக்கிரம் ஒரு கட்டுரைத் தொடரிலோ, தனிப் பிரசுரத்திலோ நிரூபிப்பேன் என்று மட்டும் தற்போது குறிப்பிடுகிறேன்.

அரசியல் பொருளாதாரத்துக்கு வருவோமாயின் இத் துறையில் திருத்தல்வாதிகளுடைய ''திருத்தங்கள்'' மேலும் அதிக விரிவாகவும் நுட்ப விவரங்கள் வழிப்பட்டனவாயும் இருந்ததை முதற்கண் குறிப்பிடுதல் வேண்டும். ''பொருளாதார வளர்ச்சி பற்றிய புதிய விவரங்களைக்'' கொண்டு பொது மக்களை வயப்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. பெருமளவான உற்பத்தி குவிவதும் அது சிற்றளவான உற்பத்தியை அகற்றிடுவதும் விவசாயத்தில் நடைபெறுவதே இல்லையென்றும், வர்த்தகத்திலும் தொழில் துறையிலும் மிகவும் மெதுவாகவே நடைபெறுகின்றன என்றும் கூறப்பட்டது. நெருக்கடிகள் இப்பொழுது அரிதாகியதோடு பலம்குறைந்து விட்டதாகவும், இவற்றை அறவே நீக்கிவிடும் ஆற்றலைக் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் மூலதனத்துக்கு அளித்திடுமென எதிர்பார்க்கலாம் என்றும் கூறப்பட்டது. வர்க்கப் பகைமைகளின் கடுமை மேலும் மேலும் குறைந்து தணிந்து வரும் போக்கின் காரணத்தால் முதலாளித்துவம் சந்திக்கச் சென்று கொண்டிருக்கும் ''அழிவுத் தத்துவம்'' ஆதரமற்றதாகுமெனக் கூறப்பட்டது. முடிவில், மார்க்ஸின் மதிப்புத் தத்துவத்தை பேம்-பாவர்க்கின் வழியில் திருத்துவதில் தவறு ஒன்றுமில்லை என்றும் கூறப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளில் திருத்தல்வாதிகளை எதிர்த்து நடத்திய போராட்டமானது, இதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு டூரிங்குடன் எங்கெல்ஸ் நடத்திய சர்ச்சையைப் போல் அதே அளவுக்குப் பயனுள்ள முறையில் சர்வதேச சோஷலிசத்தில் தத்துவார்த்தச் சிந்தனையை மறுமலர்ச்சி பெறச் செய்தது. உண்மைகள், புள்ளிவிவரங்கள் இவற்றின் துணை கொண்டு திருத்தல்வாதிகளுடைய வாதங்கள் பகுத்தாராயப்பட்டன. தற்காலச் சிற்றளவு உற்பத்தி குறித்து திருத்தல்வாதிகள் முனைந்துநின்று தமக்கு சாதகமான சித்திரம் தீட்டினர் என்று நிரூபிக்கப்பட்டது. தொழில் துறையில் மட்டுமின்றி, விவசாயத்திலுங்கூட சிற்றளவான உற்பத்தியைவிடப் பெருமளவான உற்பத்தியே தொழில்நுட்ப வழியிலும் வர்த்தக வழியிலும் மேலாயுள்ளது என்று மறுக்க முடியாத உண்மைகள் மெய்ப்பிக்கின்றன. ஆனல் பரிமாற்றப் பண்ட உற்பத்தி விவசாயத்தில் மிகக் குறைவான வளர்ச்சியே பெற்றிருக்கிறது; பொதுவாகப் பேசுமிடத்து, தற்காலப் புள்ளிவிவர

இயலாளர்களும் பொருளாதாரவாதிகளும் உலகப் பொருளாதாரத்தின் பரிமாற்ற நிகழ்ச்சிப் போக்கினுள் விவசாயம் மேலும் மேலும் இழுத்துக் கொள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டும் தனிக் கிளைகளையும் (சில நேரங்களில் செயற்பாடுகளையுங்கூட) தேர்வாய்வு செய்வதில் அதிகத் தேர்ச்சியுடையோராய் இல்லை. இடையருது உணவுத் தரத்தை மோசமாக்கியும் நிரந்தரப் பட்டினியாலும் வேலை நேரத்தை அதிகமாக்கியபடியும் கால்நடைகளின் தரத்தையும் பராமரிப்பையும் சீர்கேடுறச் செய்தும்தான் சிற்றளவான உற்பத்தியானது இயற்கைப் பொருளாதாரத்தின் இடிபாடுகள்மீது தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது—சுருக்கமாய்க் கூறினல், முதலாளித்துவப் பட்டறை உற்பத்தியை எதிர்த்துக் கைத்தொழில் உற்பத்தி தன்னை நிலைநிறுத்தி வந்த அதே வழிகளில்தான். விஞ்ஞானத்திலும் தொழில்நுணுக்கத்திலும் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும் முதலாளித்துவச் சமுதாயத்தில் சிற்றளவு உற்பத்தியின் அடித்தளங்களுக்குத் தவிர்க்க முடியாதவாறும் விடாப்பிடியாகவும் குழி பறிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் குழப்படியாகவும் சிக்கலாகவுமுள்ள இந்த நிகழ்ச்சிப்போக்கை அதன் எல்லா வடிவங்களிலும் ஆராய்வதும், முதலாளித்துவத்தில் சிறு உற்பத்தியாளர் அழியாது நிலைப்பது முடியாதென்பதையும் முதலாளித்துவத்தில் விவசாயியின் சிறு சாகுபடிக்கு கதிமோட்சமில்லை என்பதையும் பாட்டாளியின் கண்ணேட்டத்தை விவசாயி ஏற்பது அவசியம் என்பதையும் தெளிவுபடுத்திக் காட்டுவதும் சோஷலிஸ்டு அரசியல் பொருளாதாரத்தின் கடமையாகும். இந்தப் பிரச்சினையில் ஒருசார்பாகவும் முதலாளித்துவத்தின் முழு அமைப்புடன் தொடர்பின்றியும் தேர்ந்து கொண்ட விவரங்களின் அடிப்படையில் திருத்தல்வாதிகள் மேம்போக்கான பொது முடிவுகளுக்கு வந்து, விஞ்ஞானத்தின் கண்ணேட்டத்தில், தவறு செய்தனர். புரட்சிகரப் பாட்டாளியின் பார்வை நிலையை ஏற்குமாறு வற்புறுத்துவதற்குப் பதிலாய் சிறு உடைமையாளனின் போக்கை (அதாவது முதலாளி வர்க்கத்தினரின் போக்கை) ஏற்குமாறு அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ தவிர்க்க முடியாதபடி விவசாயியை அழைத்ததன் மூலம், அல்லது வற்புறுத்தியதன் மூலம், அரசியலின் கண்ணேட்டத்தில், தவறு செய்தனர்.

நெருக்கடிகளின் தத்துவம் குறித்தும் அழிவுத் தத்துவம் குறித்தும் திருத்தல்வாதத்தின் நிலை மேலும் படுமோசமானதாகவே இருந்தது. மிகச் சொற்பகாலத்துக்கு மட்டுமேதான், அதுவும் மிக மோசமான பார்வைக்கேடு உள்ளவர்தான் ஒரு சில ஆண்டுக் காலத் தொழில் துறை ஏற்ற நிலையாலும் செழிப்புக் காலத்தாலும் வயப்படுத்தப் பட்டு, மார்க்ஸின் தத்துவத்தினுடைய அடிப்படைகளைத் திருத்தியமைக்க வேண்டுமென நினைக்க முடியும். நெருக்கடிகள் கடந்த காலத்துக்குரியனவாகிவிடவில்லை, செழிப்பைப் பின்தொடர்ந்து நெருக்கடி வருகிறது என்பதை யதார்த்த நிலைமைகள் மிக விரைவாகவே திருத்தல்வாதிகளுக்குத் தெளிவுபடுத்தின. குறிப்பிட்ட நெருக்கடிகளின் வடிவங்களும் வரிசைமுறையும் சித்திரமும் மாறினவேயன்றி, நெருக்கடிகள் முதலாளித்துவ அமைப்பின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாய்த்தான் நிலைத்திருந்தன. கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் உற்பத்தியை ஒன்றுபடுத்திய அதே நேரத்தில், எல்லோருக்கும் கண்கூடாய்த் தெரியும்படியான முறையில் உற்பத்தியின் அராஜகத்தையும் பாட்டாளி வர்க்கத்தினுடைய வாழ்க்கைக் காப்புறுதியின்மையையும் மூலதனத்தின் ஒடுக்குமுறையையும் தீவிரப்படுத்தி, இதன் மூலம் வர்க்கப் பகைமைகளை முன்பின் கண்டிராத அளவுக்குக் கடுமையாக்கின. முதலாளித்துவமானது அழிவை நோக்கி—தனிப்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடிகளைக் குறிக்கும் பொருளிலும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின் முழு அழிவைக் குறிக்கும் பொருளிலும்—விரைந்தோடிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பாய் இதே புதிய பகாசுர டிரஸ்டுகளின் மூலம் மிக மிகத் தெளிவாகவும் மிகமிகப் பெரிய அளவிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியும் ஐரோப்பா பூராவிலும் பயங்கரமாய் அதிகரித்திருக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும்—எக்கணமும் மூண்டுவிடும் நிலையிலுள்ள தொழில் துறை நெருக்கடியைப் பற்றிக் கூறவே வேண்டாம், பல அறிகுறிகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன—திருத்தல்வாதிகளுடைய அண்மைக் காலத்திய "தத்துவங்கள்" திருத்தல்வாதிகளிடையேகூட பலரும் அடங்கலாய் எல்லோராலும் மறக்கப்பட்டுவிடும் நிலையை உண்டாக்கியுள்

ளன. ஆனுல் அறிவுஜீவிகளின் இந்த நிலையின்மை தொழிலாளி வர்க்கத்துக்கு அளித்திடும் படிப்பினைகள் ஒருபோதும் மறக்கப்படலாகாது.

மதிப்புத் தத்துவத்தைப் பொறுத்தமட்டில் பேம்-பாவர்க்கின் பாணியில் சிறிதும் தெளிவற்ற சூசகங்களையும் பெரு மூச்சுகளையும் தவிர்த்து, திருத்தல்வாதிகள் வேறு எதுவுமே அளித்திடவில்லை, ஆகவே விஞ்ஞான சிந்தனையின் வளர்ச்சியில் எவ்விதத் தடயமும் விட்டுச் செல்லவில்லை என்பதற்கு மேல் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

அரசியல் துறையில், திருத்தல்வாதமானது மார்க்ஸியத்தின் அடித்தளத்தை, அதாவது வர்க்கப் போராட்டத் தத்துவத்தைத் திருத்த மெய்யாகவே பெருமுயற்சி செய்தது. அரசியல் சுதந்திரமும் ஜனநாயகமும் அனைத்து மக்கள் வாக்குரிமையும் வர்க்கப் போராட்டத்துக்கான அடிநிலையை அகற்றிவிடுவதாகவும், தொழிலாளி வர்க்கத்துக்குத் தாய் நாடில்லை என்கிற கம்யூனிஸ்டு அறிக்கையின் பழம்பெரும் நிர்ணயிப்பைப் பொய்யாக்கிவிடுவதாகவும் கூறினுர்கள். ஏனெனில் ''பெரும்பான்மையோரின் சித்தம்'' ஆதிக்கம் செலுத்துவதால், ஜனநாயகத்தில் அரசை வர்க்க ஆதிக்கத்திற்கான உறுப்பாய் யாரும் கருதலாகாதென்றும், பிற்போக்காளர்களுக்கு எதிராய் முற்போக்கான, சமுதாய-சீர்திருத்தவாத முதலாளித்துவ வர்க்கத்தினருடன் கூட்டுகள் நிறுவிக் கொள்வதை நிராகரிக்கலாகாதென்றும் கூறினர்.

திருத்தல்வாதிகளுடைய இந்த வாதங்கள் ஓரளவு பாங்குற வகுக்கப்பெற்ற கருத்தமைப்பாகும் என்பதை, அதாவது பிரசித்தமான பழைய மிதவாத-முதலாளித்துவக்கருத்தமைப்பாகும் என்பதை மறுப்பதற்கில்லை. முதலாளித்துவ நாடாளுமன்ற முறையில் வாக்குரிமையையும் அரசாங்க விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமையையும் குடிமக்கள் அனைவரும் பாகுபாடின்றிப் பகிர்ந்து கொள்வதால் இது வர்க்கங்களையும் வர்க்கப் பிரிவினைகளையும் ஒழித்திடுகிறது என்று மிதவாதிகள் எப்பொழுதுமே கூறி வந்துள்ளனர். இத்தகைய கருத்துக்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதைப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பாதியில் ஐரோப்பாவின் வரலாறு அனைத்தும், இருபதாம் நூற்றுண்டின் துவக்க ஆண்டுகளில் ருஷ்யப் புரட்சியின் வரலாறு அனைத்தும், கண்கூடாய்க்

காட்டுகின்றன. ''ஜனநாயக'' முதலாளித்துவத்தின் சுதந்திரத்தில் பொருளாதாரப் பாகுபாடுகள் மேலும் தீவிரமாகிக் கடுமையாகின்றனவே ஒழிய குறைந்துவிடவில்லை. மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளிலுங்கூட இக் குடியரசுகளும் வர்க்க ஒடுக்குமுறை அமைப்புகளே என்ற அவற்றின் உள்ளியல்பான தன்மையை நாடாளுமன்ற முறை அப்பட்டமாய்த் தெரியப்படுத்துகிறதேயன்றி, அவற்றில் வர்க்க ஒடுக்குமுறையை அகற்றிவிடவில்லை. அரசியல் நிகழ்ச்சிகளில் முன்பு தீவிரமாகப் பங்கு பெற்ற பகுதிகளைக் காட்டிலும் அளவிட முடியாத விரிவான மக்கள் பகுதியினருக்கு அறிவொளியூட்டி அவர்களை ஒழுங்கமைத்திடத் துணை புரிவதன் மூலம் நாடாளுமன்ற முறை நெருக்கடிகளையும் அரசியல் புரட்சிகளையும் அகற்றிவிடவில்லை, இப்புரட்சிகளின் போது உள்நாட்டுப் போர் அதிகபட்ச அளவுக்குக் கடுமையாகும் படியே செய்கிறது. இது தவிர்க்க முடியாதபடி எப்படி கடுமையாகிவிடுகிறது என்பதை 1871ம் ஆண்டு வசந்தத்தில் பாரிஸ் நிகழ்ச்சிகளும் 1905 குளிர்காலத்தில் ருஷ்ய நிகழ்ச்சிகளும் மிக மிகத் தெளிவாய்க் காட்டின. பாட்டாளி வர்க்க இயக்கத்தை நசுக்கும் பொருட்டு பிரெஞ்சு முதலாளி வர்க்கம் ஒரு கணங்கூடத் தயங்காது தேசம் அனைத்துக்கும் எதிரான பகைவனுடன், பிரெஞ்சு நாட்டைச் சீரழியச் செய்த அந்நியச் சேனையுடன்,ஒப்பந்தம் செய்துகொண்டது. நாடாளுமன்ற முறை, முதலாளித்துவ ஜனநாயகம் இவற்றின் தவிர்க்க இயலாத உள்ளார்ந்த இயக்கவியலை—வெகுஜனப் பலாத்காரத்தின் மூலம் சர்ச்சைக்கு முன்னிலும் கூர்மையான முடிவு காண வழி வகுக்கும் இதனை—புரிந்து கொள்ளாதவர்கள் இந்த நாடாளுமன்ற முறையின் அடிப்படையில் கோட்பாட்டு வழியில் முரணின்றியும், தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள் இந்த ''சர்ச்சைகளில்'' வெற்றிகரப் பங்கு கொள்ள மெய்யாகவே அவர்களைத் தயார் செய்யும் விதத்திலும் பிரசாரமும் கிளர்ச்சியும் நடத்த ஒருபோதும் முடியாது. மேற்கு நாடுகளில் சமூக-சீர்திருத்த மிதவாதிகளுடனும், ருஷ்யப் புரட்சியில் மிதவாதச் சீர்திருத்தவாதிகளுடனும் (காடேட்டுகள்)[73] செய்து கொள்ளப்பட்ட கூட்டணிகள், ஒப்பந்தங்கள், இணைப்புகள் இவற்றின் அனுபவமானது, வெகுஜனங்களுடைய உணர்வை மழுங்கடிக்கவே இந்த ஒப்பந்தங்கள்

உதவுகின்றன, அவை போராடும் வீரர்களை சிறிதும் போராடும் ஆற்றலற்ற, மிகுந்த ஊசலாட்டமும் துரோகத் தன்மையும் கொண்டவர்களுடன் இணையச் செய்து, வெகுஜனங்களுடைய போராட்டத்தின் மெய்யான முக்கியத்துவத்தைப் பலவீனப்படுத்துகின்றனவே அன்றி அதனை உயர்த்தவில்லை என்பதை ஐயந்திரிபற நிரூபித்துக் காட்டியுள்ளது. பிரான்சில் மில்லிரண் போக்கு[74]—விரிவான, மெய்யாகவே நாடு தழுவிய அளவில் திருத்தல்வாத அரசியல் போர்த்தந்திரத்தைக் கையாளுவதில் நடத்திய மிகப் பெரிய பரிசோதனை இது—உலகெங்கணும் பாட்டாளி வர்க்கம் எந்நாளும் மறக்க முடியாத வகையில் திருத்தல்வாதம் குறித்து நடைமுறை வாயிலான ஒரு மதிப்பீட்டை அளித்திருக்கிறது.

சோஷலிச இயக்கத்தின் இறுதி நோக்கம் குறித்து திருத்தல்வாதம் அனுசரிக்கும் கண்ணோட்டம் அதன் பொருளாதார, அரசியல் போக்குகளுடன் பொருந்துகிற இயற்கையான நிரப்புக் கூறாகும். "இயக்கமே யாவும், இறுதி நோக்கம் ஒரு பொருட்டல்ல"—பெர்ன்ஷ்டைனுடைய இந்த வசீகரச் சொற்றொடர் நீண்ட பல வியாக்கியானங்களைக் காட்டிலும் சிறப்பாய்த் திருத்தல்வாதத்தின் உட்பொருளைத் தெரிவிக்கிறது. தனது நடத்தையைச் சந்தர்ப்பத்துக்குச் சந்தர்ப்பம் மாற்றி நிர்ணயித்துக் கொள்ளுதல், அன்றன்றைக்குமான நிகழ்ச்சிகளுக்கும் அற்ப விவகார அரசியலின் திருப்பங்களுக்கும் தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல், பாட்டாளி வர்க்கத்தின் தலையாய நலன்களையும் முதலாளித்துவ அமைப்பு அனைத்தின், முதலாளித்துவப் பரிணாமம் அனைத்தின் அடிப்படைக் கூறுகளையும் மறந்துவிடுதல், இந்தத் தலையாய நலன்களை அந்தந்த தருணத்திற்குரிய மெய்யான அல்லது கற்பிதமான நலன்களுக்காகப் பலியிடுதல்—இவையேதான் திருத்தல்வாதத்தின் கொள்கை. இந்தக் கொள்கையின் தன்மையிலிருந்தே வெளிப்படையாய்ப் பெறப்படுவது என்னவெனில், இது எண்ணிலடங்காப் பல்வேறு வடிவங்களை ஏற்கும் என்பதும், ஓரளவுக்கோ பெருமளவுக்கோ "புதுமையான" ஒவ்வொரு பிரச்சினையும் நிகழ்ச்சிகளில் ஓரளவுக்கோ பெருமளவுக்கோ எதிர்பாராத, முன்னறியாத ஒவ்வொரு திருப்பமும்—அடிப்படை வளர்ச்சித் திசையை அது மிகச் சொற்ப அளவுக்கு மட்டுமேதான், மிக மிகச்

சொற்ப காலத்துக்கேதான் மாற்றுகிறது என்றாலுங்கூட— தவிர்க்க முடியாத வகையில் ஏதேனும் ஒரு வகைத் திருத்தல் வாதத்தை எப்பொழுதும் தோற்றுவிக்கவே செய்யும் என்பதுந்தான்.

திருத்தல்வாதம் தவிர்க்க முடியாததாய் இருப்பதற்குத் தற்கால சமுதாயத்தில் அதற்குள்ள வர்க்க வேர்கள்தான் காரணம். திருத்தல்வாதம் ஒரு சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு. ஜெர்மனியில் சுத்தமான மார்க்ஸியவாதிகளுக்கும்[75] பெர்ன்ஷ்டைனியர்களுக்கும், பிரான்சில் கெட்டின் ஆதரவாளர்களுக்கும் ஜொரேஸ் ஆதரவாளர்களுக்கும்[76] (தற்போது இன்னும் முக்கியமாய் புருஸ் ஆதரவாளர்களுக்கும்),[77] பிரிட்டனில் சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கும்[78] சுயேச்சைத் தொழிற் கட்சிக்கும்,[79] பெல்ஜியத்தில் புருக்கேருக்கும் வண்டர்வேல்டேக்கும், இத்தாலியில் முழுமையாளர்களுக்கும்[80] சீர்திருத்தவாதிகளுக்கும், ருஷ்யாவில் போல்ஷிவிக்குகளுக்கும் மென்ஷிவிக்குகளுக்கும்[81] இடையிலான உறவு நிலை இந்நாடுகள் யாவற்றின் தற்போதைய நிலையில் இருந்து வரும் மிகப் பல்வேறுபட்ட தேசிய நிலைமைகளையும் வரலாற்றுக் கூறுகளையும் மீறி, சாராம்சத்தில் எங்கும் ஒன்றே போல் இருக்கிறது; சிறிதளவேனும் தகவல் தெரிந்த சிந்தனை ஆற்றல் கொண்ட எந்த சோஷலிஸ்டுக்கும் இது குறித்துக் கடுகளவும் சந்தேகம் இருக்க முடியாது. உண்மையில் இன்றைய சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தினுள் நிலவும் "பிரிவினை" தற்போது உலகின் பல்வேறு நாடுகள் யாவற்றிலும் ஒரேவிதமான வழியில்தான் போய்க் கொண்டிருக்கிறது. முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு நாடுகளிலும் பல்வேறுபட்ட போக்குகள் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கம் ஒன்றினுள் போராடிக் கொண்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் இன்றைய நிலைமை பிரம்மாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்குச் சான்று கூறுகிறது. லத்தீனிய நாடுகளில் "புரட்சிகர சிண்டிக்கலிஸமாய்"[82] உருவாகியுள்ள அந்த "இடதுசாரி திருத்தல்வாதமும்" கூடத் தன்னை மார்க்ஸியத்துக்குத் தகவமைத்து, மார்க்ஸியத்தைத் "திருத்தி வருகிறது": இத்தாலியில் லப்ரியோலாவும் பிரான்சில் லாகர்டேலும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்ஸின் நிலையிலிருந்து சரியாய்ப் புரிந்து கொள்ளப்பட்ட

மார்க்ஸின் நிலைக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சந்தர்ப்பவாதத் திருத்தல்வாதத்தைப் போல அதே அளவுக்கு வளர்ச்சியடையாது இருந்து வரும் இந்தத் திருத்தல்வாதத்தின் சித்தாந்த உள்ளடக்கத்தை இங்கு நாம் பகுத்தாராய்வதற்கில்லை. இந்தத் திருத்தல்வாதம் இன்னமும் சர்வதேச நிகழ்ச்சிப்போக்கு ஆகவில்லை, எந்தவொரு நாட்டிலும் சோஷலிஸ்டுக் கட்சியுடன் இன்னமும் அது எந்தவொரு பெரிய நடைமுறைப் போராட்டத்தின் சோதனையையும் கண்டதில்லை. ஆகவே மேலே சித்தரிக்கப்பட்ட ''வலதுசாரி திருத்தல்வாதத்தைப்'' பரிசீலிப்பதுடன் நாம் நிறுத்திக் கொள்கிறோம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாததாய் இருப்பதன் மூலகாரணம் என்ன? தேசியத் தனி இயல்புகளிலும் முதலாளித்துவ வளர்ச்சியின் அளவுகளிலும் இருக்கும் வேறுபாடுகளைக் காட்டிலும் இது ஆழமுடையதாய் இருப்பது ஏன்? ஏனெனில் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்துடன் கூடவே விரிவான சிறு முதலாளித்துவப் பகுதியினர், சிறு உடைமையாளர்கள் எப்பொழுதுமே இருந்து வருகிறார்கள். முதலாளித்துவம் சிற்றளவான உற்பத்தியிலிருந்துதான் தோன்றியது, இடையறாது தோன்றிக் கொண்டும் இருக்கிறது. முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி மீண்டும் மீண்டும் பல புதிய ''மத்திய தரப் பகுதிகளை'' (ஆலைகளை அண்டிப் பிழைக்கும் தொழிலகங்கள், வீட்டுப் பணித்துறை, சைக்கிள், மோட்டார் தொழில்களைப் போன்ற பெருந் தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடெங்கிலும் சிதறிக் கிடக்கும் சிறு தொழிலகங்கள், இன்ன பிற) தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் புதிய சிறு உற்பத்தியாளர்கள் இதே போலத் தவிர்க்க முடியாதபடித் திரும்பவும் பாட்டாளி வர்க்க அணிகளுக்குத் தள்ளப்பட்டுவிடுகிறார்கள். விரிவான தொழிலாளர் கட்சிகளின் அணிகளில் சிறு முதலாளித்துவ உலகக் கண்ணோட்டம் திரும்பத் திரும்பத் தலைதூக்குவது இயற்கையே. பாட்டாளி வர்க்கப் புரட்சியால் கதி மாற்றங்கள் ஏற்படுகின்ற வரையில் இது இப்படியேதான் இருக்கும், இருக்க வேண்டும் என்பது இயற்கையே. ஏனெனில் இத்தகைய ஒரு புரட்சியை

உண்டாக்க மக்கள் தொகையில் பெரு வாரியானோர் ''அறவே'' பாட்டாளி வர்க்கத்தவராக்கப்படுவது அவசிய மென நினைப்பது மிகப் பெரும் தவறாகும். இப்பொழுது அடிக் கடி நாம் சித்தாந்தத் துறையில் மட்டும் அனுபவித்து வரு கின்றவை, அதாவது மார்க்ஸுக்குத் தத்துவார்த்தத் திருத் தங்கள் செய்வது குறித்த சர்ச்சைகள்—நடைமுறையில் தற் போது தொழிலாளர் இயக்கத்தின் தனிப்பட்ட துணைப் பிரச் சினைகள் குறித்து மட்டும் திருத்தல்வாதிகளுடனான போர்த் தந்திரக் கருத்து வேறுபாடுகளாகவும் அவற்றின் அடிப்ப டையிலான பிளவுகளாகவும் தலைதூக்குகிறவை—பாட்டாளி வர்க்கப் புரட்சியானது சர்ச்சைக்குரிய எல்லாப் பிரச்சினை களையும் கூர்மையாக்கிவிடும் போதும், வெகுஜனங்களின் நடத்தையை நிர்ணயிப்பதில் மிகுந்த உடனடி முக்கியத்து வம் வாய்ந்த அம்சங்கள் பற்றிய எல்லாக் கருத்து வேறு பாடுகளையும் ஒன்றுகுவியச் செய்யும் போதும், மும்முரமான போராட்டத்துக்கிடையில் நண்பர்களிடமிருந்து பகைவர் களை இனங்கண்டு கொள்வதையும் முடிவு கட்டும்படியான விதத்தில் பகைவனுக்கு அடி கொடுக்கும் பொருட்டு மோச மான கூட்டாளிகளை விலக்கித்தள்ளுவதையும் அவசியமாக்கி விடும் போதும் ஒப்பிட முடியாத மிகப் பெரிய அளவிலே வருங் காலத்தில் தொழிலாளி வர்க்கம் நிச்சயம் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் திருத்தல்வாதத் தை எதிர்த்துப் புரட்சிகர மார்க்ஸியம் நடத்தும் சித்தாந் தப் போராட்டமானது, சிறு முதலாளித்துவப் பகுதியினரின் எல்லா ஊசலாட்டங்களையும் பலவீனங்களையும் மீறித் தனது இலட்சியத்தின் முழு வெற்றியை நோக்கி முன்னேறி வீறு நடைபோடும் பாட்டாளி வர்க்கத்தினுடைய மாபெரும் புரட்சிப் போர்களின் பீடிகையே ஆகும்.

1908 மார்ச் பிற்பாதியில்—
ஏப்ரல் 3 (16)க்குப்
பிற்படாமல்—
எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 17,
பக்கங்கள் 15-26

— MAR 19

பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்

எனும் நூலிலிருந்து

மார்க்ஸ், எங்கெல்ஸின் மேதாவிலாசம் காணக் கிடப்பது எதிலெனில், நீண்டதொரு காலமாய், ஏறத்தாழ அரை நூற்றுண்டாய், பொருள்முதல்வாதத்தை அவர்கள் வளர்த்துச் சென்றதில்தான்; தத்துவஞானத்தில் ஓர் அடிப்படைப் போக்கினை அவர்கள் மேலும் வளர்த்து முன்னேற்றியதில்தான்; ஏற்கெனவே தீர்வு காணப்பட்டு விட்ட அறிவு ஆதாரத் தத்துவப் பிரச்சினைகளைத் திரும்பவும் எடுத்துரைப்பதோடு நின்றுவிடாமல், முரணின்றி இதே இந்தப் பொருள்முதல் வாதத்தை சமூக விஞ்ஞானங்களது துறையிலே கையாண்டதில்தான்—எப்படிக் கையாளுவதெனக் காட்டியதில்தான்; பகட்டான குழப்படிப் பேச்சை எல்லாம், தத்துவஞானத்தில் ''புது'' நெறி ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கும் ''புதுப்'' போக்கு ஒன்றை உருவாக்குவதற்கும் இன்ன பிறவற்றுக்குமான எண்ணிலடங்காத முயற்சிகளை எல்லாம் குப்பைக் கூளத்தைக் கூட்டி ஒதுக்குவது போல் அவர்கள் ஒதுக்கித் தள்ளியதில்தான். இத்தகைய முயற்சிகளின் வெற்று வாய் வீச்சுத் தன்மையையும், புதிய தத்துவஞான ''வாதங்களாலான'' புலமை வாய்ந்த சிலம்பாட்டத்தையும், படாடோப மான உபாயங்களின் மூலம் பிரச்சினையின் சாரத்தைக் குழப்படி செய்தலையும், அடிப்படையான இரு அறிவு ஆதாரத் தத்துவப் போக்குகளிடையில் நடைபெறும் போராட்டத்தைப் புரிந்து கொள்ளவும் தெளிவாய்ப் புலப்படுத்தவும் இயலாமற் போகும் திராணியின்மையையும்தான் மார்க்ஸும் எங்கெல்ஸும் தமது செயற் காலம் அனைத்திலும் ஓயாமல் விரட்டிச் சென்று எதிர்த்துப் போராடினர்.

''ஏறத்தாழ அரை நூற்றாண்டு'' என்று சொன்னோம். மெய்யாகவே 1843லேயே, மார்க்ஸ் அப்போதுதான் மார்க்ஸாகி வந்த அந்தக் காலத்திலேயே, அதாவது விஞ்ஞான சோஷலிஸத்தின் நிறுவகராகி வந்த, பொருள்முதல்வாதத்தின் முந்தைய எல்லா வடிவங்களைக் காட்டிலும் அளவிலா உள்ளடக்கச் செழுமை வாய்ந்ததும் ஒப்பீடில்லாத அளவுக்கு முரணற்றதுமாகிய நவீனப் பொருள்முதல்வாதத்தின் நிறுவகராகி வந்த அந்தக் காலத்திலேயே, தத்துவஞானத்திலான இந்த அடிப்படைப் போக்குகளை வியக்கத்தக்கவாறு தெளிவாய் அவர் சுட்டிக் காட்டினார். 1843 அக்டோபர் 20ல் ஃபாயர்பாகுக்கு மார்க்ஸ் எழுதிய ஒரு கடிதத்தைக் கார்ல் குருன் மேற்கோளாய்த் தருகின்றார். ஷேலிங்கை எதிர்த்து *Deutsch-Französische Jahrbücher*க்கு[83] ஒரு கட்டுரை எழுதும்படி ஃபாயர்பாகை இந்தக் கடிதத்தில் மார்க்ஸ் கேட்டுக் கொள்கிறார். இந்த ஷேலிங் அறிவாழமில்லாத தற்புகழ்ச்சிக்காரர், முந்தையத் தத்துவஞானப் போக்குகளை எல்லாம் தாம் தழுவியணைத்து அவற்றை கடந்து மேலே சென்றுவிட்டதாய் உரிமை கொண்டாடுகிறார் என்று எழுதுகிறார் மார்க்ஸ். ''பிரெஞ்சுப் புத்தார்வப் பாணியோரிடமும் மாயாவாதிகளிடமும் தத்துவஞானம், இறையியல் இவ்விரண்டின் ஐக்கியமாவேன் என்கிறார் ஷேலிங்; பிரெஞ்சுப் பொருள்முதல்வாதிகளிடம் ஊன், கருத்து ஆகிய இரண்டும் ஒருசேர இணைந்தவனாவேன் என்கிறார்; பிரெஞ்சு ஐயுறவுவாதிகளிடம் வறட்டுச் சூத்திரவாதத்தை அழிப்பவனாவேன் என்கிறார்.''* ஐயுறவுவாதிகள்— அவர்கள் ஹியூமியவாதிகள் எனப்படுவோராயினும் சரி, காண்ட்டியவாதிகள் எனப்படுவோராயினும் சரி (அல்லது இருபதாம் நூற்றாண்டில் மாஹியவாதிகள் எனப்படுவோராயினும் சரி)—பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகிய இரண்டையுமே

---

* Karl Grün, *Ludwig Feuerbach in seinem Briefwechsel und Nachlass, Sowie in seiner philosophischen Charakterentwicklung*, I. Bd., Lpz., 1874, S. 361 (கார்ல் குருன், லுத்விக் ஃபாயர்பாக், அவரது கடிதப் போக்குவரத்தும் மறைவுக்குப் பின் வெளியான நூல்களும் தத்துவஞான வளர்ச்சியும், தொகுதி 1, லைப்ஸிக், 1874, பக்கம் 361.—பதிப்பாசிரியர்.)

''வறட்டுச் சூத்திரவாதம்'' என்பதாய் கூறி எதிர்த்துக் கூச்சலிடுவோரே ஆவர் என்பதை மார்க்ஸ் அந்தக் காலத்திலேயே உணர்ந்து கொண்டுவிட்டார். அவலம் வாய்ந்த அற்பமான ஓராயிரம் தத்துவஞான அமைப்புகளில் எவற்றாலும் திசை திருப்பிவிடப்படுவதற்கு இடமளிக்காமல், மார்க்ஸினால் அந்தக் காலத்திலேயே ஃபாயர்பாகின் மூலம் கருத்துமுதல்வாதத்துக்கு நேர் எதிரான பொருள்முதல்வாதப் பாதையை மேற்கொள்ள முடிந்தது. முப்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு, மூலதனத்தின் முதற் பாகத்தின் இரண்டாம் பதிப்புக்கு எழுதிய பின்னுரையில், எல்லா விதக் கருத்துமுதல்வாதத்திலும் முரணற்றதும் வளர்ச்சி மிக்கதுமாகிய ஹெகலின் கருத்துமுதல்வாதத்துக்கு எதிராய் மார்க்ஸ் தமது பொருள்முதல்வாதத்தை வைத்து முன்பு போலவே தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வேறுபடுத்திக் காட்டினார்; கோன்டினுடைய ''நேர்காட்சிவாதத்தை'' அருவருப்புடன் ஒதுக்கித் தள்ளினார்; ஹெகலைத் தகர்த்து ஒழித்துவிட்டதாய்க் கற்பனை செய்து கொண்டு மெய்ந்நடப்பில் ஹெகலுக்கு முற்பட்ட காண்ட், ஹியூம் ஆகியோரது தவறுகளைத் திரும்பவும் இழைப்போராய்ச் சரிந்து பின்சென்ற தமது காலத்தியத் தத்துவஞானிகளை அசட்டுத் தத்தைகளென இகழ்ந்துரைத்தார். 1870 ஜூன் 27ல் குகல்மனுக்கு எழுதிய கடிதத்தில் இதே போல் அருவருப்புடன்தான் ''புஹ்னர், லாங்கே, டூரிங், ஃபெஹ்னர் முதலானோரைப்'' பற்றி மார்க்ஸ் குறிப்பிடுகின்றார், ஏனெனில் இவர்கள் ஹெகலின் இயக்கவியலில் எதையும் புரிந்து கொள்ளாமல் அவரை ஏளனம் செய்கிறார்கள் என்கிறார்.* இறுதியில் மூலதனத்திலும் ஏனைய நூல்களிலும் தத்துவஞானம் சம்பந்தமாய் மார்க்ஸ் எழுதும் வாசகங்கள் பலவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள், மாறாத

---

* நேர்காட்சிவாதி பீஸ்லி (Beesley) குறித்து மார்க்ஸ் 1870 டிசம்பர் 13ம் தேதிய கடிதத்தில் பின்வருமாறு கூறுகின்றார்: ''பேராசிரியர் பீஸ்லி ஒரு கோன்ட் ஆதரவாளர், ஆகவே அவர் எல்லா விதமான விசித்திரங்களையும் ஆதரிக்கும்படி ஆகின்றது.'' ஹக்ஸ்லி ரகத்தைச் சேர்ந்த நேர்காட்சிவாதிகள் குறித்து 1892ல் எங்கெல்ஸ் தெரிவித்த அபிப்பிராயத்துடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கவும்.[84]

அடிப்படைக் கருத்தோட்டம் ஒன்று, அதாவது பொருள் முதல்வாதம் பற்றிய வற்புறுத்தலும், தெளிவில்லாத எல்லா வித இருண்மையும் குழப்படியும் கருத்துமுதல்வாதத்தை நோக்கியமைந்த எல்லாத் திரிபுகளும் பற்றிய அருவருப்பு வாய்ந்த இகழ்ச்சியும் இவ்வாசகங்களில் இழையோடக் காண்பீர்கள். தத்துவஞானம் சம்பந்தமாய் மார்க்ஸ் கூறு கின்றவை யாவுமே அடிப்படையான இவ்விரு எதிர்நிலைகளுக் குள் அடங்குவனவாய் இருக்கின்றன; பேராசிரியத் தத்துவ ஞானத்தின் கண்ணேட்டத்தில் மார்க்ஸின் இவ்வாசகங் களது குறைபாடு இந்தக் ''குறுகிய நிலையிலும்'', ''ஒருச்சார் பான தன்மையிலும்'' தான் அமைந்திருக்கிறது. உண்மை என்னவெனில், பொருள்முதல்வாதத்துக்கும் கருத்துமுதல் வாதத்துக்கும் இணக்கம் காண்பதற்கென அமைந்த கலப் படத் திட்டப்புனைவுகளை அங்கீகரிக்க மறுக்கிருர் என்பதில் தான் மார்க்ஸின் மாபெரும் சிறப்பு காணக் கிடக்கிறது. கூரு ராய் வரையறை செய்யப்பட்ட தத்துவஞானப் பாதையில் முன்னேக்கிச் சென்றவராவார் மார்க்ஸ்.

முற்றும் மார்க்ஸின் மனப்பாங்கையே கொண்டவரும், நெருங்கிய முறையில் அவருடன் இணைந்து செயலாற்றியவ ருமான எங்கெல்ஸ், தமது தத்துவஞான நூல்கள் யாவற்றி லும் எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் பொருள்முதல்வாத நெறியினையும் கருத்துமுதல்வாத நெறியினையும் சுருக்கமாக வும் தெட்டத் தெளிவாகவும் வேறுபடுத்திக் காட்டுகின்ருர்: பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் இவற்றின் ''ஒருச் சார்பு தன்மையைக்'' ''கடந்து மேலே செல்வதற்காகவும்'', ஒரு ''புதிய'' போக்கினைப் பறைசாற்றுவதற்காகவும் முடி வின்றி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை—''நேர்காட்சிவா தத்தையோ'', ''எதார்த்தவாதத்தையோ'', வேறு எந்தப் பேராசிரிய மாய்மாலத்தையோ—1878லும் சரி, 1888லும் சரி, 1892லும்[85] சரி அவர் கருத்துக்குரியனவாய் மதிக்கவே இல்லை. டூரிங்கை எதிர்த்துத் தாம் நடத்திய போர் அனைத் துக்கும் எங்கெல்ஸ் அடியாதாரமாய்க் கொண்டிருந்தது, பொருள்முதல்வாதத்தை முரணின்றிப் பற்றியொழுக வேண்டு மென்ற முழக்கம்தான். பொருள்முதல்வாதி டூரிங் வெற்றுச் சொற்களை வீசி பிரச்சினையைக் குழப்புகிருர் என்றும், வாய் வீச்சு அடிக்கிருர் என்றும், கருத்துமுதல்வாதத்துடன் சமர

சம் செய்து கொள்வதாகவும் கருத்துமுதல்வாத நிலையினை ஏற்பதாகவும் அமையும் வாதமுறைகளைக் கையாளுகிறார் என்றும் குற்றம் சாட்டி எங்கெல்ஸ் அவரைத் தாக்குகிறார். இறுதி வரை முரணில்லாத பொருள்முதல்வாதம், இல்லையேல் தத்துவஞானக் கருத்துமுதல்வாதப் பொய்மையும் குழப்படியும்தான்—டூரிங்குக்கு மறுப்பு என்னும் நூலின் ஒவ்வொரு பாராவிலும் பிரச்சினை இவ்வாறுதான் வரையறுக்கப்படுகின்றது. பிற்போக்குவாதப் பேராசிரியத் தத்துவஞானத்தினால் ஏற்கெனவே மனத்தைச் சீரழித்துக் கொண்டவர்களால்தான் இதைக் காணத் தவற முடியும். டூரிங்குக்கு மறுப்பு நூலானது அதன் ஆசிரியரால் கடைசி முறையாய்த் திருத்தி விரிவு செய்யப்பட்டு, இறுதி முகவுரை எழுதப்பட்ட 1894 வரை, தொடர்ச்சியாய் எங்கெல்ஸ் தத்துவஞானத்திலும் இயற்கை விஞ்ஞானத்திலும் ஏற்பட்ட மிக அண்மைக் காலத்திய வளர்ச்சிகளை உன்னிப்பாய்க் கவனித்து வந்தார், முன்பு போலவே அதே முழு வைராக்கியத்துடன் தெட்டத் தெளிவான உறுதி வாய்ந்த தமது நிலையைத் தொடர்ந்து அனுசரித்தார், பெரிதும் சிறிதுமான புதிய அமைப்புகளாலாகிய குப்பைக் கூளங்களைத் துடைத்துத் தள்ளிச் சென்றார்.

தத்துவஞானத்தில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிகளை எங்கெல்ஸ் கவனித்து வந்தார் என்பது லுத்விக் ஃபாயர்பாக் என்ற நூலிலிருந்து விளங்குகிறது. 1888ம் ஆண்டு முகவுரையில், மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானமானது இங்கிலாந்திலும் ஸ்காந்தினேவியாவிலும் புதுப் பிறப்பெடுத்தது போன்ற நிகழ்வு குறித்துங்கூட குறிக்கப்படுகின்றது. ஆனால் எங்கெல்ஸ் (முகவுரையிலும் மற்றும் புத்தகத்தின் உள்ளடக்க வாசகத்திலும்)நடப்பில் ஆதிக்கத்திலிருந்த நவீன-காண்ட்டியவாதம் குறித்தும் ஹியூமியவாதம் குறித்தும் அளவுகடந்த அருவருப்போடுதான் இகழ்ந்துரைக்கின்றார். நாகரிக மோஸ்தராய் நடப்பிலிருந்த ஜெர்மனிய, ஆங்கிலேயத் தத்துவஞானமானது ஹெகலுக்கு முற்பட்ட காண்ட்டிய வாத, ஹியூமியவாதத் தவறுகளைத் திரும்பவும் இழைப்பதைக் கவனித்து வந்த எங்கெல்ஸ், ஹெகலிடம் திரும்புவதென்ற இந்த மாற்றமுங்கூட (இங்கிலாந்திலும் ஸ்காந்தினேவியாவிலும்) ஓரளவு நலம் பயப்பதாய் இருக்கக் கூடுமென்றும் மாபெரும்

கருத்துமுதல்வாதியும் இயக்கவியல்வாதியுமான ஹெகல் அற்பத்தனமான கருத்துமுதல்வாதத் தவறுகளையும் இயக்க மறுப்பியல் தவறுகளையும் வெளிப்படுத்திக் காட்ட உதவக் கூடுமென்றும் எதிர்பார்த்தார் என்பது தெளிவாய்த் தெரி கின்றது.

ஜெர்மனியில் நவீன-காண்ட்டியவாதம், இங்கிலாந்தில் ஹியூமியவாதம் இவ்விரண்டின் ஏராளமான சாயல்களைப் பற்றிய பரிசீலனையில் எங்கெல்ஸ் இறங்காமல், பொருள் முதல்வாதத்திலிருந்து அடிப்படையான முறையில் இவை விலகித் தடம் புரண்டு செல்வதை ஆரம்பம் முதற்கொண்டே கண்டித்து நிராகரிக்கின்றார். இவ்விரு மரபுகளின் போக்கு அனைத்துமே ''விஞ்ஞான வழியில் ஒரு படி பின்னோக்கிச் செல் வதாகும்'' என்கிறார். இந்த நவீன-காண்ட்டியவாதிகள், ஹியூ மியவாதிகள் நடப்பு வழக்கிலுள்ள சொற்பிரயோகத்தின் படி—சந்தேகத்துக்கு இடமின்றி ''நேர்காட்சிவாதமும்'' சந்தேகத்துக்கு இடமின்றி ''எதார்த்தவாதமும்'' ஆகிய போக்குகள் குறித்து எங்கெல்ஸின் கருத்து என்ன? இந்த நவீன-காண்ட்டியவாதிகள், ஹியூமியவாதிகளின் வரிசையில், உதாரணமாய், ஹக்ஸ்லியும் சேர்ந்திருந்ததானது எங்கெல் ஸுக்குத் தெரியாததல்ல. எண்ணற்ற குளறுபடியாளர்களைக் கவர்ந்து இழுத்து வந்த, தொடர்ந்து கவர்ந்து இழுத்தும் வருகிற அந்த ''நேர்காட்சிவாதமும்'' அந்த ''எதார்த்த வாதமும்'' அதிகம்போனால், பகிரங்கமாய்ப் பொருள்முதல் வாதத்தைக் கண்டன விமர்சனம் செய்து நிராகரித்து வெளியே தள்ளிவிட்டு, கள்ளத்தனமாய் அதை உள்ளே கொண்டு வரும் ஒரு கேவல வழியே ஆகுமென்று எங்கெல்ஸ் பறைசாற்றினார்.[86] தாமஸ் ஹக்ஸ்லி மிகப் பெரிய இயற்கை விஞ்ஞானி; மாஹ், அவெனாரியஸ் வகையறாவைவிட ஒப்பிட முடியாத அளவுக்கு எதார்த்தமான எதார்த்தவாதி, நேரான நேர்காட்சிவாதி—இவரைப் பற்றி இம்மாதிரியான ஒரு மதிப்பீடு என்றால், ''சமீப காலத்திய நேர்காட்சி வாதம்'', ''சமீப காலத்திய எதார்த்தவாதம்'', இன்ன பிறவற்றில் சில மார்க்ஸிய வாதிகள் தற்போது மோகம் கொண்டிருப்பதை எங்கெல்ஸ் எப்படி வெறுத்து ஒதுக்கி யிருப்பார் என்பதைப் புரிந்து கொள்ள எவரும் அதிகமாய் ஆலோசிக்க வேண்டியதில்லை.

மார்க்ஸும் எங்கெல்ஸும் தத்துவஞானத்தில் ஆதியோடு அந்தமாய்க் கட்சிக்காரர்களாய்ச் செயல்பட்டவர்கள்; பொருள்முதல்வாதத்திலிருந்து பிசகும் திரிபுகளையும், கருத்து முதல்வாதத்துக்கும் நம்பிக்கைவாதத்துக்கும் விட்டுக் கொடுக்கப்படும் சலுகைகளையும் "புதுப்" போக்கு ஒவ்வொன்றிலும் அவர்களால் கண்டு கொள்ள முடிந்தது. எனவேதான் ஹக்ஸ்லியை முழுக்க முழுக்க அவர்கள் முரணற்ற பொருள்முதல்வாத நிலையிலிருந்து மதிப்பீடு செய்தனர். எனவேதான் அவர்கள் ஃபாயர்பாகை, இறுதி வரை தொடர்ந்து அவர் பொருள்முதல்வாதத்தைப் பற்றியொழுகத் தவறியதற்காகவும், தனிப்பட்ட பொருள்முதல்வாதிகள் இழைத்த தவறுகளுக்காக அவர் பொருள்முதல்வாதத்தைத் துறப்பதற்காகவும், சமயத்தைப் புத்தமைக்கும் பொருட்டு அல்லது புதிய ஒரு சமயத்தை உருவாக்கும் பொருட்டு சமயத்தை அவர் எதிர்த்துப் போராடுவதற்காகவும், சமூகவியலில் அவர் தம்மைக் கருத்துமுதல்வாதச் சொற்பிரயோகத்திலிருந்து விடுவித்துக் கொண்டு பொருள்முதல்வாதியாக முடியாமற் போனதற்காகவும் கண்டனம் செய்தனர்.

1908 பிப்ரவரி-அக்டோபரில் எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 18,
பக்கங்கள் 356-60

மார்க்ஸியத்தினுடைய வரலாற்று வளர்ச்சியின் சில இயல்புகள்

எங்களுடைய போதனை செயலுக்கு ஒரு வழிகாட்டியே தவிர வறட்டுச் சூத்திரம் அல்ல என்றார் எங்கெல்ஸ்—தம்மையும் புகழ் மிக்க தமது நண்பரையும் குறிக்கும் வண்ணம் 'எங்களுடைய' என்றார். மார்க்ஸியத்தில் அடிக்கடி பலரும் மறந்துவிடும் ஓர் அம்சத்தைக் குறிப்பிடத்தகுந்த வலிவுடனும் பொருள்நிறைவுடனும் இந்த மூலச்சிறப்புள்ள வாசகம் வலியுறுத்துகிறது. இதை மறந்துவிடுவதின் மூலமாக நாம் மார்க்ஸியத்தை ஒருதலைப்பட்சமான, உருக்குலைக்கப்பட்டதான, உயிரற்ற ஒன்றாய்த் திரித்துவிடுகிறோம்; உயிர்த்தியங்கி வரும் ஆன்மாவை அதிலிருந்து பறித்துவிடுகிறோம்; மார்க்ஸியத்தின் மூலாதாரத் தத்துவ அடித்தளங்களை—அதாவது முரண்பாடுகள் நிறைந்து முழுதளாவிதாயுள்ள வரலாற்று வளர்ச்சியைப் பற்றிய போதனையாகிய இயக்கவியலை—தளர்த்திப் பலவீனப்படுத்துகிறோம்; நமது சகாப்தத்தின் திட்டவட்டமான நடைமுறைக் கடமைகளுடன், வரலாற்றின் ஒவ்வொரு புதிய திருப்பத்தையும் தொடர்ந்து மாறும்படியான இந்தக் கடமைகளுடன் மார்க்ஸியத்துக்கு இருக்கும் தொடர்பை நாம் அறுத்தெறிகிறோம்.

நமது காலத்தில், ருஷ்யாவில் மார்க்ஸியத்தின் கதியைப் பற்றி அக்கறை கொண்டிருப்பவர்களின் மத்தியிலே, மார்க்ஸியத்தின் இந்தக் குறிப்பிட்ட அம்சத்தை மறந்து விடுகிறவர்களை அடிக்கடி கண்டு வருகிறோம். ஆயினும் சமீப காலத்தில் ருஷ்யா திடீர் மாறுதல்களுக்கு உட்பட்டிருப்பது எல்லோருக்கும் தெளிவாய்த் தெரிந்தே இருக்க வேண்டும். செயலின் சூழ்நிலைமைகளையும், அவற்றின் காரணமாகச் செயலின் குறிக்கோள்களையும் மிகவும் நேரடியாகவும் உடன

டியாகவும் நிர்ணயிக்கும்படியான சமுதாய-அரசியல் நிலைமையை வழக்கத்திலில்லாத வேகத்துடனும் வலிவுடனும் மாற்றி விடும் அளவுக்கு இந்த மாறுதல்கள் திடுதிப்பென நிகழ்ந்துள்ளன. பொதுப்படையான, அடிப்படையான குறிக்கோள்களை இங்கே நான் குறிப்பிடவில்லை. வர்க்கங்களிடையே நிலவும் அடிப்படை உறவு மாருமலிருக்கும் வரை வரலாற்றின் திருப்பங்களையொட்டி இந்தக் குறிக்கோள்கள் மாறுவதில்லை. ருஷ்யாவில் பொருளாதாரத்தில் (பொருளாதாரத்தில் மட்டுமல்ல) காணப்படுகிற பொதுவான பரிணும வளர்ச்சிப் போக்கும், அதே போல் ருஷ்யச் சமுதாயத்திலுள்ள பல்வேறு வர்க்கங்களிடையே நிலவி வரும் அடிப்படை உறவும், சென்ற ஆறு ஆண்டுகளாக (உதாரணத்துக்குச் சொல்கிருேம்) மாருமலே இருந்து வந்திருக்கிறது என்பது தெட்டத் தெளிவு.

ஆனுல், இந்தக் காலக் கட்டத்தில் ஸ்தூலமான சமுதாய-அரசியல் நிலைமையும், அதே போல் நேரடியான, உடனடியான செயலின் குறிக்கோள்களும் மிகத் தீவிரமாக மாறி வந்திருக்கின்றன. இதன் விளைவாக, மார்க்ஸியத்திலும் அதன் பல்வேறு அம்சங்கள் முன்னணிக்கு வந்து நிரவேண்டியிருந்தது. ஏனெனில் மார்க்ஸியம் உயிர்ப் பண்புள்ள போதனையாகும்.

இந்தக் கருத்தைத் தெளிவாக்கும் பொருட்டு, ஸ்தூலமான சமுதாய-அரசியல் நிலைமையில் சென்ற ஆறு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற மாறுதலைக் கொஞ்சம் கவனிப்போம். இந்த ஆருண்டுக் காலப்பகுதி மும்மூன்று ஆண்டுகளைக் கொண்ட இரு காலப்பகுதிகளாகப் பிரிவதைை எடுத்த எடுப்பிலேயே காண்கிருேம். ஒரு காலப்பகுதி ஏறத்தாழ 1907ம் ஆண்டின் கோடையுடன் முடிவடைகிறது; மற்றென்று 1910ம் ஆண்டின் கோடையுடன் முடிவடைகிறது. முற்றிலும் தத்துவார்த்தக் கண்ணேட்டத்தில் பார்க்கும் போது, முதல் மூன்ருண்டுக் காலப்பகுதியானது அப்போது ருஷ்யாவில் அரசமைப்பின் அடிப்படையான முனைப்புக்கூறுகளில் வேகமாக ஏற்பட்ட மாறுதல்களால் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. இந்த மாறுதல்களின் போக்கு ஒரே சீராக இல்லாமல் அனேக ஏற்ற இறக்கங்களுடன் கூடியதாயிருந்தது; இரு திசைகளிலும் ஊசலாட்டத்தின் வீச்சும் மிகப் பெரிதா

யிருந்தது. ''மேல்கட்டுமானத்தில்'' ஏற்பட்ட இந்த மாறுதல்களின் சமுதாய-பொருளாதார அடிப்படை என்னவெனில் ருஷ்ய சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களும் மிகவும் வேறுபட்ட துறைகளில் எடுத்துக் கொண்ட நடவடிக்கையே (டூமா சட்டசபைக்குள்ளேயும் வெளியேயும், பத்திரிகைகள், சங்கங்கள், பொதுக் கூட்டங்கள் முதலானவற்றிலும் நடைபெற்ற செயற்பாடே) ஆகும். வரலாற்றில் அடிக்கடி காணக்கிடைக்காத அளவிலே இந்த நடவடிக்கை அவ்வளவு பகிரங்கமானதாயும், எடுப்பாகவும், வெகுஜன வீச்சுடையதாயும் இருந்தது.

இதற்கு மாருக இரண்டாம் மூன்ருண்டுக் காலப்பகுதியின் முனைப்புக்கூறு—இங்கே முற்றிலும் தத்துவார்த்த ''சமூகவியல்'' கண்ணுேட்டத்தில் மட்டுமே விஷயத்தைக் கவனித்து வருகிருேம் என்று மீண்டும் சொல்கிறேன்—என்னவென்ருல், அநேகமாகத் தேக்கநிலை என்று மதிக்கக் கூடிய அளவுக்குப் பரிணும வளர்ச்சி மந்தமாயிருந்ததேயாகும். அரசு அமைப்பில் ஓரளவுக்காயினும் முக்கியமான மாறுதல்கள் எவையும் ஏற்படவில்லை. முந்திய காலப்பகுதியில் எந்த ''அரங்குகளில்'' நடவடிக்கைகள் வளர்க்கப்பட்டனவோ அவற்றில் பெரும்பாலானவற்றில் வர்க்கங்களுடைய பகிரங்கமான, பல்வகைப்பட்ட நடவடிக்கைகள் எவையும் அநேகமாக நடைபெறவில்லை.

இந்த இரண்டு காலப்பகுதிகளுக்குமிடையே இருந்த ஒற்றுமையம்சம் என்னவெனில், இரண்டு காலப்பகுதிகளிலும் ருஷ்யாவில் முதலாளித்துவப் பரிணுமம் நடைபெற்று வந்தது. இந்தப் பொருளாதாரப் பரிணுமத்துக்கும் பல நிலப்பிரபுத்துவ, மத்திய காலத்திய நிறுவனங்கள் நீடித்து இருந்து வந்ததற்கும் இடையேயிருந்த முரண்பாடு நீக்கப்படாமல் அப்படியே இருந்து வந்தது; சில நிறுவனங்கள் அரைகுறையான முதலாளித்துவத் தன்மை பெற்றதினுல் இந்த முரண்பாடு தீவிரமடைந்ததே ஒழிய தணிக்கப்படவில்லை.

இந்த இரண்டு காலப்பகுதிகளுக்கிடையே இருந்த வேற்றுமை என்னவென்ருல், மேற்குறிப்பிட்ட சீரில்லாத, ஏற்ற இறக்கமான வெகு விரைவான மாறுதல்கள் எந்த வடிவத்தை ஏற்குமென்பது முதலாவது காலப்பகுதியில் வரலாறு

படைக்கும் தலைமையான முதற்பெரும் கேள்வியாய் இருந்தது. ருஷ்யாவின் பரிணும வளர்ச்சி முதலாளித்துவத் தன்மையதாய் இருந்ததால் இந்த மாறுதல்களின் உள்ளடக்கமும் முதலாளித்துவத் தன்மை கொண்டதாய் இருந்து தீர வேண்டியதாயிற்று. ஆனல் முதலாளி வர்க்கத்தாரில் வெவ்வேறு வகையினர் இருந்தனர். ஏறத்தாழ நிதானமான மிதவாதப் போக்கைப் பின்பற்றுவதாய்ச் சொல்லிக்கொள்ளும் நடுத்தர முதலாளிகளும் பெரு முதலாளிகளும் தங்கள் வர்க்க நிலை காரணமாக திடீர் மாறுதல்களை அஞ்சி நிலவுடைமை அமைப்பிலும் சரி, அரசியல் ''மேல்கட்டுமானத்திலும்'' சரி, பழைய நிறுவனங்களின் பெருமளவான மிச்சசொச்சங்களை அப்படியே வைத்திருக்க முயற்சித்தார்கள். கிராமப் புறத்திலுள்ள சிறு முதலாளி வர்க்கத்தினர் ''தங்கள் கையால் உழைத்துப்'' பிழைக்கிற விவசாயி மக்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும் காரணத்தால் **வேறுவகைப்பட்ட** முதலாளித்துவச் சீர்திருத்தங்களுக்காக, அதாவது மத்திய காலத்திய மிச்சசொச்சங்கள் நீடித்திருக்க மிகக் குறைந்த இடமே அளிக்கக் கூடிய முதலாளித்துவச் சீர்திருத்தங்களுக்காக, முயன்று தீர வேண்டியிருந்தது. கூலித் தொழிலாளர்கள் தம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை உணர்வு பூர்வமாக அறிந்து கொண்டிருந்தனர், எனவே இவ்விரண்டு வேறுபட்ட போக்குகளிடையே நடைபெற்ற மோதலைப் பற்றித் தமக்கேற்ற கண்ணேட்டத்தை வகுத்துக் கொண்டு தீர வேண்டியிருந்தது. இவ்விரண்டு போக்குகளும் முதலாளித்துவ அமைப்பின் கட்டுக்கோப்பை விட்டு வெளியே செல்லாமல் அதனுள்ளேயே இருந்து, அவ்வமைப்பின் முற்றிலும் வெவ்வேருன வடிவங்களையும், அதன் முற்றிலும் வெவ்வேருன வளர்ச்சி விகிதங்களையும், அதன் முற்போக்கான செல்வாக்கின் வெவ்வேறு தரங்களையும் பிரதிபலித்தன.

இவ்விதம் முதல் காலப்பகுதி போர்த்தந்திரம் பற்றிய பிரச்சினைகளென்று வழக்கமாகக் குறிக்கப்படுகிற மார்க்ஸியத்தின் பிரச்சினைகளை முன்னணிக்குக் கொண்டு வந்து நிறுத்தியது. இது ஏதோ தற்செயலாக நடக்கவில்லை; தேவையின் கட்டாயத்தால் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினைகள் குறித்துக் கிளம்பிய சர்ச்சைகளும் கருத்து வேற்றுமைகளும் ''அறிவு ஜீவிகளிடையே'' நடக்கிற சர்ச்சைகள்தாம் என்றும்,

''பக்குவமடையாத பாட்டாளி வர்க்கத்தின்மேல் செல்வாக்கு பெறுவதற்காக நடக்கும் ஒரு போராட்டமே'' என்றும், ''அறிவுஜீவிகள் பாட்டாளி வர்க்கத்துக்குத் தகவாகத் தம்மைச் சரிப்படுத்திக் கொள்வதைக்'' குறிப்பவையே என்றும் பல்வேறு வகையினரான வேஹி[87] ஆதரவாளர்கள் நினைக்கிருர்கள்; இதைவிட தவருன கருத்து வேறொன்றுமில்லை. மாருக, இந்தப் பாட்டாளி வர்க்கம் பக்குவம் பெற்றுவிட்டதனுல்தான் அது ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சி முழுவதிலும் காணப்படும் இவ்விரண்டு வேறுபட்ட போக்குகளிடையே நடக்கிற மோதுதல் குறித்துப் பராமுகமாயிருக்க முடியவில்லை; ஆகவே இந்த வர்க்கத்தின் சித்தாந்தவாதிகள் வெவ்வேருன இவ்விரு போக்குகளுக்கும் (நேர்முகமாகவோ மறைமுகமாகவோ, நேரான பிரதிபலிப்பாகவோ எதிரான பிரதிபலிப்பாகவோ) ஏற்ற வகையில் தத்துவார்த்த வரையறுப்புக்களை வகுத்துத் தருவதைத் தவிர்க்க முடியவில்லை.

இரண்டாம் காலப்பகுதியிலே ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சியின் வெவ்வேறு போக்குகளிடையிலான மோதுதல் செயலரங்கில் காணப்படவில்லை, ஏனெனில் இந்த இரண்டு போக்குகளுமே ''பழுத்த பிற்போக்கர்களால்'' நசுக்கப்பட்டுவிட்டன, பின்னுக்குத் தள்ளப்பட்டு உள்வாங்கிக் கொள்ளும்படி செய்யப்பட்டன, தற்காலிகமாக மூச்சொடுக்கப்பட்டன. மத்திய காலத்தியப் பழுத்த பிற்போக்கர்கள் முன்னணிக்கு வந்து நின்று கொண்டதோடல்லாமல் முதலாளித்துவச் சமுதாயத்தின் மிக விரிந்த மக்கட்பகுதிகளிடையே வேஹியின் உணர்ச்சிகளையும் மனச் சோர்வையும் கொள்கையை மறுதலித்துக் கைவிடும் மனே நிலையையும் மேலோங்கச் செய்தனர். இப்போது தலைதூக்கியது பழைய அமைப்பு முறையைச் சீர்திருத்த நிற்கும் இரண்டு வழிமுறைகள் இடையிலான மோதுதல் அல்ல; எந்த விதமான சீர்திருத்தங்களிலும் நம்பிக்கையின்மை, ''அடிபணிந்துவிடும்'' ''பாவ மன்னிப்பு நாடும்'' மனப்பாங்கு, சமூக-விரோத போதனைகளின் மீது மோகம், மாயாவாதப் பித்து முதலானவையே இப்போது தலைதூக்கின.

திகைக்கத்தக்க முறையில் திடுதிப்பென நிகழ்ந்த இந்த மாறுதல் தற்செயலானதல்ல, ''வெளிப்புற'' நிர்ப்பந்தத்தினுல் மட்டும் ஏற்பட்ட விளைவல்ல. இதற்கு முந்திய காலப்

பகுதி, தலைமுறை தலைமுறையாய், பல நூற்றாண்டுகளாய், அரசியல் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி நின்று வந்த, அரசியல் பிரச்சினைகளே இன்னதென்று அறியாமலே இருந்து வந்த மக்கட்பகுதிகளை ஆழ்ந்த முறையிலே உலுக்கி உசுப்பி விட்டது. ஆகவே ''எல்லா மதிப்புகளையும் திரும்ப மதிப்பிடலும்'', அடிப்படைப் பிரச்சினைகளைப் புதிதாய்ப் பயில்வதும், தத்துவத்தில், அடிப்படைக் கூறுகளில், அரசியல் அரிச்சுவடியில் புதிய அக்கறை காட்டுவதும் இயற்கையாகவும் தவிர்க்க முடியாத வகையிலும் மேலோங்கின. நெடுந் தூக்கத்திலிருந்து திடீரென்று எழுப்பிவிடப்பட்டு மிகவும் முக்கியமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாகிவிட்ட கோடிக் கணக்கான மக்கள் வெகு காலத்துக்கு இம்மட்டத்தில் இருந்து கொண்டிருக்க முடியாது. இடைவேளை ஓய்வு பெருமலும், ஆரம்ப அடிநிலைப் பிரச்சினைகளுக்குத் திரும்பாமலும், இணையற்ற பொருள் வளம் செறிந்த படிப்பினைகளை ''ஜீரணிக்க'' உதவுவதும், ஒப்பிட முடியாத அளவில் அதிக விரிவான மக்கள் திரள் முன்னிலும் மிகுந்த உறுதியோடும் உணர்வோடும் நிச்சயத்தோடும் விடாமுயற்சியோடும் முன்னேறுவதைச் சாத்தியமாக்குவதுமான புதிய பயிற்சி பெருமலும் அவர்களால் மேற்செல்ல முடியவில்லை.

நாட்டின் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் உடனடிச் சீர்திருத்தங்கள் செய்து முடிப்பதுதான் முதலாவது காலப்பகுதியின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தது. பெற்ற அனுபவத்தை விமர்சித்து ஆராய்வது, இன்னும் அதிக விரிவான மக்கட்பகுதிகள் அந்த அனுபவத்தை ஜீரணிப்பது, சொல்லப் போனுல் அந்த அனுபவம் அடிமண்ணுக்குள், அதாவது பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த பிற்பட்ட அணிகளுக்குள் ஊடுருவிச் செல்வது—இவைதான் இரண்டாவது காலப்பகுதியின் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தன. காரணம், வரலாற்று வளர்ச்சியின் இயக்கவியல் அப்படி அமைந்திருந்தது.

மார்க்ஸியம் உயிரற்ற வறட்டுச் சூத்திரம் அல்ல; இறுதி முடிவாக்கப்பட்டுவிட்ட, முன்கூட்டியே தயார் செய்து வைக்கப்பட்டுவிட்ட, மாற்றத்துக்கு இடமில்லாது இறுகிவிட்ட போதனை அல்ல அது. செயலுக்கான உயிருள்ள வழிகாட்டி அது. சமுதாய வாழ்க்கை நிலைமைகளில் திகைக்கத்தக்க

வகையில் திடுதிப்பென நிகழ்ந்த மாறுதலே இக்காரணத்தால் நிச்சயமாய் மார்க்ஸியம் பிரதிபலித்துக் காட்ட வேண்டியிருந்தது. ஆழ்ந்த சிதைவிலும், ஒற்றுமையின்மையிலும், பல வகைப்பட்ட ஊசலாட்டங்களிலும், சுருங்கச் சொன்னால் மார்க்ஸியத்துக்கு உள்ளேயே ஒரு மிகத் தீவிரமான நெருக்கடியிலும் இந்த மாறுதல் பிரதிபலித்தது. இந்தச் சிதைவை எதிர்த்து உறுதியுடன் போராட வேண்டிய தேவை, மார்க்ஸியத்தின் அடிப்படைகளுக்காக உறுதியான, விடாப்பிடியான போராட்டத்தை நடத்த வேண்டிய தேவை, மறுபடியும் நிகழ்ச்சி நிரலுக்கு வந்தது. தங்கள் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதில் மார்க்ஸியத்தைத் தவிர்க்க முடியாதிருக்கும் வர்க்கங்களைச் சேர்ந்த மிக விரிவான பகுதியினர், முந்திய காலப்பகுதியில், மார்க்ஸியத்தை மிகவும் ஒருதலைப்பட்சமான, உருக்குலைக்கப்பட்ட பாணியில் தன்வயப்படுத்தியிருந்தனர். குருட்டுப் பாடமாய்ச் சிற்சில ''கோஷங்களையும்'' போர்த்தந்திரப் பிரச்சினைகளுக்கான சிற்சில விடைகளையும்—இந்த விடைகளுக்கான மார்க்ஸியத் தீர்ப்பளவைகளைப் புரிந்து கொள்ளாமலே—நெட்டுருபோட்டு வைத்திருந்தனர். சமுதாய வாழ்வின் பல்வேறு துறைகளிலும் ''எல்லா மதிப்புகளையும் திரும்ப மதிப்பிட'' நேர்ந்ததைத் தொடர்ந்து, மார்க்ஸியத்தின் மிகவும் கருத்தியலான, பொதுப்படையான தத்துவஞான அடிப்படைகள் ''திருத்தப் பட்டுவிடும்'' நிலைமை ஏற்பட்டது. பல்வேறுபட்ட கருத்து முதல்வாதச் சாயல்களிலான முதலாளித்துவத் தத்துவஞானத்தின் செல்வாக்கு மார்க்ஸியவாதிகளிடையே கொள்ளை நோய் போல் பரவிய மாஹ்வாதக் கருத்துக்களின் வாயிலாய் வெளியாயிற்று. புரிந்து கொள்ளப்படாமலும் சிந்தித்துத் தன்வயப்படுத்தப்படாமலும் நெட்டுருச் செய்யப்பட்ட ''கோஷங்கள்'' திருப்பித் திருப்பிக் கூறியதிலே சொற்சிலம்பத்தை வெகுவாய்ப் புழக்கத்துக்கு வந்தது. இதன் நடைமுறை விளைவு என்னவெனில், பகிரங்கமான அல்லது மறைமுகமான ''ஓத்ஸோவ்வாதம்''[88] அல்லது மார்க்ஸியத்தின் ''நியாயமான உருவே'' ஓத்ஸோவ்வாதம் என்று அங்கீகரிப்பது போன்ற முற்றிலும் மார்க்ஸியத்துக்குப் புறம்பான, சிறு முதலாளித்துவப் போக்குகள் மலிந்துவிட்டன.

இன்னொரு புறத்தில், வேஹி சஞ்சிகையின் மனப்பான்மை, கொள்கை துறந்து ஓடும் மனப்பான்மை முதலாளி வர்க்கத்தாரின் மிகவிரிவான பகுதிகளை ஆட்கொண்டுவிட்டதுடன் நில்லாமல், மார்க்ஸியத் தத்துவத்தையும் நடைமுறையையும் "நிதானமான, செம்மையான" வழி வரம்புகளுக்குள் அடக்கி வைக்க முயற்சிக்கிற போக்குக்குள்ளும் புகுந்துவிட்டது. கடைசியாக மார்க்ஸியத்தில் மிஞ்சினதெல்லாம் "படி வரிசை முறை", "தலைமைப் பாத்திரம்" முதலானவற்றைப் பற்றிய, மிதவாதத்தில் முற்றிலும் ஊறிப்போன வாதங்களில் உபயோகிப்பதற்கேற்ற வெறும் சொற்களே.

இந்த வாதங்களையெல்லாம் பரிசீலிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மார்க்ஸியம் அனுபவித்து வரும் நெருக்கடியின் ஆழத்தைப் பற்றியும், இந்தக் காலப்பகுதியில் நிலவும் ஒட்டுமொத்தமான சமுதாய-பொருளாதார நிலைமைக்கும் அந்த நெருக்கடிக்கும் இடையேயுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் நாம் மேலே குறிப்பிட்டவற்றைத் தெளிவுபடுத்த இந்த வாதங்களைக் குறிப்பிட்டாலே போதும். இந்த நெருக்கடி எழுப்பும் பிரச்சினைகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. வாய்ச்சவடால் அடித்து அவற்றை அகற்றிவிட நடக்கிற முயற்சிகள் போல் தீங்கிழைக்கும்படியான, கோட்பாடற்ற செய்கை வேறு எதுவும் இருக்க முடியாது. நெருக்கடியின் ஆழத்தையும் அதை எதிர்த்துப் போராட வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருக்கும் எல்லா மார்க்ஸியவாதிகளையும் மார்க்ஸியத்தின் தத்துவ அடிப்படைகளையும் ஆதார வரையறுப்புகளையும் பாதுகாப்பதற்காக அணி திரட்டுவதைக் காட்டிலும் முக்கியமானது எதுவும் இருக்க முடியாது; ஏனெனில் மார்க்ஸியத்தின் பலவகைப்பட்ட "சக பிரயாணிகளிடையே" முதலாளித்துவச் செல்வாக்கு பரவியுள்ளதால் எதிரெதிரான திசைகளிலிருந்து இவை திரித்திப் புரட்டப்படுகின்றன.

சமுதாய வாழ்க்கையில் விரிவான மக்கட்பகுதிகளை உணர்வுபூர்வமாகப் பங்கெடுத்துக் கொள்ளும்படி முதலாவது மூன்றாண்டுக் காலப்பகுதி விழிப்புறச் செய்தது. அவர்களில் பலர் இப்பொழுதுதான் முதல் தடவையாக உண்மையான முறையிலே மார்க்ஸியத்தைத் தெரிந்து கொள்ள

ஆரம்பித்திருக்கிருர்கள். இது சம்பந்தமாக முதலாளித்துவப் பத்திரிகைகள் முன்பு செய்ததைவிட அதிகமாகப் பொய்யான கருத்துக்களைத் தோற்றுவித்தும் மிக விரிவாகப் பரப்பியும் வருகின்றன. இந்த நிலைமைகளில் மார்க்ஸியவாதிகளின் அணிகளிலே ஏற்படும் சிதைவு மிகவும் ஆபத்தானது. தற் சமயம் இந்தச் சிதைவு தவிர்க்க முடியாதது என்பதற்குரிய காரணங்களைப் புரிந்து கொள்வதும், இந்தச் சிதைவை எதிர்த்து முரணின்றிப் போராடுவதற்காக அணிகளைத் திரட்டி ஒன்றுசேர்ப்பதும், மார்க்ஸியவாதிகளுடைய சகாப் தகரமான—இத்தொடரின் மிகவும் நேரடியான, துல்லிய மான பொருளில் அதைச் சொல்கிறேம்—பணியாகும்.

1910 டிசம்பர் 23ல்
வெளி வந்தது

நூல் திரட்டு,
தொகுதி 20
பக்கங்கள் 84-89

வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம்[89]

சோஷலிசச் சமுதாயத்தின் சிற்பியாய்ப் பாட்டாளி வர்க்கம் வகிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை மார்க்ஸின் தத்துவம் தெளிவுபடுத்துகிறது. இதுவே இத்தத்துவத்தின் முதன்மையான சிறப்பு. மார்க்ஸ் இத்தத்துவத்தை விரித்துரைத்தபின் உலகெங்கணும் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளின் போக்கு இதை மெய்ப்பித்திருக்கிறதா?

1844ல் மார்க்ஸ் இதை முதன்முதல் எடுத்துரைத்தார். 1848ல் வெளியான மார்க்ஸ் எங்கெல்ஸின் கம்யூனிஸ்டு அறிக்கை ஏற்கெனவே இத்தத்துவத்தை முழுமையாகவும் முறையாகவும் விரித்துரைத்தது; இந்நாள் வரை இதுவே தலைசிறந்த விரிவுரையாய் இருந்து வருகிறது. அதன்பின் உலக வரலாறு மூன்று முக்கியமான காலக்கூறுகளாய்த் தெளிவாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது: (1) 1848ஆம் ஆண்டுப் புரட்சியிலிருந்து பாரிஸ் கம்யூன் (1871) வரை; (2) பாரிஸ் கம்யூனிலிருந்து ருஷ்யப் புரட்சி (1905) வரை; (3) ருஷ்யப் புரட்சிக்குப்பின்.

இந்தக் காலக்கூறுகள் ஒவ்வொன்றிலும் மார்க்ஸின் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம் என்னவென்பதைக் காண்போம்.

1

முதல் காலக்கூறின் துவக்கத்தில் மார்க்ஸின் தத்துவம் எவ்வகையிலும் கோலோச்சும் நிலையில் இருக்கவில்லை. சோஷலிசத்தின் எண்ணிறந்த குழுக்கள் அல்லது போக்குகளில் ஒன்றாகவே இருந்தது. உண்மையில் கோலோச்சிக் கொண்டி

ருந்த சோஷலிச வடிவங்கள் பிரதானமாய் நமது நரோதியத்தை ஒத்தவை: வரலாற்று இயக்கத்தின் பொருள்முதல்வாத அடித்தளத்தைப் புரிந்து கொள்ளாமை, முதலாளித்துவச் சமுதாயத்தில் ஒவ்வொரு வர்க்கத்துக்குமுள்ள பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் தனித்துப் பிரிக்கும் திறனின்மை, ஜனநாயகச் சீர்திருத்தங்களின் முதலாளித்துவத் தன்மையை ''மக்கள்'', ''நீதி'', ''உரிமை'' முதலியவற்றைப் பற்றிய பல்வேறு போலி சோஷலிசச் சொற்றொடர்களைக் கொண்டு மூடிமறைத்தல் முதலான பலவற்றிலும் இவை நமது நரோதியத்தை ஒத்தவை.

மார்க்ஸியத்துக்கு முற்பட்ட சோஷலிசத்தின் இந்தக் கதம்பத்திரளான, ஆடம்பரமான வாய்வீச்சு வடிவங்கள் யாவற்றுக்கும் 1848ஆம் ஆண்டுப் புரட்சி மரண அடி கொடுத்தது. எல்லா நாடுகளிலும் இப்புரட்சி சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களையும் செயலில் வெளிப்படச் செய்து புலப்படுத்திக் காட்டிற்று. குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் பாரிசில் 1848 ஜூன் நாட்களில் தொழிலாளர்களைச் சுட்டுவீழ்த்தியதானது பாட்டாளி வர்க்கம் மட்டும் தான் இயற்கையாகவே சோஷலிசத் தன்மையுடையது என்பதை முடிவாய்ப் புலப்படுத்திக் காட்டிற்று. மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினர் எந்த வகையான பிற்போக்கையும் கண்டு அஞ்சுவதைவிட பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையைக் கண்டுதான் நூறு மடங்கு கூடுதலாய் அஞ்சி நடுங்கினர். கோழைகளாய் அண்டிப் பிழைக்கும் மிதவாதிகள் பிற்போக்கிற்கு அடிபணிந்து தண்டமிட்டனர். விவசாயி மக்கள் நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங்கள் ஒழிக்கப்பட்டதுடன் திருப்தியடைந்து ஒழுங்கின் ஆதரவாளர்களோடு சேர்ந்து கொண்டனர், சில சமயங்களில் தொழிலாளர் ஜனநாயகத்துக்கும் முதலாளித்துவ மிதவாதத்துக்கும் இடையே ஊசலாடியதோடு சரி. வர்க்கத்தன்மையற்ற சோஷலிஸம், வர்க்கத்தன்மையற்ற அரசியல் இவை குறித்த எல்லாத் தத்துவங்களும் அப்பட்டமான அபத்தமே என்பது நிரூபணமாயிற்று.

முதலாளித்துவ மாற்றங்களுக்குரிய இந்த வளர்ச்சியைப் பாரிஸ் கம்யூன் (1871) நிறைவுறச் செய்தது; வர்க்க உறவுகள் மிகவும் ஒளிவுமறைவற்ற உருவில் காட்சி தரும்

அரசியலமைப்பு வடிவமான குடியரசு உறுதி பெற பாட்டாளி வர்க்கத்தின் வீரதீரம் மட்டுமே காரணம்.

ஏனைய எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் மேலும் சிக்கலான, நிறைகுறையான வளர்ச்சி இதே விளைவுக்கு இட்டுச் சென்றது—முதலாளித்துவச் சமுதாயம் திட்டவட்டமான உருப் பெற்றுவிட்டது. முதல் காலக்கூறின் (1848-71) கடைப் பகுதியில், புயல்களும் புரட்சிகளுமாயிருந்த இப் பகுதியில், மார்க்ஸியத்துக்கு முற்பட்ட சோஷலிஸம் இறந்து போயிற்று. முதலாவது அகிலம் (1864-72), மற்றும் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி எனும் சுயேச்சையான பாட்டாளி வர்க்கக் கட்சிகள் உதித்தெழுந்தன.

2

இரண்டாவது காலக்கூறு (1872-1904) அதன் ''அமைதியான'' தன்மையால், புரட்சிகள் இல்லாத நிலையால் முதல் காலக் கூறினின்று வேறுபடுத்திக் காட்டப் பெற்றது. மேற்குலகு முதலாளித்துவப் புரட்சிகளை நடத்தி முடித்துவிட்டது. கிழக்குலகு இன்னும் அந்த மட்டத்துக்கு உயர்ந்தாகவில்லை.

வரவிருந்த மாற்றங்களுக்காக ''அமைதி வழியில்'' தயாரிப்புகள் செய்து கொள்ளும் கட்டத்தினுள் மேற்குலகு அடியெடுத்து வைத்தது. அடிப்படையில் பாட்டாளி வர்க்கத் தன்மையுள்ள சோஷலிஸ்டுக் கட்சிகள் எங்கும் அமைக்கப்பட்டன. இவை முதலாளித்துவ நாடாளுமன்ற முறையை உபயோகித்துக் கொள்ளவும் தமக்குச் சொந்தமான நாளேடுகளையும் கல்வி போதனை நிலையங்களையும் தொழிற் சங்கங்களையும் கூட்டுறவுக் கழகங்களையும் நிறுவிக் கொள்ளவும் கற்றுக் கொண்டன. மார்க்ஸின் தத்துவம் முழுநிறைவான வெற்றிபெற்றுப் பரவத் தொடங்கிற்று. பாட்டாளி வர்க்கத்தின் சக்திகளை ஆய்ந்து தேர்ந்து அணிதிரட்டும் நிகழ்ச்சிப்போக்கும், வரவிருந்த போராட்டங்களுக்கான அதன் தயாரிப்பும், மெதுவாக இருந்தாலும் இடையறாது முன்னேறின.

மார்க்ஸியத்தின் தத்துவார்த்த வெற்றியால் கட்டாயப் படுத்தப்பட்ட அதன் பகைவர்கள் மார்க்ஸியவாதிகளாய்

மாறுவேடமிட்டுக் கொண்டனர்—வரலாற்றின் இயக்கவியல் போக்கு அத்தகையதாய் இருந்தது. உள்ளுக்குள் உளுத்துப் போய்விட்ட மிதவாதமானது சோஷலிஸ்டுச் சந்தர்ப்ப வாதத்தின் வடிவில் தனக்குப் புத்துயிர் அளித்துக் கொள்ள முயன்றது. மாபெரும் போர்களுக்காக சக்திகளை ஆயத்த மாக்கிக் கொள்வதற்குரிய இந்தக் காலக்கூறு, இந்தப் போர் கள் கைவிடப்படுதலைக் குறிப்பதாய் அவர்கள் வியாக்கியானம் செய்தனர். கூலி அடிமை முறையை எதிர்த்துப் போராடு வதற்கு அடிமைகளின் நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பாடு, இந்த அடிமைகள் சுதந்திரத்துக்கான தமது உரிமையை அற்பக் காசுக்காக விற்றதைக் குறிப்பதாய் அவர்கள் கொண்டனர். கோழைத்தனமாய் அவர்கள் ''சமூக அமைதி'' (அதாவது அடிமையுடைமையாளர்களுடன் அமைதி), வர்க்கப் போராட்டத்தைக் கைவிடுதல் முதலானவற்றை உபதேசித்தனர். நாடாளுமன்றத்தில் சோஷலிஸ்டு உறுப் பினர்களிடையிலும், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பல்வேறு அதிகாரிகளிடையிலும், ''அனுதாபங் கொண்ட'' அறிவுத்துறையினரிடையிலும் அவர்கள் மிகப் பல ஆதர வாளர்களைப் பெற்றிருந்தனர்.

3

ஆனால் சந்தர்ப்பவாதிகள் ''சமூக அமைதியைப்'' புகழ்ந் தும் ''ஜனநாயகத்தில்'' புயல்களுக்கு அவசியமில்லை என்று பேசியும் மனநிறைவெய்தி முடித்தார்களோ இல்லையோ, மாபெரும் உலகப் புயல்களுக்கான ஒரு புதிய தோற்றுவாய் ஆசியாவிலே உதித்தெழுந்தது. ருஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனாவிலும் புரட்சிகள் மூண்டன. புயல்களுக்கும் ஐரோப்பாவில் அவற்றின் ''எதிரொலிகளுக்கும்'' உரிய ஒரு சகாப்தத்தில்தான் இப்பொழுது நாம் வாழ்ந்து வருகிறோம். மாபெரும் சீனக் குடியரசுக்கு—''நாகரிகமடைந்த'' பல்வேறு கழுதைப்புலி களும் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டு இன்று இக்குடியரசை எதிர்த்துக் கிளம்புகின்றன—ஏற்படும் கதி எதுவாயினும், உலகில் எந்த சக்தியாலும் ஆசியாவில் பழைய பண்ணையடிமை நிலையைத் திரும்பவும் நாட்டவோ,

ஆசியநிலே, அரை-ஆசியநிலே நாடுகளில் பெருந்திரளான மக்களின் வீரம் செறிந்த ஜனநாயகத்தை அழித்தொழிக்க வோ முடியப் போவதில்லே.

வெகுஜனப் போராட்டத்துக்குத் தயார் செய்வதற்கும் அதை வளர்த்துச் செல்வதற்குமான நிலேமைகளில் கவனம் செலுத்தாமலிருந்த சிலர், ஐரோப்பாவில் முதலாளித்துவத்துக்கு எதிரான தீர்மானகரமான போராட்டம் நீண்ட காலத்துக்குத் தள்ளிப்போடப்பட்டு வந்ததிஞல் நம்பிக்கையிழந்த நிலேக்கும் அராஜகவாதத்துக்கும் இழுத்துச்செல்லப் பட்டுவிட்டனர். அராஜகவாத நம்பிக்கைவறட்சி எவ்வளவு கிட்டப்பார்வையானது, நெஞ்சு உரமில்லாதது என்பதை இப்பொழுது நாம் காண முடியும்.

எண்பது கோடி மக்கள் தொகை கொண்ட ஆசியா இதே ஐரோப்பிய இலட்சியங்களுக்கான போராட்டத்திஞுள் ஈர்க்கப்பட்டிருக்கும் இவ்வுண்மை நமக்கு நன்னம்பிக்கையை ஊட்டி ஆர்வமளித்திட வேண்டும், நம்பிக்கை வறட்சியையல்ல.

ஆசியப் புரட்சிகள் மிதவாதத்தின் திராணியின்மையையும் இழிநிலேயையும், ஜனநாயகத் துடிப்புள்ள வெகுஜனங்களுடைய தானியங்குநிலேயின் சிறப்பான முக்கியத்துவத்தையும், பாட்டாளி வர்க்கத்துக்கும் எல்லா வகையான முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் இடையிலுள்ள எடுப்பான பிரிவினேக் கோட்டையும் திரும்பவும் நமக்குக் காட்டியுள்ளன. ஐரோப்பா, ஆசியா இவை இரண்டின் அனுபவத்துக்குப் பின், வர்க்கத்தன்மையற்ற அரசியல் குறித்தும் வர்க்கத் தன்மையற்ற சோஷலிஸம் குறித்தும் பேசுகிறவர் யாராயிருந்தாலும் அவர் கூண்டிலே வைத்து ஆஸ்திரேலியக் கங்காரு பக்கத்தில் கண்காட்சியில் காட்டப்பட வேண்டியவரே ஆவார்.

ஆசியாவை அடுத்து ஐரோப்பாவும்—ஆசிய வழியில் இல்லாவிட்டாலுங்கூட—அதிரத் தொடங்கிவிட்டது. 1872-1904ஆம் ஆண்டுகளின் ''அமைதிக்'' காலக்கூறு இனி ஒரு போதும் திரும்ப வழியின்றிக் கடந்து சென்றுவிட்டது. உயர்ந்துவிட்ட வாழ்க்கைச் செலவும் டிரஸ்டுகளின் கொடுங்கோன்மையும் என்றுமே கண்டிராத அளவுக்குப் பொருளாதாரப் போராட்டத்தைக் கூராக்கி வருகின்றன. இந்த நிலேமை, மிதவாதத்தால் மிக அதிகமாய்க் கெடுக்கப்பட்

டிருக்கும் பிரிட்டிஷ் தொழிலாளர்களையுங்கூட இயக்கத்தில் செயல்பட வைத்திருக்கிறது. ''வைரம் பாய்ந்த'' பிற்போக்கு வாத முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ நாடான ஜெர்மனி யிலுங்கூட அரசியல் நெருக்கடி சூடேறி வருவதைக் காண் கிறோம். ஜன்னிவேகங் கொண்ட படைக்கலப் பெருக்கமும், ஏகாதிபத்தியக் கொள்கையும் தற்கால ஐரோப்பாவை வெடிமருந்துப் பீப்பாயையே அதிகம் ஒத்த ''சமூக அமைதிச்'' சகாப்தமாக மாற்றி வருகின்றன. அதே நேரத்தில் எல்லா முதலாளித்துவக் கட்சிகளும் அழுகிக் கெடும் நிகழ்ச்சிப் போக்கும் பாட்டாளி வர்க்கத்தின் முதிர்ச்சியும் திடமாக முன்னேறி வருகின்றன.

மார்க்ஸியம் தோன்றியது முதல் உலக வரலாற்றின் மூன்று பெரும் காலக்கூறுகளில் ஒவ்வொன்றும் மார்க்ஸியத் துக்குப் புதிய உறுதிப்பாடும் புதிய வெற்றிகளும் கிட்டச் செய்திருக்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவம் என்ற முறையில் மார்க்ஸியத்துக்கு வரவிருக்கும் வரலாற்றின் காலக்கூறினில் இன்னும் பெரிய வெற்றி கிட்டப் போகிறது.

1913 மார்ச் 1ல்
வெளி வந்தது

நூல் திரட்டு,
தொகுதி 23,
பக்கங்கள் 1-4

சோஷலிஸ்ப் புரட்சியும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையும் (ஆய்வுரைகள்)

எனும் கட்டுரையிலிருந்து

1. ஏகாதிபத்தியமும் சோஷலிஸமும் ஒடுக்கப்படும் தேசங்களின் விடுதலேயும்

ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் உச்சக் கட்டம். மிக முன்னேறிய நாடுகளில் மூலதனமானது தேசிய அரசுகளின் எல்லேகட்கு அப்பாலும் விரிந்து, போட்டிக்குப் பதிலாக ஏகபோகத்தை நாட்டி, சோஷலிஸத்தை அடைவதற்கான புறநிலே முதனிலேகள் அனைத்தையும் தோற்றுவித்திருக்கிறது. ஆகவே மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் முதலாளித்துவ அரசாங்கங்களேக் கவிழ்த்து, முதலாளி வர்க்கத்தின் உடைமைகளேப் பறிமுதல் செய்வதற்கான பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போராட்டம் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ளது. வர்க்க முரண்பாடுகளேப் பிரம்மாண்டமான அளவில் தீவிரப்படுத்துவது மூலமாகவும், பொருளாதாரத் துறையிலும்—டிரஸ்டுகள், உயர்வான வாழ்க்கைச் செலவு—, அரசியல் துறையிலும்—ராணுவ ஆதிக்கம் வளர்வது, முன்னேவிட அடிக்கடி நிகழும் போர்கள், முன்னிலும் அதிக பலம் வாய்ந்த பிற்போக்குச் சக்திகள், தேசிய ஒடுக்கல் முறையையும் காலனிக் கொள்ளேயையும் மேலும் வலுப்படுத்தி விரிவுபடுத்துவது—ஒருங்கே பொதுமக்களுடைய வாழ்க்கை நிலேமைகளே மோசமாக்குவதின் மூலமாகவும் ஏகாதிபத்தியம் இப்போராட்டத்தை நடத்தும்படி பொதுமக்களே நிர்ப்பந்திக்கிறது. வெற்றி பெற்ற சோஷலிஸம் முழுமையான ஜனநாயகத்தைக் கட்டாயம் ஏற்படுத்த வேண்டும்; ஆகவே தேசங்களிடையில் முழுச் சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு நில்லாமல் ஒடுக்கப்படும் தேசங்களின் சுயநிர்ணய உரிமை, அதாவது தடையேதுமில்லாமல் சுதந்திரமாக அரசியல் ரீதியில் பிரியும் உரிமை நிலவும்படியும் செய்ய வேண்டும். அடிமைப்பட்ட

தேசங்களை விடுதலை செய்வோம் என்றும், அவைகளுடன் சுதந்திரமான, ஐக்கியத்தின் அடிப்படையில்—சுதந்திரமான ஐக்கியம் என்ற சொல் பிரியும் உரிமையில்லாவிடில் பொய்யானது—உறவுகளை அமைத்துக் கொள்வோம் என்றும் தற்போது மட்டுமின்றி, புரட்சியின் போதும் புரட்சி வெற்றி பெற்ற பின்னரும் தம் செயல்களனைத்திலும் நிரூபிக்காத சோஷலிஸ்டுக் கட்சிகள் சோஷலிஸத்துக்குத் துரோகம் செய்பவை ஆகும்.

ஜனநாயகம் என்பதும் அரசின் ஒருவித வடிவம்தான். அரசு மறையும் பொழுது இதுவும்தான் மறைந்து போகும்; ஆனால் இறுதி வெற்றி பெற்ற, திடமாக அமைக்கப்பட்ட சோஷலிஸத்திலிருந்து முழுநிறைவான கம்யூனிஸத்துக்கு மாற்றம் நிகழும் பொழுதுதான் இது நடைபெறும்.

2. சோஷலிஸப் புரட்சியும் ஜனநாயகத்துக்கான போராட்டமும்

சோஷலிஸப் புரட்சி என்பது ஒரே ஒரு தனிச்செயல் அல்ல; ஒரு முனையிலான ஒரே ஒரு போரும் அல்ல; கூர்மையான வர்க்கச் சச்சரவுகள் கொண்ட ஒரு சகாப்தம் அது; எல்லா முனைகளிலும், அதாவது பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் அனைத்திலும் நடக்கும் தொடர்ச்சியான நீண்ட போராட்டங்கள் கொண்டது அது; முதலாளி வர்க்கத்தின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதில்தான் அப்போர்கள் முடிவுபெற முடியும். ஜனநாயகத்துக்கான போராட்டம் சோஷலிஸப் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசைதிருப்பிவிடுமென்றோ அல்லது அப்புரட்சியை மறைத்து, மங்கச் செய்துவிடுமென்றோ கருதுவது ஒரு பெரிய தவறு. அதற்கு மாறாக, முழுமையான ஜனநாயகத்தைக் கையாளாத சோஷலிஸ வெற்றி எவ்வாறு இருக்க முடியாதோ அதேபோல ஜனநாயகத்துக்காக எல்லா முனைகளிலும், முரண்பாடுகளின்றி, புரட்சிகரப் போராட்டம் நடத்தாமல் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றி கொள்ளத் தன்னைத் தயார் செய்து கொள்ள முடியாது.

தேசங்களின் சுயநிர்ணயம் ஏகாதிபத்தியத்தின் கீழ் ''நிறைவேற்ற முடியாதது'' என்றோ ''பொய்த் தோற்றம்''

என்றே கூறி, ஜனநாயக வேலைத்திட்டத்தின் ஒரு பிரிவாகிய அதை நீக்கி விடுவதும் கூடப் பெரிய தவறுகிவிடும். முதலாளித்துவத்தின் கட்டமைப்புக்குள் தேசங்களின் சுயநிர்ணய உரிமை நிறைவேற்ற முடியாதது என்ற வாதத்தை எவ்வித நிபந்தனைக்கும் உட்பட்டதல்ல என்ற பொருளாதார அர்த்தத்திலோ அல்லது நிபந்தனைக்குட்பட்டது என்ற அரசியல் அர்த்தத்திலோ புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது அர்த்தத்தில் எடுத்துக் கொண்டால் அது தத்துவார்த்தக் கண்ணேட்டத்தில் அடிப்படையிலேயே தவறுனது. முதன் முதலாக, அந்த அர்த்தத்தில் உழைப்புப் பணம் அல்லது நெருக்கடிகளை ஒழித்தல் முதலியன முதலாளித்துவத்தின் கீழ் நிறைவேற்ற முடியாதவை. தேசங்களின் சுயநிர்ணயமும் அதே மாதிரி நிறைவேற்ற முடியாதது என்பது முழுக்க முழுக்கத் தவறு. இரண்டாவதாக, இந்தப் பொருளில் ''நிறைவேற்ற முடியாதது'' என்கிற வாதத்தை மறுப்பதற்கு 1905ல் ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்ததே, அந்த ஒரு உதாரணமே போதும். மூன்ருவதாக, ஜெர்மனி, பிரிட்டன் போன்ற அரசுகளுக்கு இடையிலான அரசியல் உறவுகளிலும் பொதுப் போர்த்தந்திரமுறை உறவுகளிலும் ஏதாவது சிறிய மாறுதல் ஏற்பட்டால்கூட போலந்து, இந்தியா முதலிய நாடுகள் இன்றே நாளையோ புதிய அரசுகளாக உருவாவது ''நிறைவேற்றக் கூடியது'' ஆகும் என்பதை மறுப்பது மடமை ஆகும். நான்காவதாக, விரிந்து பரந்து துடித்துக் கொண்டிருக்கும் நிதி மூலதனமானது எந்த ஒரு நாட்டினுடையவும், ''சுயேச்சையான'' நாட்டினதுங்கூட, சுதந்திரமிக்க ஜனநாயக அல்லது குடியரசு அரசாங்கத்தையும், அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளையும் ''சுதந்திரமாக'' விலைகொடுத்து வாங்கவோ அல்லது கைக் கூலி கொடுத்து வசப்படுத்தவோ முடியும். அரசியல் ஜனநாயகத் துறையில் எந்தவிதமான சீர்திருத்தங்களையும் செய்வதன் மூலம் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்தை, பொதுவாக மூலதனத்தின் ஆதிக்கத்தை, அகற்றிவிட முடியாது; சுயநிர்ணயம் என்பது முழுமையாகவும் பிரத்தியேகமாகவும் இத்துறையைச் சேர்ந்தது. அரசியல் ஜனநாயகம் என்பது ஒடுக்குமுறைக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் உரிய முன்னைவிடச் சுதந்திரமானதும், பரவலானதும், தெளிவானதுமான

வடிவமாக இருக்கிறதின் முக்கியத்துவத்தை நிதி மூலதனத்தின் ஆதிக்கம் சிறிதும் சிதைப்பதில்லே. எனவே முதலாளித்துவத்தின் கீழ் அரசியல் ஜனநாயகத்துக்கான கோரிக்கைகளில் ஒன்று பொருளாதார வழியில் ''நிறைவேற்றப்பட முடியாதது'' என்று கூறும் வாதங்கள் அனைத்தையும் சுருக்கினல் அவை முதலாளித்துவம், அரசியல் ஜனநாயகம் ஆகியவற்றின் பொதுவான, அடிப்படை உறவுமுறைகளை மொத்தத்தில் தத்துவார்த்த வழியில் தவருக வரையறை செய்வதாகின்றன.

இரண்டாவது அர்த்தத்தில் கூறப்படும் வன்கூற்று முற்றுப்பெருமலும் சரியாயில்லாததாகவும் இருக்கிறது. இதற்குக் காரணம், தேசங்களின் சுயநிர்ணய உரிமை மட்டுமின்றி, அரசியல் ஜனநாயகத்துக்கான எல்லா அடிப்படைக் கோரிக்கைகளுமே ஏகாதிபத்தியத்தின் கீழ் ஓரளவுக்குத்தான் ''நிறைவேற்றப்படக் கூடியது''; அதுவும் ஒரு முழுமையற்ற திரிந்த முறையில், விதிவிலக்கு என்ற வகையில் (உதாரணம்: 1905ல் ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்தது) மட்டுமே அவை ''நிறைவேற்றப்படக் கூடியது''. காலனிகள் உடனடியாக விடுதலை பெற வேண்டும் என்று எல்லாப் புரட்சிகரச் சமூக-ஜனநாயகவாதிகளும் கோருகிருர்களே அது கூட, வரிசைத் தொடரான புரட்சிகள் இல்லாமல் முதலாளித்துவத்தின்கீழ் ''நிறைவேற்ற முடியாததே.'' ஆனல் இதைக் காரணமாகக் கொண்டு சமூக-ஜனநாயகவாதிகள் இக்கோரிக்கைகள் அனைத்துக்காகவும் உடனடியாக, மிகவும் உறுதியாகப் போராடுவதை விட்டுவிட வேண்டும் என்ருகிவிடாது—அப்படி விட்டுவிடுவதானது முதலாளி வர்க்கத்தின், பிற்போக்கின் நோக்கத்தை ஈடேற்றுவதாகும்; ஆனல் அதற்கு மாருக, இக்கோரிக்கைகளை முறையாக வகுத்து புரட்சிகரமான முறையில்—சீர்திருத்தவாத முறையில் அல்லாமல்—அவைகளை நிறைவேற்றுவது அவசியம் என்ருகின்றது. முதலாளித்துவச் சட்டமுறை வரம்புக்குள் நாம் கட்டுண்டு விடக் கூடாது, அவற்றை உடைத்தெறிய வேண்டும்; நாடாளுமன்றத்தில் வாய்ச்சொல் கண்டனத்தோடு, உரைகள் நிகழ்த்துவதோடு திருப்தி அடைந்துவிடக் கூடாது; பொது மக்களை முடிவு காணத்தக்க போராட்டங்களில் ஈடுபடும்படி ஈர்க்க வேண்டும்; ஒவ்வொரு அடிப்படை

ஜனநாயகக் கோரிக்கையையும் விரிவாக்கித் தீவிரப்படுத்தி வர வேண்டும்; முதலாளி வர்க்கத்தின் மீது நேரடியான பாட்டாளி வர்க்கத் தாக்குதல் வரை, அதாவது முதலாளி வர்க்கத்தின் உடைமைகளைப் பறிமுதல் செய்யும் சோஷலிஸ்டுப் புரட்சி வரை இது நடைபெற வேண்டும். ஒரு பெரிய வேலைநிறுத்தம், அல்லது தெரு ஆர்ப்பாட்டம், அல்லது பட்டினிக் கலகம், அல்லது இராணுவ எழுச்சி, அல்லது காலனிப் புரட்சி ஆகிய எந்த ஒரு காரணத்தாலும் சோஷலிஸப் புரட்சி வெடித்தெழலாம் என்பதுமட்டுமல்ல; டிரைஃபஸ் வழக்கு[90], ஸாபெர்ன் சம்பவம்[91] போன்ற நெருக்கடியின் விளைவாகவோ ஒரு ஒடுக்கப்படும் தேசம் பிரிந்து போவது பற்றிய பொது வாக்கெடுப்பு சம்பந்தமாகவோ, மற்றபடியோ அது வெடித்தெழலாம்.

ஏகாதிபத்தியத்தின்கீழ் தேசிய ஒடுக்கல்முறை தீவிரமடைகிறது என்பதற்காக, தேசங்கள் பிரிந்து செல்லும் உரிமைக்கான போராட்டத்தை—இதைக் ''கற்பனை'' என்கிருர்கள் முதலாளிவர்க்கத்தினர்—சமூக-ஜனநாயகவாதிகள் நிராகரிக்க வேண்டும் என்று பொருள் அல்ல; மாறாக, முதலாளி வர்க்கத்துக்கெதிரான பொதுஜன நடவடிக்கைக்கும், புரட்சிகரத் தாக்குதல்களுக்கும் ஆதாரங்களாக இத்துறையில் எழும் பூசல்களையும் கூட மேலும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவமும் கூட்டாட்சியுடன் அதன் உறவும்

தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் வழியில் சுதந்திரம் பெறும் உரிமையை, ஒடுக்கும் தேசத்திலிருந்து அரசியல் வழியில் சுதந்திரமாகப் பிரிந்து போகும் உரிமையைப் பிரத்தியேகமாகக் குறிக்கிறது. குறிப்பாகச் சொன்னால், அரசியல் ஜனநாயகத்துக்குரிய இந்தக் கோரிக்கையின் உட்பொருள், பிரிந்து போவதற்காகக் கிளர்ச்சி செய்ய முழுச் சுதந்திரம் வேண்டும் என்பதும், பிரிந்துபோகும் தேசம் பிரிந்து போவது பற்றிப் பொது வாக்கெடுப்பு எடுப்பதற்கான சுதந்திரம் வேண்டும் என்பதும்தான்.

எனவே இந்தக் கோரிக்கையும், பிரிய வேண்டும், துண்டாக வேண்டும், சிறு அரசுகள் அமைய வேண்டும் என்கிற கோரிக்கையும் ஒன்றல்ல. எல்லாத் தேசிய ஒடுக்கலையும் எதிர்க்கும் போராட்டத்தின் முரணற்ற வெளியீட்டைத்தான் அது குறிக்கிறது. ஒரு ஜனநாயக அரசமைப்பு பிரிந்துபோவதற்கான முழுச் சுதந்திரத்தை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அளித்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பிரிவினைக்கான விருப்பம் தெரிவிப்பதும் அதில் ஆர்வம் காட்டுவதும் நடைமுறையில் குறையும்; ஏனென்றால் பொருளாதார முன்னேற்றம், மக்களின் நலன்கள் என்ற இரு நோக்கு நிலைகளினின்று பார்த்தாலும் பெரிய அரசுகளில் மறுக்க முடியாத அனுகூலங்கள் இருக்கின்றன; மேலும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு இந்த அனுகூலங்களும் அதிகரிக்கின்றன. சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதும், ஒரு கோட்பாடு என்ற முறையில் கூட்டாட்சியை ஏற்றுக் கொள்வதும் ஒன்று அல்ல. ஒருவர் அக்கோட்பாட்டை உறுதியாக எதிர்ப்பவராகவும், ஜனநாயக மையப்பாட்டை ஆதரிப்பவராகவும் இருக்கலாம்; ஆயினும், முழுமையான ஜனநாயக மையப்பாட்டை அடைவதற்குரிய ஒரே வழி என்ற முறையில் தேசங்களின் ஏற்றத் தாழ்வுகளைவிடக் கூட்டாட்சி நல்லதென்று விரும்பலாம். இதே கண்ணோட்டத்துடன்தான் மையவாதியான மார்க்ஸ், ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை வன்முறையில் அடிமைப்படுத்தி வைத்திருந்ததைவிட அயர்லாந்தும் இங்கிலாந்தும் சேர்ந்த ஒரு கூட்டாட்சிகூடத் தேவலை என்று கருதினார்.

சோஷலிஸத்தின் குறிக்கோள் மனித சமுதாயம் சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிந்துள்ளதையும் தேசங்களின் எவ்வடிவத்திலுள்ள தனிமை நிலையையும் முடிவுக்குக் கொண்டுவருவது மட்டுமல்ல, தேசங்களை மேலும் நெருங்கி வரச் செய்வது மட்டுமல்ல, அவற்றை ஒருமைப்படுத்துவதும் அதன் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காகத்தான் நாம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். ஒருபுறம், ''பண்பாடு, தேசியத் துறைகளில் சுயாட்சி[92]'' என்பதைப் பற்றி ரென்னர், ஓட்டோ பௌவர் ஆகியவர்களது கருத்தின் பிற்போக்குத் தன்மையை மக்களுக்கு விளக்க வேண்டும்; மறுபுறம், பொதுவான தெளிவற்ற சொற்றொடர்

களிலல்ல, அர்த்தமற்ற வாய்வீச்சுகளிலல்ல, சோஷலிஸத்தை அடைந்த பின்னர் கவனிக்க வேண்டிய பிரச்சினை என்று அதை ''ஒதுக்கி வைத்துவிடும்'' முறையிலல்ல, ஒடுக்கும் தேசங்களிலுள்ள சோஷலிஸ்டுகளின் பாசாங்குத் தனத்தை யும் கோழைத் தனத்தையும் தனிவகையில் கவனித்துக் கொண்டு தெளிவாகவும் கூர்மையாகவும் வரையறுக்கப் பட்ட அரசியல் வேலைத்திட்டத்தில் ஒடுக்கப்பட்ட தேசங் களின் விடுதலையைக் கோர வேண்டும். எவ்வாறு ஒடுக்கப் படும் வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற இடைநிலைக் கால கட்டத்தின் மூலமாகத்தான் வர்க்கங்களை மனித சமுதாயம் ஒழிக்க முடியுமோ அதேபோல, ஒடுக்கப்படும் எல்லாத் தேசங்களுக்கும் முழு விடுதலை என்ற—அதாவது, பிரிந்து போவதற்கான சுதந்திரம் உண்டு என்ற—இடைநிலைக் கால கட்டத்தின் மூலம்தான் தேசங்கள் தவிர்க்க முடியாத வகையில் ஒருமைப்படுவது என்ற நிலையை அடைய முடியும்.

4. தேசங்களின் சுயநிர்ணயப் பிரச்சினையைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கண்ணோட்டத்தில் எடுத்துரைத்தல்

தேசங்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை மட்டுமின்றி, நமது குறைந்தபட்ச ஜனநாயக வேலைத்திட்டத்தின் எல்லா அம்சங்களையும்கூடச் சிறு முதலாளி வர்க்கத்தினர் நீண்ட காலத்திற்கு முன்பே, பதினேழாம், பதினெட்டாம் நூற் றாண்டுகளிலேயே முன்வைத்திருக்கிறார்கள். மேலும் கற்பனை முறையில்தான் இன்னமும் அவற்றை எல்லாம் முன்வைத்து வருகிறார்கள்; ஏனென்றால் வர்க்கப் போராட்டத்தையும், ஜனநாயகத்தின் கீழ் அது தீவிரமடைதலையும் அவர்கள் காணத் தவறுகிறார்கள், ''அமைதியான'' முதலாளித்துவத் தில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஏகாதிபத்தி யத்தின் கீழ் சம உரிமையுடைய தேசங்கள் அமைதியான முறையில் ஐக்கியமுறுதல் என்ற கற்பனைத் திட்டத்தின் துல்லியமான இயல்பு இதுதான். இந்தக் கற்பனைத்திட்டம் மக்களை ஏமாற்றுகிறது, காவுத்ஸ்கியின் சீடர்களால் ஆதரிக்

கப்படுகிறது. இந்தச் சிறு முதலாளித்துவ, சந்தர்ப்பவாதக் கற்பனைத் திட்டத்துக்கு எதிராக, ஏகாதிபத்தியத்தின்கீழ் ஒடுக்கும் தேசங்கள், ஒடுக்கப்படும் தேசங்கள் என்று பிரிக்கப்படுவது அடிப்படையானது, கவனிக்கத்தக்க முக்கியம் வாய்ந்தது, தவிர்க்க முடியாதது என்ற கூற்றை சமூக-ஜனநாயகவாதிகளின் வேலைத்திட்டம் எடுத்துரைக்க வேண்டும்.

பிற நாடுகளைக் கைப்பற்றி இணைத்துக் கொள்வதற்கெதிராகவும், பொதுப்படையாகத் தேசங்களின் சம உரிமைகளுக்கு ஆதரவாகவும் அமைதிவாதியாகிய முதலாளி வர்க்கத்தினன் வழக்கமாகத் திரும்பத் திரும்பச் சொல்லக் கூடிய அதே பொதுவான, ஒரே மாதிரியான சொற்களை ஒடுக்கும் தேசங்களின் பாட்டாளி வர்க்கம் தானும் கூறுவதுடன் நின்றுவிடக்கூடாது. தேசிய ஒடுக்குமுறையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு அரசின் **எல்லைகளைப்** பற்றிய பிரச்சினையில்—ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துக்கு இப்பிரச்சினை மிகவும் ''கசப்பானது''—பாட்டாளி வர்க்கம் மௌனமாயிருக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட அரசின் எல்லைகட்குள் ஒடுக்கப்படும் தேசங்கள் பலவந்தமாகப் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் போராட வேண்டும், அதாவது சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டும். ''தங்களது'' தேசத்தினால் ஒடுக்கப்படும் காலனிகளுக்கும் தேசங்களுக்கும் அரசியல்வழியில் பிரிந்து போகும் சுதந்திரம் தரப்பட வேண்டும் என்று பாட்டாளி வர்க்கம் கோர வேண்டும். இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியம் என்பது வெற்று வார்த்தையாக இருக்கும்; ஒடுக்கப்படும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்கட்கும் இடையில் நம்பிக்கையோ அல்லது வர்க்க ஒருமைப்பாடோ அப்பொழுது சாத்தியமில்லை; சீர்திருத்தவாதிகளும் காவுத்ஸ்கிவாதிகளும் சுயநிர்ணயத்தை ஆதரித்து, அதே சமயத்தில் ''தமது சொந்த'' தேசத்தினால் ஒடுக்கப்பட்டு, ''தம்முடைய சொந்த'' அரசுக்குள் பலவந்தமாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள தேசங்களைப் பற்றி மௌனமாக இருக்கிறார்களே, இவர்களின் பாசாங்குத்தனமும் அப்பொழுது அம்பலப்படுத்தப்படாமல் இருந்துவிடும்.

மற்றொரு பக்கத்தில், ஒடுக்கப்படும் தேசத்தின் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கும் தேசத்தின் தொழிலாளர்களுக்கும் இடையிலான முழுமையான, நிபந்தனையற்ற ஒற்றுமையை —நிறுவன ஒழுங்கமைப்பு ஒற்றுமை உட்பட—ஆதரித்துக் காத்துச் செயல்படுத்துவது ஒடுக்கப்படும் தேசத்தைச் சேர்ந்த சோஷலிஸ்டுகள் குறிப்பாகச் செய்ய வேண்டியது. இதைச் செய்யாமல், பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான கொள்கையை ஆதரித்துக் காப்பது சாத்தியமில்லை; முதலாளி வர்க்கத்தினரின் எல்லாவிதமான சூழ்ச்சிகளையும் துரோகத்தையும் ஏமாற்றுவித்தைகளையும் எதிர்த்து மற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துடன் தங்களது வர்க்க ஒருமைப்பாட்டை ஆதரித்துக் காப்பதும் சாத்தியமில்லை. தொழிலாளர்களை ஏமாற்றுவதற்காகத் தேசிய விடுதலைபற்றிய கோஷங்களை ஒடுக்கப்படும் தேசங்களின் முதலாளி வர்க்கத்தினர் விடாப்பிடியாக உபயோகித்து வருகிறார்கள்; ஆதிக்கம் செலுத்தும் தேசத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்குத் தனமான ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்காகத் தங்களது உள் நாட்டுக் கொள்கையில் இக்கோஷங்களை அவர்கள் பயன் படுத்துகிறார்கள் (உதாரணமாக: யூதர்களையும் உக்ரேனியர்களையும் ஒடுக்குவதற்காக ஆஸ்திரியாவிலும் ருஷ்யாவிலும் உள்ள போலந்துக்காரர்கள் பிற்போக்குடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்); தங்களது அயல்நாட்டுக் கொள்கையில், தங்களது கொள்ளைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் போட்டி ஏகாதிபத்திய அரசுகளுள் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள அவர்கள் முயல்கிறார்கள் (சிறு பால்கன் அரசுகளின் கொள்கைப் போக்கு, முதலியன).

ஒரு ஏகாதிபத்திய நாட்டுக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தை இன்னொரு ''பெரிய'' வல்லரசு தனது சொந்த ஏகாதிபத்திய நோக்கங்களுக்காகக் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். இதனால் சமூக-ஜனநாயகவாதிகள் தேசங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுக்க மாட்டார்கள். இதேபோல அரசியல் ஏமாற்றுக்காகவும் நிதிக் கொள்ளைக்காகவும் பல சமயங்களில் முதலாளித்துவ வர்க்கத்தினர் குடியரசுக் கோஷங்களைப் பயன்படுத்துகிறார்கள் (உதாரணம்: லத்தீன்

நாடுகளில்). ஆனால் இந்தக் காரணத்துக்காக சமூக-ஜனநாயகவாதிகள் தங்களது குடியரசுக் கொள்கையை விட்டுவிடப் போவதில்லை.*

1916 ஜனவரி-பிப்ரவரியில் எழுதப் பெற்றது

நூல் திரட்டு, *தொகுதி 27, பக்கங்கள் 252-258*

---

* ''தாய்நாட்டைப் பாதுகாப்பது என்பதை'' இது உட்கிடையாகக் கொண்டுள்ளது என்ற காரணத்தைக் கொண்டு சுயநிர்ணய உரிமையை மறுப்பது முற்றிலும் நகைக்கத் தக்கது என்பது சொல்லாமலே விளங்கும். ''தாய்நாட்டைப் பாதுகாப்பதைச்'' சரியென்று சாதிப்பதற்கென்று, 1914-16ம் ஆண்டு காலத்து சமூக-தேசியவெறியர்கள் ஜனநாயகக் கோரிக்கைகளைப்பற்றியும் (உதாரணமாக, அதன் குடியரசுத் தன்மை பற்றி) தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான எப்போராட்டத்தையும் வகுப்பது பற்றியும் பேசும் பொழுதெல்லாம் அதே உரிமையுடன், அதாவது அதேபோன்று விளையாட்டாகப் பேசுகின்றனர். தனிப்பட்ட ஒவ்வொரு போரின் ஸ்தூலமான வரலாற்றுச் சிறப்பியல்புகளைப் பகுத்தாய்ந்தே மார்க்ஸியமானது ஐரோப்பாவில் நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி அல்லது காரிபால்டியின் போர்கள் போன்றவை தாயகத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டவை என்றும், 1914-16ம் ஆண்டுகளின் ஏகாதிபத்திய யுத்தம் தாயகத்தின் பாதுகாப்பை நோக்கமாகக் கொள்ளவில்லை என்றும் முடிவு செய்கிறதே அன்றி எந்த ஒரு ''பொதுக் கோட்பாட்டையோ'' அல்லது ஒரு வேலைத்திட்டத்தின் எந்த ஒரு அம்சத்தையோ கொண்டு இவ்வாறு முடிவு செய்யவில்லை.

போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்
எனும் நூலிலிருந்து

முதற்கடிதம்

இன்றைய நிலைமை பற்றிய மதிப்பீடு

வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகளையும் ஒவ்வொரு வரலாற்று நிலைமைக்கும் ஸ்தூலமான தனிச்சிறப்பாயுள்ள இயல்புகளையும் பற்றி மிகவும் கறாராகத் துல்லியமான, எதார்த்த வழியில் சரிபார்க்கத்தக்க பகுப்பாய்வு செய்யுமாறு மார்க்ஸியம் நம்மைக் கோருகிறது. கொள்கைக்கு விஞ்ஞான அடித்தளம் அமைத்துக் கொள்ள இன்றியமையாத இந்தக் கோரிக்கையை போல்ஷிவிக்குகளாகிய நாம் எப்போதும் பூர்த்தி செய்ய முயன்று வந்திருக்கிறோம்.

''நமது போதனை செயலுக்கான வழிகாட்டியே அன்றி வறட்டுச் சூத்திரமல்ல''[93] *என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் எப்போதும் சொல்லி வந்திருக்கிறார்கள்; ''சூத்திரங்களை'' வெறுமே மனப்பாடம் செய்து கொண்டு திருப்பிச் சொல்லி வருவதை அவர்கள் சரியாகத்தான் கேலி செய்தார்கள்; இந்தச் சூத்திரங்கள் அதிகபட்சமாகச் சொன்னால் பொது*வான *பணிகளை வரையறுக்க மட்டுமே முடியும்; இந்தப் பொதுவான பணிகள் சரித்திர இயக்கப் போக்கின் குறிப்பிட்ட ஒவ்வொரு* காலப்பகுதிக்கும் *உரிய* ஸ்தூலமான *பொருளாதார, அரசியல் நிலைமைகளால் அவசியம் மாற்றப்படவே செய்யும்.*

புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தின் கட்சி தன்னுடைய நடவடிக்கைக்குரிய பணிகளையும் வடிவங்களையும் வரையறுக்கையில் இன்று அதற்கு வழிகாட்டுவதற்கு வேண்டிய தெளிவாக நிலைநாட்டப் பெற்ற எதார்த்த உண்மைகள் *எவை?*

1917, மார்ச் 21-22 தேதிகளில் பிராவ்தா, *இதழ்கள் 14, 15ல் வெளியிடப் பெற்ற என்னுடைய முதலாவது*

தொலைவிலிருந்து எழுதிய கடிதத்திலும் (''முதற்புரட்சியின் முதற்கட்டம்''), என்னுடைய ஆய்வுரைகளிலும் ''ருஷ்யாவிலுள்ள இன்றைய நிலைமையின் பிரத்தியேக முனைப்புக்கூறு'' புரட்சியின் முதற்கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்துக்கு மாறிச் செல்கிற காலப்பகுதி என்று வரையறுக்கிறேன். எனவே, பின்வருவதையே நான் இந்தத் தருணத்தில் அடிப்படையான கோஷமாக, ''தற்சமயத்தின் பணியாக'', கருதினேன்: ''தொழிலாளர்களே, ஜார் ஆட்சிக்கு எதிரான உள்நாட்டுப் போரில் நீங்கள் பாட்டாளி வர்க்க வீரத்துக்குரிய, மக்களின் வீரத்துக்குரிய அதிசயங்கள் புரிந்திருக்கிறீர்கள். புரட்சியின் இரண்டாவது கட்டத்தில் உங்களுடைய வெற்றிக்குப் பாதையைத் தயார்படுத்த நீங்கள் பாட்டாளி வர்க்கத்தையும் எல்லா மக்களையும் ஒழுங்கமைக்கும் வேலையில் அதிசயங்கள் புரிந்தாக வேண்டும்'' (பிராவ்தா, இதழ் 15).

இந்த முதல் கட்டத்தில் அடங்கியுள்ளது என்ன?

முதலாளித்துவ வர்க்கத்துக்கு அரசு ஆட்சியதிகாரம் போய்ச் சேர்ந்திருப்பதே.

1917ன் பிப்ரவரி-மார்ச் புரட்சிக்கு முன் ருஷ்யாவில் அரசு ஆட்சியதிகாரம் பழைய வர்க்கத்தின் கையில், அதாவது நிக்கலாய் ரமானவ் தலைமை தாங்கிய பிரபுத்துவ நிலச்சுவான்தார்கள் கையில் இருந்தது.

இப்புரட்சிக்குப் பிறகு ஆட்சியதிகாரம் வேறு ஒரு வர்க்கத்தின், ஒரு புதிய வர்க்கத்தின், அதாவது, முதலாளி வர்க்கத்தின் கையில் இருக்கிறது.

இரண்டு வகையிலும், அதாவது சரியான விஞ்ஞான அர்த்தத்திலும், நடைமுறை அரசியல் அர்த்தத்திலும், அரசு அதிகாரம் ஒரு வர்க்கத்தின் கையிலிருந்து மற்றொன்று வர்க்கத்தின் கைக்கு வந்து சேருவதுதான் புரட்சியின் முதன் முதலான, முக்கியமான, அடிப்படையான அறிகுறி.

இந்த அளவுக்கு, முதலாளித்துவ அல்லது முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி ருஷ்யாவில் முடிந்து முற்றுப் பெற்றுவிட்டது.

ஆனால் இந்த இடத்தில், தங்களைப் ''பழைய போல்ஷிவிக்குகள்'' என்று தயக்கமின்றி அழைத்துக் கொள்ளும்

நபர்களிடமிருந்து ஆட்சேபணைக் கூக்குரலை நாம் கேட்கிறோம். அவர்கள் சொல்கிறார்கள்: ''பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயகச் சர்வாதிகாரம்'' மூலமாகத்தான் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெறும் என்று எப்பொழுதுமே நாம் சொல்லி வரவில்லையா? விவசாயப் புரட்சி—அதுவும் ஒரு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிதான்—முற்றுப் பெற்றுவிட்டதா? இல்லையே, அது இன்னும் தொடங்கக்கூட இல்லை என்பதுதானே உண்மை?

என் பதில்: போல்ஷிவிக் கோஷங்களையும் கருத்துக்களையும் வரலாறு பொதுப்படையாய் முற்றிலும் உறுதிப்படுத்தியுள்ளது; ஆனால் விவகாரங்களின் நடப்பு வேறு விதமாக உருவாகியுள்ளது; அது யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடியதற்கு மாறாக மேலும் தனிமாதிரியாகவும், தனிச் சிறப்பாகவும், பலவாறாகவும் உருவாகியுள்ளது.

இந்த உண்மையை நாம் புறக்கணித்தால் அல்லது பார்க்கத் தவறினால், புதிய உயிர்ப்புள்ள யதார்த்தத்தின் பிரத்தியேக முனைப்புக்கூறுகளைப் பயில்வதற்குப் பதிலாக மனப்பாடம் செய்து கொண்ட சூத்திரத்தை அர்த்தமில்லாமல் திருப்பிச் சொல்லி நம் கட்சியின் வரலாற்றில் ஏற்கெனவே ஒரு தடவைக்கு மேலாகவே எவ்வளவோ வருந்தத்தக்க பாத்திரம் வகித்த அந்தப் ''பழைய போல்ஷிவிக்குகளைப்'' போல் ஆகிவிடுவோம்.

ருஷ்யப் புரட்சியில் ''பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்'' ஏற்கெனவே யதார்த்தமாகிவிட்டது,* ஏனெனில் இந்தச் ''சூத்திரம்'' வர்க்கங்களுக்கிடையிலான பரஸ்பர உறவையே குறிக்கிறது, இந்த உறவை, இந்தக் கூட்டுறவை நடைமுறையாக்குகிற ஒரு ஸ்தூலமான அரசியல் நிறுவனத்தை அல்ல. ''தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்து''—அதோ, அதுதான் யதார்த்தத்தில் ஏற்கெனவே சாதிக்கப்பட்டுள்ள ''பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்''.

* ஒரு குறிப்பிட்ட வடிவத்தில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு.

இச்சூத்திரம் ஏற்கெனவே பழையதாகிவிட்டது. நிகழ்ச்சிகள் அதைச் சூத்திரங்களின் நிலையிலிருந்து யதார்த்தத்தின் நிலைக்கு மாற்றிவிட்டன, சதையும் எலும்பும் கொடுத்து உருவம் தந்துள்ளன, ஸ்தூலப்படுத்தி அதன் விளைவாக உரு மாற்றியுள்ளன.

இன்று ஒரு புதிய, வேறான பணி நம்மை எதிர்நோக்குகிறது: அதாவது, இந்தச் சர்வாதிகாரத்துக்குள்ளே பாட்டாளி வர்க்கப் பகுதியோருக்கும் (பாதுகாப்புவாதத்தை எதிர்க்கிறவர்களும், சர்வதேசியப் போக்குள்ளவர்களும், கம்யூனுக்கு மாறிச் செல்வதை ஆதரிக்கிறவர்களுமான "கம்யூனிஸ்டுப்" பகுதியோர்) சிறு உடைமையாளர் அல்லது சிறுமுதலாளித்துவப் பகுதியோருக்கும் (புரட்சிகரமான பாதுகாப்புவாதிகளும் கம்யூனை நோக்கிச் செல்வதை எதிர்ப்பவர்களும், முதலாளி வர்க்கத்தையும் முதலாளித்துவ அரசாங்கத்தையும் "ஆதரிக்க" விரும்புகிறவர்களுமான ச்ஹெயீத்ஸே, த்ஸெரெத்தேலி, ஸ்தெக்லோவ், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்,[94] இன்னும் மற்றவர்கள்) இடையே ஒரு பிளவு ஏற்படுத்துவதே இந்தப் பணி.

"பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம்" பற்றி மட்டும் இன்று பேசுகிறவர் காலத்துக்குப் பின்தங்கிவிட்டவர்; எனவே உண்மையில் அவர் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்கு எதிராகச் சிறு முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்புக்குப் போய்விட்டவரே ஆவார்; அவரைப் புரட்சிக்கு முந்திய "போல்ஷிவிக்குகளின்" தொல்பொருட்காட்சியகத்தில் வைத்தாக வேண்டும் (அதற்கு "பழைய போல்ஷிவிக்குகளின்" தொல்பொருட்காட்சியகம் என்று பெயரிடலாம்).

பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் ஏற்கெனவே ஈடேறிவிட்டது. ஆனால் மிகவும் தனிவகைப் பாணியிலே, மிக முக்கியமான பல மாற்றங்களோடு ஈடேறியுள்ளது. என்னுடைய அடுத்த கடிதம் ஒன்றில் அவற்றைத் தனியாக விளக்குவேன். ஒரு மார்க்ஸியவாதி நிஜ வாழ்க்கையை, எதார்த்தத்தின் உண்மையான நிலவரங்களைக் கண்டுணர்ந்து கொள்ள வேண்டும், நேற்றையத் தத்துவத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது—அது எல்லாத் தத்துவங்களையும் போல் அதிகபட்ச

மாகப் போனால் பிரதானமானதையும் பொதுவானதையும் மட்டுமே குறிக்கக் கூடியது, வாழ்க்கையை அதன் எல்லாச் சிக்கலுடனும் முழுமையாய்க் காட்டும் நிலையை நெருங்குவதோடு நின்று கொள்வது—என்கிற மறுக்க முடியாத உண்மையைப் புரிந்து கொள்வது தற்சமயம் அவசியமாகும்.

''நண்பனே, தத்துவம் என்பது கிழடாய் நரைத்துப் போனது, ஆனால் வாழ்வு என்பது அழிவின்றித் தழைக்கும் பசு மரம்''.[95]

முதலாளித்துவப் புரட்சியின் ''நிறைவேற்றம்'' என்கிற பிரச்சினையைப் பழைய வழியிலே தொடர்ந்து அணுகுவதானது உயிர்ப்புள்ள மார்க்ஸியத்தை உயிரற்ற எழுத்துக்குப் பலியிடுவதாகும்.

பழைய கருத்தோட்டத்தின்படி, முதலாளி வர்க்கத்தின் ஆட்சியைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் ஆட்சி, இவர்களின் சர்வாதிகாரம், வர முடியும், வர வேண்டும்.

ஆனால், நிஜ வாழ்க்கையில் விவகாரங்கள் ஏற்கெனவே வேறு விதமாக நடந்தேறியுள்ளன; மிகமிக சுயமான, புதிதான, முன்னென்றும் கண்டிராதபடி ஒன்று மற்றொன்றோடு பின்னிப் பிணைந்து கொண்டுவிட்டது. அக்கம் பக்கமாக இரண்டும் இருந்து வருகிற நிலையில், ஒரே காலத்தில், முதலாளி வர்க்கத்தின் ஆட்சி (லிவோவ், குச்கோவ் ஆகியோரின் அரசாங்கம்), பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் ஆகிய இரண்டும் இருக்கின்றன; இந்தச் சர்வாதிகாரம் தன்னிச்சையாக முதலாளி வர்க்கத்திடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கிறது, தன்னிச்சையாகவே தன்னை முதலாளி வர்க்கத்தின் தொங்குசதையாக்கிக் கொண்டு வருகிறது.

ஏனென்றால், நடைமுறையில், பெத்ரோகிராதில், ஆட்சியதிகாரம் தொழிலாளர்களின், படைவீரர்களின் கையில் இருக்கிறதை மறக்கலாகாது; புதிய அரசாங்கம் அவர்களை எதிர்த்துப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கவில்லை, பிரயோகிக்கவும் முடியாது; காரணம், போலீஸ் ஒன்றும் இல்லை, மக்களுக்கு அப்பால் நிற்கிற இராணுவம் ஒன்றும் இல்லை, மக்களுக்கு அப்பால் மேல்நிலையில் நிற்கும் எல்லாப் பலமும் பெற்ற அதிகார வர்க்கம் இல்லை. இது ஓர் உண்மை,

பாரிஸ் கம்யூன் வகைப்பட்ட அரசைக் குறிப்பதாயுள்ள ஓர் உண்மை. இந்த உண்மை பழைய திட்டவரைகளுக்குப் பொருந்துகிறதாயில்லை. திட்டவரைகளை உண்மைகளுக்கேற்பப் பொருத்திச் சரிசெய்வதற்குத் தெரிந்து கொள்ள வேண்டுமே அல்லாது பொதுப்படையாகப் ''பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின் சர்வாதிகாரம்'' பற்றி இன்று அர்த்தமற்றுப் போன சொற்களைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினையை மேலும் தெளிவுபடுத்துவதற்கு அதை மற்றொரு கோணத்திலிருந்து அணுகுவோம்.

வர்க்க உறவுகளை உன்னிப்பாய்ப் பகுத்தாராயும் ஆதார நிலையை எந்த மார்க்ஸியவாதியும் கைவிடலாகாது. முதலாளி வர்க்கம் ஆட்சியிலிருக்கிறது. ஆனால், விவசாயி மக்களின் திரளும்கூட ஒரு முதலாளி வர்க்கம்தானே, வேறொரு சமூகப் பிரிவினரான, வேறொரு வகையிலான, வேறொரு தன்மையுள்ள முதலாளி வர்க்கம்தானே? இந்தப் பிரிவினர் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை ''நிறைவேற்றியவாறு'' ஆட்சியதிகாரத்துக்கு வர முடியாது என்று இதிலிருந்து எப்படிப் பெறப்படும்? இது ஏன் சாத்தியமில்லை?

இப்படித்தான் பழைய போல்ஷிவிக்குகள் அடிக்கடி வாதிக்கிறார்கள்.

அது முற்றும் சாத்தியமே என்பதுதான் என்னுடைய பதில். ஆனால், ஒரு குறிப்பிட்ட நிலைமையை மதிப்பீடு செய்யும் போது, எது சாத்தியம் என்ற நிலையிலிருந்தல்லாமல், எது யதார்த்தத்தில் இருப்பது என்கிற நிலையிலிருந்துதான் எந்த மார்க்ஸியவாதியும் தொடங்க வேண்டும்.

எதார்த்தம் புலப்படுத்தும் உண்மை என்னவெனில், சுதந்திரமாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட படைவீரர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள் சுதந்திரமாய் இரண்டாவது அரசாங்கத்தில், இணையான அரசாங்கத்தில் சேர்ந்து வருகிறார்கள், சுதந்திரமாய் அதில் இணைந்து அதை விரிவாக்கியும் வளர்த்தும் நிறைவு பெறச் செய்தும் வருகிறார்கள். இதே போல சுதந்திரமாகவே அவர்கள் ஆட்சியதிகாரத்தை முதலாளி வர்க்கத்துக்கு விட்டுக் கொடுத்தும் வருகிறார்கள். இந்த உண்மை மார்க்ஸியத் தத்துவத்துக்குச் சிறிதும் ''முரண்பாடானது'' அல்ல. ஏனெனில் முதலாளி வர்க்கம் பலாத்

காரத்தால் மட்டும் தன்னை ஆட்சியதிகாரத்தில் நிலைநிறுத்திக் கொள்வதில்லை, வெகுஜனங்களின் வர்க்க உணர்வற்ற, நிறுவன ஒழுங்கமைப்பு இல்லாத நிலையாலும்கூட, பழக்க வழக்கங்களைப் பற்றிநிற்கும் நிலை ஒடுக்கப்பட்ட அவல நிலை இவற்றாலுங்கூட இதைச் செய்து கொள்கிறது என்பது எப்பொழுதுமே நாம் அறிந்ததுதான், மீண்டும் மீண்டும் நாம் சுட்டிக்காட்டியதுதான்.

இன்றைய இந்த யதார்த்த நிலைமையைப் பார்க்கிற போது, நடப்பு உண்மைகளைப் பார்க்காது எதிர்ப்பக்கம் திரும்பிக் கொண்டு ''சாத்தியப்பாடுகள்'' குறித்துப் பேசுவது நகைக்கத்தக்கதாகும்.

விவசாயிகள் நிலம் அனைத்தையும், ஆட்சியதிகாரம் அனைத்தையும் கைப்பற்றிக் கொள்வது சாத்தியமே. இந்தச் சாத்தியப்பாட்டை நான் மறந்துவிடவில்லை, தற்போதைய நிலைமைக்குள் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடவில்லை; மாறாக, **புதிய** நிலவரத்தைக் கணக்கில் எடுத்துதான், அதாவது ஒருபுறம் விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் ஆகியோருக்கும் மறுபுறம் விவசாய நிலவுடைமையாளர்களுக்கும் இடையிலுள்ள ஆழ்ந்த பிளவினைக் கணக்கில் எடுத்துதான், திட்டவட்டமாகவும் தெளிவாகவும் நான் நிலத்தைப் பற்றிய வேலைத்திட்டத்தை வகுக்கிறேன்.

ஆனால் இன்னொரு சாத்தியப்பாடும் உள்ளது. சிறுமுதலாளித்துவக் கட்சியினரான சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது ஆலோசனைப்படி விவசாயிகள் நடக்கலாம் என்பது சாத்தியமே. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி முதலாளித்துவ வர்க்கத்தாரின் செல்வாக்குக்குக் கீழ்படிந்துவிட்டது, பாதுகாப்புவாத நிலையை ஏற்றுக் கொண்டுவிட்டது, அரசியல் நிர்ணயச் சபை[96] கூட்டப்படுவதற்கான தேதிகூட இன்னும் குறிக்கப்படவில்லை என்றாலும் இச்சபைக்காகக் காத்திருக்கும்படி ஆலோசனை கூறி வருகிறது.*

---

* என்னுடைய சொற்களுக்குத் தவறான வியாக்கியானம் செய்யப்படாமல் இருக்கும் பொருட்டு இதனை முன்கூட்டியே கூறுகிறேன்: விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளின் சோவியத்துகள் உடனடியாகவே எல்லா நிலங்களையும் எடுத்துக் கொள்வதை நான் நிச்சயமாக ஆதரிக்கிறேன். ஆனால் தாமே கண்டிப்பான ஒழுங்கையும்

விவசாயிகள் முதலாளி வர்க்கத்துடன் செய்துள்ள உடன்பாட்டை நிலைநாட்டிக் கொள்வதும் அதை நீடிக்கச் செய்து கொள்வதும் சாத்தியமே. இந்த உடன்பாட்டை இப்பொழுது அவர்கள் தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் மூலம் பெயரளவில் மட்டு மின்றி உண்மையிலேயே செய்து கொண்டுவிட்டனர்.

பலவும் சாத்தியமே. நிலத்துக்கான இயக்கத்தையும் நிலம் பற்றிய வேலைத்திட்டத்தையும் மறப்பது மிகப் பெருந் தவருகிவிடும். ஆனல் எதார்த்த நிலைமையை மறப்பதும் இதே அளவுக்குப் பெருந் தவறே ஆகும். முதலாளி வர்க்கத் துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு அல்லது —மேலும் சுருரான, அவ்வளவு சட்ட மொழியில் இல்லாத, ஆனல் இன்னும் வர்க்க-பொருளாதார முறையிலான பதத்தை உபயோகித்தால்—வர்க்க ஒத்துழைப்பு இருக்கிறது என்னும் உண்மையை எதார்த்த நிலைமை புலப்படுத்துகிறது.

இந்த உண்மை இனி உண்மையில்லை என்கிற நிலை ஏற் படும் போது, விவசாயிகள் முதலாளி வர்க்கத்தை விட்டுப் பிரிந்து, முதலாளி வர்க்கத்தை மீறி நிலத்தையும் ஆட்சிய திகாரத்தையும் கைப்பற்றிக் கொள்ளும் போது, முதலாளித் துவ-ஜனநாயகப் புரட்சியில் அது ஒரு புதிய கட்டத்தைக் குறிப்பதாகிவிடும். இந்த விவகாரம் தனியே பரிசீலிக்கப் படும்.

இத்தகைய வருங்காலக் கட்டம் சாத்தியமே என்பதைக் கருத்தில் கொண்டு தற்போதைய நிலைமையில், விவசாயி கள் முதலாளி வர்க்கத்துடன் உடன்பாடு கொண்டுள்ள நிலைமையில், தனது கடமைகளை மறந்துவிடும் எந்த மார்க் ஸியவாதியும் சிறு முதலாளித்துவ வர்க்கத்தினராக மாறி விடுகிருர். ஏனெனில் நடைமுறையில் அவர் பாட்டாளி

கட்டுப்பாட்டையும் அனுசரிக்க வேண்டும்; இயந்திரங்கள், கட்டிடங்கள், அல்லது கால்நடைகளுக்குச் சிறிதளவுங்கூட சேதம் உண்டாக்க அவை இடந்தரலாகாது; எந்நிலைமையி லும் விவசாயமும் தானிய உற்பத்தியும் சீர்குலையும்படி விடக் கூடாது; மாருக இவற்றை வளரச் செய்தாக வேண்டும். ஏனெனில் படைவீரர்களுக்கு இருமடங்கு அதிக ரொட்டி தேவையாய் இருக்கிறது, மக்கள் பட்டினி கிடக்கும்படி விடப்படக்கூடாது.

வர்க்கத்துக்குச் சிறு முதலாளி வர்க்கத்தினரிடம் நம்பிக்கை உண்டாக்குவதற்காகப் பிரசாரம் செய்கிறவரே ஆவார் (''இந்தச் சிறு முதலாளி வர்க்கத்தினர், இந்த விவசாயிகள், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி நடந்து கொண்டிருக்கும் போதே முதலாளி வர்க்கத்திடமிருந்து பிரிந்து சென்றுவிட வேண்டும்''). மகிழ்ச்சியூட்டும் இந்த இனிய எதிர்காலத்துக் குரிய ''சாத்தியப்பாட்டின்'' காரணமாய், விவசாயிகள் முதலாளி வர்க்கத்தின் வாலாய் இராத, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும், ச்ஹெயீத்ஸேக்களும், த்ஸெரெத்தேலிகளும், ஸ்தெக்லோவ்களும் முதலாளி அரசாங்கத்தின் தொங்குசதையாய் இராத இந்த மகிழ்ச்சியூட்டும் எதிர்காலத்துக்குரிய ''சாத்தியப்பாட்டின்'' காரணமாய், தற்போதைய கசப்பான நிலைமையை இவர் மறந்துவிடுகிறவர் ஆவார்; விவசாயிகள் இன்னமும் முதலாளி வர்க்கத்தின் வாலாகவே இருந்து வரும், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் சமூக-ஜனநாயகவாதிகளும் முதலாளித்துவ அரசாங்கத்தின் தொங்குசதையாக, ''மேன்மை தங்கிய ஜார் மன்னர் பிரான்''[97] லிவோவின் எதிர்த்தரப்பாளராகச் செயல்படும் தமது பாத்திரத்தை இன்னமும் விட்டொழிக்காமல் இருந்து வரும் இன்றைய நிலைமையை மறந்துவிடுகிறவர் ஆவார்.

இந்தக் கற்பிதமான ஆள் இனிப்பான லுயீ பிளானையோ, தித்திக்கப் பேசும் காவுத்ஸ்கிவாதியையோ ஒத்திருப்பாரே அல்லாது ஒருபோதும் புரட்சிகர மார்க்ஸியவாதியாய் இருக்க முடியாது.

ஆனால் நாம் அகநிலைவாதத்திற்குப் பணிந்துவிடும் அபாயம் ஏற்படவில்லையா? இன்னும் முடிவெய்தாத, இன்னும் விவசாயி இயக்கத்தைப் பூர்த்தி செய்யாத முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் ''தாவிச் சென்று'' சோஷலிசப் புரட்சியை வந்தடைய விரும்பும் அபாயம் ஏற்படவில்லையா?

''ஜார் ஒழிக, தொழிலாளர் அரசாங்கமே வேண்டும்''[98] என்று நான் கூறியிருந்தால் இந்த அபாயத்தை ஏற்படுத்துகிறவனே ஆவேன். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை, வேறொன்றையே சொன்னேன். ருஷ்யாவில் (முதலாளித்துவ அரசாங்கம் இல்லையேல்) தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், படைவீரர்கள், விவசாயிகள் பிரதிநிதி

களது சோவியத்துகளின் அரசாங்கம் அல்லாமல் வேறு அரசாங்கம் எதுவும் இருக்க முடியாது என்று சொன்னேன். இன்று ருஷ்யாவில் குச்கோவ், லிவோவ் இவர்களிடமிருந்து ஆட்சியதிகாரம் இந்த சோவியத்துகளுக்கு மட்டுமே வர முடியும் என்றேன். இந்த சோவியத்துகளில் நிலைமை என்ன வென்றால், விவசாயிகளும் படைவீரர்களும்தான் பெரும்பான் மையோராய் இருக்கின்றனர், அதாவது விஞ்ஞான வழிப் பட்ட மார்க்ஸிய பதத்தைக் கையாண்டால், சாதாரண பேச்சில் அடிபடும் வழக்கமான உத்தியோகத் துறை குணநிர் ணயிப்பு அல்லாமல் வர்க்கக் குணநிர்ணயிப்பைக் கையாண் டால் சிறு முதலாளி வர்க்கத்தினரே பெரும்பான்மையோ ராய் இருக்கின்றனர்.

இன்னமும் நிறைவெய்தாமல் இருந்து வருகிற விவசாயி இயக்கத்தையோ பொதுவில் சிறு முதலாளித்துவ இயக்கத் தையோ தாவிச் செல்வதை எதிர்த்து, தொழிலாளர்களு டைய அரசாங்கம் "ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும்" விளையாட்டினை எதிர்த்து, எந்த வகையான பிளான்வாதக் குருட்டுச் சாகசவாதத்தையும் எதிர்த்து நான் என்னு டைய ஆய்வுரைகளில் முழு அளவுக்குக் காப்பு செய்து கொண்டேன். இதன் பொருட்டு நான் திட்டவட்டமான முறையில் பாரிஸ் கம்யூன் அனுபவத்தினைக் குறிப்பிட்டேன். இந்த அனுபவம் பிளான்வாதத்தை முழுமையாய் விலக்கி ஒதுக்குகிறது, பெரும்பான்மையோர் தாமே உணர்வு பூர்வ மாய்ச் செயல்படும் அளவுக்கு மட்டும் இந்தப் பெரும்பான் மையோரின் நேரடியான, உடனடியான, சந்தேகத்துக்கு இடமில்லாத ஆட்சியையும் வெகுஜனங்களுடைய செயற் பாட்டையும் முழுமையாய் உறுதி செய்கிறது என்பதை நாம் அறிவோம், மார்க்ஸ் 1871லும் எங்கெல்ஸ் 1891லும் இதனை விளக்கமாய் நிரூபித்தனர்.[99]

தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவ சாயிகள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் உள்ளே செல்வாக்கு பெறும் போராட்டமே பிரச்சினை என்று ஆய்வுரைகளில் மிகவும் திட்டவட்டமாய் நான் வகுத்திட் டேன். இது சம்பந்தமாய்த் துளியளவும் சந்தேகத்துக்கு இடம் விட்டு வைக்கலாகாதென்று ஆய்வுரைகளில் நான் "வெகுஜனங்களின் நடைமுறைத் தேவைகளுக்குப்

பொருத்தமான'', பொறுமையான, விடாப்பிடியான ''விளக்கப்'' பிரசாரத்தின் அவசியத்தை இரு முறை வலியுறுத்தினேன்.

அறியாதோர் அல்லது திருவாளர் பிளெஹானவைப் போல் மார்க்ஸியத்தை விட்டோடிய ஓடுகாலிகள் அராஜக வாதம் என்றும் பிளான்வாதம் என்றும் இன்ன பலவாறுகவும் கூச்சல் எழுப்பக் கூடும். ஆனால் சிந்திக்கவும் கற்றறிந்து கொள்ளவும் விரும்புவோர் பிளான்வாதமானது சிறுபான்மையோர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதைக் குறிப்பதாகும் என்பதையும், இதற்கு மாருய் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் மக்களின் பெரும்பான்மையோரது உண்மையில் நேரடியான உடனடி ஒழுங்கமைப்பாகும் என்பதையும் புரித்து கொள்ளத் தவற முடியாது. இந்த சோவியத்துகளின் உள்ளே செல்வாக்கு பெறும் போராட்டத்தின் வரம்புக்குட்பட்ட பணி பிளான்வாதச் சகதியினுள் பிசகிச் சென்றுவிட முடியாது, ஒருபோதும் முடியாது. அதே போல இப்பணி அராஜகவாதச் சகதியினுள்ளும் பிசகிச் சென்றுவிட முடியாது, ஏனெனில் அராஜகவாதமானது முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சிக்கு மாறிச் செல்லும் இடைக்காலக் கட்டத்தில் அரசும் அரசு ஆட்சியதிகாரமும் அவசியமென்பதை மறுக்கிறது. இதற்கு மாருக நான், தவருன அர்த்தத்துக்குச் சிறிதும் இடமளிக்காத துல்லியத்துடன், இந்தக் கால கட்டத்தில் அரசின் அவசியத்தை வலியுறுத்தி வாதாடுகிறேன். ஆனால் மார்க்ஸுக்கும் பாரிஸ் கம்யூன் அனுபவத்துக்கும் ஏற்ப, நிரந்தர சேனை இல்லாத, மக்களுக்கு எதிரான போலீஸ் இல்லாத, மக்களுக்கு மேலானோரான அதிகாரிகளாலான அமைப்பு இல்லாத அரசையே வலியுறுத்தி வாதாடுகிறேனே அன்றி, வழக்கமான நாடாளுமன்ற-முதலாளித்துவ அரசையல்ல.

திருவாளர் பிளெஹானவ் அவருடைய யெதின்ஸ்த்வோ செய்தியேட்டில் இது அராஜகவாதமே[100] என்பதாய்த் தமது முழு பலத்தையும் கொண்டு கூச்சல் எழுப்புகையில், மார்க்ஸியத்திலிருந்து அவர் முறித்துக் கொண்டுவிட்டதற்கு மேலும் ஒரு சான்று அளிக்கிருரே தவிர வேறல்ல. அரசு

குறித்து மார்க்ஸும் எங்கெல்ஸும் 1871, 1872, 1875ஆம் ஆண்டுகளில் போதித்தது என்னவென்று கூறும்படி பிராவ்தாவில் (இதழ் 26) நான் அவருக்குச் சவால் விடுத்த போது, பிரச்சினையின் சாராம்சத்தைக் குறித்து ஒன்றும் சொல்லாமல் மௌனம் சாதித்துவிட்டு, சீற்றமுற்ற முதலாளி வர்க்கத்தின் பாணியிலே வசவுகளைத்தான் வாரியெறிய முடியும், அதைத்தான் செய்திருக்கிறார்.

முன்னாள்-மார்க்ஸியவாதியான திருவாளர் பிளெஹானவ், அரசு பற்றிய மார்க்ஸியப் போதனையைப் புரிந்து கொள்ள அடியோடு தவறிவிடுகிறார். இதை அவர் புரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டும் வித்துக்கள் அராஜகவாதத்தைப் பற்றிய அவருடைய ஜெர்மன் பிரசுரத்திலும் காணப்படுவதை இங்குக் குறிப்பிடலாம்.

1917 ஏப்ரல் 8-13 (21-26)
இடையே எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 31,
பக்கங்கள் 132-139

அரசும் புரட்சியும்
எனும் நூலிலிருந்து

அத்தியாயம் 5

அரசு உலர்ந்து உதிர்வதற்குரிய பொருளாதார அடிப்படை

கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம் (*பிராக்கேவுக்கு எழுதிய கடிதம், 1875 மே 5. இது 1891ல்தான் Neue Zeit, மலர் 9, இதழ் 1ல் அச்சிடப்பட்டது; ருஷ்ய மொழியில் ஒரு தனிப் பதிப்பாக வந்துள்ளது*) என்கிற தமது நூலில் *மார்க்ஸ் இந்தப் பிரச்சினையை முழுநிறைவாக விளக்கிக் கூறுகிறார். சிறப்புமிக்க இந்நூலின் வாதவடிவப் பகுதி லஸ்ஸாலியத்தை*[101] *விமர்சிக்கிறது. இப்பகுதி இந்நூலின் நேர்படிப் பகுதியை—அதாவது கம்யூனிஸத்தின் வளர்ச்சிக்கும் அரசு உலர்ந்து உதிர்வதற்கும் இடையிலுள்ள தொடர்பைப் பகுத்தாயும் பகுதியை—ஓரளவுக்குப் பின்னுக்குத் தள்ளுவதாய் உள்ளது.*

1. பிரச்சினையை மார்க்ஸ் எப்படி முன்வைத்தார்

1875 மே 5ல் பிராக்கேவுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தையும் 1875 மார்ச் 28ல் பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தையும் மேலெழுந்தவாரியாய் ஒப்பிட்டுப் பார்க்கையில், எங்கெல்ஸைக் காட்டிலும் அதிக அளவு மார்க்ஸ் ''அரசின் ஆதரவாளராய்'' இருந்ததாகவும், அரசெனும் பிரச்சினையில் இவ்விரு ஆசிரியர்களுக்கும் கணிச அளவு கருத்து வேறுபாடு இருந்ததாகவும் தோன்றக் கூடும்.

அரசு பற்றிய எல்லாப் பிதற்றலையும் அறவே விட்டொழித்து விடும்படி, ''அரசு'' என்னும் சொல்லையே வேலைத்திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு அதற்குப்பதில் ''மக்கட்சமுதாயம்''

என்னும் சொல்லை உபயோகிக்கும் படி பெபெலுக்கு எங்கெல்ஸ் ஆலோசனை கூறினர். அரசெனும் சொல்லின் சரியான பொருளில் கம்யூனது ஓர் அரசாய் இருக்கவில்லை என்பதாகவும் எங்கெல்ஸ் கூறினர். ஆனல் மார்க்ஸ் ''கம்யூனிஸச் சமுதாயத்துக்குரிய வருங்கால அரசு'' என்று கூடப் பேசினர்; அதாவது கம்யூனிஸத்திலுங்கூட அரசு அவசியமே என்று அவர் ஏற்றுக் கொண்டதாய்த் தோன்றக்கூடும்.

இது போன்ற கருத்து அடிப்படையிலேயே தவறானது. மேலும் நெருங்கிச் சென்று பரிசீலித்தோமாயின் அரசு குறித்தும் அது உலர்ந்து உதிர்வது குறித்தும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் கருத்துக்களும் எந்த வேறுபாடுமின்றி முற்றொருமையுள்ளவை என்பதும், மேலே குறிப்பிட்ட மார்க்ஸின் தொடர் உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிப் போக்கிலுள்ள அரசைத்தான் குறிப்பதாகும் என்பதும் தெளிவாகின்றன.

''உலர்ந்து உதிரும்'' இந்த வருங்கால நிகழ்ச்சிப் போக்கு நடைபெறும் தருணத்தை வரையறுத்துக் கூற முடியாது என்பது தெளிவு—இது நீண்டநெடும் நிகழ்ச்சிப்போக்காய் இருக்குமென்பது வெளிப்படையாதலால் இவ்வாறு வரையறுத்துக் கூறுவது மேலும் இயலாததாகிவிடுகிறது. மார்க்ஸுக்கும் எங்கெல்ஸுக்கும் இங்கு ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதாய்த் தோன்றுவதற்குக் காரணம், அவர்கள் வெவ்வேறு துறைகளைப் பரிசீலித்ததும், வெவ்வேறு குறிக்கோள்களைப் பின்பற்றியதும்தான். அரசு சம்பந்தமாய் நிலவிய சார்புக் கருத்துக்கள் (லஸ்ஸாலே இடத்தும் இவை பெருமளவு இருந்தன) எவ்வளவு அபத்தமானவை என்பதை பெபெலுக்குக் கண்கூடாகவும் எடுப்பாகவும் முழு உருவிலும் தெரியப்படுத்த எங்கெல்ஸ் முற்பட்டார். ஆனல் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைப் போகிறபோக்கில் இடைநிகழ்வாகவே குறிப்பிட்டுச் சென்றார். மார்க்ஸ் கருத்து செலுத்தியது வேறொரு துறை, அதாவது கம்யூனிஸ சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய துறை.

வளர்ச்சித் தத்துவத்தை—அதன் முரணற்ற, முழுநிறைவான, தேர்ந்தாய்ந்த, சாரப்பொருள் வடிவில்—நவீன முதலாளித்துவத்தின் ஆய்வுக்காகக் கையாளுதலே மார்க்ஸின் தத்துவம் அனைத்தும். இயற்கையாகவே, முதலாளித்துவத்

தின் நிகழவிருக்கும் வீழ்ச்சி, வருங்காலக் கம்யூனிஸத்தின் வருங்கால வளர்ச்சி ஆகிய இரண்டிலும் இந்தத் தத்துவத்தைக் கையாளும் பிரச்சினை மார்க்ஸ் முன் எழுந்தது.

அப்படியானால், எந்த உண்மைகளை அடிப்படையாய்க் கொண்டு வருங்காலக் கம்யூனிஸத்தின் வருங்கால வளர்ச்சி குறித்த பிரச்சினையைப் பரிசீலிப்பது?

கம்யூனிஸம் முதலாளித்துவத்திலிருந்து தோன்றுவதாகும், வரலாற்று வழியில் முதலாளித்துவத்தினின்று வளர்வதாகும், முதலாளித்துவம் பெற்றெடுத்த ஒரு சமுதாய சக்தியின் செயலால் விளைந்த பலனாகும் என்ற உண்மையை அடிப்படையாய்க் கொண்டுதான் இப்பிரச்சினையைப் பரிசீலிக்க முடியும். கற்பனைப் படைப்பை உருவாக்கும் முயற்சி, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சி மார்க்ஸிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய் ஒரு புதிய உயிர்வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன்றியது, திட்டவட்டமான இந்தத் திசையிலேதான் மாறுதலடைந்து வந்தது என்பது தெரிந்ததும் உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர் வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினையை எப்படி ஆராய்வாரோ அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிஸத்தைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்தார்.

அரசுக்கும் சமுதாயத்துக்குமுள்ள உறவு பற்றிய பிரச்சினையில் கோத்தா வேலைத்திட்டம் செய்திடும் குளறுபடியை மார்க்ஸ் முதற்கண் அகற்றுகிறார். அவர் எழுதியதாவது:

"...'இன்றையச் சமுதாயம்' முதலாளித்துவச் சமுதாயம். நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச்சமுதாயம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறைவாகவோ மத்தியக் காலக் கூறுகளின் கலப்படத்திலிருந்து விடுபட்டதாகவும், அந்தந்த நாட்டின் தனிப்பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறைவாகவோ பாதிக்கப்பட்டதாகவும், அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சியுற்றதாகவும் இது இருந்து வருகிறது. மறுபுறத்தில் 'இன்றைய அரசு' ஒரு நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறிவிடுகிறது. இது ஸ்விட்ஸர்லாந்தில் இருப்பதிலிருந்து பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் மாறுபட்டதாயும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருப்பதிலிருந்து இங்கிலாந்தில் மாறுபட்டதாயும்

உள்ளது. ஆகவே 'இன்றைய அரசு' என்பது ஒரு கற்பனையே ஆகும்.

''இருப்பினும் நாகரிகமடைந்த பல்வேறு நாடுகளிலும் இருந்து வரும் பல்வேறு அரசுகளும் வடிவில் வெவ்வேறு வகைப்பட்டதாய் இருப்பினும், இவை யாவற்றுக்கும் பொது வானது என்னவெனில் இவை நவீன முதலாளித்துவ சமுதா யத்தின் அடிப்படையில் அமைந்தவை. ஒன்று இன்னொன்றை விட முதலாளித்துவ வழியில் ஏற்றத்தாழ்வுடையதாய் வளர்ந்திருக்கிறது. ஆதலால் இவை சில முக்கியமான பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் 'இன் றைய அரசு' என்பதை இதன் தற்போதைய மூலவேரான முதலாளித்துவச் சமுதாயம் மடிந்து மறைந்து விட்டிருக்கக் கூடிய அந்த வருங்கால அரசிலிருந்து வேறுபடுத்திப் பேசு வது சாத்தியமே.

''ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிஸ சமுதாயத் தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறு விதமாய்க் கூறினால், தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்தச் சமுதாயப் பணிகள் அப்பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான வழியில் மட்டுமே பதிலளிக்க முடியும். 'மக்கள்' என்னும் சொல்லை 'அரசு' என்னும் சொல் லுடன் ஆயிரம் வழியில் இணைப்பதன் மூலம் சாண் அளவுக் குக்கூட இந்தப் பிரச்சினையை நெருங்கி வந்துவிட முடியாது.''[102]

''மக்கள் அரசு'' என்ற எல்லாப் பேச்சுகளையும் இவ்விதம் எள்ளி நகையாடியபின் மார்க்ஸ் பரிசீலனைக்குரிய கேள்வியை வகுத்திட்டு, இதற்கு விஞ்ஞான வழிப்பட்ட விடை கிடைக்க வேண்டுமானால் உறுதியாய் நிலைநாட்டப் பெற்ற விவரங்களை உபயோகித்தால் மட்டுமே முடியும் என்று நமக்கு எச்சரிக்கை செய்கிறார்.

வளர்ச்சித் தத்துவம் அனைத்தாலும், மொத்தத்தில் விஞ்ஞானத்தாலும் மிகவும் துல்லியமாய் நிலைநாட்டப்பட் டிருக்கும் முதலாவது உண்மை என்னவெனில்—இந்த உண்மையைக் கற்பனவாதிகள் மறந்துவிட்டனர், சோஷ லிஸப் புரட்சியைக் கண்டு மிரளும் இன்றைய சந்தர்ப்பவாதி களும் இதை மறந்துவிட்டனர்—வரலாற்று வழியிலே பார்க் கையில், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு மாறிச் செல்வதைக் குறிக்கும் ஒரு தனிக் கட்டம் அல்லது இடைக் காலம் நிச்சயம் இருக்க வேண்டும் என்பதே.

2. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு மாறிச் செல்லுதல்

மார்க்ஸ் மேலும் கூறியதாவது:

''...முதலாளித்துவச் சமுதாயத்துக்கும் கம்யூனிஸ சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்ருய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது. இந்த இடைக்காலகட்டத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாக இருக்குமே அன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது....''[103]

தற்கால முதலாளித்துவச் சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றிய பகுத்தாய்வின் அடிப்படையிலும், இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சி சம்பந்தமான விவரங்களின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமுள்ள ஒன்றுக்கொன்று பகைமையான நலன்களிடையே இணக்கம் காண முடியாத நிலையின் அடிப்படையிலும் மார்க்ஸ் இம்முடிவுக்கு வருகிருர்.

முன்பெல்லாம் இப்பிரச்சினை பின்வருமாறு கூறப்பட்டது: பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் பெறும் பொருட்டு முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி, அரசியல் அதிகாரம் வென்று தனது புரட்சிகரச் சர்வாதிகாரத்தை நிறுவியாக வேண்டும்.

இப்பொழுது இப்பிரச்சினை ஓரளவுக்கு வேறுவிதமாய்க் கூறப்படுகிறது: முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து—இச்சமுதாயம் கம்யூனிஸத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது—கம்யூனிஸ சமுதாயத்துக்கு மாறிச் செல்வது ''அரசியல் இடைக்காலகட்டம்'' ஒன்று இல்லாமல் முடியாத காரியம்; இந்த இடைக்காலகட்டத்தில் அரசானது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாய் மட்டுமே இருக்க முடியும்.

அப்படியாளுல் இந்தச் சர்வாதிகாரம் ஜனநாயகத்திடம் கொண்டுள்ள உறவு என்ன?

''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது'' என்றும் ''ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது'' என்றும் இரு கருத்துருவங்களை

யும் அக்கம்பக்கமாக வைத்து கம்யூனிஸ்டு அறிக்கை குறிப்பிடுவதுடன் நின்றுவிடுவதை நாம் ஏற்கெனவே கண்டோம். மேலே கூறப்பட்டவை யாவற்றின் அடிப்படையில், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு மாறிச் செல்கையில் ஜனநாயகம் எப்படி மாற்றமடைகிறது என்பதை மேலும் துல்லியமாய் நிர்ணயிக்கலாம்.

முதலாளித்துவச் சமுதாயத்தில், மிகவும் சாதகமான நிலைமைகளில் அது வளர்வதாய்க் கொள்கிறபொழுது, ஜனநாயகக் குடியரசில் ஓரளவுக்கு முழுமையான ஜனநாயகம் இருக்கக் காண்கிறோம். ஆனால் இந்த ஜனநாயகம் எப்பொழுதும் முதலாளித்துவச் சுரண்டல் எழுப்பிவிடும் குறுகலான வரம்புகளால் குறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நடைமுறையில் எப்பொழுதும் சிறுபான்மையோருக்கான ஜனநாயகமாகத்தான், சொத்துடைத்த வர்க்கங்களுக்கு மட்டுமேயான, செல்வந்தர்களுக்கு மட்டுமேயான ஜனநாயகமாகத்தான் இருக்கிறது. முதலாளித்துவச் சமுதாயத்தில் சுதந்திரமானது பண்டைக் கிரேக்கக் குடியரசுகளில் இருந்ததே ஏறத்தாழ அதேபோல அடிமைச் சொந்தக்காரர்களுக்கான சுதந்திரமாகத்தான் எப்பொழுதுமே இருந்து வருகிறது. முதலாளித்துவச் சுரண்டலின் நிலைமைகள் காரணமாய் தற்காலக் கூலி அடிமைகள் ''ஜனநாயகம் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'', ''அரசியல் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'' இல்லாமையாலும் வறுமையாலும் நசுக்கப்பட்டு இருக்கிறார்கள். நிகழ்ச்சிகள் சாதாரணமாய், சமாதான வழியில் ஓடிக் கொண்டிருக்கையில் பெரும்பான்மையான மக்கள் பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டுவிடுகிறார்கள்.

இப்படிச் சொல்வது முற்றிலும் சரியே என்பதை வேறு எதையும்விட ஜெர்மனி மிகவும் தெளிவாய் ஊர்ஜிதம் செய்கிறது எனலாம். எப்படியெனில், அரசியல் சட்ட நெறி அங்கே குறிப்பிடத்தக்க நீண்ட காலத்துக்கு—ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு (1871-1914)—தொடர்ந்து நிலைத்திருந்தது. இந்தக் காலத்தில் ''சட்ட நெறியைப் பயன்படுத்திக் கொள்வதில்'' சமூக-ஜனநாயகவாதிகள் ஏனைய நாடுகளைவிட அங்கே மிகவும் அதிகமாய் சாதனை பெற முடிந்தது. உலகில் வேறு எங்கும் முடிந்ததைவிட அதிகமான

விகிதாசாரத்தில் தொழிலாளர்களை அவர்கள் அரசியல் கட்சியாய் ஒன்று திரட்டிக் கொண்டார்கள்.

முதலாளித்துவச் சமுதாயத்தில் இதுகாறும் கண்டுள்ள திலே அரசியல் உணர்வு படைத்து ஊக்கமாய்ச் செயல்படும் கூலி அடிமைகளின் இந்த மிக உயர்ந்த வீதாச்சாரம் என்ன தெரியுமா? ஒன்றரைக் கோடிக் கூலித் தொழிலாளர்களில் பத்து லட்சம் பேர் சமூக-ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர்கள்! ஒன்றரைக் கோடி பேரில் முப்பது லட்சம் பேர் தொழிற் சங்கங்களில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்!

மிகச் சொற்பமான சிறுபான்மையோருக்கு ஜனநாயகம், செல்வந்தர்களுக்கு ஜனநாயகம்—இதுதான் முதலாளித்துவச் சமுதாயத்தில் நிலவும் ஜனநாயகம். முதலாளித்துவ ஜனநாயகத்தின் கட்டமைவை மேலும் நெருங்கிச் சென்று பார்த்தோமாயின், வாக்குரிமையின் ''அற்ப''—அற்பமானவை என்று சொல்லப்படுகிற—விவரங்களிலும் (குடியிருப்புத் தகுதி, பெண்களுக்கு வாக்குரிமையின்மை முதலானவை), பிரதிநிதித்துவ உறுப்புக்களின் செயல்முறையிலும், கூட்டங் கூடும் உரிமைக்கு நடைமுறையில் இருந்து வரும் தடங்கல்களிலும் (பொதுக் கட்டிடங்கள் ''ஒட்டாண்டிகளுக்கு'' உதவாதவை!), முற்றிலும் முதலாளித்துவ முறையில் நாளேடுகள் அமைக்கப்பட்டிருப்பதிலும், இன்ன பிறவற்றிலும் எங்கும் ஜனநாயகத்துக்கு கட்டுக்குமேல் கட்டு போடப்பட்டிருப்பதைத்தான் காண்கிறோம். ஏழைகளுக்கு இடப்பட்டுள்ள இந்தக் கட்டுகளும் விலக்குகளும் ஒதுக்கல்களும் தடங்கல்களும் அற்பசொற்பமாகவே தோன்றும், முக்கியமாய் இல்லாமையை நேரில் அனுபவித்திராதோருக்கும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் அவற்றின் வெகுஜன வாழ்வில் என்றுமே நெருங்கிய தொடர்பு கொண்டிராதோருக்கும் (முதலாளித்துவ நூலாசிரியர்களிலும் அரசியல்வாதிகளிலும் பத்தில் ஒன்பது பேர், ஏன் நூற்றில் தொண்ணூற்று ஒன்பது பேர் என்றுகூடச் சொல்லலாம், இந்த ரகத்தவரே) இப்படித்தான் அற்பசொற்பமாகவே தோன்றும். ஆனால் ஒட்டுமொத்தத்தில் இந்தக் கட்டுகள் ஏழைகளை அரசியலிலிருந்து, ஜனநாயகத்தில் நேரடியாய் பங்கு கொள்வதிலிருந்து ஒதுக்கி வெளியே தள்ளிவிடுகின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் இச்சாராம்சத்தை மார்க்ஸ் மிக நன்ருய் உணர்ந்திருந்தார். கம்யூனுடைய அனுபவத்தை ஆராய்கையில் ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் வர்க்கத்தின் எந்தப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளாய் அமர்ந்து தம்மை அடக்கியொடுக்க வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானிக்க அனுமதிக்கப்படுகிருர்கள் என்று கூறிஞர்.[104]

தவிர்க்க முடியாதவாறு குறுகலாகவும், ஏழைகளைத் திருட்டுத்தனமாய் ஒதுக்கித் தள்ளிவிடுவதாகவும், ஆகவே கபடமாகவும் முழுக்க முழுக்கப் பொய்யாகவும் இருக்கும் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து முன்னேக்கிச் செல்வதற்குரிய வளர்ச்சி, மிதவாதப் பேராசிரியர்களும் சிறு முதலாளித்துவச் சந்தர்ப்பவாதிகளும் நம்மை நம்பவைக்க விரும்புவது போல, எளிய முறையிலும் நேரடியாகவும் ஒழுங்காகவும்''மேலும் மேலும் கூடுதலான ஜனநாயகத்தை'' நோக்கி நடைபெறுவதில்லை. இல்லை, முன்னேக்கிச் செல்கிற வளர்ச்சியானது, அதாவது கம்யூனிசத்துக்கான வளர்ச்சியானது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வாயிலாகவே நடைபெறுகிற வேறு எவ்வழியிலும் அல்ல. ஏனெனில் முதலாளித்துவச சுரண்டலாளர்களின் எதிர்ப்பை வேறு யாராலும் அல்லது வேறு எந்த வழியிலும் தகர்த்திட முடியாது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது, அதாவது ஒடுக்கு முறையாளர்களை அடக்குவதற்காக ஒடுக்கப்பட்டவர்களுடைய முன்னணிப் படை ஆளும் வர்க்கமாய் அமையும் ஒழுங்கமைப்பானது ஜனநாயகத்தை விரிவாக்குவதோடு மட்டும் நின்றுவிடக் கூடியதல்ல. ஜனநாயகத்தைப் பிரம்மாண்டமான அளவில் விரிவாக்குவதுடன்,—இது பணமூட்டைகளுக்கான ஜனநாயகமாய் இராது முதன்முதலாய் ஏழைக்களுக்கான ஜனநாயகமாய் மக்களுக்கான ஜனநாயகமாக ஆகிறது—கூடவே ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டலாளர்களும் முதலாளிகளுமானேரின் சுதந்திரத்துக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வரிசையாகப் பல கட்டுகளை விதித்திடுகிறது. மனிதகுலத்தைக் கூலி அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இவர்களை நாம் அடக்கியாக வேண்டும், இவர்களுடைய எதிர்ப்பை வன்முறை

கொண்டு நசுக்கியாக வேண்டும். அடக்கியாளுதல் இருக்கும் இடத்தில், பலாத்காரம் இருக்குல் இடத்தில் சுதந்திரமோ ஜனநாயகமோ இல்லை என்பது தெளிவு.

பெபெலுக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் இதனை மிகச் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார். ''பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவைப்படுவது தனது எதிராளிகளை அடக்கிவைப்பதற்காகவே அன்றி சுதந்திரத்தின் நலன்களுக்காக அல்ல; சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகியதும் அரசு அரசாய் இல்லாமல் போகிறது'' என்று இக்கடிதத்தில் எங்கெல்ஸ் கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

மிகப் பெருவாரியான மக்களுக்கு ஜனநாயகம், சுரண்டுவோரையும் மக்களை ஒடுக்குவோரையும் வன்முறைகொண்டு அடக்குதல், அதாவது ஜனநாயகத்திலிருந்து விலக்கி ஒதுக்குதல்—முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு மாறிச் செல்லுகையில் இதுவே ஜனநாயகத்தில் ஏற்படும் மாறுதல்.

கம்யூனிஸ சமுதாயத்தில்தான் — முதலாளிகளுடைய எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு, முதலாளிகள் மறைந்து போய், வர்க்கங்கள் இல்லாமற் போய்விடும் (அதாவது, சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்திச் சாதனங்களுடன் அவர்களுக்குள்ள உறவு சம்பந்தமாய் எந்தப் பாகுபாடும் இல்லாமற் போய்விடும்) அப்பொழுது மட்டும்தான் ''அரசு... இல்லாமல் போகிறது'', ''சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகிறது''. அப்பொழுதுதான் மெய்யாகவே முழுநிறைவான ஜனநாயகம், விதிவிலக்கு எதுவுமில்லாத ஜனநாயகம் சாத்தியமாகிக் கைவரப் பெறுகிறது. அப்பொழுதுதான் ஜனநாயகம் உலர்ந்து உதிரத் தொடங்கும். முதலாளித்துவ அடிமை வாழ்விலிருந்தும் முதலாளித்துவச் சுரண்டலின் சகிக்கவொண்ணுத கொடுமைகளிலிருந்தும் மிருகத்தனத்திலிருந்தும் அபத்தங்களிலிருந்தும் இழுக்குகளிலிருந்தும் விடுபட்டு, பல நூறு ஆண்டுகளாய் அறியப்பட்டு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் அரிச்சுவடி நீதிவிளக்கங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்துள்ள சமுதாய ஒட்டுறவின் சர்வசாதாரண விதிகளை மக்கள் பற்றியொழுகச் சிறிதுசிறிதாய்ப் பழகிக் கொள்வார்கள். பலாத்காரம் இல்லாமலே, பலவந்தம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே, பலவந்தத்துக்கான அரசு

எனப்படும் தனிவகை இயந்திரம் இல்லாமலே அவர்கள் இவ்விதிகளைப் பற்றியொழுகப் பழகிக் கொள்வார்கள்.

''அரசு உலர்ந்து உதிர்கிறது'' என்னும் தொடர் நன்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தொடர் இந்நிகழ்ச்சிப் போக்கின் படிப்படியாய் நடந்தேறும் தன்மை, தன்னியல்பாய்த் தானே நடந்தேறும் தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாய் உள்ளது. பழக்கத்தால் மட்டுமே இது போன்ற விளைவு ஏற்பட முடியும், ஐயப்பாட்டுக்கு இடமின்றி நிச்சயம் ஏற்படவும் செய்யும். ஏனெனில் சுரண்டல் இல்லாத போது, ஆத்திரம் உண்டாக்கக்கூடியதும் கண்டனத்தையும் கலகத்தையும் எழச் செய்து அடக்க வேண்டியதற்கான தேவையைத் தோற்றுவிப்பதும் இல்லாத போது, மக்கள் எப்படித் தயக்கமின்றி சமுதாய ஒட்டுறவுக்கு அவசியமான விதிகளைப் பற்றியொழுகப் பழகிக் கொண்டுவிடுகிறார்கள் என்பதற்கு லட்சோப லட்சக் கணக்கான எடுத்துக்காட்டுகளை நம்மைச் சுற்றிலும் காண்கிறோம்.

இவ்வாறாக, முதலாளித்துவச் சமுதாயத்தில் இருக்கும் ஜனநாயகம் வெட்டிக்குறுக்கப்பட்ட, அலங்கோலமான, பொய்யான ஜனநாயகம்; செல்வந்தர்களுக்கு மட்டுமேயான, சிறுபான்மையோருக்கான ஜனநாயகம். கம்யூனிஸத்துக்கு மாறிச்செல்லும் காலத்துக்குரிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் முதன்முதலாய் மக்களுக்கான, பெரும்பான்மையோருக்கான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கிறது; அதனுடன் கூடவே சுரண்டுவோராகிய சிறுபான்மையோரைத் தேவையான அளவுக்கு அடக்கவும் செய்கிறது. மெய்யாகவே முழுநிறைவான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்க வல்லது கம்யூனிஸம் ஒன்று மட்டுமே. எவ்வளவுக்கு எவ்வளவு இது முழு நிறைவானதாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு விரைவிலே அது தேவையற்றதாகித் தானாகவே உலர்ந்து உதிர்கிறது.

வேறு விதமாய்க் கூறினால், முதலாளித்துவத்தில் அரசெனும் சொல்லின் முறையான அர்த்தத்தைக் குறிக்கும், அதாவது ஒரு வர்க்கம் பிறிதொன்றை, அதுவும் சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அடக்குவதற்கான தனிவகை இயந்திரமான அரசு இருக்கிறது. சுரண்டப்படும் பெரும்பான்

மையோரைச் சுரண்டும் சிறுபான்மையோர் முறையாக அடக்குவதென்னும் இத்தகைய செயல் வெற்றி பெற இயற்கையாகவே, அடக்கியொடுக்கும் பணியில் அளவு கடந்த மூர்க்கமும் மிருகத்தனமும் அவசியமாகி விடுகிறது; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாகிவிடு கிறது. இந்த வெள்ளத்தில் நடந்துதான் மனிதகுலம் அடிமை முறை, பண்ணையடிமை அமைப்பு, கூலி உழைப்பு ஆகியவற் றின் வழியே சென்று கொண்டிருக்கிறது.

மேலும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு மாறிச்செல்கையிலும் அடக்க வேண்டியது இன்னும் தேவை யாகவே இருக்கிறது. ஆனால் இப்பொழுது அது சுரண்டப் பட்ட பெரும்பான்மையோர் சுரண்டும் சிறுபான்மையோரை அடக்குவதாகிறது. அடக்குவதற்கான ஒரு தனிவகை ஏற்பாடு, ஒரு தனிவகை இயந்திரம், ''அரசு'', இன்னமும் தேவை யாகவே இருக்கிறது, ஆனால் இப்பொழுது அது மாறிச்செல் லும் கட்டத்துக்குரிய அரசாய் அமைகிறது. அரசென்னும் சொல்லின் சரியான பொருளில் இனி அது அரசாய் இல்லை. ஏனெனில் சிறுபான்மையோரான சுரண்டுவோரை நேற்றையக் கூலி அடிமைகளான பெரும்பான்மையோர் அடக்குவது ஒப்பளவில் மிகச் சாதாரணமான, எளிதான, இயற்கையான பணி ஆகுமாதலால், அடிமைகள் அல்லது பண்ணையடிமை கள் அல்லது கூலி உழைப்பாளர்களின் எழுச்சிகளை அடக்கு வதற்கு வேண்டியிருந்ததைப் போலல்லாது மிகச் சொற்ப அளவே இரத்தம் சிந்தும்படி இருக்கும், மனிதகுலத்துக்கு மிகச் சொற்ப சேதமே உண்டாகும். ஜனநாயகத்தை மிகவும் விரிவாக்கி மக்களில் மிகப் பிரம்மாண்டமான பெரும்பான் மையோருக்குக் கிட்டச் செய்வது இப்பணிக்கு ஒவ்வாத தில்லையாதலால், அடக்குவதற்கான ஒரு தனிவகை இயந்திரத் தின் தேவை மறையத் தொடங்கிவிடும். இயல்பாகவே சுரண்டுவோருக்கு மிகச் சிக்கலான இயந்திரம் ஒன்று இல்லாமல் மக்களை அடக்க முடியவில்லை. ஆனால் மக்களால் மிக எளிய ''இயந்திரம்'' கொண்டே, சுரண்டுவோரை அடக்கி விட முடியும்; பெருமளவுக்கு ''இயந்திரம்'' இல்லாமலே, ஒரு தனிவகைப் பொறியமைப்பு இன்றியே, சாதாரண ஏற் பாடான ஆயுதமேந்திய மக்களின் ஒழுங்கமைப்பைக் கொண் டே (தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது

சோவியத்துகளைப் போன்ற ஒழுங்கமைப்பு என்று முன்னோடிச் சென்று வரப்போவதைக் குறிப்பிடலாம்), இப் பணியைச் செய்துவிடலாம்.

முடிவில், கம்யூனிஸம் ஒன்றுதான் அரசை அறவே தேவையற்றதாக்கும். ஏனெனில் கம்யூனிஸத்தில் அடக்கப் பட வேண்டியவர்கள் யாரும் இல்லை—ஒரு வர்க்கம் என்ற அர்த்தத்தில், மக்கள் தொகையில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு எதிராய் முறையான போராட்டம் நடத்துவது என்ற அர்த் தத்தில் "யாரும் இல்லை". நாங்கள் கற்பனாவாதிகளல்ல; தனிநபர்கள் அட்டூழியங்கள் புரியக்கூடும், இது சாத்தியமே, தவிர்க்கமுடியாததே என்பதையோ, இத்தகைய அட்டூழியங் களைத் தடுத்து நிறுத்துவது அவசியமே என்பதையோ நாங்கள் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் முதலாவதாக, அடக்குவதற்கான ஒரு தனிவகை இயந்திரம், ஒரு தனி வகைப் பொறியமைப்பு இதற்குத் தேவையில்லை; ஆயுதமேந் திய மக்கள் தாமே இதனைச் செய்துவிடுவார்கள்—நாகரிக மடைந்த மக்கள் திரள் எதுவும் நவீன சமுதாயத்தில் உடனே தலையிட்டு அடிதடிச் சண்டையை நிறுத்துவது போல, அல்லது பெண் ஒருத்தி தாக்கப்படுவதைத் தடுப்பது போல, அவர்கள் இதனைச் சுலபமாகவும் உடனடியாகவும் செய்து விடுவார்கள். இரண்டாவதாக, சமுதாய ஒட்டுறவுக்குரிய விதிகளை மீறுவதால் வரும் விளைவான இந்த அட்டூழியங் களுக்கு அடிப்படைச் சமுதாயக் காரணம் மக்கள் உட்படுத் தப்பட்டுள்ள சுரண்டலும் அவர்களை வதைக்கும் இல்லாமை யும் வறுமையுமேதான் என்று நமக்குத் தெரியும். இந்தப் பிரதான காரணம் நீக்கப்பட்டதும் அட்டூழியங்கள் தவிர்க்க முடியாதவாறு "உலர்ந்து உதிரத்" தொடங்கிவிடும். எவ் வளவு விரைவாய், எந்த வரிசையில் நடந்தேறும் என்பது தெரியாது, ஆனால் அவை உலர்ந்து உதிர்ந்துவிடும் என்பது நமக்குத் தெரியும். அவை உலர்ந்து உதிரும் போது அரசும் உலர்ந்து உதிரும்.

கற்பனாவாதப் படைப்புகளை எழுப்பாமல், மார்க்ஸ் இந்த வருங்காலத்தைப் பற்றி இப்பொழுது வரையறுத்துச் சொல்லக்கூடியதை, அதாவது கம்யூனிஸ சமுதாயத்தின் கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்கும் (படிகள், நிலைகள்) இடையிலுள்ள வேறுபாட்டை மேலும் முழுமையுடன் வரை யறுத்துச் சொன்னார்.

3. கம்யூனிஸ சமுதாயத்தின் முதற் கட்டம்

சோஷலிஸத்தில் தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் "குறைக்கப்படாத" அல்லது "முழுமையான பயன்" கிடைக்குமென்று லஸ்ஸால் கூறிய கருத்து தவறென்பதை நிரூபிக்க கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்தில் மார்க்ஸ் விவரமான பரிசீலனையில் இறங்குகிறார். சமுதாயத்தினுடைய சமூக உழைப்பு அனைத்திலுமிருந்து சேம நிதி ஒன்றைக் கழிக்க வேண்டுமென்பதை, பொருளுற்பத்தியை விரிவாக்குவதற்கும், இயந்திரங்களின் "தேய்மானத்துக்கு" மாற்றீடு செய்வதற்கும் இன்ன பிறவற்றுக்குமான நிதிகளைக் கழிக்க வேண்டுமென்பதை மார்க்ஸ் தெளிவுபடுத்துகிறார். பிறகு நுகர்வுப் பொருட்களிலிருந்து நிர்வாகச் செலவுகளுக்கும், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள் முதலான பலவற்றுக்கும் வேண்டிய நிதியைக் கழிக்க வேண்டும்.

லஸ்ஸாலின் தெளிவற்ற, குழப்படியான, பொதுத் தொடருக்கு ("தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் முழுமையான பயன்") பதிலாய், மார்க்ஸ் சோஷலிஸ சமுதாயம் அதன் விவகாரங்களை உண்மையில் எப்படி நிர்வகித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதை நிதானித்து மதிப்பீடு செய்கிறார். முதலாளித்துவம் இல்லாது ஒழிந்துவிடும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகளை மார்க்ஸ் ஸ்தூலமான முறையில் பகுத்தாராய முற்படுகிறார். அவர் கூறுவதாவது:

"இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது" [தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பகுத்தாராய்கையில்] "தனது சொந்த அடித்தளங்களின் மீது வளர்ந்தெழுந்துள்ள ஒரு கம்யூனிஸ சமுதாயமல்ல; மாறாக, முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றுகிற கம்யூனிஸ சமுதாயமாகும்; எனவே, அது அந்தப் பழைய சமுதாயத்தின் கர்ப்பத்திலிருந்து வெளித்தோன்றுகிற நிலையில் அந்தப் பழைய சமுதாயத்தின் பிறவிக்குறிகளை ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும் தார்மிக வழியிலும் அறிவு வழியிலும்—இன்னமும் பதியப்பெற்றவாறிருக்கிறது."[105]

இந்தக் கம்யூனிஸ சமுதாயத்தைத்தான், முதலாளித்துவத்திலிருந்து பிறந்து இப்பொழுதுதான் வெளியே வந்து

அந்தப் பழைய சமுதாயத்தின் பிறவிக்குறிகள் எல்லா வழியிலும் பதிந்திருக்கும் இந்தச் சமுதாயத்தைத்தான் மார்க்ஸ் கம்யூனிஸ சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிடுகிறார்.

உற்பத்திச் சாதனங்கள் இப்பொழுது தனிநபர்களின் தனியுடைமையாய் இல்லை. உற்பத்திச் சாதனங்கள் சமுதாயம் அனைத்தின் உடைமையாகிவிட்டன. சமுதாயத்துக்குத் தேவையான வேலையில் ஒரு பகுதியைச் செய்திடும் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் இவ்வளவு வேலையைச் செய்திருப்பதாய்க் கூறும் சான்றிதழ் ஒன்றைச் சமுதாயத்திடமிருந்து பெற்றுக் கொள்கிறார். இச்சான்றிதழைக் கொண்டு இதற்கு இணையான அளவுக்கு அவர் நுகர் பண்டங்களின் பொதுக் களஞ்சியத்திலிருந்து பண்டங்கள் பெறுகிறார். பொது நிதிக்குச் செல்லும் உழைப்பின் அளவு கழித்தெடுக்கப்பட்ட பின், ஒவ்வொரு தொழிலாளியும் சமுதாயத்திற்குத் தான் அளித்ததற்குச் சமமான அளவில் அதனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

''சமத்துவம்'' அரசோச்சுவதாகவே தோன்றுகிறது.

ஆனால் இத்தகைய சமுதாய அமைப்பினை (வழக்கமாய் இது சோஷலிஸம் என்று அழைக்கப்படுகிறது, மார்க்ஸ் இதனைக் கம்யூனிஸத்தின் முதற் கட்டமெனக் குறிப்பிடுகிறார்) கருத்தில் கொண்டு லஸ்ஸால் இது ''சமத்துவ விநியோகமாகும்'' என்றும், ''உழைப்பின் உற்பத்திப் பொருளில் சம பங்கு பெற எல்லோருக்கும் சம உரிமை அளிப்பதாகும்'' என்றும் கூறும் போது, லஸ்ஸால் தவறிழைக்கிறார்; இந்தத் தவற்றை மார்க்ஸ் அம்பலப்படுத்துகிறார்.

''சம உரிமை'' இங்கு இருக்கிறது உண்மைதான், ஆனால் இன்னமும் இது ''முதலாளித்துவ உரிமையேதான்'', ஒவ்வொரு உரிமையையும் போல சமத்துவமின்மையைக் கொண்டதேதான் என்று மார்க்ஸ் கூறுகிறார். ஒவ்வொரு உரிமையும் உண்மையில் ஒரே மாதிரி இல்லாத, ஒருவர்க்கொருவர் சமமாயில்லாத வெவ்வேறானோருக்கும் சம அளவீட்டைப் பயன்படுத்துகிறது. ஆகவே ''சம உரிமை'' என்பது உண்மையில் சமத்துவத்துக்குப் பங்கம் செய்கிறது, அநீதியாகிவிடுகிறது. ஒவ்வொருவரும் ஏனையவர் எவரையும் போல அதே அளவு சமுதாய உழைப்பு புரிந்து, சமுதாய

உற்பத்திப் பொருளில் (மேற்கூறியபடி கழித்தபின் எஞ்சுவதில்) சமப் பங்கு பெறுகிறார்.

ஆனால் எல்லோரும் ஒரே மாதிரி இல்லை: ஒருவர் வலுவானவர், மற்றொருவர் பலவீனமானவர்; ஒருவர் கல்யாணமானவர், மற்றொருவர் ஆகாதவர்; ஒருவருக்கு அதிகக் குழந்தைகள், மற்றொருவருக்கு அத்தனை இல்லை.... மார்க்ஸ் இதிலிருந்து எடுத்துரைக்கும் முடிவு வருமாறு:

''...சமமான உழைப்பை அளித்து, ஆகவே சமுதாய நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறுவதன் மூலம், உண்மையில் ஒருவர் பிறிதொருவரைவிட அதிகம் பெறுவார், ஒருவர் பிறிதொருவரைவிடச் செல்வந்தராய் இருப்பார், என்றவாறு. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க, உரிமை சமமாய் இருப்பதற்குப் பதில் சமமின்றி இருத்தல் வேண்டும்....''[106]

ஆகவே கம்யூனிஸத்தின் முதற் கட்டம் இன்னமும் நீதியும் சமத்துவமும் அளித்திட முடியாத நிலையிலேதான் இருக்கும்: செல்வத்தில் வேறுபாடுகள், நியாயமில்லா வேறுபாடுகள் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கும், ஆனால் மனிதனை மனிதன் சுரண்டுதல் முடியாததாகிவிடும், ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களை—ஆலைகளையும், இயந்திரங்களையும், நிலத்தையும், பிறவற்றையும்—கைப்பற்றி அவற்றைத் தனியுடைமையாக்கிக் கொள்ள முடியாததாகிவிடும். பொதுவில் ''சமத்துவம்'' குறித்தும் ''நீதி'' குறித்தும் லஸ்ஸால் கூறும் தெளிவற்ற சிறு முதலாளித்துவத் தொடர்களைத் தகர்த்திட்டு, மார்க்ஸ் கம்யூனிஸ சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையைத் தெளிவுபடுத்துகிறார். கம்யூனிஸ சமுதாயம் தனிநபர்களால் உற்பத்திச் சாதனங்கள் கைப்பற்றப்படுவதிலுள்ள ''அநீதியை'' மட்டும்தான் முதலில் ஒழிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது என்பதையும், மற்றோர் அநீதியை, அதாவது நுகர் பொருட்களை (தேவைகளுக்கு ஏற்ப அல்லாமல்) ''ஆற்றிய உழைப்பின் அளவுக்கு ஏற்ப'' விநியோகிப்பதிலுள்ள அநீதியை அதனால் உடனடியாக அகற்ற முடியவில்லை என்பதையும் மார்க்ஸ் காட்டுகிறார்.

முதலாளித்துவப் பேராசிரியர்களும் ''நமது'' துகானும் அடங்கலான விஞ்ஞானக்கேடான பொருளாதாரவாதிகள் ஓயாமல் சோஷலிஸ்டுகள்மீது குற்றம் சாட்டுகிறார்கள்:

சோஷலிஸ்டுகள் மக்களிடையிலான சமத்துவமின்மையை மறந்துவிடுவதாகவும் இந்த சமத்துவமின்மையை அகற்றி விடலாமெனக் ''கனவு காண்பதாகவும்'' கூறுகிறார்கள். இந்தக் குற்றச் சாட்டு முதலாளித்துவச் சித்தாந்தவாதிகளு டைய அளவுகடந்த அறியாமையைக் காட்டுவதை நாம் பார்க்கிறோம்.

சிறிதும் தவறாது உன்னிப்புடன் மார்க்ஸ் மனிதர்களிடை யிலான தவிர்க்கமுடியாத சமத்துவமின்மையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதுடன் நில்லாமல், உற்பத்திச் சாதனங் களைச் சமுதாயம் அனைத்துக்குமுரிய பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும் (சகஜமாய் இது ''சோஷலிஸம்'' என்றழைக்கப்படுகிறது) வினியோகத்திலுள்ள குறைபாடு களும் ''முதலாளித்துவ உரிமையின்'' சமத்துவமின்மையும் அகற்றப்பட்டுவிடுவதில்லை என்பதையும், ''ஆற்றப் படும் உழைப்புக்கு ஏற்ப'' உற்பத்திப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளப்படும் வரை இவை தொடர்ந்து நிலவும் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார். மேலும் மார்க்ஸ் கூறுவதாவது:

''... இந்தக் குறைபாடுகள் கம்யூனிஸ சமுதாயத்தின் முதற் கட்டத்தில் தவிர்க்கமுடியாதவை, ஏனெனில் இச் சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித் துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளி வந்திருக்கிறது. உரிமையானது ஒருபோதும் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பையும் இதனால் நெறிப்படுத்தப் பட்ட அதன் பண்பாட்டு வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உயர்வானதாகிவிட முடியாது....''[107]

ஆக, கம்யூனிஸ சமுதாயத்தின் முதற் கட்டத்தில் (சாதா ரணமாய் இது சோஷலிஸம் என்றழைக்கப்படுகிறது) ''முத லாளித்துவ உரிமை'' அதன் முழு அளவிலும் ஒழிக்கப்பட்டு விடுவது இல்லை; பகுதி அளவுக்கே, இதுகாறும் சித்தி பெற்றுள்ள பொருளாதாரப் புரட்சிக்கு ஏற்ற அளவுக்கே, அதாவது உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்த மட்டிலுமே ஒழிக்கப்பட்டிருக்கிறது. ''முதலாளித்துவ உரிமை'' இவற் றைத் தனிநபர்களுடைய தனிவுடைமையாய் அங்கீகரிக் கிறது. சோஷலிஸம் இவற்றைப் பொதுவுடைமையாய்

மாற்றுகிறது. அந்த அளவுக்கு—அந்த அளவுக்கு மட்டுமே—"முதலாளித்துவ உரிமை" மறைகிறது.

ஆனால் அதன் மற்றொரு பகுதியைப் பொறுத்தவரை அது தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது; சமுதாய உறுப்பினர்களிடையே பண்டங்களின் வினியோகத்திலும் உழைப்பைப் பிரித்தளிப்பதிலும் ஒழுங்கியக்கியாய் (நிர்ணயிக்கும் காரணியாய்) தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. "வேலை செய்யாதவனுக்கு உணவு கிடையாது" என்னும் சோஷலிஸக் கோட்பாடு ஏற்கெனவே சித்தி பெற்றுவிட்டது; "சம அளவிலான உழைப்புக்கு சம அளவிலான உற்பத்திப் பொருட்கள்" என்னும் மற்றொரு சோஷலிஸக் கோட்பாடும் ஏற்கெனவே சித்திபெற்றுவிட்டது. ஆயினும் இது இன்னமும் கம்யூனிஸமாகிவிடவில்லை; சமமற்ற வர்களுக்கு, சமமில்லா (மெய்யாகவே சமமில்லா) உழைப்பு அளவுகளுக்கு ஊதியமாய்ச் சம அளவிலான உற்பத்திப் பொருட்கள் அளிக்கும் "முதலாளித்துவ உரிமை" இன்னும் ஒழிக்கப்பட்டாகவில்லை.

இது ஒரு "குறைபாடே", ஆனால் கம்யூனிஸத்தின் முதற்கட்டத்தில் இது தவிர்க்கமுடியாதது என்று மார்க்ஸ் கூறுகிறார். ஏனெனில் கற்பனாவாதத்தில் ஈடுபடாதிருக்க வேண்டுமாயின், முதலாளித்துவத்தை வீழ்த்தியதும் மக்கள் உரிமைத் தராதரம் எதுவும் பாராது சமுதாயத்துக்காக வேலை செய்ய உடனடியாய்க் கற்றுக் கொண்டுவிடுவார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. தவிரவும் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டதும் இத்தகைய ஒரு மாறுதல் ஏற்படுவதற்கு வேண்டிய பொருளாதார முன்னிபந்தனைகள் உடனடியாய்ப் படைக்கப்பட்டுவிடுவதில்லை.

"முதலாளித்துவ உரிமையின்" தராதரத்தைத் தவிர இப்பொழுது வேறு தராதரம் இல்லை. ஆகவே இந்த அளவுக்கு அரசுக்குரிய தேவை இன்னும் இருந்து வருகிறது; உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையைப் பாதுகாப்பதுடன், உழைப்பிலும் உற்பத்திப் பொருட்களின் வினியோகத்திலும் சமத்துவத்தைப் பாதுகாக்கக்கூடிய அரசு தேவைப்படுகிறது.

முதலாளிகளும் வர்க்கங்களும் இனி இல்லையாதலால் அந்த அளவுக்கு அரசு உலர்ந்து உதிர்கிறது. ஆகவே எந்த வர்க்கமும் இனி அடக்கப்பட முடியாது.

ஆனல் அரசு இன்னும் அறவே உலர்ந்து உதிர்ந்துவிடவில்லை, ஏனெனில் நடப்பிலுள்ள சமத்துவமின்மையைப் புனிதமாக்கிடும் ''முதலாளித்துவ உரிமையைப்'' பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அரசு அறவே உலர்ந்து உதிர முழு நிறைவான கம்யூனிஸம் அவசியமாகும்.

4. கம்யூனிஸ சமுதாயத்தின் உயர் கட்டம்

மார்க்ஸ் தொடர்ந்து கூறுகிறார்:

''...கம்யூனிஸ சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனிநபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன்கூட மூளை உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்தபின், உழைப்பானது பிழைப்புக்கான சாதனமாய் மட்டுமின்றி வாழ்வின் முதற்பெரும் தேவையுமாகியபின், தனிநபருடைய முழு வளர்ச்சியோடுகூட உற்பத்திச் சக்திகளும் அதிகரித்துவிட்டபின், பொதுச் சமுதாயச் செல்வத்தின் ஊற்றுக்கண்கள் அனைத்தும் மேலும் நிறைவாகப் பெருக்கெடுத்து ஓடுகையில் —அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முற்றுகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகைகளில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப' என்பதாய்ப் பொறித்துக் கொள்ளும்!''[108]

''சுதந்திரம்'', ''அரசு'' இவ்விரு சொற்களையும் இணைத்து முடிபோடுவதிலுள்ள அபத்தத்தை எள்ளிநகையாடும் எங்கெல்ஸின் உரைகள் எவ்வளவு சரியானவை என்பதை இப்பொழுதுதான் நம்மால் முழு அளவுக்கு உணர முடிகிறது. அரசு இருக்கும்வரை சுதந்திரம் இல்லை. சுதந்திரம் வந்ததும் அரசு இல்லாமற் போய்விடும்.

அரசு முற்றுக உலர்ந்து உதிர்வதற்கு அடிப்படையாய் அமைவது கம்யூனிஸத்தின் மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டமாகும். இக்கட்டத்தில் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை மறைந்து விடுகிறது; தற்காலச் சமுதாய சமத்துவமின்மைக்குத் தலைமையான தோற்றுவாய்களில் ஒன்று இவ்வாறு இக்கட்டத்தில் மறைந்துவிடுகிறது. உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும், முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல்

செய்வதால் மட்டும் உடனடியாக எவ்வகையிலும் இந்தத் தலைமையான தோற்றுவாயை அகற்றிவிட முடியாது.

முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதானது உற்பத்தி சக்திகள் பிரம்மாண்டமாய் வளர்ச்சியுறுவதைச் சாத்தியமாக்குகிறது. முதலாளித்துவம் ஏற்கெனவே எவ்வளவு நம்பமுடியாத அளவுக்கு இந்த வளர்ச்சியைத் தடுத்து இழுக்கிறதென்பதைக் காணும் போது, ஏற்கெனவே கைவரப்பெற்றுள்ள தொழில்நுணுக்க நிலையின் அடிப்படையில் எவ்வளவு அதிக முன்னேற்றத்தை ஏற்படுத்தலாமென்பதைக் காணும் போது, முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதன் விளைவாய் மனித சமுதாயத்தின் உற்பத்தி சக்திகள் தவிர்க்கமுடியாதவாறு பிரம்மாண்டமாய் வளர்ச்சியடையுமென நாம் திடநம்பிக்கையோடு கூற முடியும். ஆனால் இந்த வளர்ச்சி எவ்வளவு விரைவாக நடந்தேறும் என்றோ, உழைப்புப் பிரிவினையிலிருந்து முறித்துக் கொண்டு வருவதும், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை ஒழிக்கப்படுவதும், உழைப்பானது ''வாழ்க்கையின் முதற் பெரும் தேவையாவதும்'' எவ்வளவு சடுதியில் நடைபெறும் என்றோ நாம் அறியோம், அறியவும் முடியாது.

ஆகவேதான் நாம் தவிர்க்க முடியாதபடி அரசு உலர்ந்து உதிர்வது குறித்து மட்டும் பேசி, இந்த நிகழ்ச்சிப்போக்கு நீடித்து நடைபெறும் தன்மை கொண்டதாய் இருப்பதையும் கம்யூனிஸத்தின் உயர் கட்டம் வளர்ச்சியுறுவதன் வேகத்தைச் சார்ந்ததாய் இருப்பதையும் வலியுறுத்திவிட்டு, அரசு உலர்ந்து உதிரத் தேவையான காலத்தையோ அதன் ஸ்தூலமான வடிவங்களையோ பற்றிய பிரச்சினைக்கு விடை கூறாது விட்டு வைக்க உரிமை பெற்றிருக்கிறோம். ஏனெனில் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க விவரப்பொருள் இல்லை.

''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதியை சமுதாயம் பின்பற்றுகையில்தான், அதாவது மக்கள் தாமே மனமுவந்து தமது ஆற்றலுக்கு ஏற்ப வேலை செய்யும்படி சமுதாய ஒட்டுறவுக்கான அடிப்படை நியதிகளைப் பற்றியொழுக அந்த அளவுக்குப் பழகிக் கொண்டுவிடும் போதும், அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித்திறன்

அந்த அளவுக்கு அதிகமாகிவிடும் போதும் தான் அரசு முற்றாக உலர்ந்து உதிர முடியும். மற்றவனைவிட நான் அரை மணி நேரம் அதிகமாக வேலை செய்யவில்லையா, மற்றவனை விட நான் குறைவாய் சம்பளம் பெறவில்லையா என்று ஷைலாக்கின்[109] கல்நெஞ்சுடன் கணக்கிட்டுப் பார்க்கும்படி நிர்ப்பந்தம் செய்யும் ''முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு'' அப்பொழுது கடக்கப்பட்டுவிடும். அப்பொழுது சமுதாயம் உற்பத்திப் பொருட்களை வினியோகிக்கையில் ஒவ்வொருவரும் பெற வேண்டிய அளவை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை இருக்காது; ஒவ்வொருவரும் ''தமது தேவைகளுக்கு ஏற்பத்'' தடங்கலின்றி சுதந்திரமாய் எடுத்துக் கொள்வார்.

முதலாளித்துவக் கண்ணோட்டத்திலிருந்து, இத்தகைய ஒரு சமுதாய அமைப்பு ''வெறும் ஆகாயக் கோட்டையே'' என்று அறிவிப்பதும், அந்தந்தக் குடிமகனின் உழைப்புமீது எந்தக் கண்காணிப்புமின்றி ஒவ்வொருவரும் சமுதாயத்திடமிருந்து வேண்டிய அளவுக்கு மிட்டாயும் கார்களும் பியானோக்களும் பிறவும் பெறும் உரிமையை ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்வதாய் வாக்களிப்பதாக சோஷலிஸ்டுகளை நையாண்டி செய்வதும் சுலபமே. இன்றுங்கூட மிகப் பெருவாரியான முதலாளித்துவ ''அறிஞர்கள்'' இவ்வாறு நையாண்டி செய்வதோடு நின்றுவிடுகிறார்கள். இதன் மூலம் தமது அறியாமையையும், தன்னலங் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாக்க முனைவோரே தாம் என்பதையும்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள்.

அறியாமைதான்—ஏனென்றால், கம்யூனிஸ வளர்ச்சியின் உயர் கட்டம் வருமென ''வாக்குறுதி தரும்'' எண்ணம் எந்த சோஷலிஸ்டுக்கும் தோன்றியதில்லை. இது வரவே செய்யுமென்று சோஷலிஸ்டு மூலவர்கள் முன்னறிந்து கூறியதைப் பொறுத்த வரை, அது உழைப்பின் தற்போதைய உற்பத்தித் திறனையோ, பொமியலோவ்ஸ்கியின் கதைகளில்[110] வரும் மாணவர்களைப் போல ''வேடிக்கைக்காக வேண்டி'' பொதுச் செல்வங்களுக்குச் சேதம் விளைவிக்கக் கூடியவர்களும், முடியாததைக் கொடு என்று கோரக் கூடியவர்களுமான தற்போதுள்ள சராசரி மனிதர்களையோ எண்ணிக் கூறப்பட்டதல்ல.

கம்யூனிஸத்தின் ''உயர்'' கட்டம் வரும்வரை, உழைப்பின் அளவைமீதும் நுகர்வின் அளவைமீதும் சமுதாயமும் அரசும் மிகவும் கண்டிப்பான கண்காணிப்புச் செய்ய வேண்டுமென்று சோஷலிஸ்டுகள் கோருகின்றனர். ஆனால் இந்தக் கண்காணிப்பு முதலாளிகளுடைய உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதிலிருந்தும் முதலாளிகள்மீது தொழிலாளர்களுடைய கண்காணிப்பு நிறுவப்படுவதிலிருந்தும் தொடங்க வேண்டும், தவிரவும் இந்தக் கண்காணிப்பு அதிகார வர்க்கத்தினராலான அரசால் அல்ல, ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான அரசால் நடத்தப்பட வேண்டும் என்கின்றனர்.

முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் (மற்றும் த்ஸெரெத்தேலிகள், செர்னேவ்கள் முதலானேரை ஒத்த முதலாளித்துவ சித்தாந்தவாதிகளது பரிவாரத்தினரும்) தன்னலங் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது எதில் காணக்கிடக்கிறது என்றால், இன்றைய அரசியலின் ஜீவாதாரமான அவசர அவசியப் பிரச்சினையை விட்டுவிட்டு, அதாவது முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்தல், குடிமக்கள் எல்லோரையும் பிரம்மாண்டமான ஒரே ''கூட்டமைப்பின்''—அனைத்து அரசின்—தொழிலாளர்களாகவும் பணியாளர்களாகவும் மாற்றுதல், இந்தக் கூட்டமைப்பின் செயல் அனைத்தையும் மெய்யான ஜனநாயக அரசுக்கு, தொழிலாளர், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் அரசுக்கு முற்றிலும் கீழ்ப்படியச் செய்தல் ஆகியவற்றை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாய் நெடுந்தொலைவிலுள்ள எதிர்காலத்தைப் பற்றிய வாக்குவாதத்தையும் பேச்சையும் மேற்கொள்கிறார்கள்.

புலமை வாய்ந்த ஒரு பேராசிரியரும், அவரைத் தொடர்ந்து சிறு முதலாளித்துவப் பேலிப் பண்பாளரும், இவரையும் தொடர்ந்து த்ஸெரெத்தேலிகளும் செர்னேவ்களும் போல்ஷிவிக்குகளின் அதீத கற்பனைகள் என்றும், வாய்ச்சவடால் வாக்குறுதிகள் என்றும், சோஷலிஸத்தைப் ''புகுத்துவது'' சாத்தியமல்ல என்றும் பேசுகையில், இவர்கள் கம்யூனிஸத்தின் உயர் கட்டம் அல்லது படியை மனதிற் கொண்டிருக்கிறார்கள். இதனைப் ''புகுத்துவதாய்'' யாரும் ஒருநாளும் வாக்குறுதி கூறவுமில்லை, நினைத்ததுங்கூட இல்லை; இது ''புகுத்தப்படக் கூடியது'' அல்ல.

இது நம்மை சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்குமுள்ள விஞ்ஞான வழியிலான வேறுபாடு குறித்த பிரச்சினைக்கு இட்டுச் செல்கிறது. ''சமூக-ஜனநாயகவாதி'' என்னும் பெயர் சரியல்ல என்பது குறித்து மேலே குறிக்கப்பட்ட தமது வாதத்தில் எங்கெல்ஸ் இந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்டினார். கம்யூனிஸத்தின் முதல் அல்லது கீழ்க் கட்டத்துக்கும் உயர்கட்டத்துக்குமுள்ள வேறுபாடு அரசியல் வழியில் காலப் போக்கில் மிகப் பெரியதாய் இருக்கும் எனலாம். ஆனால் இவ்வேறுபாட்டை இப்பொழுது முதலாளித்துவத்தில் இருக்கையில் கண்டறிய முற்படுவது நகைக்கத்தக்கதே ஆகும். தனிப்பட்ட அராஜகவாதிகள் மட்டும் வேண்டுமானால் (கிரப்போத்கின்களும் கிராவும் கார்னெலிஸனும் அராஜகவாதத்தின் ஏனைய ''தாரகைகளும்'' ''பிளெஹானவ் பாணியில்'' சமூக-தேசியவெறியர்களாக மாறியிருப்பதிலிருந்தும் இன்னமும் கண்ய உணர்வையும் மனசாட்சியையும் விட்டுவிடாதுள்ள ஒரு சில அராஜகவாதிகளில் ஒருவரான கே குறிப்பிட்டது போல ''அராஜகவாத-அகழாளர்களாக'' மாறியிருப்பதிலிருந்தும் எதுவும் அறிந்து கொள்ளாதோர் அராஜகவாதிகளிடையே இன்னமும் இருப்பார்களாயின் அப்படிப்பட்டவர்கள் வேண்டுமானால்) இதற்கு முதன்மையான முக்கியத்துவம் அளிக்கக்கூடும்.

ஆனால் சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்குமுள்ள விஞ்ஞான வழியிலான வேறுபாடு தெட்டத் தெளிவானது. வழக்கமாய் சோஷலிஸம் என்று அழைக்கப்படுவதை மார்க்ஸ் கம்யூனிஸ சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிட்டார். உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமை ஆகிவிடும் அளவுக்கு இக்கட்டத்துக்கும் ''கம்யூனிஸம்'' என்னும் சொல் பொருந்துவதாகும், ஆனால் இது முழு நிறைவான கம்யூனிஸம் அல்ல என்பதை நாம் மறக்காதிருக்க வேண்டும். மார்க்ஸின் விளக்கங்களுக்குள்ள மாபெரும் முக்கியத்துவம் என்னவெனில் இங்கும் அவர் பொருள்முதல்வாத இயக்கவியலை, வளர்ச்சித் தத்துவத்தை முரணின்றிக் கையாளுகிறார்; கம்யூனிஸத்தை முதலாளித்துவத்தில் இருந்து வளர்ச்சியுறும் ஒன்றாகக் கருதுகிறார். பண்டிதப் புலமை சார்ந்த வழியில் ''கண்டுபிடிக்கப்பட்ட'', புனையப்பட்ட இலக்கணங்களுக்கும் சொற்களைப் பற்றிய பயனற்ற

சண்டப்பிரசண்டங்களுக்கும் (எது சோஷலிஸம்? எது கம்யூனிஸம்?) பதிலாக, மார்க்ஸ் கம்யூனிஸத்தின் பொருளாதார முதிர்ச்சியினுடைய இரு கட்டங்கள் என்று சொல்லக் கூடியவற்றின் பகுத்தாய்வை அளிக்கிறார்.

முதற் கட்டத்தில் அல்லது படியில் கம்யூனிஸமானது பொருளாதார வழியில் இன்னமும் முழு அளவு முதிர்ச்சியுற்றதாக, முதலாளித்துவத்தின் மரபுகள் அல்லது மிச்ச சொச்சங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டதாக இருக்க முடியாது. ஆகவே கம்யூனிஸம் அதன் முதற் கட்டத்தில் "முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பை" விட்டொழிக்காமல் வைத்துக் கொள்ளும் சுவாரஸ்யமான நிகழ்ச்சித் தோற்றம் ஏற்படுகிறது. நுகர் பொருட்களின் வினியோகம் குறித்த இந்த முதலாளித்துவ உரிமைக்கு முதலாளித்துவ அரசு இருப்பது தவிர்க்க முடியாத முன்னிபந்தனையாகும், ஏனெனில் உரிமைக்குரிய தராதரங்களைப் பின்பற்றுமாறு உறுதிப்படுத்தவல்ல பொறியமைப்பு இல்லையேல் உரிமை அர்த்தமற்றதாகிவிடும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், கம்யூனிஸத்தில் சில காலத்துக்கு முதலாளித்துவ உரிமை மட்டுமல்ல, முதலாளி வர்க்கம் இல்லாத முதலாளித்துவ அரசுங்கூட இருக்கும்!

இது முரணுண்மை போலத் தோன்றலாம், அல்லது மார்க்ஸியத்தின் அதியற்புத உள்ளடக்கச் சாரத்தை ஆய்ந்தறிய கிஞ்சித்தும் முயலாதோர் அடிக்கடி மார்க்ஸியத்தின் மீது குறை கூறுகிறார்களே அத்தகைய இயக்கவியல் புதிராகவுங்கூடத் தோன்றலாம்.

ஆனால் உண்மை என்னவெனில், இயற்கையிலும் சமுதாயத்திலும் பழைமையின் மிச்சசொச்சங்கள் புதுமையில் எஞ்சி நின்று வாழ்க்கையில் நம்மை ஒவ்வொரு படியிலும் எதிர்கொள்கின்றன. தான்தோன்றித்தனமாய்க் கம்யூனிஸத்தில் "முதலாளித்துவ" உரிமையைக் கடுகளவும் மார்க்ஸ் புகுத்திவிடவில்லை. முதலாளித்துவத்தின் கர்ப்பத்திலிருந்து வெளித்தோன்றும் ஒரு சமுதாயத்தில் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் தவிர்க்கமுடியாததைத்தான் அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளிவர்க்கத்துக்கு, தனது விடுதலைக்காக அது முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், ஜனநாயகம் அளவுகடந்த முக்கியத்துவமுடையதாகும். ஆயினும் ஜனநாயகம் தாண்டிச் செல்லக் கூடாத ஓர் எல்லைக் கோடல்ல. பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்கும் செல்லும் பாதையில் அமைந்த கட்டங்களில் ஒன்றே அது.

ஜனநாயகம் சமத்துவத்தைக் குறிக்கிறது. சமத்துவம் என்றால் வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல் என்று பிழையற்ற முறையில் அர்த்தப்படுத்திக் கொள்வோமாயின் பாட்டாளி வர்க்கம் சமத்துவத்துக்காக நடத்தும் போராட்டத்தின் மாபெரும் முக்கியத்துவமும், ஒரு முழக்கம் என்ற முறையில் சமத்துவத்தின் மாபெரும் முக்கியத்துவமும் தெளிவாய் விளங்கும். ஆனால் ஜனநாயகம் பெயரளவிலான சமத்துவத்தையே குறிக்கிறது. சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் உற்பத்திச் சாதனங்களின் உடைமை சம்பந்தமாய் சமத்துவம் சாதிக்கப் பெற்றதும், அதாவது உழைப்புக்கும் சம்பளங்களுக்குமான சமத்துவம் சாதிக்கப் பெற்றதும், மேலும் தொடர்ந்து முன்னேறுவது எப்படி, பெயரளவிலான சமத்துவத்திலிருந்து நடைமுறை உண்மையான சமத்துவத்துக்கு, அதாவது ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதி செயல்படும் நிலைக்கு முன்னேறுவது எப்படி என்கிற பிரச்சினை தவிர்க்க முடியாதபடி மனித குலத்தை எதிர்கொள்ளும். எந்தக் கட்டங்களின் வாயிலாய், எந்த நடைமுறை நடவடிக்கைகளைக் கொண்டு மனிதகுலம் இந்தத் தலைமையான குறிக்கோளைச் சென்றடையும் என்பதை நாம் அறியோம், அறியவும் முடியாது. ஆனால் சோஷலிஸத்தை உயிரற்ற, இறுகிக்கெட்டியான, என்றென்றுக்கும் மாறாத ஒரே நிலையில் இருத்தப்பட்ட ஒன்றாய்க் கொள்ளும் சாதாரண முதலாளித்துவக் கருத்தோட்டம் நம்ப முடியாத அளவுக்கு பொய்யானது என்பதையும், உண்மையில் சோஷலிஸத்தில் மட்டும்தான் பொது வாழ்வு, தனியார் வாழ்வு இவற்றின் எல்லாத் துறைகளிலுமே மிக வேகமான, மெய்யான, உண்மையிலேயே மக்கள்திரளைக் கொண்ட, முதலில் பெரும் பான்மையோரையும் பிறகு மக்கள் தொகை முழுவதையுமே

கொண்ட, முன்னேற்ற இயக்கம் தொடங்கும் என்பதையும் உணர்ந்து கொள்வது முக்கியமாகும்.

ஜனநாயகம் என்பது அரசின் ஒரு வடிவமாகும், அரசு வகைகளில் ஒன்றாகும். எனவே ஒவ்வொரு அரசையும் போல ஜனநாயகமும் ஒரு புறத்தில் நபர்களுக்கு எதிராய் ஒழுங்கமைந்த, முறையான வன்முறைப் பிரயோகத்தைக் குறிக்கிறது. ஆனால் அது மறுபுறத்தில் குடிமக்களின் சமத்துவம், அதாவது அரசின் கட்டமைப்பை நிர்ணயிப்பதிலும் அரசை நிர்வகிப்பதிலும் எல்லோருக்கும் சம உரிமை உண்டென்பது பெயரளவில் அங்கீகாரம் பெறுவதையும் குறிக்கிறது. இதன் விளைவு என்னவெனில், ஜனநாயகம் அதன் வளர்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், முதலாளித்துவத்தை எதிர்த்துப் புரட்சிகரப் போராட்டம் நடத்தும் வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தை ஒன்றுதிரளச் செய்கிறது; முதலாளித்துவ அரசு இயந்திரத்தையும்—குடியரசு வடிவிலான முதலாளித்துவ அரசு இயந்திரத்தையும்கூட—நிரந்தர சேனையையும், போலீஸையும், அதிகாரவர்க்கத்தையும் இந்தப் பாட்டாளி வர்க்கம் தகர்த்துத் தவிடுபொடியாக்கிப் புவிப்பரப்பிலிருந்தே துடைத்தெறிந்துவிட்டு, இவற்றுக்குப் பதிலாய் மேலும் ஜனநாயகமான ஓர் அரசு இயந்திரத்தை அமைக்கக் கூடியதாக்குகிறது. முன்னிலும் அதிக ஜனநாயகமுள்ள அரசு இயந்திரம் என்றாலுங்கூட இதுவும் ஓர் அரசு இயந்திரம்தான். அனைத்து மக்களும் அடங்கிய காவலர் படையை நிறுவ முற்படும் ஆயுதமேந்திய தொழிலாளர்களின் வடிவில் அமைந்த அரசு இயந்திரம் இது.

இங்கு ''அளவு பண்பாய் மாறுகிறது'': ஜனநாயகம் இந்த அளவுக்கு அதிகரிப்பதானது முதலாளித்துவச் சமுதாயத்தின் வரம்புகளைத் தாண்டிச் சென்று இச்சமுதாயத்தை சோஷலிஸ வழியில் திருத்தியமைப்பதன் துவக்கத்தைக் குறிக்கிறது. மெய்யாகவே எல்லோரும் அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்வார்களாயின் முதலாளித்துவத்தால் தன் பிடித்த பிடியை நிறைவேற்றமுடியாது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிதான் மெய்யாகவே ''எல்லோரும்'' அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்ளும்படி வகை செய்யும் முன்னிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. இந்த முன்னிபந்தனைகளில் சில வருமாறு: அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுதல், மிகவும்

முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் ஏற்கென வே இது சாதிக்கப் பெற்றுவிட்டது; தபால் துறை, ரயில் வேக்கள், பெரிய ஆலைகள், பெருமளவான வாணிபம், வங்கித் துறை, இன்ன பிறவற்றுலான சிக்கல்மிக்க, பிரம்மாண்ட மான சமுதாயமயமான பொறியமைப்பினுல் கோடானு கோடியான தொழிலாளர்கள் ''பயிற்சியும் கட்டுப்பாடும்'' உடையோராக்கப்படுதல்.

இந்தப் பொருளாதார முன்னிபந்தனைகள் இருக்குமா யின், முதலாளிகளும் அதிகாரவர்க்கத்தினரும் வீழ்த்தப் பட்டபின், இவர்களுக்குப் பதிலாய் உற்பத்தியையும் வினி யோகத்தையும் கண்காணிப்பதிலும், உழைப்பையும் உற்பத்திப் பொருட்களையும் பற்றிய கணக்குப் பதிவு வேலையிலும் உடனடியாகவே, எடுத்தயெடுப்பிலே, ஆயுதமேந்திய தொழிலாளர்களையும், ஆயுதமேந்திய மக்கள் அனைவரையுமே ஈடுபடுத்துவது முற்றிலும் சாத்தியமே. (கண்காணிப்பும் கணக்குப் பதிவுமான இந்தப் பிரச்சினையைப் பொறியியலா ளர்கள், விவசாய நிபுணர்கள் முதலான விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஊழியர்களைப் பற்றிய பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இந்தக் கனவான்கள் இன்று முதலாளிகளுடைய விருப்பங்களுக்குப் பணிந்து வேலை செய் கிருர்கள், நாளைக்கு ஆயுதமேந்திய தொழிலாளர்களுடைய விருப்பங்களுக்குப் பணிந்து இன்னுங்கூட திறம்பட வேலை செய்வார்கள்.)

கணக்கீடு, கண்காணிப்பு—கம்யூனிஸ சமுதாயத்தின் முதற் கட்டம் தடங்கலின்றி இயங்கவும் சரிவரச் செயற்பட வும் பிரதானமாய்த் தேவைப்படுகிறவை இவையே. குடி மக்கள் எல்லோரும் அரசின் சம்பளம் வாங்கும் பணியாளர் களாய் மாற்றப்பட்டுவிடுகிருர்கள்; அரசு ஆயுதமேந்திய தொழிலாளர்களால் ஆனது. குடிமக்கள் எல்லோரும் அரசி னுடைய நாடு தழுவிய ஒரேயொரு ''கூட்டமைப்பின்'' பணியாளர்களும் தொழிலாளர்களும் ஆகிவிடுகிருர்கள். தேவைப்படுவது எல்லாம் இவர்கள் சம அளவுக்கு வேலை செய்ய வேண்டும், வேலையில் தமக்கு உரிய பங்கைச் செய்து சம அளவுக்குச் சம்பளம் பெற வேண்டும் என்பதே. இதற்கு வேண்டிய கணக்கீடும் கண்காணிப்பும் முதலாளித்துவத்தால் உச்ச நிலையில் எளிமைப்படுத்தப்பட்டு, எழுத்தறி

வுடையவர் எவரும் செய்ய முடியும்படியான மேற்பார்வையிடல், பதிவு செய்தல், எண் கணிதத்தின் அடிப்படை விதிகளை அறிந்திருத்தல், தக்க இரசீதுகளை எழுதிக் கொடுத்தல் போன்ற மிக மிக எளிய வேலைகளாய்க் குறுக்கப்பட்டு விட்டன.*

மக்களில் பெரும்பான்மையோர் தாமே சுயேச்சையாகவும் எல்லாவிடத்தும் இத்தகைய கணக்குப் பதிவுகளைச் செய்யவும், (இப்பொழுது பணியாளர்களாக மாற்றப்பட்டுவிட்ட) முதலாளிகளையும் தமது முதலாளித்துவப் பழக்கங்களை விடாது வைத்துள்ள படிப்பாளர் பகுதியைச் சேர்ந்த கனவான்களையும் இவ்விதம் கண்காணித்துக் கொள்ளவும் தொடங்குகையில், இந்தக் கண்காணிப்பு மெய்யாகவே முழுதளாவியதாகவும் பொதுவானதாகவும் வெகுஜனத்தன்மையதாகவும் ஆகிவிடும்; இதிலிருந்து தப்ப வழி இருக்காது, ஏனெனில் ''போக்கிடம்'' எதுவும் இருக்காது.

சமுதாயம் முழுதும் சமமான உழைப்புக்குச் சமமான சம்பளத்துடன் ஒரே அலுவலகமும், ஒரே ஆலையுமாகிவிடும்.

ஆனால் பாட்டாளி வர்க்கம் முதலாளிகளைத் தோற்கடித்த பிற்பாடும், சுரண்டுவோரை வீழ்த்திய பிற்பாடும் சமுதாயம் முழுவதுக்கும் விரிவடையச் செய்யும் இந்த ''ஆலைக்'' கட்டுப்பாடு எவ்வகையிலும் நமது இலட்சியமோ, நமது இறுதிக் குறிக்கோளோ அல்ல. முதலாளித்துவச் சுரண்டலால் விளைந்த எல்லா இழுக்குகளையும் அசிங்கங்களையும் களைந்து சமுதாயத்தைச் சுத்தம் செய்து தூய்மையாக்குவதற்கும், மேலும் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கும் இது அவசியமான ஒரு படியே அன்றி வேறல்ல.

எத்தருணம் முதல் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும்—அல்லது குறைந்தது மிகப் பெரும்பான்மையோர்—

---

* அரசின் மிக முக்கியமான பணிகள் தொழிலாளர்கள் தாமே செய்யத்தக்க கணக்கீடு, கண்காணிப்பு ஆகியவையாய் குறுக்கப்படுகையில், அரசானது ''அரசியல் வழியிலான அரசாய்'' இருக்கும் நிலை முடிவுற்றுவிடும்; ''சமுதாயப் பணிகள் தமது அரசியல் தன்மையை இழந்து, வெறும் நிர்வாகப் பணிகளாகிவிடும்'' (பார்க்கவும்; மேலே, அத்தியாயம் 4, §2, அராஜகவாதிகளுடன் எங்கெல்ஸின் வாக்குவாதம்).

அரசைத் தாமே நிர்வகிக்கக் கற்றுக் கொள்கிறார்களோ, இந்தப் பணியை நேரில் தாமே மேற்கொள்கிறார்களோ, மிகச் சொற்ப தொகையினரே ஆன முதலாளித்துவச் சிறுபான்மையோரையும், தமது முதலாளித்துவப் பழக்கங்களை விட்டொழிக்க விரும்பாத கனவான்களையும், முதலாளித்துவத்தால் அறவே கெடுக்கப்பட்டுவிட்ட தொழிலாளர்களையும் கண்காணிக்க "ஏற்பாடு செய்கிறார்களோ"—அத்தருணம் முதலாய் எவ்வகையான அரசாங்கத்துக்குமுள்ள தேவை அடியோடு மறையத் தொடங்கிவிடும். ஜனநாயகம் எவ்வளவுக்கு எவ்வளவு முழுமையானதாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது தேவையற்றதாகும் தருணம் அருகாமையில் வந்துவிடுகிறது. ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான அரசு, "அரசெனும் சொல்லின் சரியான பொருளில் அரசாயில்லாத" இது, எவ்வளவுக்கு எவ்வளவு ஜனநாயகமுடைத்ததாய் ஆகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அரசின் ஒவ்வொரு வடிவமும் வேகமாய் உலர்ந்து உதிரத் தொடங்குகிறது.

ஏனென்றால், எல்லோரும் சமூகப் பொருளுற்பத்தியை நிர்வகிக்கக் கற்றுக் கொண்டு சுயேச்சையாய்த் தாமே நடைமுறையில் நிர்வகிக்கும் போது, சுயேச்சையாய்த் தாமே கணக்குகள் பதிவு செய்து கொண்டு சோம்பேறிகளையும் செல்வச் சீமான்களது புதல்வர்களையும் மோசடிக்காரர்களையும் ஏனைய "முதலாளித்துவ மரபுகளின் காவலர்களையும்" கண்காணிப்புச் செய்யும் போது, இந்த வெகுஜன அளவிலான கணக்கீட்டிலிருந்தும் கண்காணிப்பிலிருந்தும் தப்புவது தவிர்க்க முடியாத வகையில் அவ்வளவு கடினமாகி விடுமாதலால், அவ்வளவு அரிதிலும் அரிதான விதிவிலக்காகி விடுமாதலால், மற்றும் உடனுக்குடன் கடுந் தண்டனைக்கு உரியதாக்கப்படலாமாதலால் (ஏனெனில் ஆயுதமேந்திய தொழிலாளர்கள் காரிய வழிப்பட்டவர்களே அன்றி உணர்ச்சிப் வழிப்பட்ட படிப்பாளர் அல்ல, யாரும் தம்மிடம் வாலாட்ட இடந்தர மாட்டார்கள்), சமுதாய வாழ்க்கையின் சாதாரண அடிப்படை விதிகளைப் பற்றியொழுக வேண்டிய அவசியமானது விரைவில் நிலையான ஒரு பழக்கமாகிவிடும்.

இனி கம்யூனிஸ சமுதாயத்தின் முதற்கட்டத்திலிருந்து அதன் உயர் கட்டத்துக்கு மாறிச் செல்லவும், அதனுடன் கூடவே அரசு பூரணமாய் உலர்ந்து உதிரவும் பாதை விரியத் திறக்கப்பட்டுவிடும்.

1917 ஆகஸ்டு-செப்டம்பரில்
எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 33,
பக்கங்கள் 83-102

"இடதுசாரி" கம்யூனிஸம்—இளம் பருவக் கோளாறு

எனும் நூலிலிருந்து

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்பது புதிய வர்க்கம் தன்னைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த பகைவனை முதலாளி வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் மிகமிக வைராக்கியமான, ஈவிரக்கமற்ற போர் ஆகும். முதலாளி வர்க்கம் கவிழ்க்கப்பட்டதால் (ஒரேயொரு நாட்டில் மட்டும்தான் என்றாலுங்கூட) அதன் எதிர்ப்பு பத்து மடங்கு அதிகரித்து விட்டது. இதன் வலிவு சர்வதேச மூலதனத்தின் பலத்தில் மட்டுமில்லை, இதன் சர்வதேசத் தொடர்புகளின் பலத்திலும் திண்மையிலும் மட்டுமில்லை, பழக்கத்துக்குள்ள பிடிப்பின் வலிவிலும் சிற்றளவான பொருளுற்பத்திக்குள்ள பலத்திலும் அடங்கியுள்ளது. துரதிஷ்டவசமாய் உலகில் சிற்றளவான பொருளுற்பத்தி இன்னமும் மலிந்தே இருக்கிறது. இந்தச் சிற்றளவான பொருளுற்பத்தி முதலாளித்துவத்தையும் முதலாளி வர்க்கத்தையும் இடையறாது நாள்தோறும் மணிதோறும் தன்னியல்பாகவும் பெரும் அளவிலும் தோற்றுவிக்கிறது. இக்காரணங்களால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இன்றியமையாததாகிவிடுகிறது. விடாமுயற்சியும் கட்டுப்பாடும் நெஞ்சுறுதியும் அசைக்க முடியாத ஒருமித்த திடச்சித்தமும் தேவைப்படும் விடாப்பிடியான உக்கிரமான நீண்டதோர் ஜீவ-மரணப் போராட்டமின்றி, முதலாளி வர்க்கத்தின்மீது வெற்றி பெறுவது சாத்தியமன்று.

திரும்பவும் கூறுகிறேன்: பாட்டாளி வர்க்கத்தில் முழுமையான மத்தியத்துவமும் கடுமையான கட்டுப்பாடும் இருக்க வேண்டியது முதலாளி வர்க்கத்தின்மீது வெற்றி பெறுவதற்கான இன்றியமையாத ஒரு நிபந்தனையாகும் என்பதை ருஷ்யாவில் வெற்றி கண்ட பாட்டாளி வர்க்கச்

சர்வாதிகாரம், சிந்தனை ஆற்றல் இல்லாதோருக்குங்கூட, அல்லது இதில் சிந்தனை செலுத்த வாய்ப்பு இல்லாமற் போன வர்களுக்குங்கூட தெளிவாகக் காட்டியுள்ளது.

இது அடிக்கடி விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதன் பொருள் என்ன, எந்நிலைமைகளில் இது சாத்தியம் என்பதில் போதிய அளவு சிந்தனை செலுத்தப்படவில்லை. சோவியத்து களுக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிப் பதோடுகூட, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டிய கட்டுப்பாட்டை போல்ஷிவிக்குகளால் எப்படி நிறுவிக் கொள்ள முடிந்தது என்பதன் காரணங்கள் பற்றி இன்னும் அடிக்கடி ஆழ்ந்த பகுத்தாராய்வும் செய்யப்படுமானால் எவ்வளவு நன்றாய் இருக்கும்?

அரசியல் சிந்தனைப் போக்காகவும் அரசியல் கட்சியாக வும் போல்ஷிவிஸம் 1903 முதலாய் இருந்து வந்திருக்கிறது.[111] இக்கட்டம் முழுவதிலுமான போல்ஷிவிஸத்தின் வரலாற்றி னால் மட்டுமே, பாட்டாளி வர்க்க வெற்றிக்கு வேண்டிய உருக்கு உறுதி படைத்த கட்டுப்பாட்டை அதனால் எப்படி நிறுவ முடிந்தது, மிகமிகக் கடினமான நிலைமைகளில் எப்படி அதைக் கட்டிக்காக்க முடிந்தது என்பதைத் திருப்திகரமாய் விளக்க முடியும்.

முதலாவதாக எழும் கேள்வி: பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியின் கட்டுப்பாட்டைக் கட்டிக்காப்பது எப்படி? அது சோதிக்கப்படுவது எப்படி? அது மேலும் உறுதியூட்டப் பெறுவது எங்ஙனம்? முதலாவதாக, பாட்டாளி களின் முன்னணிப் படையின் வர்க்க உணர்வாலும், புரட்சி யின்பால் அதற்குள்ள பற்றுறுதியாலும், தன்னலமற்ற தியாக உணர்வாலும், வீரத்தாலும். இரண்டாவதாக, உழைப்பாளி மக்கள் திரளின் மிகவும் விரிவான பகுதிகளுடன்—முக்கிய மாய்ப் பாட்டாளி வர்க்கத்துடனும், மற்றும் உழைப்பாளி மக்களின் பாட்டாளி வர்க்கமல்லாத பகுதிகளுடனும்— இணைப்புக் கொள்ளவும், மிக நெருங்கிய தொடர்பைக் கட்டிக்காக்கவும், சொல்லப் போனால் ஓரளவுக்கு ஒன்று கலக்கவும் அதற்குள்ள ஆற்றலால். மூன்றாவதாக, இந்த முன் னணிப் படை வகிக்கும் அரசியல் தலைமையின் பிழையற்ற தன்மையால், அதன் அரசியல் போர்த்தந்திரம், பொதுப் போர்த்தந்திரம் இவற்றின் பிழையற்ற தன்மையால்—

வெகுஜனப் பகுதிகள் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாகவே இவை சரியானவை என்பதைக் கண்டு கொண்டாக வேண்டும். முதலாளி வர்க்கத்தை வீழ்த்தி சமுதாயம் அனைத்தையும்மாற்றியமைத்திடுவதைப் பணியாகக் கொண்ட முன்னேற்றகரமான வர்க்கத்தின் கட்சியாக இருக்கும் மெய்யான தகுதியும் திறனும் கொண்ட புரட்சிகரக் கட்சியில், இந்நிலைமைகள் இல்லையேல், கட்டுப்பாட்டைச் சாதிக்க இயலாது. இந்த நிலைமைகள் இல்லையேல், கட்டுப்பாட்டை நிறுவுவதற்கான எல்லா முயற்சிகளும் தவிர்க்கமுடியாதவாறு விரயமாகி வெறும் வாய்வீச்சாகவும் கேலிக் கூத்தாகவுமே முடிவுறும். அதேபோதில் இந்த நிலைமைகள் யாவும் திடுதிப்பென்று தோன்ற முடியாது. நீடித்த முயற்சியாலும் அரும்பாடுபட்டுப் பெறும் அனுபவத்தாலுமேதான் அவை தோற்றுவிக்கப்படுகின்றன. பிழையற்ற புரட்சிகரத் தத்துவம் இந்நிலைமைகள் தோற்றுவிக்கப்படுவதற்கு வசதி செய்கிறது. இந்தப் புரட்சிகரத் தத்துவம் வறட்டுத் தத்துவம் அல்ல, அது மெய்யாகவே வெகுஜனத் தன்மையதான, மெய்யாகவே புரட்சிகரமான இயக்கத்தின் நடைமுறைச் செயற்பாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டே இறுதி வடிவம் பெறுகிறது.

1917-20ல் முன்பின் கண்டிராத மிகக் கடின நிலைமைகளில் போல்ஷிவிஸம் மிகவும் கண்டிப்பான மத்தியத்துவத்தையும் உருக்கு உறுதி வாய்ந்த கட்டுப்பாட்டையும் நிறுவி அவற்றைக் கட்டிக்காக்க முடிந்ததற்கு ருஷ்யாவின் பல வரலாற்றுச் சிறப்பியல்புகளே காரணம்.

ஒரு புறத்தில் மார்க்ஸியத் தத்துவம் எனும் உறுதிமிக்கதோர் அடித்தளத்தின் மீது 1903ல் போல்ஷிவிஸம் உதித்தெழுந்தது. இந்தப் புரட்சிகரத் தத்துவம் பிழையற்றதாகும், இது ஒன்றுமட்டும்தான் பிழையற்றதாகும் என்பது, பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதிலுமான உலக அனுபவத்தினுல் மட்டுமன்றி, இன்னும் முக்கியமாய் ருஷ்யாவில் புரட்சிகரச் சிந்தனையின் விசாரங்கள், ஊசலாட்டங்கள், தவறுகள், ஏமாற்றங்கள் ஆகியவற்றின் அனுபவத்தாலும் நிருபிக்கப்பட்டிருக்கிறது. ருஷ்யாவில் மிகவும் கொடிய, மிகவும் பிற்போக்கான ஜாராட்சி முறையால் ஒடுக்கப்பட்டு வந்த முற்போக்குச் சிந்தனை சுமார் அரை நூற்றாண்டாய்—கடந்த

நூற்றாண்டில் ஏறத்தாழ நாற்பதாம் ஆண்டுகளிலிருந்து தொண்ணூறும் ஆண்டுகள் வரையில்—பிழையற்ற புரட்சிகரத் தத்துவத்தை ஆவலுடன் தேடி வந்தது; இத்துறையில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ''இறுதி முடிவாகக்'' கருதக்கூடியவை ஒவ்வொன்றையும் கண்ணும் கருத்துமாய், தளர்விலா ஊக்கத்துடன் கவனித்து வந்தது. ஈடிணையற்ற துன்பமும் தியாகமும், ஈடிணையற்ற புரட்சிகர வீரமும், நம்புதற்கரிய முனைப்பும், அயராத தேடலும், ஆராய்ச்சியும், நடைமுறைச் சோதனையும், ஏமாற்றமும், சரிபார்த்தலும், ஐரோப்பிய அனுபவத்துடனான ஒப்பிடலும் நிறைந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் அனுபவித்த வாதனையின் வாயிலாய் ருஷ்யாவானது பிழையற்ற ஒரேயொரு புரட்சித் தத்துவமான மார்க்ஸியத்தை வந்தடைந்தது. ஜாராட்சி முறையால் அரசியலாளர்கள் நாடுகடத்தப்பட்டு வந்ததன் விளைவாய், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் புரட்சிகர ருஷ்யா வேறு எந்த நாட்டுக்கும் இல்லாத அளவுக்கு வளமான சர்வதேசத் தொடர்புகளும், உலகப் புரட்சி இயக்கத்தின் வடிவங்களையும் தத்துவங்களையும் பற்றிய தகவல் ஞானமும் பெற்றிருந்தது.

தத்துவமெனும் இந்தக் கருங்கல் அடித்தளத்தின்மீது எழுந்த போல்ஷிவிஸம், மறு புறத்தில், உலகில் வேறு எங்கும் ஒப்புவமை காண இயலாத அனுபவச் செழுமை வாய்ந்த பதினைந்து ஆண்டுக் கால (1903-17) நடைமுறை வரலாற்றினைக் கடக்கலாயிற்று. அந்தப் பதினைந்து ஆண்டுகளின் போது இந்நாடு கண்ட புரட்சிகர அனுபவத்துக்கும், அதிவேகமாகவும் பல்வேறு வகைப்பட்டதாகவும் வரிசையாக வந்த வெவ்வேறு இயக்க வடிவங்களுக்கும்—சட்டபூர்வமானதும் சட்டவிரோதமானதும், அமைதியானதும் புயலின் மூர்க்கம் கொண்டதும், தலைமறைவானதும் பகிரங்கமானதும், சிறு குழுக்களின் அளவிலானதும் பரந்த வெகுஜன வீச்சு கொண்டதும், நாடாளுமன்ற வடிவிலானதும் பயங்கரவாத வடிவிலானதும் ஆகிய விதவிதமான இயக்க வடிவங்களுக்கும்—ஏறத்தாழ ஒப்பானவற்றையுங்கூட வேறு எந்த நாடும் கண்டதில்லை. வேறு எந்நாட்டிலும் நவீனச் சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களுக்குமுரிய போராட்டத்தின் இத்தனை விதமான வடிவங்களும் வகைகளும் முறைகளும் இவ்வளவு

குறுகிய காலத்தினுள் ஒன்றுகுவிந்ததில்லை. இந்தப் போராட்டம் நாட்டின் பிற்பட்ட நிலை காரணமாகவும், ஜாராட்சி ஒடுக்குமுறையின் கடுமை காரணமாகவும், வியக்கத்தக்க வேகத்தில் முதிர்ச்சியுற்று, அமெரிக்க, ஐரோப்பிய அரசியல் அனுபவத்தின் ''இறுதி முடிவாகக்'' கருதக்கூடியவற்றுள் பொருத்தமானவற்றை மிகுந்த ஆவலுடனும், வெற்றிகரமாகவும் கிரகித்துக் கொண்டது.

1920 ஏப்ரல்-மே மாதங்களில் எழுதப் பெற்றது

நூல் திரட்டு, தொகுதி 41, பக்கங்கள் 6-8

இளைஞர் கழகங்களின் பணிகள்

ருஷ்யாவின் இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் மூன்றாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸில் நிகழ்த்திய சொற்பொழிவு
1920, அக்டோபர் 2

(லெனினை வரவேற்றுக் காங்கிரஸில் பேரார்வ முழக்கம் கிளர்ந்தெழுகிறது).
தோழர்களே, இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் அடிப்படை பணிகள் குறித்தும், இதையொட்டி சோஷலிஸக் குடியரசு ஒன்றில் இளைஞர் நிறுவனங்கள் பொதுவில் எப்படிப்பட்டவையாய் இருக்க வேண்டும் என்பது குறித்தும் இன்று நான் பேச விரும்புகிறேன்.

இப்பிரச்சினை குறித்துப் பேசவேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில் கம்யூனிஸ சமுதாயத்தை உண்மையில் தோற்றுவிக்கும் பணியை எதிர்நோக்கப் போகிறவர்கள் இளைஞர்களே என்பதாய் ஒரு வகையில் கூறலாம். எப்படியெனில், முதலாளித்துவ சமுதாயத்தில் வளர்ந்து ஆளான உழைப்பாளி மக்கள் தலைமுறையினர் அதிகம் செய்யக் கூடியதெல்லாம், சுரண்டலின் அடிப்படையில் நிறுவப்பட்ட பழைய, முதலாளித்துவ வாழ்க்கை முறையின் அடித்தளங்களை அழித்திடும் பணியை நிறைவேற்றுவதுதான் என்பது தெளிவு. இவர்கள் அதிகம் போனால், பாட்டாளி வர்க்கமும் உழைப்பாளி வர்க்கங்களும் ஆட்சியதிகாரத்தை இழக்காமல் இருத்திக் கொள்ளத் துணை புரியும் ஒரு சமுதாய அமைப்பைத் தோற்றுவித்து உறுதியான அடித்தளத்தை அமைத்திடுவதற்குரிய பணிகளை நிறைவேற்றலாம். புதிய நிலைமைகளில், மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலான உறவுகள் இல்லாமற் போய்விடும் சூழ்நிலையில்; வேலை செய்யத் தொடங்கும் ஒரு தலைமுறையினர்தான் இந்த அடித்தளத்தின்மீது கட்டியெழுப்பக் கூடியவர்கள்.

ஆக, இளைஞர்கள் முன்னுள்ள பணிகளை இந்தக் கோணத்திலிருந்து பரிசீலிக்கையில், பொதுவில் இளைஞர்

களுக்கும், குறிப்பாய் இளங் கம்யூனிஸ்டுக் கழகங்களுக்கும் ஏனைய எல்லா நிறுவனங்களுக்குமுள்ள பணிகளைப் பின்வரும் ஒரே சொல்லில் சுருக்கமாய்த் தொகுத்துரைத்துவிடலாம் என்பதை நாம் குறிப்பிட வேண்டும்: கற்றறியுங்கள்.

''ஒரேயொரு சொல்தான்'' அது. எதைக் கற்றறிவது, எப்படிக் கற்றறிவது என்கிற தலைமையான, அத்தியாவசிய மான கேள்விகளுக்கு இச்சொல் பதில் தரவில்லை. பழைய, முதலாளித்துவ சமுதாயம் மாற்றப்படுகிறபடியால், புதிய தலைமுறைகளை, கம்யூனிஸ சமுதாயத்தைத் தோற்றுவிக்கப் போகிற இந்தப் புதிய தலைமுறைகளை வளர்த்து ஆளாக்குவதும் பயிற்றுவிப்பதும் அவற்றுக்குக் கல்வி போதமளிப்பதும் பழைய வழிகளில் நடந்தேற முடியாது என்பதே இங்குள்ள பிரதான விவகாரம். இளைஞர்களுக்கான பயிற்சியும் போதனையும் கல்வியும் பழைய சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ளவற்றில் இருந்தே தொடங்கியாக வேண்டும். பழைய சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ள அறிவு, நிறுவன அமைப்புகள், ஏற்பாடுகள் இவற்றின் முழுமொத்தத்தையும் அடிப்படையாய்க் கொண்டுதான், இந்த மானுட சக்திகள், சாதனங்கள் ஆகியவற்றின் கையிருப்புகளைப் பயன் படுத்திக் கொள்வதன் மூலம்தான் நாம் கம்யூனிஸத்தைக் கட்டியமைக்க முடியும். இளைஞர்களுக்கான பயிற்சியையும் போதனையையும் ஒழுங்கமைப்பையும் தீவிர முறையில் திருத்தியமைத்தால்தான் இளந் தலைமுறையினரது முயற்சிகளின் பயனாய்ப் பழைய சமுதாயத்தைப் போன்றதல்லாத ஒரு சமுதாயம் தோற்றுவிக்கப்படும்படி, அதாவது ஒரு கம்யூனிஸ சமுதாயம் தோற்றுவிக்கப்படும்படி நாம் உத்தரவாதம் செய்து கொள்ள முடியும். ஆகவே இளைஞர்களுக்கு நாம் போதிக்க வேண்டியது என்ன, இளைஞர்கள் கம்யூனிஸ்டு இளைஞர்கள் என்னும் பெயருக்கு உரித்தோராகும் தகுதி பெற மெய்யாகவே விரும்பினால், அவர்கள் கற்றறிந்து கொள்ள வேண்டியது என்ன, நாம் துவக்கியிருக்கும் பணியை நிறைவுறச் செய்து சித்தி பெற வைக்கக் கூடியவர்களாகும் பொருட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது எப்படி என்கிற பிரச்சினை குறித்து நாம் விவரமாய்ப் பரிசீலிக்க வேண்டும்.

இளைஞர் கழகமும் பொதுவில் கம்யூனிஸத்துக்கு முன்னேறிச் செல்ல விரும்பும் இளைஞர்கள் அனைவரும் கம்யூனிஸத்தைக் கற்றறிந்தாக வேண்டும் என்பதே முதலாவதும் மிகவும் இயற்கையானதுமான பதிலாய்த் தோன்றுகிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனால் ''கம்யூனிஸத்தைக் கற்றறிவீர்'' என்னும் இந்தப் பதில் மிக மிகப் பொதுப்படையானது. கம்யூனிஸத்தைக் கற்றறிந்து கொள்ள நமக்கு வேண்டியது என்ன? கம்யூனிஸத்தைப் பற்றிய அறிவைப் பெறப் பொதுவான அறிவின் தொகுப்பிலிருந்து தனியே பிரித்து ஒதுக்கப்பட வேண்டியது எது? இங்கே பல அபாயங்கள் எழுகின்றன. கம்யூனிஸத்தைக் கற்றறியும் பணி தவறான முறையில் எடுத்துரைக்கப்படும் போது, அல்லது அளவு மீறி ஒருச்சார்பான முறையில் அர்த்தப்படுத்தப்படும் போது இந்த அபாயங்கள் அடிக்கடி எழுகின்றன.

கம்யூனிஸ்டுப் பாடப்புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் நூல்களிலும் அடங்கியுள்ள ஒட்டுமொத்த அறிவைக் கிரகித்துக் கொள்வதே கம்யூனிஸத்தைக் கற்றறிவதாகும் என்பதே இயல்பாய் ஒருவர் மனதில் முதலில் தோன்றும் எண்ணம். ஆனால் கம்யூனிஸத்தைப் பயிலுதல் என்பதற்கு இவ்விதம் இலக்கணம் கூறுவதானது மிதமிஞ்சிக் கொச்சைப்படுத்துவதும் குறைப்படுத்துவதுமாகவே இருக்கும். கம்யூனிஸ்டுப் புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் இருப்பதைக் கிரகிப்பதே கம்யூனிஸம் பயிலுதலாய் இருப்பின், கம்யூனிஸ்டு வாசகம் பேசி வித்தை காட்டுவோரை, அல்லது வாய்ச் சவடால் காரர்களை எளிதில் நாம் நிறைய பெற்றுக் கொண்டுவிடலாம். பல சந்தர்ப்பங்களிலும் இதனால் நமக்குத் தீங்கே ஏற்படும். ஏனெனில் இத்தகையோர் கம்யூனிஸ்டுப் புத்தகங்களிலும் பிரசுரங்களிலும் எடுத்துரைக்கப்படுவதைப் படித்துத் தெரிந்து கொண்டபின் பல்வேறு அறிவுத் துறைகளைச் சேர்த்து இணைத்திடும் திறனற்றோராகவே இருப்பர்; கம்யூனிஸத்துக்கு உண்மையில் அவசியமாயுள்ள முறையில் இவர்களால் செயல்பட முடியாது.

புத்தகங்களுக்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் இடையிலான அதலபாதாள வேறுபாடு பழைய, முதலாளித்துவ சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ள பெருங் கேடுகளிலும்

இன்னல்களிலும் ஒன்றாகும். யாவற்றையும் சிறந்த முறையில் விளக்கும் புத்தகங்கள் நம்மிடம் இருந்துள்ளன. ஆயினும் பெரும்பாலும் கபடத்தனமான கேடுகெட்ட பொய்யுரைகளும் முதலாளித்துவ சமுதாயத்தைப் பற்றிய பொய்க் கூற்றுகளும்தான் இப்புத்தகங்களின் உள்ளடக்கம்.

எனவே கம்யூனிஸத்தைப் பற்றிய ஏட்டு அறிவைக் கிரகித்துக் கொள்வதுடன் நின்றுவிடுவது மிகப் பெருந் தவறாகும். கம்யூனிஸத்தைப் பற்றி வழக்கமாய்க் கூறப்பட்டு வந்ததைத் திரும்பவும் வலியுறுத்துவதுடன் இப்பொழுதெல்லாம் நமது பேச்சுக்களும் கட்டுரைகளும் நின்றுவிடுவதில்லை. ஏனென்றால் நமது பேச்சுக்களும் கட்டுரைகளும் எல்லாத் துறைகளிலும் நமது அன்றாட வேலைகளுடன் இணைந்திருக்கின்றன. வேலையில் ஈடுபடாமல், போராட்டம் இல்லாமல் கம்யூனிஸ்டுப் பிரசுரங்களிலிருந்தும் நூல்களிலிருந்தும் கம்யூனிஸம் குறித்துப் பெறப்பட்ட ஏட்டு அறிவு சிறிதும் பயனற்றதாகும். ஏனெனில் அது தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் இருந்த பழைய பிளவையும் பழைய முதலாளித்துவ சமுதாயத்தின் கேடுகெட்ட இயல்பான அந்தப் பழைய வேறுபாட்டையும் தொடர்ந்து நீடிக்கவே செய்யும்.

கம்யூனிஸ்டுக் கோஷங்களை மட்டும் கிரகித்துக் கொள்ள முற்படுவதானது இன்னுங்கூட அபாயம் விளைவிப்பதாய் இருக்கும். இந்த அபாயத்தை நாம் தக்க காலத்தில் உணராமலும், இந்த அபாயத்தைத் தவிர்ப்பதில் நமது முயற்சிகள் அனைத்தையும் ஈடுபடுத்தாமலும் இருந்திருப்போமாயின், இவ்வழியில் கம்யூனிஸத்தைக் கற்றறிந்து கொண்டு தம்மைக் கம்யூனிஸ்டுகளென அழைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஐந்து அல்லது பத்து லட்சம் இளைஞர்களும் யுவதிகளும் கம்யூனிஸ இலட்சியத்துக்குப் பெருந் தீங்கே இழைத்திருப்பார்கள்.

கம்யூனிஸத்தைக் கற்றறிய இவை யாவற்றையும் இணைத்துப் பொருத்துவது எப்படி? என்ற கேள்வி எழுகிறது. பழைய கல்வி முறையிலிருந்து, பழைய வகை விஞ்ஞானத்திடமிருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டியவை எவை? சர்வாம்சக் கல்விப் போதமுடையோரை உருவாக்குவதே, பொதுவில் விஞ்ஞானங்களைப் போதிப்பதே பழையரகக் கல்வி முறையின் குறிக்கோள் என்பதாய் அறிவிக்கப்பட்டு வந்தது.

அது முழுக்க முழுக்கப் பொய் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் மக்கள் வர்க்கங்களாய், சுரண்டப்படுவோரும் சுரண்டுவோருமாய்ப் பிரிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையிலே சமுதாயம் அனைத்தும் அமைந்து இந்தப் பிரிவினையால் பராமரிக்கப்பட்டு வந்தது. பழைய கல்வி முறை முழுக்க முழுக்க இந்த வர்க்க மனப்பான்மையில் ஊறியிருந்ததால் இயற்கையாகவே அது முதலாளித்துவ வர்க்கத்தின் குழந்தைகளுக்கு மட்டுமே அறிவு போதித்தது. முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்றபடி ஒவ்வொரு சொல்லும் பொய்யாய்த் திரிக்கப்பட்டது. இந்தக் கல்வி முறையில் தொழிலாளர்கள், விவசாயிகளது இளந் தலைமுறையினர் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்ப குருட்டுப் பாடப் பயிற்சி அளிக்கப்பட்டனரே தவிர கல்வி அளிக்கப்பட்டதாய்க் கூற முடியாது. முதலாளித்துவ வர்க்கத்தின் சேவகர்களாய்ப் பணிவிடை புரியத்தக்க வழியில், அவ்வர்க்கம் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்குக் குந்தகமில்லாமல் அதற்கு லாபங்கள் கிடைக்கச் செய்யக்கூடிய வழியில் அவர்களுக்குப் பயிற்சி தரப்பட்டது. எனவேதான் நாம் பழைய ரகக் கல்வி முறையை நிராகரித்துவிட்டு, மெய்யான கம்யூனிஸக் கல்விக்கு நமக்குத் தேவையானவற்றை மட்டும் அதனிடமிருந்து எடுத்துக் கொள்வதையே நமது பணியாய்க் கொண்டிருக்கிறோம்.

பழைய கல்வி முறைமீது தொடுக்கப்படும் கண்டனங்களுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் இது என்னை அழைத்து வருகிறது. இவற்றை நாம் ஓயாது கேட்டு வருகிறோம். பெரும்பாலும் இவை முற்றிலும் தவறான முடிவுகளுக்கே இட்டுச் செல்கின்றன. பழைய கல்வி முறை வெறும் ஏட்டு அறிவுக்கும் ஓயாத குருட்டுப் பாடப் பயிற்சிக்கும் பொட்டை நெட்டுருக்குமான கல்விக்கூடமாகவே இருந்ததென்று கூறப்படுகிறது. இது மெய்தான். ஆனால் பழைய கல்வி முறையில் காணக் கூடிய மோசமான இயல்புகளையும் நமக்குப் பயன்படத்தக்கனவற்றையும் நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். கம்யூனிஸத்துக்கு அவசியமானவற்றை அதனிடமிருந்து தெரிந்தெடுத்துக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும்.

பழைய கல்வி முறை வெறும் ஏட்டு அறிவையே புகட்டியது. பயனற்ற, வேண்டாத, வறட்டுத்தனமான அறிவைப் பெருமளவில் கிரகித்துக் கொள்ளும்படி மாணவர்களைப் பலவந்தம் செய்தது. இந்த அறிவு குப்பையாய் மூளையில் அடைந்து, ஒரே அச்சில் வார்க்கப்பட்ட அதிகாரிகளாய் இளந் தலைமுறையினரை மாற்றியது. ஆனால் மனித குலம் சேகரித்திருக்கும் அறிவுச் செல்வத்தைக் கிரகித்துக் கொள்ளாமலே ஒருவர் கம்யூனிஸ்டாகி விடலாம் என்பதாய் இதிலிருந்து நீங்கள் முடிவுக்கு வர முயன்றால் அது மிகக் கடும் பிழையே ஆகும். அறிவின் ஒட்டுமொத்தத்திலிருந்து விளைந்த பயனே கம்யூனிஸம். இந்த ஒட்டுமொத்த அறிவைப் பெருமலே கம்யூனிஸக் கோஷங்களையும் கம்யூனிஸ விஞ்ஞானத்தின் முடிவுகளையும் கற்றறிந்து கொண்டால் போதுமென நினைப்பது தவறாகும். மார்க்ஸியமானது மனித அறிவின் ஒட்டுமொத்தத்திலிருந்து எப்படிக் கம்யூனிஸம் தோன்றியது என்பதைக் காட்டும் ஓர் உதாரணமாகும்.

கம்யூனிஸத் தத்துவம்—பிரதானமாய் மார்க்ஸ் படைத்தளித்த கம்யூனிஸ விஞ்ஞானம், மார்க்ஸியம் எனும் இந்தப் போதனை—பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தனியொரு சோஷலிஸ்டின்—அவர் ஒரு மாமேதையே என்றாலுங்கூட—படைப்பாய் இருந்த நிலை முடிவுற்றுவிட்டது என்பதையும், அது உலகெங்குமுள்ள லட்சோப லட்சக் கணக்கான, கோடானு கோடியான பாட்டாளி வர்க்கத்தாரின் தத்துவமாகிவிட்டது, முதலாளித்துவத்துக்கு எதிரான தமது போராட்டத்தில் அவர்கள் இதைச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதையும் நீங்கள் படித்தும் கேட்டும் இருக்கிறீர்கள். மார்க்ஸின் போதனை மிகவும் புரட்சிகரமான வர்க்கத்தைச் சேர்ந்த லட்சக் கணக்கானோரின், கோடிக் கணக்கானோரின் உள்ளத்தையும் சிந்தனையையும் கவர்ந்திழுக்க முடிந்தது எப்படி என்று நீங்கள் கேட்பீர்களானால், உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பதில் ஒன்றே ஒன்றுதான்: முதலாளித்துவத்தில் கிடைக்கப் பெற்ற மனிதகுல அறிவெனும் உறுதியான அடித்தளத்தை மார்க்ஸ் தமது படைப்புக்கு ஆதாரமாக்கிக் கொண்டதால்தான் என்பதே அந்தப் பதில். மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஆளும் விதிகளை ஆராய்ந்து அறிந்து, முதலாளித்துவமானது கம்யூனிஸத்தை நோக்கி வளர்வது

தவிர்க்க முடியாததாகும் என்பதை மார்க்ஸ் உணர்ந்து கொண்டார். மிகவும் முக்கியமானது என்னவென்றால் இந்த முதலாளித்துவ சமுதாயத்தை மிகவும் துல்லியமாகவும் விவரமாகவும் ஆழ்ந்த முறையிலும் ஆராய்வதெனும் ஒரே அடிப்படையில் அவர் இதை நிரூபித்தார், முந்திய விஞ்ஞானம் தோற்றுவித்தது அனைத்தையும் பூரணமாய்க் கிரகித்துக் கொள்வதன் மூலம் அவர் இதைச் செய்தார். மனித சமுதாயம் தோற்றுவித்தவை யாவற்றையும், ஒரு சிறு விவரத்தையும் கவனியாது விடாமல், விமர்சனக் கண்கொண்டு பரிசீலித்துத் திருத்தியமைத்தார். மனித சிந்தனை தோற்றுவித்திருந்தவை யாவற்றையும் அவர் மறு பரிசீலனை செய்தார், விமர்சனத்துக்கு உட்படுத்தினார், தொழிலாளி வர்க்க இயக்கத்தைக் கொண்டு சரிபார்த்தார். முதலாளித்துவ வரம்புகளால் கட்டுப்படுத்தப்பட்டோரால், அல்லது முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் கட்டுண்டோரால் வந்தடையமுடியாத முடிவுகளை இவ்வழியில் வந்தடைந்து அவர் வரையறுத்துக் கொடுத்தார்.

உதாரணமாய், பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்துப் பேசுகையில் இதை நாம் மனதில் கொண்டிருப்பது அவசியம். மனித குலத்தின் வளர்ச்சி அனைத்தின் விளைவாகவும் தோற்றுவிக்கப்பட்ட கலாசாரத்தைப் பற்றிய துல்லியமான அறிவைக் கொண்டும் இந்தக் கலாசாரத்தை மாற்றியமைப்பதன் மூலமும்தான் நாம் பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தைத் தோற்றுவிக்க முடியும் என்பதைத் தெளிவாய் உணர்ந்தால் ஒழிய இப்பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண இயலாது. பாட்டாளி வர்க்கக் கலாசாரம் மாயமாய்க் காற்றிலிருந்து தயாரிக்கப்பட்டுவிடக் கூடியதல்ல; இக்கலாசாரத்தில் நிபுணர்கள் என்பதாய்த் தம்மை அழைத்துக் கொள்வோர் கண்டுபிடித்துக் கொடுத்துவிடக் கூடியதல்ல. அதெல்லாம் அபத்தப் பேச்சு. பாட்டாளி வர்க்கக் கலாசாரம் முதலாளித்துவ சமுதாயம், நிலப்பிரபுக்களின் சமுதாயம், அதிகார வர்க்க சமுதாயம் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் மனித குலம் சேமித்து வந்திருக்கும் அறிவுக் கருவூலத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியாகவே இருக்க முடியும். எப்படி அரசியல் பொருளாதாரம் மார்க்ஸால் திருத்தியமைக்கப்பட்ட வடிவில் மனித சமுதாயம் எதை வந்தடையப் போகிறதென்பதை நமக்குக் காட்டி

யுள்ளதோ, எப்படி அது வர்க்கப் போராட்டத்துக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தொடக்கத்துக்குமான பாதையை நமக்குக் காட்டியுள்ளதோ, அதேபோல மேற்கூறிய பாதைகள் யாவும் பாட்டாளி வர்க்கக் கலாசாரத்துக்கு இட்டு வந்திருக்கின்றன, இனியும் தொடர்ந்து இட்டுச் செல்லும்.

இளைஞர்களின் பிரதிநிதிகளும், மற்றும் ஒரு புதிய கல்வி முறையின் குறிப்பிட்ட சில ஆதரவாளர்களும் பழைய கல்வி முறையைத் தாக்கி, அது பொட்ட நெட்டுரு போடும் முறையாகுமென அடிக்கடி பேசக் கேட்கிறோம். பழைய கல்வி முறையிலிருந்து நல்லதை எடுத்துக் கொண்டாக வேண்டுமென இவர்களுக்கு நாம் பதிலளிக்கிறோம். பத்தில் ஒன்பது பங்கு உதவாக்கரையானதும் எஞ்சிய ஒரு பங்கு திரித்துப் புரட்டப்பட்டதுமான அளவிலா அறிவை இளம் மக்களின் தலையில் அடைத்து நிரப்பும் அந்த முறையை நாம் கடன் வாங்கக் கூடாதுதான். ஆனால் இதற்கு அர்த்தம் கம்யூனிஸ முடிவுகளுக்குள் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடலாம், கம்யூனிஸக் கோஷங்களை மட்டும் கற்பதுடன் நின்றுவிடலாம் என்பதல்ல. இவ்வழியில் உங்களால் கம்யூனிஸத்தைத் தோற்றுவிக்க முடியாது. மனித குலம் படைத்தளித்திருக்கும் கருவூலங்கள் யாவற்றையும் பற்றிய அறிவைப் பெற்று உங்கள் சிந்தனையை நீங்கள் வளமாக்கிக் கொள்ளும் போது மட்டுமே உங்களால் கம்யூனிஸ்டு ஆக முடியும்.

பொட்ட நெட்டுரு செய்ய வேண்டிய தேவை நமக்கு இல்லை. ஆனால் அடிப்படை உண்மைகளைப் பற்றிய அறிவை அளித்து ஒவ்வொரு மாணவரின் மனத்தையும் வளர்த்திடுவதும் செம்மையாக்குவதும் நமக்கு அவசியமே. கற்கும் அறிவு அனைத்தும் மனத்துள் செரிமானம் செய்யப்படவில்லையானால், கம்யூனிஸம் வெற்றுச் சொல்லாய், வெறும் பெயர்ப் பலகையாய் இழிவுற்றுவிடும், கம்யூனிஸ்டுகள் வீம்புரை பேசும் வீணராகிவிடுவர். இந்த அறிவை நீங்கள் கிரகித்துக் கொண்டால் மட்டும் போதாது, விமர்சனக் கண் கொண்டு ஆய்ந்து கிரகித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வேண்டாத குப்பையை எல்லாம் மூளையில் அடைத்து கொள்ளாமல், கல்வியில் சிறந்த இக்கால மனிதர் எவருக்கும் அத்தியாவசியமான உண்மைகளைக் கொண்டு சிந்தனையை வளமாக்கிக் கொள்ள முடியும். கருத்துமிக்க கடும் முயற்சி இல்

லாமலே, விமர்சனக் கண் கொண்டு பரிசீலிக்க வேண்டிய உண்மைகளைப் புரிந்து கொள்ளாமலே ஒரு கம்யூனிஸ்டு, தயாராய் வரையறுத்து வைக்கப்பட்ட முடிபுகளைத் தெரிந்து கொண்டுவிட்ட ஒரே காரணத்தால் தனது கம்யூனிஸத்தை மெச்சிப் புகழ்ந்து கொள்ள நினைப்பாராயின் உண்மையில் அவர் பரிதாபத்துக்குரிய கம்யூனிஸ்டுதான். இத்தகைய நுனிப் புல் மேயும் போக்கு நிச்சயமாய் ஆபத்தையே உண்டாக்கும். அறிந்தது சொற்பமே என்பது எனக்குத் தெரிந்தால் மேலும் கற்க முயலுவேன். ஆனால் நான் ஒரு கம்யூனிஸ்டு, எதையும் நான் தீர்க்கமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை என்று கூறும் ஒருவர் எந்நாளும் எவ்விதத்திலும் கம்யூனிஸ்டுக்கு ஒப்பானவராக முடியவே முடியாது.

பழைய கல்வி முறை முதலாளிகளுக்குத் தேவையான சேவகர்களைத் தோற்றுவித்தது. விஞ்ஞான அறிவாளிகளைப் பழைய கல்வி முறை முதலாளிகளுக்குப் பிடித்தது எதுவோ அதை எழுதிக் கொண்டும் கூறிக் கொண்டும் இருப்போராய் மாற்றியது. ஆகவே நாம் அதை அழிக்கவே வேண்டும். அதை நாம் அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்றால், மனித குலம் சேகரித்திருக்கும் யாவற்றையும், மனிதனுக்கு அவசியமானவை யாவற்றையும் அவற்றிடமிருந்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்றா அதற்கு அர்த்தம்? முதலாளித்துவத்துக்கு வேண்டியதாய் இருந்ததையும் கம்யூனிஸத்துக்கு வேண்டியதாய் இருப்பதையும் வேறுபடுத்தத் தேவையில்லை என்றா அதற்கு அர்த்தம்?

முதலாளித்துவ சமுதாயத்தில், பெரும்பாலோரின் விருப்பத்துக்கு விரோதமாய் அனுசரிக்கப்பட்ட பழைய பட்டாளத்துப் பயிற்சி மேலாளர் முறைகளை நீக்கி, அவற்றுக்குப் பதிலாய்த் தொழிலாளர் விவசாயிகளது வர்க்க உணர்வு படைத்த கட்டுப்பாட்டைக் கைக்கொண்டு வருகிறோம். இத்தொழிலாளர்களும் விவசாயிகளும் பழைய சமுதாயத்தை வெறுப்பதோடுகூட, இந்தப் போராட்டத்தில் தமது சக்திகளை ஒன்றுபடுத்தவும், ஒழுங்கமைக்கவும், லட்சம் லட்சமாகவும் கோடி கோடியாகவுமுள்ள மக்களின்—பிளவுபட்டு ஒரு பெரிய நாட்டின் பரப்பு முழுதும் சிதறுண்டிருக்கும் மக்களின்—சித்தங்களை இவ்வாறு ஒருசேர இணைத்து ஒரு மித்த ஏக சித்தமாக்கவும் ஆற்றலுடையோராய் வைராக்

கியத்துடன் தயாராகவும் இருக்கிறார்கள். இந்த ஒருமித்த ஏக சித்தம் இல்லையேல் தோல்வி தவிர்க்க முடியாததாகி விடும். இந்த ஒருமைப்பாடு இல்லாமல், தொழிலாளர்கள், விவசாயிகளது உணர்வு பூர்வமான இந்தக் கட்டுப்பாடு இல்லாமல், நமது இலட்சியம் வெற்றிபெறுவது சாத்திய மல்ல. இது இல்லாமல் அனைத்து உலகின் முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் நாம் தோற்கடிக்க முடியாது. அடித் தளத்தின் மீது நாம் ஒரு புதிய, கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியமைப்பது இருக்கட்டும், அந்த அடித்தளத்தை நாம் உறுதியாக்கி நிலைக்கச் செய்வதுகூட முடியாமற் போய்விடும். இதே போல, பழைய கல்வி முறையை நிராகரிக்கும் அதே போது, பழைய கல்வி முறை மீது முற்றிலும் நியாயமான, தேவையான வெறுப்பு கொண்டிருக்கும் அதேபோது, அதை அழித்திடச் சித்தமாயிருப்பதைப் போற்றும் அதேபோது, நாம் பழைய கல்வி போதனை முறையை, பழைய பொட்ட நெட்டுரு, பழைய பட்டாளத்துப் பயிற்சி முறையை அழித்து, அதனிடத்தில் ஒட்டுமொத்த மனித அறிவைப் பெறும் ஆற்றலை அடைவதன் அவசியத்தை உணர்ந்தாக வேண்டும். கம்யூனிஸமானது குருட்டு மனப்பாடமாய்க் கற்க வேண்டிய ஒன்றாய் அமையாது, நேரடியாய் நீங்களே சிந்தித்துப் பார்த்த ஒன்றாய், தற்காலக் கல்வியின் கண்ணோட்டத்திலிருந்து எழும் தவிர்க்க முடியாத முடிபுகள் உள்ளடங்கிய ஒன்றாய் அமையும்படி இந்த ஒட்டுமொத்த மனித குல அறிவைப் பெற வேண்டும்.

கம்யூனிஸத்தைக் கற்றறிதல் என்னும் குறிக்கோள் குறித்துப் பேசுகையில் பிரதான பணிகளை மேற்கூறியவாறு தான் எடுத்துரைக்க வேண்டும்.

உங்களுக்கு இதைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, எப்படி நீங்கள் கற்றறிய வேண்டும் என்கிற பிரச்சினையை அணுகுவதற்குரிய முறையைப் புலப்படுத்தும் பொருட்டு, நடைமுறை உதாரணம் ஒன்றைக் கூறுகிறேன். குடியரசைப் பாதுகாப்பது குறித்த இராணுவப் பணிகளை அடுத்து, இப்பொழுது நாம் பொருளாதாரப் பணிகளை எதிர்நோக்குவது உங்கள் எல்லோருக்கும் தெரியும். தொழில் துறையையும் விவசாயத்தையும் உயிர்ப்பித்தாலன்றி கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியமைக்க முடியாதென்பதை அறிவோம். அதுவும்

பழைய வழியிலன், நவீன அடிப்படையில், விஞ்ஞானத்தின் மிக நவீன முறைகளுக்கு ஏற்ப, இவற்றைப் புனரமைத்தாக வேண்டும். மின்விசையே இந்த அடிப்படை என்பதும், நாடு அனைத்தும், தொழில் துறை, விவசாயம் இவற்றின் எல்லாக் கிளைகளும் மின்மயமாக்கப்பட்ட பிறகுதான், நீங்கள் இந்தக் குறிக்கோளை நிறைவேற்றிய பிறகுதான், பழைய தலைமுறையினரால் கட்டப்பட முடியாத கம்யூனிஸ சமுதாயத்தை உங்களால் கட்டியமைக்க முடியும் என்பதும் உங்களுக்குத் தெரியும். நாடு முழுவதையும் பொருளாதார வழியில் புத்துயிர் பெறச் செய்யும் பணி—நவீன தொழில்நுட்ப முறைகளின் வாயிலாய், நவீன விஞ்ஞானம், தொழில்நுட்பத்தின் அடிப்படையில், மின்விசையின் அடிப்படையில், தொழில் துறையையும் விவசாயத்தையும் புனரமைத்துப் புத்துயிர் பெறச் செய்யும் பணி—உங்களை எதிர்நோக்குகிறது. எழுத்தறியாத மக்களால் மின்மயமாக்கும் பணியைச் சமாளிக்க முடியாது, ஆரம்ப நிலையிலான எழுத்தறிவுங்கூட இதற்குப் போதாது என்பது நீங்கள் நன்கு அறிந்ததே. மின்விசை என்பது என்னவென்று புரிந்து கொண்டால் மட்டும் போதாது; தொழில் துறையிலும் விவசாயத்திலும், மற்றும் தொழில் துறை, விவசாயம் இவற்றின் தனித் தனிக் கிளைகளிலும், தொழில் நுட்ப வழியில் எப்படி அதைக் கையாளுவது என்பது பற்றிய அறிவு இருப்பது அவசியமாகும். அவரவரும் இதைக் கற்றுத் தெரிந்து கொண்டாக வேண்டும். உழைப்பாளி மக்களின் இளந் தலைமுறை அனைத்துக்கும் இதைக் கற்றுத் தந்தாக வேண்டும். இதுவே வர்க்க உணர்வு படைத்த ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும், தன்னைக் கம்யூனிஸ்டாகக் கருதிக் கொள்ளும் ஒவ்வொரு இளைஞருக்கும் யுவதிக்கும்—இளம் கம்யூனிஸ்டுக் கழகத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் கம்யூனிஸம் அமைத்திடக் கட்சிக்குத் துணை புரிவதாய், கம்யூனிஸ சமுதாயத்தைத் தோற்றுவிக்க இளந் தலைமுறை முழுவதுக்குமே துணை புரிவதாய்த் தான் சபதமேற்றிருப்பதைத் தெளிவாய் உணருகிறவர் ஒவ்வொருவருக்கும்—முன்னுள்ள பணி. நவீனக் கல்வியின் அடிப்படையில் மட்டுமேதான் இதைத் தோற்றுவிக்க முடியும் என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர் இந்தக் கல்வியைப் பெறாவிடில் கம்யூனிஸம் வெறும் ஆத்மார்த்திக விருப்பமாகவே இருந்து வரும்.

முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது பழைய தலைமுறையின் பணியாய் இருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தை விமர்சிப்பதும், வெகுஜனங்களிடையே முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வெறுப்பு எழச் செய்வதும், அவர்களிடையே வர்க்க உணர்வையும் தம் சக்திகளை ஒன்று சேர்த்துக் கொள்வதற்கான ஆற்றலையும் வளரச் செய்வதும்தான் அப்பொழுது பிரதான பணியாய் இருந்தது. இளந் தலைமுறையின் முன்னுள்ள பணி இதனிலும் மிகமிகச் சிக்கலானது. முதலாளிகளால் முடுக்கிவிடப்படும் படையெடுப்பை எதிர்த்து நின்று தொழிலாளர்கள், விவசாயிகளது ஆட்சியதிகாரத்தை நிலைநாட்டும் வண்ணம் உங்கள் சக்திகளை இணைத்துச் சேர்ப்பது மட்டுமல்ல உங்களுடைய கடமை. சந்தேகமில்லை, அதை நீங்கள் செய்யவே வேண்டும். அது நீங்கள் தெளிவாய் உணரும் ஒன்று. கம்யூனிஸ்டுக்குத் தெட்டத் தெளிவாய்த் தெரியும் கடமை அது. ஆனால் அது மட்டும் போதாது. கம்யூனிஸ சமுதாயத்தை நீங்கள் கட்டியமைத்தாக வேண்டும். பல அம்சங்களில் ஒரு பாதி வேலை செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அழிக்கப்பட வேண்டிய பழையது அழிக்கப்பட்டுவிட்டது, தகர்க்கப்பட வேண்டியது தகர்த்துத் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது. தரை சுத்தமாக்கப்பட்டுவிட்டது, இந்தத் தரையின்மேல் இளங் கம்யூனிஸ்டுத் தலைமுறை கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்பியாக வேண்டும். உங்களை எதிர்நோக்குவது நிர்மாணப் பணி. நவீன கால அறிவு அனைத்தையும் கற்றுத் தேர்ந்தால்தான் நீங்கள் இந்தப் பணியைச் செய்து முடிக்க முடியும். ஏற்கெனவே வரையறுக்கப்பட்டு மனப்பாடம் செய்யப்பட்ட சூத்திரங்கள், அறிவுரைகள், நியமங்கள், விதிமுறைகள், வேலைத்திட்டங்கள் ஆகியவற்றிலிருந்து கம்யூனிஸத்தை உயிருள்ள எதார்த்த உண்மையாய் உங்களால் மாற்ற முடிந்தால்தான்— உங்களுடைய உடனடி வேலைகளுக்கு ஐக்கிய உருவளிக்கும் எதார்த்த உண்மையாய் மாற்ற முடிந்தால்தான்—உங்களுடைய நடைமுறை வேலைகள் யாவற்றுக்கும் நீங்கள் கம்யூனிஸத்தை வழிகாட்டி ஆக்கிக் கொள்ள முடிந்தால்தான்—உங்களால் இந்தப் பணியைச் செய்து முடிக்க இயலும்.

இளந் தலைமுறையினர் அனைவருக்கும் கல்வி போதமும் பயிற்சியும் அளித்து அவர்களைத் தட்டியெழுப்புகையில் நீங்கள்

நிறைவேற்ற வேண்டிய பணி இதுவே. கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியமைக்கும் கோடானு கோடியான ஆக்க வீரர்களிடையே நீங்கள் முன்னிலையில் இருக்க வேண்டும். இந்த ஆக்க வீரர்களது அணி வரிசையே ஒவ்வொரு இளைஞருக்கும் யுவதிக்கும் உரிய இடமாகும். இளந் தொழிலாளர்களும் விவசாயிகளுமான பெருந்திரளினரைக் கம்யூனிஸ நிர்மாணப் பணியில் நீங்கள் அணி திரட்டினாலன்றி உங்களால் கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

இயற்கையாகவே இது என்னை கம்யூனிஸத்தை எப்படி நாம் போதிப்பது, நமக்குரிய முறைகளின் பிரத்தியேக இயல்புகள் யாவை என்கிற பிரச்சினைக்கு அழைத்து வருகிறது.

முதலில் இங்கு கம்யூனிஸ்டு அறநெறிப் பிரச்சினை குறித்து பரிசீலிக்கிறேன்.

நீங்கள் உங்களைக் கம்யூனிஸ்டுகளாய்ப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும். கற்றறிதல், ஒழுங்கமைத்தல், ஒன்று படச் செய்தல், போராடுதல் ஆகியவற்றின் மூலம் இளைஞர் கழக உறுப்பினர்கள் தம்மையும் பயிற்றுவித்துக் கொண்டு, இளைஞர் கழகத்தைத் தம் தலைமையாய்க் கருதுவோர் எல்லோரையும் பயிற்றுவிக்கும்படியான முறையில் தனது நடைமுறைச் செயற்பாட்டை ஏற்பாடு செய்து கொள்வதுதான் இளைஞர் கழகத்தின் பணி. எல்லோரையும் அது கம்யூனிஸ்டுகளாய்ப் பயிற்றுவிக்க வேண்டும். இன்றைய இளைஞர்களுக்குத் தரப்படும் பயிற்சி, கல்வி, போதனை ஆகியவற்றின் நோக்கம் எல்லாம் கம்யூனிஸ அறநெறியை ஊட்டுதலாகவே இருக்க வேண்டும்.

ஆனால் கம்யூனிஸ அறநெறி என்பதாய் ஒன்று இருக்கிறதா? கம்யூனிஸ ஒழுக்கம் என்பதாய் ஒன்று இருக்கிறதா? நிச்சயமாய் இருக்கிறது. நமக்கென ஒரு தனி அறநெறி கிடையாது என்பதாய் அடிக்கடி பேசப்படுகிறது; ஒழுக்கநெறி அனைத்தையுமே நிராகரிப்பவர்கள் என்பதாய்க் கம்யூனிஸ்டுகளாகிய நம்மீது முதலாளித்துவ வர்க்கத்தினர் அடிக்கடி குற்றம் சாட்டுகிறார்கள். பிரச்சினையைக் குழப்புவதற்கான—தொழிலாளர், விவசாயிகளின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கான—ஓர் உபாயமே இது.

எந்த அர்த்தத்தில் நாம் அறநெறியை, ஒழுக்கநெறியை நிராகரிக்கிறோம்?

முதலாளி வர்க்கத்தினர் அதற்கு அளித்திடும் அர்த்தத்தில் நிராகரிக்கிறோம். கடவுள் கட்டளைகளை அவர்கள் அறநெறிக்கு அடிப்படையாக்கிக் கொள்கிறார்கள். இவ்விவகாரம் குறித்துப் பேசுகையில், எங்களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது என்று நாம் கூறுகிறோம். மதகுருமார்களும் நிலப்பிரபுக்களும் முதலாளி வர்க்கத்தினரும் சுரண்டலாளர்கள் என்ற முறையில் தமது சொந்த நலன்களைக் கருதிக் கடவுளின் பெயரை இழுக்கிறார்கள், இதை நாங்கள் நன்கு அறிவோம் என்று சொல்கிறோம். அல்லது, ஒழுக்கக் கட்டளைகளுக்குப் பதிலாய்—கடவுள் கட்டளைகளுக்குப் பதிலாய்—அவர்கள் கருத்துமுதல்வாத அல்லது ஓரளவு கருத்துமுதல்வாதத் தொடர்களை அறநெறிக்கு அடிப்படையாக்கிக் கொண்டனர். இந்தத் தொடர்களும் மிகப் பெருமளவுக்குக் கடவுள் கட்டளைகளைப் போன்ற ஒன்றையே குறிப்பவை.

மனிதனுக்குப் புறம்பான, வர்க்கத்துக்குப் புறம்பான கருத்தினங்களை அடிப்படையாய்க் கொண்ட எந்த ஒழுக்க நெறியையும் நாம் நிராகரிக்கின்றோம். அது ஏமாற்று வித்தை, மாய்மாலம், நிலப்பிரபுக்கள், முதலாளிகளது நலன்களை முன்னிட்டு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் முடர்களாக்குவதற்கான உபாயம் என்கிறோம்.

எங்களுடைய ஒழுக்கநெறி பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தது என்று நாம் கூறுகிறோம். எங்கள் ஒழுக்க நெறி பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்தின் நலன்களிலிருந்துதான் உதிக்கிறது.

பழைய சமுதாயம் எல்லாத் தொழிலாளர்கள், விவசாயிகள் மீதும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் புரிந்த ஒடுக்குமுறையின் அடிப்படையில் அமைந்திருந்தது. நாம் அதை அடியோடு அழிக்க வேண்டியிருந்தது, அவர்களை வீழ்த்த வேண்டியிருந்தது. ஆனால் இதைச் செய்யும் பொருட்டு நாம் ஒற்றுமையை உண்டாக்க வேண்டியிருந்தது. அது கடவுளால் உண்டாக்கப்படக் கூடிய ஒன்று அல்ல.

இந்த ஒற்றுமையைத் தொழிற்சாலைகளால் மட்டும்தான் அளித்திட முடியும்; நீண்ட நெடிய உறக்கத்திலிருந்து

எழுப்பப்பட்டுப் பயிற்சியளிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தால்தான் உண்டாக்க முடியும். இந்த வர்க்கம் உருவான பிறகே வெகுஜன இயக்கம் ஒன்று தோன்றி, மிகவும் பலவீனமான ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடைந்திருப்பதை இப்பொழுது காண்கிறோமே, இந்த வெற்றிக்கு வழி செய்துள்ளது. இந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அனைத்து உலகின் முதலாளி வர்க்கத்தாரின் கடுந்தாக்குதலை மூன்று ஆண்டுகளாய் எதிர்த்தடித்துக் கொண்டிருக்கிறது. உலகெங்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ந்து வருவதைக் காண முடிகிறது. ஒற்றுமையின்றிச் சிதறுண்டுள்ள விவசாயிகளைத் தன்னைப் பின்பற்றி வரச் செய்துள்ளதும், சுரண்டலாளர்களது எல்லாத் தாக்குதல்களையும் சமாளித்து நிற்பதுமான திடமிக்க இச்சக்தியைப் பாட்டாளி வர்க்கத்தை அன்னியில் வேறு எதனுலும் தோற்றுவித்திருக்க முடியாதெனை இப்பொழுது நாம் அனுபவ வாயிலாய்க் கூறலாம். இந்த ஒரு வர்க்கத்தால் மட்டும்தான் உழைப்பாளி வெகுஜனங்கள் ஒன்றுபடவும், தமது அணிகளை ஒன்றுதிரட்டிக் கொள்ளவும், கம்யூனிஸ சமுதாயத்தை முடிவாய்ப் பாதுகாத்துக் கொள்ளவும், முடிவாய் உறுதி பெறும்படிச் செய்யவும், முடிவாய்க் கட்டியமைத்திடவும் துணை புரிய முடியும்.

எனவேதான் மனித சமுதாயத்துக்கு மேலானதான ஒழுக்கநெறி என்பதாய் நமக்கு எதுவும் இல்லை என்று கூறுகிறோம். அது ஏமாற்று சூழ்ச்சியே ஆகும். நமக்கு ஒழுக்க நெறியானது பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தினுடைய நலன்களுக்குக் கீழ்ப்பட்டது ஆகும்.

இந்த வர்க்கப் போராட்டம் எதில் அடங்கியுள்ளது? ஜார் மன்னனை வீழ்த்தல், முதலாளிகளை வீழ்த்தல், முதலாளி வர்க்கத்தை ஒழித்தல் ஆகிய இவற்றில் அது அடங்கியுள்ளது.

பொதுவில் வர்க்கங்கள் என்பவை யாவை? சமுதாயத்தின் ஒரு பிரிவு மற்றொரு பிரிவின் உழைப்பை அபகரித்துக் கொள்ள வழி செய்பவையே வர்க்கங்கள். சமுதாயத்தின் ஒரு பிரிவு எல்லா நிலத்தையும் அபகரித்துக் கொள்ளுமாயின், நிலப்பிரபு வர்க்கமும் விவசாயி வர்க்கமும் இருக்கக் காண்கிறோம். சமுதாயத்தின் ஒரு பிரிவு ஆலைகள், பங்குகள், மூலதனம் இவற்றின் உடைமையாளனுய் இருந்து, மற்றொரு பிரிவு இந்த ஆலைகளில் வேலை செய்யும்படி ஏற்படுகையில்

முதலாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் இருக்கக் காண்கி ரேம்.

ஜாரை விரட்டுவது கடினமாய் இருக்கவில்லை—ஒரு சில நாட்களே தேவைப்பட்டன. நிலப்பிரபுக்களை விரட்டுவதும் அதிகக் கடினமாய் இருக்கவில்லை—ஒரு சில மாதங்களில் இது செய்யப்பட்டுவிட்டது. முதலாளிகளை விரட்டுவதும் அதிகக் கடினமாய் இருக்கவில்லை. ஆனால் வர்க்கங்களை ஒழித்தல் இதையெல்லாம்விட சொல்ல முடியாத அளவுக்கு மிகவும் கடினமாகும். தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற பிரிவினை இன்னமும் நம்மிடம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. விவசாயியை அவனுக்குரிய நிலத்தில் அமர்த்தியதும் அவன் உபரி தானியத்தை, அதாவது தனக்கோ தன் கால்நடை களுக்கோ வேண்டியிராத தானியத்தை, ஏனைய மக்கள் உண்ண உணவின்றி திண்டாடும்போது தனக்கே சுவாதீனமாக்கிக் கொள்வானாகில், அந்த விவசாயி சுரண்டலாளனாகிவிடுகிறான். தன் கையில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகத் தானியத்தை இருத்திக் கொள்கிறானோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக லாபம் கிடைக்கக் காண்கிறான். ஏனையோரைப் பொறுத்த வரை அவர்கள் பட்டினி கிடக்கட்டுமே, ''பட்டினி அதிகமாக ஆகத் தானியத்தை இன்னும் அதிக விலைக்கு விற்க முடியுமே'' என்கிறான். பொதுவான ஒரே திட்டத்தின்படி எல்லோரும் பொது நிலங்களிலும் பொது ஆலைகளிலும் பொது ஏற்பாட் டிற்கு ஏற்ப வேலை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலையை அடைவது சுலபமா? ஜாரையும் நிலப்பிரபுக்களையும் முத லாளிகளையும் விரட்டுவது போல இது அவ்வளவு சுலபமல்ல என்பதைக் காண்கிறீர்கள். பாட்டாளி வர்க்கம் விவசாயி களில் ஒரு பிரிவினருக்கு மறுகல்வியும் மறு போதமும் அளித் தாக வேண்டியிருக்கிறது. பணக்கார விவசாயிகளாய் இருப் போரின், ஏனையோரது வறுமையையும் இல்லாமையையும் கொண்டு லாபமடிக்கும் இவ்விவசாயிகளின் எதிர்ப்பை நசுக் கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கம் உழைக்கும் விவசாயி களைத் தன் பக்கத்துக்கு வரும்படி ஈர்த்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. ஜாரை வீழ்த்தி நிலப்பிரபுக்களையும் முதலாளி களையும் நாம் விரட்டியடித்ததுடன் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் பணி பூரணமாய் நிறைவு எய்திவிடவில்லை.

இதை நிறைவுறச் செய்வதே நாம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமெனு அழைக்கும் இந்த ஆட்சியமைப்பின் பணி.

வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது, அதன் வடிவங்கள் மட்டுமே மாறியிருக்கின்றன. பழைய சுரண்டலாளர்கள் திரும்பி வந்துவிடாதபடி தடுப்பதற்காக, சிதறுண்டு கிடக்கும், அறிவொளியில்லாத விவசாயி வெகு ஜனங்களை ஒரே கூட்டணியாய் ஒன்றுபடுத்துவதற்காக நடைபெறும் வர்க்கப் போராட்டம் இது. வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது, இந்தப் போராட்டத்துக்கு எல்லா நலன்களையும் கீழ்ப்படச் செய்வதே நமது பணி. நமது கம்யூனிஸ்டு ஒழுக்கநெறியும் இப்பணிக்குக் கீழ்ப்பட்டது தான். பழைய சுரண்டல் சமுதாயத்தை அழிக்கவும், ஒரு புதிய கம்யூனிஸ்டு சமுதாயத்தைக் கட்டியமைத்திடும் பாட்டாளி வர்க்கத்தை மையமாய்க் கொண்டு உழைப்பாளி மக்கள் அனைவரையும் ஒன்றுபடச் செய்யவும் உதவுவதே ஒழுக்கநெறி என்று கூறுகிறோம்.

இந்தப் போராட்டத்துக்கு உதவி புரிந்து உழைப்பாளி மக்களை எல்லா விதச் சுரண்டலையும் எதிர்த்து, அற்பத் தனியார் சொத்துடைமை யாவற்றையும் எதிர்த்து ஒன்றுபடச் செய்ய உதவுவதே கம்யூனிஸ்டு ஒழுக்கநெறி. சமுதாயம் அனைத்தின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டதை இந்த அற்பத் தனியார் சொத்துடைமையானது தனியாளின் கையிலே இருத்திவிடுகிறது. நமது நாட்டில் நிலம் பொதுச் சொத்தாகும்.

பொதுச் சொத்தான இந்த நிலத்தில் ஒரு துண்டை எடுத்து அதில் நான் எனக்கு வேண்டியதைப் போல இரு மடங்கு தானியம் விளைவித்து உபரியைக் கொண்டு கொள்ளை லாபம் திரட்டுவதாய் வைத்துக் கொள்ளலாம். பட்டினி கிடப்போரின் தொகை பெருகப் பெருக அவர்கள் அதிக விலை கொடுப்பார்களே என்று நான் வாதாடுவதாய் வைத்துக் கொள்ளலாம். அப்பொழுது நான் கம்யூனிஸ்டாகவா நடந்து கொள்கிறேன்? இல்லை, சுரண்டலாளனுகவே, உடைமையாளனுகவே நடந்து கொள்கிறேன். இதை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இது நடைபெற நாம் இடந் தருவோமாயின், முதலாளிகளுடைய ஆட்சி, முதலாளி வர்க்க ஆட்சி திரும்புவதற்கே அது இட்டுச் செல்லும். முந்திய

புரட்சிகளில் இது பன்முறை நடைபெற்றிருக்கிறது. முதலாளிகளின், முதலாளி வர்க்கத்தின் ஆட்சியினது மீட்சியைத் தடுக்கும் பொருட்டு, நாம் கொள்ளை லாபத்துக்கு இடந் தரலாகாது; தனி நபர்கள் ஏனையோரின் செலவில் செல்வம் திரட்ட இடமளிக்கக் கூடாது; உழைப்பாளி மக்கள் பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றுசேர்ந்து கம்யூனிஸ்டு சமுதாயத்தை அமைத்திட வேண்டும். கம்யூனிஸ்டு இளைஞர் கழகத்துக்கும் நிறுவனத்துக்குமுள்ள அடிப்படைப் பணியின் தலையாய அம்சம் இது.

கொள்ளையடி அல்லது கொள்ளைக்கு இலக்காகு; ஏனையோருக்கு வேலை செய் அல்லது ஏனையோரை உனக்கு வேலை செய்யும்படி வை; அடிமையுடைமையாளனாய் இரு அல்லது அடிமையாகு—இந்த விதிதான் பழைய சமுதாயத்துக்கு அடிப்படையாய் இருந்தது. ஒன்று நீ அடிமையுடைமையாளன் அல்லது அடிமை, இல்லையேல் சிறு உடைமையாளன், சிறு அதிகாரி அல்லது அறிவுத்துறையாளன்—அதாவது சுருங்கக் கூறின் தன்னைப் பற்றி மட்டுமே நினைத்து ஏனையவர் யாரைப் பற்றியும் கவலைப்படாத ஆள் என்கிற மனப்பான்மையை, பழக்கத்தை, கருத்தோட்டத்தை இத்தகைய ஒரு சமுதாயத்தில் வளர்ந்தவர்கள் இயற்கையாகவே கிரகித்துக் கொண்டுவிடுகிறார்கள், தாய்ப் பாலுடன் சேர்த்து உட்கொண்டுவிடுகிறார்கள் என்று சொல்லலாம்.

எனக்குரிய இந்த நிலத்தை நான் உழுது பயிரிட்டால் போதும், ஏனையோரைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஏனையோர் பட்டினி கிடந்தால் கிடக்கட்டுமே, நல்லதுதானே, என்னுடைய தானியத்துக்கு இன்னும் அதிகப் பணம் கிடைக்குமே. எனக்கு மருத்துவர் அல்லது பொறியாளர் அல்லது ஆசிரியர் அல்லது குமாஸ்தா வேலை கிடைக்கிற வரை ஏனையோர் யாரைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அதிகாரத்தில் இருப்போருக்கு அடிபணிந்து நடந்து அவர்களைத் திருப்தி செய்தால் என் வேலையை நான் பாதுகாத்துக் கொள்ளலாம். ஏன், வாழ்க்கையில் முன்னேறி ஒரு முதலாளியாகவுங்கூட ஆகலாம். இது போன்ற மனப்பான்மையையும் இவ்வகை உணர்ச்சிகளையும் ஒரு கம்யூனிஸ்டு கொண்டிருக்க முடியாது. தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது சொந்த முயற்சிகளாலேயே தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஒரு

புதிய சமுதாயத்தை அமைத்திடவும் முடியுமென்று நிரூபித்துக் காட்டிய போது—அது புதிய, கம்யூனிஸ்டுப் போதம் பெறுதலின், சுரண்டலாளர்களுக்கு எதிரான போராட்டத்தின் வாயிலாய்ப் போதம் பெறுதலின் தொடக்கமாயிற்று. சுய நலமிகளையும் சிறு உடைமையாளர்களையும் எதிர்த்து—எனக்கு வேண்டியது என்னுடைய லாபம்தான், வேறு எதைப் பற்றியும் எனக்குக் கவலை இல்லை என்பதாய்க் கூறும் மனப்பாங்கையும் பழக்கவழக்கங்களையும் எதிர்த்து—பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டணி கொண்டு பெறும் போதத்தின் தொடக்கமாயிற்று.

வளரும் இளந் தலைமுறையினர் எப்படிக் கம்யூனிஸம் கற்றறிய வேண்டும் என்கிற கேள்விக்கு இதுவே பதில்.

இவர்கள் தமது படிப்பு, பயிற்சி, கல்வி இவற்றின் ஒவ்வொரு படியையும் சுரண்டலாளர்களது பழைய சமுதாயத்தை எதிர்த்துப் பாட்டாளிகளும் உழைப்பாளி மக்களும் நடத்தும் தொடர்ச்சியான போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதன் மூலமே கம்யூனிஸத்தைக் கற்றறிய முடியும். ஒழுக்கநெறி குறித்து நம்மிடம் பேசுவோருக்கு நாம் கூறுவது இதுதான்: கம்யூனிஸ்டு ஒழுக்கநெறி அனைத்தும் இந்த ஒன்றுபட்ட கட்டுப்பாட்டிலும் சுரண்டலாளர்களுக்கு எதிரான உணர்வு பூர்வமான வெகுஜனப் போராட்டத்திலும்தான் அடங்கியுள்ளது. என்றும் மாறாத நிரந்தர ஒழுக்கநெறியில் நமக்கு நம்பிக்கை இல்லை. ஒழுக்கநெறி பற்றிய எல்லாக் கட்டுக்கதைகளின் பொய்மையையும் நாம் அம்பலப்படுத்துகிறோம். மனித சமுதாயம் மேலும் உயர்ந்த நிலைக்கு வளர்வதற்கும், உழைப்பு சுரண்டப்படுவதை ஒழித்துத் தன்னை விடுவித்துக் கொள்வதற்கும் ஒழுக்கநெறி பணி புரிகிறது.

இந்த நோக்கம் ஈடேற முதலாளி வர்க்கத்துக்கு எதிரான கட்டுப்பாடு வாய்ந்த உக்கிரமான போராட்டத்தின் போது அரசியல் முதிர்ச்சி பெற்ற இளம் மக்களின் தலைமுறை நமக்குத் தேவைப்படுகிறது. இந்தப் போராட்டத்தில் இத் தலைமுறை மெய்யான கம்யூனிஸ்டுகளைப் பயிற்றுவிக்கிறது. அது தனது படிப்பு, கல்வி, பயிற்சி இவற்றின் ஒவ்வொரு படியையும் இந்தப் போராட்டத்துக்குக் கீழ்ப்படியச் செய்து இதனுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். நல்லுரைகளும் நன்னெறி விதிகளும் போதிப்பதல்ல கம்யூனிஸ்டு இளைஞர்

களுக்கான கல்வி போதனை. இதல்ல கல்வியின் உள்ளடக்கம். நிலப்பிரபுக்கள், முதலாளிகளது ஒடுக்குமுறையில் தம் தாய் தந்தையர் வாழ்ந்த முறையைக் கண்டுணரும் போது, சுரண்டலாளர்களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கியோர் பட்ட துன்பங்களைத் தாமே நேரில் அனுபவித்துள்ள போது, வென்று கொண்டதை இழக்காது பாதுகாப்பதற்காகப் புரிய வேண்டியிருந்த தியாகங்களையும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் எவ்வளவு கொடிய பகைவர்கள் என்பதையும் காணும் போது—இந்நிலைமைகளாலேயே இம்மக்கள் கம்யூனிஸ்டுகளாய்ப் போதனை பெறுகின்றனர். கம்யூனிஸ்டு ஒழுக்கநெறி கம்யூனிஸத்தை உறுதியாக்குவதற்கும் நிறைவுறச் செய்வதற்குமான போராட்டத்தை அடிப்படையாய்க் கொண்டதாகும். கம்யூனிஸ்டுப் பயிற்சி, கல்வி, போதனை ஆகியவற்றின் அடிப்படையும் இதுவேதான். கம்யூனிஸத்தைக் கற்றறிவது எப்படி என்னும் கேள்விக்கு இதுதான் பதில்.

வகுப்பறையின் வரம்புகளுக்குள் அடைபட்டு வாழ்க்கையின் கொந்தளிப்பிலிருந்து துண்டிக்கப்பட்ட போதத்திலும் பயிற்சியிலும் கல்வியிலும் நமக்கு நம்பிக்கை இல்லை. தொழிலாளர்களும் விவசாயிகளும் நிலப்பிரபுக்களாலும் முதலாளிகளாலும் ஒடுக்கப்பட்டிருக்கும் வரை, கல்வி நிலையங்கள் நிலப்பிரபுக்கள், முதலாளிகளுடைய பிடியில் இருக்கும் வரை, இளந் தலைமுறையினர் கண் தெரியாதோராயும் அறியாமை இருளில் மூழ்கியோராகவுமே இருப்பார்கள். இளைஞர்களுக்கு நமது பள்ளி அடிப்படை அறிவையும் சுயமாகவே கம்யூனிஸ்டுக் கருத்தோட்டங்களை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றலையும் அளித்திட வேண்டும். இளைஞர்களை அது கல்வியறிவுடையோராக்க வேண்டும். பள்ளி சென்று பயிலும் போதே இளைஞர்கள் சுரண்டலாளர்களிடமிருந்து விடுதலை பெறும் போராட்டத்தில் பங்கு பெறக் கற்றுக் கொள்ள வேண்டும். இளங் கம்யூனிஸ்டுக் கழகம் அதன் போதனையிலும் பயிற்சியிலும் கல்வியிலும் ஒவ்வொரு படியையும் சுரண்டலாளர்களை எதிர்த்து உழைப்பாளி மக்கள் அனைவரும் நடத்தும் போராட்டத்தில் பங்கு கொள்வதுடன் இணைத்திடாவிடில் இளங் கம்யூனிஸ்டுத் தலைமுறையினரது கழகம் என்ற அதன் பெயருக்கு ஏற்றதாயிராது. ருஷ்யாவா

னது தொழிலாளரது ஒரேயொரு குடியரசாய் இருக்கும் வரையில், பழைய, முதலாளித்துவ ஆட்சியமைப்பு ஏனைய உலகில் இருந்து வரும் வரையில், நாம் அவர்களைக் காட்டிலும் பலவீனமாகவே இருப்போம், புதிய தாக்குதல் தொடுக்கப்படும் அபாயம் இடையறாது இருக்கவே செய்யும் என்பதும், நாம் திடமாய் ஒன்றுபட்டிருக்கக் கற்றுக் கொண்டால் தான் மேற்கொண்டு நடைபெறும் போராட்டத்தில் வெற்றி பெறுவோம், பலம் மிக்கோராகி மெய்யாகவே வெல்ல முடியாதவர்களாவோம் என்பதும் நீங்கள் நன்கு உணர்ந்ததே. ஆகவே நீங்கள் இளந்தலைமுறை அனைத்தையும் ஒழுங்கமையச் செய்து ஒன்றுபடுத்த வேண்டும், இந்தப் போராட்டத்தில் பயிற்சிக்கும் கட்டுப்பாட்டுக்குமான எடுத்துக்காட்டாய்த் திகழ வேண்டும் என்பதுதான் கம்யூனிஸ்டாய்ச் செயல்படுதலின் அர்த்தம். அப்பொழுதுதான் உங்களால் கம்யூனிஸ சமுதாயமெனும் மாளிகையைக் கட்டியெழுப்பத் தொடங்கவும், அதைக் கட்டி முடிக்கவும் முடியும்.

இதை உங்களுக்கு மேலும் தெளிவாய் விளங்கச் செய்யும் பொருட்டு ஓர் உதாரணத்தை எடுத்துரைக்கிறேன். நம்மைக் கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறோம். கம்யூனிஸ்டு என்றால் என்ன? கம்யூனிஸ்டு என்பது லத்தீனச் சொல். லத்தீன் மொழியில் "கம்முனிஸ்" என்றால் "பொதுவான" என்று பொருள். கம்யூனிஸ சமுதாயம் என்பது நிலம், ஆலைகள் ஆகிய யாவும் பொதுவுடைமையாய் இருந்து, மக்கள் பொதுவில் கூட்டாய் வேலை செய்யும் சமுதாயமாகும். இதுதான் கம்யூனிஸம் எனப்படுவது.

ஒவ்வொருவரும் அவருடைய சொந்த நிலத்தில் தனியே வேலை செய்வாராயின் பொதுவில் கூட்டாய் வேலை செய்வது எப்படிச் சாத்தியம்? பொதுவில் வேலை செய்யும் முறையைத் திடுமெனத் தோன்றச் செய்துவிட முடியாது. இது இயலாத காரியம். விண்ணிலிருந்து இது குதித்துவிடுவதில்லை. அரு முயற்சிகளின் வாயிலாகவும் இன்னல்களின் விளைவாகவுமே இது வர முடியும்; போராட்டத்தின் வாயிலாகவே இதைத் தோன்றச் செய்ய முடியும். பழைய புத்தகங்கள் இங்கு நமக்குப் பயன்பட மாட்டா. யாரும் அவற்றை நம்ப மாட்டார்கள். அவரவருக்கும் நேரடியான வாழ்க்கை அனுபவம் அவசியமாகும். கல்ச்சாக்கும் தெனீக்கினும் சைபீரியா

விலிருந்தும் தெற்கிலிருந்தும் முன்னேறி வந்த போது விவசாயிகள் அவர்களுடைய பக்கம்தான் இருந்தனர். விவசாயிகளுக்குப் போல்ஷிவிஸம் பிடிக்கவில்லை, ஏனென்றால் போல்ஷிவிக்குகள் அவர்களுடைய தானியத்தை நிலையான நிர்ணய விலைகளுக்கு வாங்கிக் கொண்டனர். ஆனால் சைபீரியாவிலும் உக்ரேனியாவிலும் விவசாயிகள் கல்ச்சாக், தெனீக் கினது ஆட்சியை அனுபவித்தபின் அவர்கள் தமக்குள்ளது இரண்டில் ஒரு வழியேதான் என்பதை உணரலாயினர். ஒன்று முதலாளிகளுடன் சேர்ந்து கொள்வது —அப்படிச் செய்தால் முதலாளிகள் உடனே அவர்களை நிலப்பிரபுக்களின் கீழ் அடிமை வாழ்வில் வதையும்படி இருத்திவிடுவார்கள். இரண்டாவது வழி தொழிலாளர்களைப் பின்தொடர்வது. தொழிலாளர்கள் தேனும் பாலும் பெருகியோடும் சொர்க்கம் கிடைக்கச் செய்வதாய் வாக்களிக்கவில்லை, உக்கிரமான ஒரு போராட்டத்தில் உருக்குக் கட்டுப்பாடும் வைராக்கியமும் காட்டும்படியே அவர்கள் கோருகின்றனர் என்பது மெய்தான். ஆனால் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் அடிமைப்பட்டு வாழ்வதிலிருந்து அவர்கள் தம்மை விடுவிப்பார்கள். அறியாமை இருளில் மூழ்கியிருந்த விவசாயிகள் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாய் இதை உணர்ந்து கொண்டதும், கடுஞ்சோதனையின் வாயிலாய்ப் பாடம் பயின்றதும், அவர்கள் கம்யூனிஸத்தின் உணர்வு பூர்வமான ஆதரவாளர்களாயினர். இது போன்ற அனுபவம்தான் இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்குமான அடிப்படை ஆதல் வேண்டும்.

நாம் கற்றறிய வேண்டியது என்ன, பழைய கல்வி முறையிலிருந்தும் பழைய விஞ்ஞானத்திலிருந்தும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது என்ன என்கிற கேள்விகளுக்கு நான் பதிலளித்துள்ளேன். இப்பொழுது இதைக் கற்றறிவது எப்படி என்னும் கேள்விக்குப் பதிலளிக்க முயலுகிறேன். பள்ளியின் செயற்பாடுகளில் ஒவ்வொரு படியையும், பயிற்சி, கல்வி, போதனை இவற்றில் ஒவ்வொரு படியையும், சுரண்டலாளர்களுக்கு எதிராய் உழைப்பாளி மக்கள் அனைவரும் நடத்தும் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதவாறு அதனுடன் இணைத்துக் கொள்வதன் மூலமே கற்றறிய வேண்டும் என்பதே இக்கேள்விக்குரிய பதில்.

இந்தக் கம்யூனிஸப் பயிற்சி எப்படி நடந்தேற வேண்டு மென்பதைத் தெளிவாய்க் காட்டும் பொருட்டு இளைஞர் நிறுவனங்கள் சிலவற்றினுடைய வேலையின் அனுபவத்திலி ருந்து சில உதாரணங்கள் தருகிறேன். எழுத்தறியாமையை ஒழிப்பது குறித்து எல்லோரும் பேசி வருகிறார்கள். எழுத் தறியாத ஒரு நாட்டில் கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டி யமைக்கமுடியாது, இது உங்களுக்குத் தெரிந்ததே. சோவியத் ஆட்சி ஓர் உத்தரவைப் பிறப்பித்தால் மட்டும் போதாது; அல்லது கட்சி குறிப்பிட்ட ஒரு கோஷத்தை வெளியிட்டால் மட்டுமோ, சிறந்த ஊழியர்களில் சிலரை இப்பணிக்காக ஒதுக்கினால் மட்டுமோ, போதாது. இளந் தலைமுறையினர் தாமே இப்பணியில் இறங்கியாக வேண்டும். இளந் தலை முறையினர், இளைஞர் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் இது நம்முடைய பணி, எழுத்தறியாமையை ஒழித்திடுவதற்காக, நமது இளம் மக்களிடையே எழுத்தறி யாதோர் யாரும் இல்லாதபடி செய்வதற்காக, நாம் ஒன்று பட்டுக் கிராமப்புற வட்டாரங்களுக்குச் செல்வோம் என்று கூற வேண்டும். அதுதான் கம்யூனிசம். வளரும் தலைமுறையின ரைத் தமது செயல்களை இப்பணியில் ஈடுபடுத்த வைப்பதற் காக நாம் முயன்று வருகிறோம். அறியாமை இருளிலுள்ள எழுத்தறியாத ருஷ்யாவைச் சடுதியில் எழுத்தறிவுடைய நாடாய் நாம் மாற்றிவிட முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இளைஞர் கழகம் இப்பணியில் இறங்கு மாயின், இளம் மக்கள் எல்லோரும் எல்லோரது நன்மைக் காகவும் பாடுபடுவார்களாயின், 4,00,000 இளைஞர்களையும் யுவதிகளையும் உறுப்பினர்களாய்க் கொண்ட இக்கழகம் தன்னை இளங் கம்யூனிஸ்டுக் கழகமென்று அழைத்துக் கொள்ளும் உரிமையுடையதாகிவிடும். தான் அறிவு பெறு வதோடுகூட, எழுத்தறியாமையின் பிடியிலிருந்து தம் சொந்த முயற்சிகளைக் கொண்டே விடுபட முடியாத இளம் மக்களுக்குத் துணை புரிவதும் கழகத்தின் இன்னொரு பணியா கும். இளைஞர் கழக உறுப்பினராய் இருப்பதற்கு அர்த்தம் தமது உழைப்பையும் முயற்சிகளையும் பொது இலட்சியத்துக் காகப் பணித்துக் கொள்வதுதான். கம்யூனிஸக் கல்விப் போதனை என்பது இதுவேதான். இத்தகைய பணியாற்றலின் மூலமே இளைஞர்களும் யுவதிகளும் மெய்யான கம்யூனிஸ்டு

களாக முடியும். இந்தப் பணியில் நடைமுறைப் பலன்கள் பெற்ருல்தான் அவர்கள் கம்யூனிஸ்டுகளாக முடியும்.

நகரச் சுற்றுவட்டாரக் காய்கறித் தோட்டங்கள் பயிரிடும் பணியை உதாரணமாய் எடுத்துக் கொள்ளுங்கள். இது மெய்யான பணிக்குரிய துறை அல்லவா? இளங் கம்யூனிஸ்டுக் கழகத்தின் பணிகளில் இதுவும் ஒன்ருகும். மக்கள் பட்டினி கிடக்கிருர்கள்; ஆலைகளில் பசியும் பட்டினியும் தாண்டவ மாடுகின்றன. பட்டினியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு காய்கறித் தோட்டங்கள் வளர்த்தாக வேண்டும். ஆனுல் பயிர்த்தொழில் பழைய வழியில் நடைபெற்று வருகிறது. ஆகவே அதிக அளவு வர்க்க உணர்வு படைத்த பகுதியினர் இப்பணியில் ஈடுபடுதல் வேண்டும். அப்பொழுது காய்கறித் தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதையும், அவற்றின் பரப்பளவு அதிகமாவதையும், கிடைக்கும் பலன்கள் மேம்படுவதையும் காண்பீர்கள். இளங் கம்யூனிஸ்டுக் கழகம் இந்தப் பணியில் மும்முரப் பங்கு கொள்ள வேண்டும். ஒவ்வொரு கழகமும் கழகக் கிளையும் இதைத் தன் கடமையாய்க் கருத வேண்டும்.

இளங் கம்யூனிஸ்டுக் கழகம் முன்னணியில் இருந்து, ஒவ்வொரு வேலைக்கும் துணை புரிய வேண்டும், முன்முயற்சியும் துணிவான பிரயத்தனமும் எடுத்தாக வேண்டும். கழகத்தைச் சேர்ந்தோரது போதனை ஒருவேளை எனக்குப் புரியாமல் இருக்கலாம், அந்தப் போதனையில் உடனடியாய் எனக்கு நம்பிக்கை ஏற்படாமல் இருக்கலாம், ஆனுல் அவர்களுடைய நடைமுறைப் பணியையும் செயற்பாட்டையும் கொண்டு பார்த்தால் உண்மையில் அவர்கள் சரியான பாதையைக் காட்டுகிறவர்கள் என்பதை உணர முடிகிறதென எந்தத் தொழிலாளியும் காணக் கூடியவாறுள்ள நிறுவனமாய் இக் கழகம் இருக்க வேண்டும்.

இளங் கம்யூனிஸ்டுக் கழகம் எல்லாத் துறைகளிலும் தனது வேலையை இவ்வழியில் ஒழுங்கமைத்துக் கொள்ளத் தவறுமானுல், பழைய, முதலாளித்துவப் பாதைக்கு அது சரிந்து பின்னடைகிறது என்றுதான் அதற்கு அர்த்தம். நாம் நமது கல்வியினைச் சுரண்டலாளர்களுக்கு எதிராய் உழைப்பாளி மக்கள் நடத்தும் போராட்டத்துடன் இணைத்துக் கொண்டு, கம்யூனிஸப் போதனை வகுத்தளிக்கும் பணிகளைச்

செய்து முடிக்க உழைப்பாளி மக்களுக்குத் துணை புரிய வேண்டும்.

காய்கறித் தோட்டங்களை அபிவிருத்தி செய்தல், ஏதேனும் ஓர் ஆலையில் இளைஞர்கள், யுவதிகளின் கல்வி போதத்துக்கு ஏற்பாடு செய்தல் முதலான பணிகளுக்காகக் கழக உறுப்பினர்கள் தமக்கு எஞ்சும் ஒவ்வொரு மணி நேரத்தையும் செலவிட வேண்டும். வறுமையால் பீடிக்கப்பட்டு அவல நிலையிலுள்ள நாடாக இருக்கும் ருஷ்யாவைச் செல்வம் கொழிக்கும் நாடாக நாம் மாற்ற விரும்புகிறோம். இளங் கம்யூனிஸ்டுக் கழகம் தன்னைப் பள்ளிக்கூடங்களுக்குள்ளோ, கம்யூனிஸ்டுப் புத்தகங்களையும் பிரசுரங்களையும் படிப்பதிலேயோ கட்டுப்படுத்திக் கொண்டுவிடாமல், தனது கல்வியையும் கற்றறிதலையும் பயிற்சியையும் தொழிலாளர்கள், விவசாயிகளது உழைப்புடன் இணைத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகளுடன் சேர்ந்து வேலை செய்வதன் மூலமே ஒருவர் மெய்யான கம்யூனிஸ்டாக முடியும். இளைஞர் கழகத்தின் எல்லா உறுப்பினர்களும் எழுத்தறிவுள்ளோராகவும் அதே போதில் தத்தமது வேலைத் துறைகளில் முனைப்பு மிக்கோராகவும் இருக்க வேண்டுமென்பது பொதுவாய் யாவராலும் உணரப்பட வேண்டும். பழைய கல்வி முறையிலிருந்து பழைய பட்டாளத்துப் பயிற்சி முறைகளை அகற்றி, அவற்றுக்குப் பதிலாய் உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டை அமைத்துக் கொண்டுவிட்டோம், எல்லா இளம் ஆடவரும் பெண்டிரும் சுபோத்னிக்குகளில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள், நகரங்களுக்கருகே உள்ள பண்ணை ஒவ்வொன்றையும் பயன்படுத்திப் பொது மக்களுக்கு உதவுகின்றனர் என்பதை ஒவ்வொருவரும் காணும் போது, உழைப்பினை மக்கள் பழைய முறையில் கருதுவது மறைந்து போய்விடும்.

எங்கும், கிராமத்திலும் நகரக் குடியிருப்புத் தொகுதியிலும்—சிறியதோர் உதாரணமாய் இதைக் குறிப்பிடுகிறேன்—பொதுச் சுகாதாரம் அல்லது உணவு விநியோகம் போன்ற விவகாரங்களில் துணை புரிய ஏற்பாடு செய்வது இளங் கம்யூனிஸ்டுக் கழகத்துக்குரிய பணியாகும். பழைய, முதலாளித்துவ சமுதாயத்தில் இவையெல்லாம் எப்படிச் செய்யப்பட்டன? ஒவ்வொருவரும் தமக்காக மட்டுமே உழைத்து வந்தார். வயது முதிர்ந்தோரையும் உடல் நலமில்

லாதோரையும் பற்றி யாரும் கவலைப்படவில்லை. வீட்டு வேலைகள் முற்றிலும் பெண்களுக்கே உரித்தானவையாக விடப்பட்டு, இதன் விளைவாய்ப் பெண்கள் ஒடுக்கப்பட்டு அடிமை நிலையில் இருத்தப்பட்டது குறித்து யாரும் கவலைப் படவில்லை. இதை எதிர்த்துப் போராடுவது யாருடைய பணி? இளைஞர் கழகங்களுடைய பணியாகும் இது. நாம் இவற்றையெல்லாம் மாறும்படிச் செய்வோம், பொதுச் சுகாதாரத்தை நிலைநாட்டவும் உணவு வினியோகம் செய்யவும் உதவக்கூடிய இளைஞர் படைகளுக்கு நாம் ஏற்பாடு செய்வோம்; இப்படையினர் வீடு வீடாய்ச் சென்று முறையாய் மேற்பார்வையிடுவர், தமது சக்திகளைச் சரியாய் வகுத்தமைத்தும் உழைப்பை ஒழுங்கமைப்பதன் அவசியத்தை நிரூபித்துக் காட்டித் தெளிவுபடுத்தியும் ஒழுங்கமைந்த முறையில் வேலை செய்து சமுதாயம் அனைத்துக்கும் நலம் பயப்பர் என்று இளைஞர் கழகங்கள் கூற வேண்டும்.

தற்போது ஐம்பது வயதான தலைமுறையைச் சேர்ந்தோர் கம்யூனிஸ சமுதாயத்தைத் தாம் காணலாமென்று எதிர்பார்க்க முடியாது. அதற்கு முன்பே இத்தலைமுறை மறைந்து விடும். ஆனால் இப்பொழுது பதினைந்து வயதினராயுள்ள தலைமுறையினர் கம்யூனிஸ சமுதாயத்தைக் காண்பார்கள், இந்தச் சமுதாயத்தைத் தாமே கட்டியமைப்பர். தம் வாழ்க்கையின் நோக்கமே கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதுதான் என்பதை இத்தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும். பழைய சமுதாயத்தில் ஒவ்வொரு குடும்பமும் தனியே வேலை செய்தது, வெகுஜனங்களை ஒடுக்கி வந்த நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தவிர வேறு யாரும் உழைப்பை ஒழுங்கமைத்திடவில்லை. எவ்வளவுதான் பிரயாசை மிக்கதாகவும் கையைக் கரிப்படுத்துவதாகவும் இருப்பினும் உழைப்பு அனைத்துக்கும் நாம் பின்வரும் முறையில் ஒழுங்கமைப்பு செய்ய வேண்டும்: ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் சுதந்திர உழைப்பின் மாபெரும் சேனையில் நானும் ஒருவன், நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இல்லாமலே என் வாழ்க்கையை என்னால் அமைத்துக் கொள்ள முடியும், கம்யூனிஸ அமைப்பை நிறுவ என்னால் உதவ முடியும் என்று கூறிக் கொள்ள முடியும்படியான முறையில் உழைப்பு அனைத்துக்கும் நாம் ஒழுங்கமைப்பு செய்ய வேண்டும். சிறு

வயது முதலாகவே இளம் மக்கள் அனைவரும் உணர்வுபூர்வமான, கட்டுப்பாடான உழைப்பில் ஈடுபடுவதற்கு இளங் கம்யூனிஸ்டுக் கழகம் அவர்களுக்குக் கற்றுத் தந்தாக வேண்டும். இவ்விதம் செய்தால், இப்பொழுது நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடுமென்று நாம் திட நம்பிக்கை பெறலாம். நாட்டை மின்மயமாக்கக் குறைந்தது பத்தாண்டுகள் தேவையாயிருக்குமெனக் கொள்ளலாம். வளங் குன்றிவிட்ட நமது நிலம் தொழில்நுட்பத்தின் நவநவீன சாதனைகளால் நலம் பெற மின்மயமாக்கம் வகை செய்யும். ஆக இப்பொழுது பதினைந்து வயதாகும் தலைமுறையினர், பத்து அல்லது இருபது ஆண்டுக் காலத்தில் கம்யூனிஸ சமுதாயத்தில் வாழப் போகிற இவர்கள், நாள்தோறும் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் மிகமிகச் சிறியதே, அல்லது எளியதே ஆயினும் பொது உழைப்பு சம்பந்தமான ஏதேனும் ஒரு பிரச்சினைக்கு நடைமுறைத் தீர்வு காண்பதில் ஈடுபடும் வண்ணம் தமது கல்விப் பணிகள் யாவற்றையும் வகுத்தமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வாறு செய்யப்படும் போது, கம்யூனிஸ்டு நேசப் போட்டி இயக்கம் வளர்ந்து செல்லும் போது, இளைஞர்கள் தம்மால் தமது உழைப்பை ஐக்கியப்படுத்திக் கொள்ள முடியுமென நிரூபித்துக் காட்டும் போது, கம்யூனிஸ நிர்மாணத்தின் வெற்றி உறுதியாகிவிடும். உங்களுடைய ஒவ்வொரு முயற்சியையும் இந்த நிர்மாணத்தின் வெற்றியினுடைய கண்ணோட்டத்திலிருந்து கருதுவதன் மூலமும், வர்க்க உணர்வு கொண்ட ஒன்றுபட்ட உழைப்பாளி மக்களாகும் பொருட்டு நம்மால் இயன்றது அனைத்தையும் செய்துள்ளோமா என்று நம்மையே நாம் கேட்டுக் கொள்வதன் மூலமும்தான் இளங் கம்யூனிஸ்டுக் கழகம் தனது ஐந்து லட்சம் உறுப்பினர்களையும் ஒரு உழைப்புச் சேனையாய் ஒன்றுபடச் செய்வதிலும் எல்லோருடைய மதிப்புக்கும் உரியதாவதிலும் வெற்றி பெற முடியும். (கைதட்டு முழக்கம்.)

1920 அக்டோபர் 5, 6, 7ல் வெளி வந்தது

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 298-318

போர்க்குணம் கொண்ட பொருள்முதல் வாதத்தின் முக்கியத்துவம் குறித்து

எனும் கட்டுரையிலிருந்து

...பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா சஞ்சிகையின்[112] ஆசிரியர்கள் இதழ் 1-2ன் அறிமுக உரையில் குறிப்பிட்டிருக்கும் பணியின் உள்ளடக்கத்தையும் திட்டத்தையும் மேலும் துல்லியமாய் வரையறுக்கும் சில பிரச்சினைகள் குறித்து நான் பரிசீலிக்க விரும்புகிறேன்.

பத் ஸ்னமினெம் மார்க்சிஸ்மா சஞ்சிகையை மையமாய்க் கொண்டு ஒன்று சேர்ந்துள்ளவர்கள் எல்லோருமே கம்யூனிஸ்டுகளல்ல, ஆனால் எல்லோருமே முரணற்ற பொருள் முதல்வாதிகள் என்று இந்த அறிமுக உரை கூறுகின்றது. கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளல்லாதோருமாகிய இந்தக் கூட்டணி முற்றிலும் அத்தியாவசியமானது என்றும், இந்த சஞ்சிகையின் நோக்கங்களைச் சரிவர வரையறுப்பதாயுள்ளது என்றும் நினைக்கிறேன். கம்யூனிஸ்டுகள் செய்யக்கூடிய மிகப் பெரிய, மிகவும் அபாயகரமான தவறுகளில் ஒன்று என்னவெனில் (ஒரு பெரிய புரட்சியின் துவக்கத்தை வெற்றிகரமாய் நடத்தி முடிக்கும் புரட்சியாளர்கள் பொதுவாகச் செய்யும் தவறு இது), புரட்சியாளர்கள் மட்டும் சேர்ந்து ஒரு புரட்சியை நடத்திவிட முடியுமெனக் கருதுவதுதான். இதற்கு மாறாய், புரட்சிகரமான எந்த முக்கிய பணியும் வெற்றி பெற வேண்டுமாயின், மெய்யாகவே உயிர் சக்தி கொண்ட முன்னேறிய வர்க்கத்தின் முன்னணிப் படைக்குரிய பங்கை மட்டுமே புரட்சியாளர்களால் ஆற்ற முடியுமென்ற கருத்து புரிந்து கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படுவது அவசியமாகும். முன்னணிப் படையானது தான் தலைமை தாங்கிச் செல்லும் திரளான மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவதை தவிர்த்துக் கொள்ளவும், இந்த முழுத் திரளினருக்

கும் மெய்யாகவே தலைமை தாங்கி இவர்களை முன்னே அழைத்துச் செல்லவும் கூடியதாய் இருக்கையில்தான் அது முன்னணிப் படைக்குரிய பணிகளைச் செய்து முடிக்கிறது. மிகப் பல்வேறுபட்ட செயல் துறைகளிலும், கம்யூனிஸ்டு களல்லாதோருடன் கூட்டணி கொள்ளாமல் கம்யூனிஸக் கட்டுமானப் பணி எதுவும் வெற்றிகரமாய் நடந்தேறுவது சாத்தியமன்று.

பொருள்முதல் வாதத்தையும் மார்க்ஸியத்தையும் பேணிப் பாதுகாப்பதென்று பத் ஸ்ஞமினெம் மார்க்சிஸ்மா மேற்கொண்டிருக்கும் பணிக்கும் இது பொருந்துவதாகும். அதிர்ஷ்டவசமாய் ருஷ்யாவில் முன்னேறிய சமூகச் சிந்தனை யின் பிரதான போக்குகள் உறுதியான பொருள்முதல்வாத மரபினை அடிப்படையாய்க் கொண்டுள்ளவை. கி. வ. பிளெ ஹானவை அன்னியில் செர்னிஷேவ்ஸ்கி ஒருவரை மட்டும் குறிப்பிட்டாலே போதும். நவீன கால நரோத்னிக்குகள் (மக்கள் நேய சோஷலிஸ்டுகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் ஏனையோரும்) அடிக்கடி செர்னிஷேவ்ஸ்கியிட மிருந்து பின்வாங்கிச் சென்றுள்ளனர்; இவர்கள் ஐரோப்பிய விஞ்ஞானத்தின் இறுதி முடிவாய்ச் சொல்லப்படுகின்ற பகட் டான மினுக்கைக் கண்டு மயக்குண்டு, முதலாளி வர்க்கத் துக்கும் முதலாளித்துவத் தப்பெண்ணங்களுக்கும் முத லாளித்துவப் பிற்போக்கிற்கும் ஏதேனும் ஒரு வகையிலான அடிவருடித்தனம் இந்த மினுக்கின் மறைவில் பதுங்கியிருப்ப தைக் கண்டு கொள்ளும் திறனற்றோராய், புதிய பாணியிலா கிய பிற்போக்குத் தத்துவஞானப் போதனைகளைத் தேடிப் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

ஆயினும் எப்படியும் ருஷ்யாவில் கம்யூனிஸ்டுகளல்லா தோரின் முகாமைச் சேர்ந்த பொருள்முதல்வாதிகள் இன்ன மும் இருந்து வருகின்றனர், ஓரளவு நீண்ட காலத்துக்கு இனியும் நிச்சயம் இருந்தே வருவர். தத்துவஞானப் பிற் போக்கையும் ''படித்த சமூகத்தார்'' என்பதாய்ச் சொல்லப் படுவோரின் தத்துவஞானத் தப்பெண்ணங்களையும் எதிர்த்துப் போராடும் கூட்டுப் பணியிலே, முரணற்றதும் போர்க்குணம் கொண்டதும் ஆகிய பொருள்முதல்வாதத்தின் ஆதரவாளர் எல்லோரையும் படைதிரட்டிக் கொள்வது நமது முழுமுதற் கடமையாகும். முதலாளித்துவ நாடுகளில் வெகுவாய் மலிந்து,

இந்நாடுகளின் விஞ்ஞானிகள், கருத்துரை எழுத்தாளர்களின் மதிப்புக்குரியனவாய் இருந்துவரும் தத்துவஞானப் போக்குகளைப் பற்றிய அடிப்படை மார்க்ஸியக் கருத்தோட்டத்தை டித்ஸ்கென் முதியவர்—அவருடைய எழுத்தாளர் மகனுடன், எவ்வளவுக்கு எவ்வளவு அகம்பாவம் கொண்டிருந்தாரோ அவ்வளவுக்கு அவ்வளவு தோல்வியும் கண்டவரான அந்த மகனுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது—பிழையின்றியும் மிகப் பொருத்தமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்; நவீன காலச் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலும் தத்துவ ஞானப் பேராசிரியர்கள் நடைமுறையில் ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே'' ஆவரெனக் கூறினர்.

நமது ருஷ்யப் படிப்பாளர்களுக்கு, ஏனைய எல்லா நாடுகளிலுமுள்ள இவர்களுடைய சோதரர்கள் ஆசைப்படுவது போலவே முன்னேறியவர்களாய்த் தம்மைக் கருதிக் கொள்ள ஆசைப்படும் இவர்களுக்கு, டித்ஸ்கெனுடைய சொற்கள் வெளியிடும் அபிப்பிராயத்தின் நிலைக்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்ல மனம் ஒப்பவில்லை. உண்மையின் நேர் முன்னால் நின்று தலை நிமிர்ந்து அதைப் பார்க்க முடியவில்லை என்பதால்தான் இவர்களுக்கு மனம் ஒப்பவில்லை. ஆதிக்கத்திலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தை நவீன காலப் படித்தச் சமூகத்தார் அரசாங்க வழியிலும், மற்றும் பொதுவாய்ப் பொருளாதார வழியிலும், அன்றாட வாழ்விலும், ஏனைய எல்லா வழிகளிலும் சார்ந்து வாழ வேண்டியிருப்பதைச் சற்றே சிந்தித்துப் பார்த்தால் போதும், சுருக்கெனத் தைக்கும்படி டித்ஸ்கென் கூறிய சொற்கள் முற்றிலும் உண்மையே என்பது தெளிவாய் விளங்கும். ஐரோப்பிய நாடுகளில் இப்படி நாளொரு மேனியாய் உதித்தெழும் புதுப்பாணித் தத்துவஞானப் போக்குகளில், உதாரணமாய் ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டதை ஒட்டி எழுந்தவற்றிலிருந்து தொடங்கி, தற்போது ஐன்ஷ்டைனைப் பற்றிக்கொண்டு தொங்க எத்தனிப்பவை வரையிலான இந்தப் போக்குகளில் மிகப் பெருவாரியானவற்றை நினைவு கூர்ந்தாலே போதும், முதலாளித்துவ வர்க்கத்தின் வர்க்க நலன்களுக்கும் வர்க்க நிலைக்கும், ஒருபுறத்தில் மதத்தின் எல்லா வடிவங்களுக்கும் மறுபுறத்தில் நவநவீன தத்துவஞானப் போக்குகளின் சித்தாந்த உள்ளடக்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கம் அளிக்கும் ஆதர

வுக்கும் இடையிலுள்ள இணைப்பைப் புரிந்து கொண்டு விடலாம்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் பத்திரிகையாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகையானது பிரதானமாய்ப் போர்க்குணம் கொண்ட பத்திரிகையாகவே இருக்க வேண்டுமென்பது, அதாவது தற்காலத்திய "சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகள்" எல்லோரையும்—அதிகார பூர்வமான விஞ்ஞானத்தின் பிரதிநிதிகளாய்ச் செயல்படுவோராயினும் சரி, "ஜனநாயக இடதுசாரி, அல்லது சித்தாந்த வழி சோஷலிஸ்டு" கருத்துரை எழுத்தாளர்களாய்த் தம்மை அழைத்துக் கொள்ளும் அதிகாரபூர்வமல்லாத தன்னிச்சையாளர்களாயினும் சரி இவர்கள் எல்லோரையும்—தயங்காது அம்பலப்படுத்தி இவர்களது உண்மை சொரூபத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென்ற அர்த்தத்தில் போர்க்குணம் கொண்ட பத்திரிகையாகவே இருக்கவேண்டுமென்பது மேற்கூறியதிலிருந்து தெரிய வரும்.

இரண்டாவதாக, இப்படிப்பட்ட ஒரு சஞ்சிகை போர்க்குணம் கொண்ட நாத்திக ஏடாய் இருத்தல் வேண்டும். இந்தப் பணித்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள இலாகாக்கள், அல்லது குறைந்தது அரசு நிறுவனங்கள் நம்மிடம் உள்ளன. ஆனல் இந்தப் பணி அளவு கடந்த அசட்டையோடு, சிறிதும் திருப்தியில்லாதபடி நடைபெற்று வருகிறது; மெய்யான நமது ருஷ்ய (சோவியத்தே ஆயினுங்கூட) அதிகாரவர்க்க முறைகளின் பொது நிலைமைகளால் பீடிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆகவே இந்த அரசு நிலையங்கள் செய்துவரும் பணியுடன் கூடவே, இப்பணியை மேம்படுத்தும் பொருட்டும், இதற்கு உயிர் சக்தி ஊட்டும் பொருட்டும், போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதப் பிரசாரம் புரிய முற்படும் இந்த சஞ்சிகை, அயராத நாத்திகப் பிரசாரமும் அயராத நாத்திகப் போரும் புரிவது மிகவும் அவசியமாகும். இப்பொருள் குறித்து எல்லா மொழிகளிலும் வெளி வரும் எழுத்துக்களைக் கவனமாய்ப் பரிசீலனை செய்து வர வேண்டும்; எவ்விதத்திலும் மதிப்புக்குரியவையாய் இருப்பவற்றை மொழிபெயர்த்திட வேண்டும், அல்லது குறைந்தது இவை குறித்து மதிப்புரைகளாவது எழுத வேண்டும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியினது போர்க் குணம் கொண்ட நாத்திக இலக்கியத்தை மக்களிடையே பெருவீத அளவில் வினியோகித்துப் பரப்புவதற்காக மொழி பெயர்த்திடும்படி நெடுங் காலத்துக்கு முன்பு எங்கெல்ஸ் அக்காலத்தியப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறினார்.[113] இது நாள்வரை நாம் இதைச் செய்தாக வில்லை, நாம் வெட்கித் தலை குனியும் வண்ணம் இதைச் சொல்லியே ஆகவேண்டும்(புரட்சிகர சகாப்தத்தில் ஆட்சியதிகாரம் கைப்பற்றுவது கடினமல்ல, ஆனால் இந்த ஆட்சியதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது எப்படி என்று அறிந்து கொள்வது மெத்தக் கடினம் என்பதற்குரிய எண்ணற்ற நிரூபணங்களில் ஒன்றாகும் இது). நமது அசட்டைக்கும் செயலின்மைக்கும் திறனின்மைக்கும் சால்ஜாப்பு கூறும் பொருட்டு எல்லா வகையான ''உன்னத'' காரணங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன; உதாரணமாய், பதினெட்டாம் நூற்றாண்டின் பழைய நாத்திக இலக்கியம் பழமைப்பட்டுவிட்டது, விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததாகவும் சிறுபிள்ளைத் தனமானதும் ஆகிவிட்டது என்றெல்லாம் காரணம் கூறப்படுகிறது. இத்தகைய போலியான விஞ்ஞானக் குதர்க்கத்தைக் காட்டிலும் மோசமானது எதுவும் இல்லை; பகட்டுப் புலமையை அல்லது மார்க்ஸியத்தைப் பற்றிய அறவே தவறான உணர்வை மூடிமறைக்கவே இந்தக் குதர்க்கம் பயன்படுகிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் புரட்சியாளர்களுடைய நாத்திக நூல்களில் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததும் சிறுபிள்ளைத் தனமானதும் நிறைய இருப்பது மெய்தான். ஆனால் இந்நூல்களின் பதிப்பாளர்கள் இவற்றைச் சுருக்கி வெளியிடுவதையும், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக்குப் பிற்பாடு மதங்களைப் பற்றிய விஞ்ஞான விமர்சனத்தில் மனித குலம் கண்டிருக்கும் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியும், இப் பொருள் குறித்து அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களைக் குறிப்பிட்டும், இன்ன பிற விவரங்களைக் கூறியும் சுருக்கமான பின்னுரைகளை இந்நூல்களுக்கு அளிப்பதையும் யாரும் தடுத்து நிற்கவில்லை. கோடிக் கணக்கான மக்கள் (முக்கியமாய் விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும்), நவீன காலச் சமுதாயம் அனைத்தாலும் இருளிலும் அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் வதையும்படி இருத்

தப்பட்டிருக்கும் இவர்கள் கலப்பற்ற தூய மார்க்ஸிய போதமெனும் நேரான பாதையிலேதான் இந்த இருளி லிருந்து விடுபட்டு வெளியே வர முடியுமென நினைப்பது, மார்க்ஸியவாதி ஒருவர் புரியக்கூடிய மிகப் பெரிய, மிகக் கடுந் தவறாகிவிடும். இந்த வெகுஜனங்களை நாட்டங் கொள் ளும்படிச் செய்வதற்காகவும், மதத்தால் மயக்குண்ட நிலையி லிருந்து இவர்களை விழித்தெழச் செய்வதற்காகவும், மிகப் பல்வேறுபட்ட கோணங்களிலிருந்தும் மிகப் பல்வேறுபட்ட வழிகளிலும் இவர்களை உசுப்பிவிடுவதற்காகவும், இன்ன பிறவற்றுக்காகவும், இவர்களுக்கு நாம் மிகப் பல்வேறுபட்ட நாத்திகப் பிரசார வெளியீடுகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்; வாழ்க்கையின் மிகப் பல்வேறுபட்ட துறைகளி லிருந்துமான உண்மைகளை இவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்; சாத்தியமான எல்லா வழிகளிலும் இவர்களை அணுகியாக வேண்டும்.

பழைய, பதினெட்டாம் நூற்றுண்டு நாத்திகர்களது தீட்சண்யமான, உயிர்த்துடிப்புள்ள, அறிவாற்றல் மிகுந்த இலக்கியங்கள், ஆதிக்கத்திலிருந்த சமய சித்தாந்தத்தைக் கிண்டலும் கேலியுமாகவும், மற்றும் பகிரங்கமாகவும் தாக் கின. மதத்தால் மயக்குண்ட நிலைவிலிருந்து மக்களைத் தட்டி யெழுப்புவதற்கு மிகப் பல சந்தர்ப்பங்களிலும் இவை, மார்க்ஸியத்தின் உப்புச்சப்பில்லாத, சலிப்பூட்டும் பொழிப் புரைகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கூடுதலாய் ஏற்ற வையாய் இருக்கும். திறம்படத் தெரிந்தெடுக்கப்பட்ட உண் மைகளைக் கொண்டமைந்த எடுத்துக்காட்டுகள் வாயிலான விளக்கங்கள் அனேகமாய் எவையுமில்லாத இப்படிப்பட்ட பொழிப்புரைகள்தான் நமது வெளியீடுகளில் மிகவும் மலிந் திருக்கின்றன, இவையும் (இவ்வுண்மையை மறைத்துப் பயனில்லை) அடிக்கடி மார்க்ஸியத்தைத் திரித்துப் புரட்டுவன வாகவே இருக்கின்றன. மார்க்ஸ், எங்கெல்ஸின் பிரதான நூல்கள் யாவற்றின் மொழிபெயர்ப்புகளும் நம்மிடம் இருக் கின்றன; ஆகவே பழைய நாத்திகமும், பழைய பொருள் முதல்வாதமும், மார்க்ஸும் எங்கெல்ஸும் அவற்றில் புகுத் திய திருத்தங்களால் சரிசெய்யப்பட்டுச் செம்மையாக்கப் படாமல் இருந்து விடுமென்று அஞ்சக் காரணம் சிறிதும் இல்லை. மிகவும் முக்கியமானது என்னவெனில், இன்னமும்

வளர்ச்சியின்றி இருந்து வரும் வெகுஜனங்களிடத்தே மதப் பிரச்சினைகள்பால் அறிவு வழிப்பட்ட போக்கினையும், மதங்கள் குறித்து அறிவு வழிப்பட்ட விமர்சனத்தையும் கிளர்த்திவிடத் தெரிந்து கொள்வது தான்—இதைத்தான் நமது கம்யூனிஸ்டுகளில் மார்க்ஸியவாதிகளாய்க் கருதப்படுவோர், ஆனால் உண்மையில் மார்க்ஸியத்தை உருக்குலைப்போராய் இருப்போர் கவனியாது அடிக்கடி புறக்கணித்து விடுகிறார்கள்.

மறுபுறத்தில், மதங்களைப் பற்றிய நவீன விஞ்ஞான விமர்சகர்களைச் சற்று உற்று நோக்குங்கள். கல்வியறிவுடைய இந்த முதலாளித்துவ எழுத்தாளர்கள், மத மூடநம்பிக்கைகளைப் பற்றிய தமது மறுப்புரைகளுடன் கூட, தாம் முதலாளி வர்க்கத்தின் சித்தாந்த அடிமைகளே, "சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே" என்பதை உடனே அம்பலமாக்கிக் காட்டும் வாதங்களையும் அனேகமாய் எப்பொழுதும் "அனுபந்தமாய்ச்" சேர்த்தளிக்கின்றனர்.

இரண்டே இரண்டு எடுத்துக்காட்டுகள். பேராசிரியர் ரோ. யூ. வீப்பர் **கிறித்துவத்தின் தோற்றம்** என்னும் தலைப்பில் ("ஃபரோஸ்" பதிப்பகம், மாஸ்கோ) 1918ல் ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டார். நவீன விஞ்ஞானத்தின் பிரதான விளைவுகளைப் பற்றிய தமது உரையில் இவ்வாசிரியர், மதச் சபையானது ஓர் அரசியல் நிறுவனம் என்ற முறையில் அதற்குரிய ஆயுதங்களாய்க் கொண்டிருக்கும் மூடநம்பிக்கைகளையும் ஏமாற்றையும் எதிர்த்துப் போராடுவதைத் தவிர்த்துக் கொள்வதோடல்லாமல், இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதோடல்லாமல், கருத்துமுதல்வாதம், பொருள் முதல்வாதம் ஆகிய இரு "கடைகோடி நிலைகளுக்கும்" தாம் மேம்பட்டவர் என்பதாய் நகைக்கத்தக்கதான, மிகவும் பிற்போக்கான முறையில் உரிமை கொண்டாடுகிறார். உழைப்பாளி மக்களைக் கசக்கிப் பிழிந்து பெறப்பட்ட லாபங்களிலிருந்து மதத்தின் ஆதரவுக்காக உலகெங்கும் கோடானுகோடியான ரூபிள்களைச் செலவிடும் ஆளும் முதலாளி வர்க்கத்துக்குத் தொண்டூழியம் புரிவதே ஆகும் இது.

பெயர் பெற்ற ஜெர்மன் விஞ்ஞானி ஆர்த்தூர் டிரேவ்ஸ் Die Christusmythe ("கிறிஸ்து கற்பனை") என்னும் தமது புத்த

கத்தில் மத மூடநம்பிக்கைகளுக்கும் புராணக் கதைகளுக்கும் மறுப்பு கூறுகிறார், கிறிஸ்து இருக்கவே இல்லை என்று விளக்குகிறார், அதேபோதில் இப்புத்தகத்தின் முடிவில் மதத்தை ஆதரித்துப் பேசுகின்றார்—ஆனால் இது புத்துரு கொண்ட, சுத்தமாக்கப்பட்ட, நுண்ணயம் வாய்ந்த மதமாயிருக்கும், ''நாளுக்கு நாள் பெருகி வளரும் இயற்கைவாத வெள்ளப் பெருக்கினைச்'' சமாளிக்க வல்லதாய் இருக்கும் என்கிறார் (நான்காவது ஜெர்மன் பதிப்பு, 1910, பக்கம் 238). ஒளிவு மறைவில்லாத, திட்டமிட்டுச் செயல்படுகிற பிற்போக்காளரை, அழுகலாகிவிட்ட பழைய மத மூடநம்பிக்கைகளுக்குப் பதிலாய்ப் புதிய, மேலும் வெறுக்கத்தக்கதான, இழிவான மூடநம்பிக்கைகளை விதைப்பதற்குச் சுரண்டலாளர்களுக்குப் பகிரங்கமாகவே துணை புரிகிறவரை இங்கு நாம் காண்கிறோம்.

டிரேவ்ஸை மொழிபெயர்க்கக் கூடாது என்பதல்ல இதற்கு அர்த்தம். முதலாளி வர்க்கத்தின் முற்போக்குப் பிரிவினருடன் ஓரளவுக்குக் கூட்டணி கொண்டு செயல்படும் அதே போதில் கம்யூனிஸ்டுகளும் முரணற்ற பொருள்முதல்வாதிகள் எல்லோரும் அப்பிரிவினர் பிற்போக்கில் ஈடுபடும் குற்றமிழைக்கும் போது சிறிதும் தயங்காமல் அவர்களை அம்பலம் செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். பதினெட்டாம் நூற்றாண்டின், அதாவது முதலாளி வர்க்கம் புரட்சிகரமானதாய் இருந்த அந்தக் காலத்தின் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளுடன் கூட்டணி கொள்ளாமல் விலகி ஒடுவது மார்க்ஸியத்துக்கும் பொருள்முதல்வாதத்துக்கும் துரோகமிழைப்பதாகும் என்பதே இதன் அர்த்தம்; ஏனெனில், ஏதேனும் ஒரு வடிவில், ஏதேனும் ஓர் அளவுக்கு, டிரேவ்ஸ்களுடன் ''கூட்டணி கொள்வது'', ஆதிக்கம் புரிந்து வரும் மத மௌடீகவாதிகளுக்கு எதிரான நமது போராட்டத்துக்கு அவசியமாகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் ஏடாய்ச் செயல்பட முற்படும் பத் ஸ்னமினெம் மார்க்ஸிஸ்மா, நாத்திகப் பிரசாரத்துக்காகவும், இப்பொருள் பற்றிய வெளியீடுகளின் மதிப்புரைக்காகவும், இத்துறையில் நமது அரசாங்கம் ஆற்றி வரும் பணியிலுள்ள மிகப் பெரும் குறைபாடுகளைத் திருத்துவதற்காகவும் தனது பக்கங்களில் ஒரு

பெரும் பகுதியை ஒதுக்க வேண்டும். இக்காலத்து முதலாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களும் வர்க்க நிறுவனங்களும் மத நிறுவனங்களுடனும் மதப் பிரசார நிறுவனங்களுடனும் எப்படி இணைந்திருக்கின்றன என்பதைக் காட்டும் ஸ்தூலமான பல உண்மைகளும் ஒப்பீடுகளும் அடங்கியுள்ள புத்தகங்களையும் பிரசுரங்களையும் பயன்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

மதத்துக்கும் மூலதனத்துக்கும் அதிகாரபூர்வமான, அரசு வழியிலான இணைப்பு அவ்வளவு வெளிப்படையாய்த் தெரியாத அமெரிக்க ஐக்கிய நாடு பற்றிய எல்லா விவரப் பொருள்களும் மிக மிக முக்கியமானவை. ஆனல் மறுபுறத்தில், ''நவீன ஜனநாயகம்'' எனப்படுவது (மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும், ஓரளவுக்கு அராஜகவாதிகளும், ஏனையோரும் சிறிதும் நியாயமின்றி இதைப் பூஜிக்கின்றனர்), முதலாளி வர்க்கத்துக்கு எதெல்லாம் அனுகூலமாய் இருக்கிறதோ அதை, அதாவது மிகவும் பிற்போக்கான கருத்துக்களையும் மதத்தையும் மௌடீகத்தையும் சுரண்டலாளர்களைப் பேணிக் காப்பதையும் பிறவற்றையும் உபதேசிப்பதற்கான சுதந்திரமே ஆகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாத ஏடாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகை நமது வாசகப் பெரு மக்களுக்கு நாத்திக இலக்கியத்தைப் பற்றிய விமர்சன மதிப்புரைகளை வழங்குமென்றும், குறிப்பிட்ட வெளியீடு எந்த வாசகர் குழுவுக்கு ஏற்றது, எவ்விதத்தில் ஏற்றது என்பதைச் சுட்டிக்காட்டுமென்றும், நாம் வெளியிட்டிருக்கும் புத்தகங்கள் எவை (தகுதியுடைத்த மொழிபெயர்ப்புகள் மட்டும்தான் குறிப்பிடப்பட வேண்டும், இவை அதிகமில்லை), இனி வெளியிடப் போகிறவை எவை என்பதைக் குறிப்பிடுமென்றும் நம்புகிறோம்.

* * *

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதம் ஆற்ற வேண்டிய பணிக்கு, கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்திராத முரணற்ற பொருள்முதல்வாதிகளுடன் கொள்ள வேண்டிய கூட்டணியோடுகூட, இதற்கு எவ்வகையிலும் குறையாத முக்கியத்துவம் வாய்ந்த, ஏன் இதனினும் அதிக முக்கியத்து

வம் வாய்ந்ததென்றுகூட சொல்லத்தக்க மற்றொரு கூட்டணியும் இருக்கின்றது. நவீன இயற்கை விஞ்ஞானிகளில் பொருள்முதல்வாதத்தின் பக்கம் சாய்ந்தோரும், கருத்துமுதல்வாதத்திலும் ஐயுறவுவாதத்திலுமாகிய புதுப் பாணித் தத்துவஞான சஞ்சாரங்களை எதிர்த்து—படித்த சமூகத்தார் என்பதாய்க் கூறப்படுவோரிடையே வெகுவாய் மலிந்திருக்கும் இந்த சஞ்சாரங்களை எதிர்த்து—பொருள்முதல்வாதத்தைக் காக்கவும் பிரசாரம் செய்யவும் அஞ்சாதோரும் ஆகியோருடன் கொள்ளப்படும் கூட்டணி இது.

ஐன்ஷ்டைன் சார்பியல் தத்துவம் குறித்து **பத் ஸ்னாமினெம் மார்க்ஸிஸ்மா** இதழ் 1-2ல் வெளிவந்துள்ள அ. திமிர்யாஸெவின் கட்டுரையானது இந்த இரண்டாவது கூட்டணியை உருவாக்கிக் கொள்வதிலும் இந்த சஞ்சிகை வெற்றி பெறுமென்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. இதில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். நவீன இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்டுவரும் அடிப்படை மாற்றம் பிற்போக்குத் தத்துவஞான மரபுகளையும் சில்லறை மரபுகளையும், போக்குகளையும் சில்லறைப் போக்குகளையும் அடிக்கடி தோற்றுவிக்கிறது. ஆகவே, அண்மைக் காலத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் ஏற்பட்டிருக்கும் புரட்சியால் எழுப்பப்படும் பிரச்சினைகளைக் கூர்ந்து கவனித்துச் சென்றாலொழிய, தத்துவஞான சஞ்சிகையாகிய இந்த சஞ்சிகையின் பணித்துறையில் இயற்கை விஞ்ஞானிகளைக் கவர்ந்து இழுத்துக் கொண்டாலொழிய, போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதம் உண்மையில் போர்க்குணமுடையதாகவோ, பொருள்முதல்வாதமாகவோ இருக்க முடியாது. திமிர்யாஸெவின் கருத்துப்படி பொருள்முதல்வாதத்தின் அடிப்படைகள்மீது ஐன்ஷ்டைன் நேரடித் தாக்குதல் நடத்தாமல் இருக்கையில், எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ அறிவுத்துறையினர் மிகப் பலரும் அதற்குள் துள்ளிக் குதித்து ஐன்ஷ்டைன் தத்துவத்தைப் பற்றிக் கொண்டுவிட்டதாய் இந்த சஞ்சிகையின் முதல் இதழில் திமிர்யாஸெவ் குறிப்பிட வேண்டியதாகியுள்ளது. இப்படி நிகழ்ந்திருப்பது ஐன்ஷ்டைன் சம்பந்தமாய் மட்டுமல்ல, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முதலாய் இயற்கை விஞ்ஞானத்தின் மாபெரும் சீர்திருத்தாளர்களில் பெருவாரியானோர் இல்லையேல், எப்படியும் மிகப் பலர்

சம்பந்தமாகவும் இப்படித்தான் நிகழ்ந்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இப்படிப்பட்ட நிகழ்வு குறித்து நம்முடைய போக்கு அரசியல் உணர்வுடைத்ததாய் இருக்க வேண்டுமாயின், எந்த இயற்கை விஞ்ஞானமும் சரி, எந்தப் பொருள்முதல் வாதமும் சரி, உறுதியான தத்துவஞான அடிநிலையின்மீது காலூன்றி நின்றாலன்றி, முதலாளித்துவக் கருத்துக்களுடைய வெறித்தாக்குதலுக்கும் முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தின் மீட்சிக்கும் எதிரான போராட்டத்தில் அதனால் தனது நிலையைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. இந்தப் போராட்டத்தில் இயற்கை விஞ்ஞானி தமது நிலையைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் இந்தப் போராட்டத்தை வெற்றிகர முடிவுக்கு நடத்திச் செல்லும் பொருட்டும் அவர் நவீனப் பொருள்முதல்வாதியாய், மார்க்ஸைப் பிரதிநிதியாய்க் கொண்ட அந்தப் பொருள்முதல்வாதத்தின் உணர்வு பூர்வமான ஆதரவாளராய் இருந்தாக வேண்டும்; அதாவது, அவர் இயக்கவியல் பொருள்முதல்வாதியாய் இருந்தாக வேண்டும். இந்தக் குறிக்கோள் சித்தி பெறும் பொருட்டு, பத் ஸ்னுமினெம் மார்க்சிஸ்மாவில் எழுதும் ஆசிரியர்கள் ஹெகலின் இயக்கவியலைப் பொருள்முதல்வாத நிலையிலிருந்து முறையாய் ஆய்ந்தறிந்து கொள்ள ஏற்பாடு செய்தாக வேண்டும். ஆதாவது, மார்க்ஸ் தமது மூலதனத்திலும் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய தமது நூல்களிலும் செயல்முறையில் கையாண்ட இயக்கவியலை, கிழக்குலகின் (ஜப்பானிலும் இந்தியாவிலும் சீனாவிலும்) புதிய வர்க்கங்கள்—உலக மக்கள் தொகையின் பெரும் பகுதியான, இதுகாறும் தமது வரலாற்றுச் செயலின்மையாலும் வரலாற்று உறக்கத்தாலும் ஐரோப்பாவின் வளர்ச்சி பெற்ற பல நாடுகளின் தேக்கநிலையையும் சீரழிவையும் நெறிமுறையாக்கி வந்த கோடானு கோடியானோர்—விழிப்புற்று உயிர்த்தெழுந்தும் போராடியும் வரும் இக்காலத்தின் ஒவ்வொரு நாளும், புதிய பல நாடுகளது மக்களும் புதிய வர்க்கங்களும் விழிப்புற்று உயிர்த்தெழும் இக்காலத்தின் ஒவ்வொரு நாளும் மார்க்ஸியத்தை மெய்ப்பித்து உறுதி செய்யும் புதிய நிருபணமாய் அமையும்படி அவ்வளவு வெற்றிகரமாய் மார்க்ஸ் கையாண்ட இந்த இயக்கவியலை முறையாய் ஆய்ந்தறிந்து கொள்ள ஏற்பாடு செய்தாக வேண்டும்.

ஹெகலிய இயக்கவியலை இப்படி ஆய்ந்தறிவதும் விளக்கம் செய்வதும் பிரசாரம் புரிவதும் மிகமிகக் கடினம்தான். இந்தத் திசையிலான முதலாவது முயற்சிகளுடன் பிழைகளும் நிச்சயம் உடன்வரும்தான். ஆனால் ஏதும் செய்யாமலிருப்போரால்தான் பிழைகள் புரியாதிருக்க முடியும். பொருள்முதல்வாத வழியில் புரிந்து கொள்ளப்படும் ஹெகலின் இயக்கவியலைக் கையாளுவதற்குரிய மார்க்ஸின் முறையை நமது அடிப்படையாய்க் கொண்டு, எல்லா அம்சங்களிலும் நாம் இந்த இயக்கவியலை விரித்து விளக்க முடியும், விரித்து விளக்கவும் வேண்டும், ஹெகலின் முக்கிய நூல்களிலிருந்து சிறு பகுதிகளை இந்த சஞ்சிகையில் அச்சிட வேண்டும்; பொருள்முதல்வாத வழியில் இப்பகுதிகளுக்கு விளக்கம் அளித்து, இயக்கவியலை மார்க்ஸ் கையாண்டது பற்றிய உதாரணங்களின் துணை கொண்டும், மற்றும் அண்மைக்கால வரலாறும் முக்கியமாய் ஏகாதிபத்திய யுத்தமும் புரட்சியும் அசாதாரணச் செழுமையுடன் இயக்கவியலுக்குப் பொருளாதார, அரசியல் உறவுகளின் துறையில் மிகுதியாய் அளித்திடும் உதாரணங்களின் துணை கொண்டும் இவை குறித்துக் கருத்துரைக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தில் பத் ஸ்னுமினொம் மார்க்சிஸ்மாவின் ஆசிரியர்களும் கட்டுரையாளர்களும் ஒருவகையில் ''ஹெகலிய இயக்கவியலின் பொருள்முதல்வாத நண்பர்களது கழகமாய்ச்'' செயல்பட வேண்டும். பொருள்முதல்வாத வழியில் விளக்கம் செய்யப்பட்ட ஹெகலின் இயக்கவியலில், நவீன கால இயற்கை விஞ்ஞானிகள் (அவர்களுக்குத் தேடிக் கண்டறிந்து கொள்ளத் தெரிந்திருந்தது, நாமும் அவர்களுக்குத் துணை புரியக் கற்றுக் கொள்வோமாயின்) இயற்கை விஞ்ஞானத்தில் நடைபெறும் புரட்சியால் எழுப்பப்படும் தத்துவஞானப் பிரச்சினைகளுக்கு, முதலாளித்துவ மோஸ்தர்களால் மயக்கப்படும் அறிவுத்துறையினரைப் பிற்போக்கினுள் ''வழுக்கிவிழச்'' செய்யும் இப்பிரச்சினைகளுக்கு, வரிசையாய் விடைகள் இருக்கக் காண்பார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பணியை வகுத்துக் கொண்டு முறையாய் அதை நிறைவேற்றிச் சென்றாலொழிய, பொருள்முதல்வாதம் போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதமாய் இருக்க முடியாது. ஷெத்ரீனுடைய சொற்களில் சொல்வதெனில் அது அவ்வளவாய்ப் போராடி வாகை சூடும் ஒன்றாய்

இல்லாமல், போராடப்பட்டு வீழ்த்தப்படும் ஒன்றுகவே இருக்கும். இப்படி அது பணியாற்றுதவரை, தலைசிறந்த இயற்கை விஞ்ஞானிகள் தமது தத்துவஞான அனுமானங்களையும் பொதுமையாக்கப்பட்ட முடிவுகளையும் வந்தடைவதில் இதுகாறும் அடிக்கடி இருந்துள்ளது போலவே இனியும் திக்கற்றவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் இயற்கை விஞ்ஞானம் அவ்வளவு வேகமாய் முன்னேறிச் செல்கிறது; எல்லாத் துறைகளிலும் அவ்வளவு ஆழ்ந்த புரட்சிகர மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது; அது தத்துவஞான அனுமானங்களின்றி இருக்கலாமென நினைக்க முடியவே முடியாது.

முடிவில் ஓர் உதாரணத்தை எடுத்துரைக்கிறேன். இது தத்துவஞானத்துடன் சம்பந்தப்பட்டதல்ல; ஆனுல் எப்படியும் சமூகப் பிரச்சினைகளைப் பற்றியதுதான். பத் ஸ்னுமினெம் மார்க்சிஸ்மா சமூகப் பிரச்சினைகளிலும் கவனம் செலுத்த விரும்புகிறது.

நவீன காலத்திய போலி விஞ்ஞானம் உண்மையில் படுமோசமான, மிகவும் இழிவான பிற்போக்குக் கருத்தோட்டங்களுக்கான ஒரு சாதனமாய் எப்படிப் பயன்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

''ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தின்'' பதினேராவது இலாகாவினுல் வெளியிடப்படும் எக்கனாமிஸ்ட், முதல் இதழின் (1922) பிரதி அண்மையில் எனக்கு வரப்பெற்றது. இந்த சஞ்சிகையை எனக்கு அனுப்பி வைத்த இளம் கம்யூனிஸ்டு (அதைப் படித்துப் பார்க்க அவருக்கு நேரம் கிடைக்காமல் இருந்திருக்கலாம்) அவசரப்பட்டு அதனுடன் பெருமளவு தாம் உடன்படுவதாய்க் குறிப்பிட்டார். உண்மையில் இந்த சஞ்சிகை நவீன பிரபுத்துவவாதிகளது ஏடாய்ச் செயல்படுகிறது—எந்த அளவுக்குத் தெரிந்து வேண்டுமென்றே இப்படிச் செய்கிறதோ நான் அறியேன். விஞ்ஞானம், ஜனநாயகம் இத்தியாதியான வேடங்களின் மறைவில் இவ்வேலையைச் செய்கிறது.

திரு. பி. அ. ஸரோக்கின் என்ற ஒருவர் ''யுத்தத்தால் ஏற்பட்ட விளைவு'' குறித்து, ''சமூகவியல்'' பரிசீலனை என்பதாய்க் கூறிக் கொண்டு இந்த சஞ்சிகையில் விரிவான ஆய்வுரை வெளியிட்டிருக்கிருர். புலமை வாய்ந்த இந்தக் கட்டு

ரையில், இந்த ஆசிரியரும் வெளிநாடுகளிலுள்ள இவருடைய எண்ணற்ற போதனாசிரியர்களும் சகஆய்வாளர்களும் எழுதிய ''சமூகவியல்'' நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட புலமை வாய்ந்த மேற்கோள்கள் நிறைய இருக்கின்றன. இவருடைய புலமைக்கு இதோ ஓர் உதாரணம்:

பக்கம் 83ல் படிக்கிறேன்:

''பெத்ரொகிராதில் தற்போது நடைபெறும் திருமணங்களில் ஒவ்வொரு 10,000லும் திருமண ரத்துக்களின் எண்ணிக்கை 92.2—நம்ப முடியாத பெரிய எண்ணிக்கை இது. ரத்து செய்யப்படும் ஒவ்வொரு 100 திருமணங்களிலும் 51.1 ஓராண்டுக்குக் குறைவாய் நீடித்தவை, 11 சதவீதமானவை ஒரு மாதத்துக்குக் குறைவாகவும், 22 சதவீதமானவை இரண்டு மாதங்களுக்குக் குறைவாகவும், 41 சதவீதமானவை மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்குக் குறைவாகவும் நீடித்தவை. 26 சதவீதமானவையே ஆறு மாதங்களுக்கு மேல் நீடித்தவை. தற்காலத்திய சட்டபூர்வமான திருமண நடைமுறையில் தாம்பத்தியத்துக்குப் புறம்பான பாலுறவை மூடி மறைக்கும் ஒரு வடிவமாய் அமைந்து, 'பழம் தேடியலையும்' காதலர்கள் 'சட்டபூர்வமான' வழியில் தம் பசியைத் தீர்த்துக் கொள்ள வகை செய்கிறது என்பதைத்தான் இப்புள்ளிகள் காட்டுகின்றன.'' (எக்கனமீஸ்ட், இதழ் 1, பக்கம் 83).

இந்தக் கனவானும் இந்த சஞ்சிகையை வெளியிட்டு இம்மாதிரியான பேச்சுக்களுக்கு இதில் இடம் தரும் ருஷ்யத் தொழில்நுட்பக் கழகத்தாரும் நிச்சயம் தம்மை ஜனநாயகத்தைப் பற்றியொழுகுவோராகவே கருதிக் கொள்வார்கள்; உண்மையில் இவர்களுக்கு உரிய பெயரைக் கொண்டு அழைத்தோமாயின், அதாவது பிரபுத்துவவாதிகள், பிற்போக்காளர்கள், ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகள்'' என்று கூறுவோமாயின், தாம் பெரிதும் அவமதிக்கப்படுவதாகவே கருதிக் கொள்வார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் திருமணம் குறித்தும், திருமண ரத்து குறித்தும், திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகள் குறித்தும் நடப்பிலுள்ள சட்டங்களையும், இத்துறையில் உண்மையில் அங்குள்ள நிலவரங்களையும் பற்றி சொற்ப அளவு ஞானம் இருந்தாலே போதும், இந்த விவகாரத்தில் கருத்துடைய எவரும் நவீன முதலாளித்துவ ஜனநாயகம், மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக்

குடியரசுகளில் இருப்பதுங்கூட, இத்துறையிலே பெண்கள் குறித்தும் திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகள் குறித்தும் மெய்யாகவே பிரபுத்துவ போக்கு கொண்டிருப்பதைக் கண்டு கொண்டுவிடலாம்.

இந்த நிலைமை மென்ஷிவிக்குகளையும், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரையும், அராஜகவாதிகளில் ஒரு பகுதியோரையும், மேலைய நாடுகளில் இவர்களை ஒத்தவையாயுள்ள எல்லா கட்சிகளையும், ஜனநாயகம் என்பதாகவும் போல்ஷிவிக்குகள் இதைக் குலைக்கிறுர்கள் என்பதாகவும் கூச்சல் போடாதபடி தடுத்துவிடவில்லைதான். ஆனல் உண்மை என்னவெனில், போல்ஷிவிக் புரட்சி ஒன்று மட்டும் தான் திருமணம், திருமண ரத்து, திருமணத்துக்குப் புறத்தே பிறந்த குழந்தைகளின் நிலை ஆகியவை போன்ற பிரச்சினைகளில் முரணில்லாத ஜனநாயகப் புரட்சியாய் நடந்தேறியிருக்கிறது. எந்த நாட்டிலும் மக்களில் பாதிக்கு மேற்பட்டோரது நலன்களுடன் மிகவும் நேரடியாய்ச் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை இது. போல்ஷிவிக் புரட்சிக்கு முன்பு மிகப் பல புரட்சிகள் நடைபெற்றிருப்பினும், இவை தம்மை ஜனநாயகப் புரட்சிகளாய் அழைத்துக் கொண்டன என்ற போதிலும், போல்ஷிவிக் புரட்சிதான் இத்துறையில் பிற்போக்கையும் பிரபுத்துவத்தையும் மற்றும் சொத்துடைத்த ஆளும் வர்க்கங்களது வழக்கமான கபடத்தையும் எதிர்த்து உறுதி வாய்ந்த போராட்டம் நடத்தியுள்ள முதலாவது புரட்சியும், ஒரே புரட்சியும் ஆகும்.

10,000 திருமணங்களில் 92 திருமண ரத்துக்கள் என்பது, திரு. ஸரோக்கினுக்கு நம்ப முடியாத பெரிய எண்ணிக்கையாய்த் தோன்றினல், வாழ்க்கையிலிருந்து அறவே துண்டித்து ஒதுக்கி வைக்கப்பட்ட துறவி மடத்தில்—அப்படி ஒரு துறவி மடம் இருக்க முடியுமென யாராலும் நம்ப முடியாதபடி அந்த அளவுக்கு அறவே துண்டித்து ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்றில்—வளர்ந்து ஆளாகி அங்கேயே வசித்து வருகிறவராகவே இந்த ஆசிரியர் இருக்க வேண்டும்; அல்லது பிற்போக்கின் நலத்தையும் முதலாளி வர்க்கத்தின் நலத்தையும் உத்தேசித்து இவர் உண்மையைத் திரித்துப் புரட்டுகிறுர் என்றுதான் கொள்ள வேண்டும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள சமூக நிலைமைகளைச் சிறிதளவேனும் அறிந்தவர்

எவரும், இந்நாடுகளில் எல்லாம் உண்மையில் நடைபெறும் திருமண ரத்துக்களின் மெய்யான எண்ணிக்கை (இந்தத் திருமண ரத்துக்கள் மதச் சபையாலும் சட்டத்தாலும் அங்கீகரிக்கப்படாதவை என்பதைக் கூறத் தேவையில்லை) கணக்கின்றி மிகவும் அதிகமாகும் என்பதை நன்கறிவார். இத்துறையில் ருஷ்யாவுக்கும் பிற நாடுகளுக்குமுள்ள ஒரே வித்தியாசம் என்னவென்ருல், நமது சட்டங்கள் கபடத்தையும், பெண்ணும் பெண்ணின் குழந்தையும் இழிவு செய்யப்படுவதையும் புனிதமாக்குவதில்லை; அதற்கு மாருய் எல்லா வகையான கபடத்தின் மீதும் இழிவு செய்தலின் மீதும் பகிரங்கமாகவும் அரசாட்சியின் பெயரிலும் முறையான போர்ப் பிரகடனம் செய்கின்றன.

மார்க்ஸிய சஞ்சிகை ''படித்தறிந்த'' இந்த நவீன பிரபுத்துவவாதிகளையும் எதிர்த்துப் போராடியாக வேண்டும். இவர்களில் பலர் அரசாங்கப் பணம் பெறுகின்றவர்களாகவே இருப்பார்கள்; வக்கரித்துப் போனவர்களாய்ப் பெயரெடுத்தவர்கள் வளரும் தலைமுறையினரது கல்வி நிலையங்களுடைய மேலாளர்களாய் இருக்க எப்படித் தகுதியற்றவர்களோ அதே போல சிறிதும் தகுதியற்ருேராகிய இவர்கள் நமது இளந் தலைமுறையினருக்குக் கல்வி போதகர்களாய் நமது அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை வென்று கொண்டுவிட்டது. ஆனல் இந்த ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்த இன்னும் அது கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொண்டிருந்தால், நெடுங்காலத்துக்கு முன்பே அது இத்தகைய போதனுசிரியர்களையும் புலமை படைத்த கழகங்களது உறுப்பினர்களையும் முதலாளித்துவ ''ஜனநாயகத்தைக்'' கொண்ட நாடுகளுக்குப் பணிவன்புடன் அனுப்பி வைத்திருக்கும். இப்படிப்பட்ட பிரபுத்துவவாதிகளுக்கு அவையே ஏற்ற இடமாகும்.

ஆயினும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற திடச்சித்தம் இருக்குமாயின் நிச்சயம் அது கற்றுக் கொண்டுவிடும்.

1922 மார்ச் 12ல்
எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 23-33

பதிப்பாளர் குறிப்புகள்

1 லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும் என்ற ஃபி. எங்கெல்ஸின் நூல், அத்தியாயம் 1ஐப் பார்க்க. பக்கம் 7

2 கிரனுட் கலைக்களஞ்சியத்துக்காக 1914ம் ஆண்டில் எழுதப் பட்ட இந்தக் கட்டுரையின் இறுதியில் வி. இ. லெனின் மார்க்ஸிய நூல்களையும் மார்க்ஸியம் பற்றிய நூல்களை யும் குறித்த பார்வையீடு ஒன்று சேர்த்திருந்தார். இந்தப் பதிப்பில் அது விடப்பட்டது. பக்கம் 8

3 மோசெல் நிருபரின் செயலுக்குச் சமாதானம் என்ற கா. மார்க்ஸின் கட்டுரை இங்கே குறிக்கப்படுகிறது.

பக்கம் 8

4 கா. மார்க்ஸ் எழுதிய சட்டம் பற்றிய ஹெகலியத் தத்துவ ஞானத்துக்கு விமர்சனம். முகவுரை. பக்கம் 9

5 கம்யூனிஸ்டுச் சங்கம்—புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது சர்வதேச நிறுவனம். 1847ல் லண்டனில் அது நிறுவப்பட்டது. மார்க்ஸும் எங்கெல்ஸும் ''கம்யூ னிஸ்டுச் சங்கத்தை'' நிறுவி அதன் தலைவர்களாக இருந்தனர், அதன் சார்பில் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை யை எழுதினர். முதலாளி வர்க்கத்தை வீழ்த்துவது, வர்க்கப் பகைமையின் அடித்தளத்தின் மீது அமைந் துள்ள பழைய முதலாளித்துவச் சமுதாயத்தைத் தகர்த்து அதன் இடத்தில் புதிய, வர்க்கங்கள் இல்லாத,

தனிச்சொத்துடைமை இல்லாத சமுதாயத்தை ஏற்படுத்துவது ஆகியவற்றைக் ''கம்யூனிஸ்டுச் சங்கம்'' தனது இலட்சியமாக முன்வைத்தது. பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களின் பள்ளி என்ற முறையிலும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் மூலக்கரு என்ற முறையிலும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் (முதலாவது அகிலத்தின்) முன்னோடி என்ற முறையிலும் அது முக்கியமான வரலாற்றுப் பாத்திரத்தை வகித்துள்ளது. ''கம்யூனிஸ்டுச் சங்கம்'' 1852 நவம்பர் வரை இயங்கி வந்தது.
பக்கம் 9

6 1848 பிப்ரவரியில் பிரான்ஸில் நடந்த முதலாளித்துவப் புரட்சி இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 10

7 ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் 1848ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கிய முதலாளித்துவப் புரட்சி இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 10

8 இங்கே குறிக்கப்படுவது பாரிஸில் நடந்த பொதுஜன ஆர்ப்பாட்டம். 1848ம் ஆண்டுப் புரட்சியால் நிலைநாட்டப்பட்ட அரசியல் சட்ட முறைகள் குடியரசுத் தலைவராலும் சட்ட சபையின் பெரும்பான்மையாலும் மீறப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டுச் சிறு முதலாளித்துவக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தை அரசாங்கம் கலைத்துவிட்டது.
பக்கம் 10

9 கார்ல் மார்க்ஸ், ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ், இருவரிடையே நடந்த கடிதப் போக்குவரத்து 1913 செப்டெம்பரில் *Der Briefwechsel zwischen Friedrich Engels und Karl Marx 1844 bis 1883, herausgegeben von A. Bebel und Ed. Bernstein.* Vier Bände. Stuttgart, 1913 என்ற தலைப்புடன் நான்கு தொகுதிகளாக ஜெர்மனியில் பிரசுரிக்கப்பட்டது. இதையே லெனின் குறிக்கிறார். பக்கம் 10

10 **கார்ல் மார்க்ஸ் எழுதிய திருவாளர் ஃபோக்ட்** என்ற பிரசுரத்தை லெனின் குறிக்கிறார். போனப்பார்த்தின் கையாளான கா. ஃபோக்ட் வெளியிட்ட *Allgemeine Zeitung* **குக்கு எதிராக எனது வழக்கு** என்ற அவதூறு நிறைந்த பிரசுரத்துக்கு மறுப்பாகும் மார்க்ஸின் பிரசுரம்.
பக்கம் 11

11 **சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் துவக்க அறிக்கை** இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 11

12 **பாரிஸ் கம்யூன்**—1871ம் ஆண்டில் நடந்த எழுச்சியின் விளைவாகப் பாரிஸ் நகரத் தொழிலாளர்களால் நிறுவப் பட்ட தொழிலாளி வர்க்க அரசாங்கம். மார்ச்சு 18 முதல் மே 28 வரை, 72 நாட்கள் அது நீடித்தது. பாரிஸ் கம்யூன் மதத்தை அரசிலிருந்தும் பள்ளிக்கூடத்தை மதத்திலிருந்தும் பிரித்தது. நிரந்தர இராணுவத்திற் குப் பதிலாக மக்கள் அனைவரையும் ஆயுதமேந்திகளாக ஆக்கியது. நீதிபதிகளும் அரசாங்க அதிகாரிகளும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று விதித்தது. அரசாங்க அதிகாரிகளின் சம்பளம் தொழி லாளர்களின் சம்பளத்தைவிட அதிகமாக இருக்கக்கூடாது என்று விதித்தது. தொழிலாளர்கள், நகர ஏழை மக்கள் ஆகியோரின் நிலையை மேம்படுத்துவதற்குப் பல நட வடிக்கைகளை மேற்கொண்டது. இவ்வாறே வேறு பல செயல்கள் புரிந்தது. 1871ம் ஆண்டு, மே 21ந் தேதி தியேரின் புரட்சி-எதிர்ப்பு அரசாங்கப் படையினர் பாரிஸ் நகரத்துக்குள் பாய்ந்தோடி பாரிஸ் தொழிலாளர்களை ஈவிரக்கமின்றித் தாக்கினர். சுமார் 30,000 பேர் கொல்லப்பட்டனர், 50,000 பேர் கைது செய்யப்பட்ட னர். ஆயிரக்கணக்கானவர்கள் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டனர். பக்கம் 12

13 **பக்கூனின்வாதம்**—மி. அ. பக்கூனின் என்பவரது பெயரால் அழைக்கப்பட்ட போக்கு. பக்கூனின் அராஜகவாதத்தின் கொள்கைவாதி, மார்க்ஸியத்துக்கும் விஞ்ஞான சோஷ

லிஸத்துக்கும் கடும் பகைவர். பக்கூனின்வாதிகள் தொழிலாளர் இயக்கத்தின் மார்க்ஸியத் தத்துவத்துக்கும் போர்த்தந்திரத்துக்கும் எதிராக விடாப்பிடியான போராட்டம் நடத்தினார்கள். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் உள்ளிட்ட எல்லா வகை அரசையும் மறுப்பதும் பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாமையும் பக்கூனின்வாதத்தின் அடிப்படைக் கருத்தாக விளங்கியது. பக்கூனின்வாதிகளின் எண்ணப்படி மக்களின் கலகக் கிளர்ச்சிகள் ஒரே சொடுக்கில் நிகழ்ந்து முடிகின்றன; ''தலைசிறந்த'' நபர்களைக் கொண்ட இரகசியப் புரட்சிச் சங்கம் இந்தக் கலகக் கிளர்ச்சிகளுக்குத் தலைமை வகித்து நடத்த வேண்டும். சதிகளும் திடீர்க் கலகக் கிளர்ச்சிகளும் பயங்கரவாதமும் கொண்ட அவர்களது போர்த்தந்திரம் குருட்டுச் சாகசம் நிறைந்ததாகவும் எழுச்சிகள் பற்றிய மார்க்ஸியப் போதனைக்கு எதிராகவும் இருந்தது. நிலை குலைந்த சிறு உடைமையாளர்களின் கொள்கைவாதத்தைப் பிரதிபலித்த சிறு முதலாளித்துவப் போக்கான புரூதோனியத்துக்கு நெருங்கியதாயிருந்தது பக்கூனின் வாதம்.

முதலாவது அகிலத்தின் ஜெனரல் கவுன்சிலைக் கைப்பற்றுவதைக் குறிக்கோளாக வைத்துக் கொண்டு பக்கூனின் மார்க்ஸுக்கு எதிராக எல்லா வகைச் சாதனங்களையும் பயன்படுத்திப் போராட்டம் நடத்தினார். அராஜகவாதத் தலைவர்களான பக்கூனின், கிலியோம் இருவரும் அகிலத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளுக்காக, 1872ம் ஆண்டில் ஹேக் நகரில் நடந்த பேராயத்தில், முதலாவது அகிலத்திலிருந்து விலக்கப்பட்டார்கள். பக்கூனின்வாதிகளின் தத்துவமும் போர்த்தந்திரமும் கார்ல் மார்க்ஸ், ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் இருவராலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டன. பக்கம் 12

14 சர்வதேசத் தொழிலார் சங்கம் (முதலாவது அகிலம்)— பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது சர்வதேச நிறுவனம் (1864-1876). முதலாவது அகிலத்தின் மூலவராகவும்

தலைவராகவும் கார்ல் மார்க்ஸ் இருந்தார்; அதன் துவக்க அறிக்கையையும் விதிகளையும் மற்ற வேலைத்திட்டம், போர்த்தந்திரம் பற்றிய தஸ்தாவேஜுகளையும் எழுதினர். முதலாவது அகிலம் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பொருளாதார, அரசியல் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியது, அவர்களிடையே சர்வதேச ஒற்றுமையை உறுதிப்படுத்தியது. மார்க்ஸியத்தைப் பரப்புவதிலும், சோஷலிஸத்தைத் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைப்பதிலும் அகிலம் முக்கியமான பாத்திரம் வகித்தது. பக்கம் 12

15 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய லுத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் என்ற நூலைப் பார்க்க (அத்தியாயம் 2). பக்கம் 16

16 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய டூரிங்குக்கு மறுப்பு (அத்தியாயம் 11; மூன்று பதிப்புகளுக்கு முகவுரைகள்; 1. பொதுக் குறிப்புகள்). பக்கம் 19

17 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய லுத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் (அத்தியாயம் 4, அத்தியாயம் 1). பக்கம் 20

18 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய டூரிங்குக்கு மறுப்பு (அத்தியாயம் 1, பொதுக் குறிப்புகள்). பக்கம் 20

19 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய லுத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் (அத்தியாயம் 2). பக்கம் 21

20 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 13, இயந்திரங்களும் பெருமளவான இயந்திரத் தொழிலும். 1. இயந்திரங்களின் வளர்ச்சி). பக்கம் 22

21 பிரான்ஸின் வரலாற்றில் 1814 முதல் 1830 வரையுள்ள காலப்பகுதி. 1792ல் பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியால் கவிழ்க்கப்பட்ட பூர்போன் அரசவம்சம் இந்தக் காலப்பகுதியில் மறுபடியும் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட்டது. ஆட்சி அதிகாரம் இந்த அரசவம்சத்தின் கையில் இருந்தது. பக்கம் 27

22 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 1—பண்டம். 4. பண்டவகை மூட வழிபாடும் அதன் மர்மமும்). பக்கம் 31

23 கார்ல் மார்க்ஸ் எழுதிய அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்குச் செலுத்தும் ஒரு பங்கு. (அத்தியாயம் 1. பண்டம்). பக்கம் 31

24 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 4. பணம் மூலதனமாக மாறுதல். 3. உழைப்புச் சக்தி வாங்கவும் விற்கவும் படுதல்). பக்கம் 32

25 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 4. பணம் மூலதனமாக மாறுதல். 3. உழைப்புச் சக்தி வாங்கவும் விற்கவும் படுதல்). பக்கம் 33

26 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 4. துவக்கக்காலத் திரட்டல் எனப்படுவது. 7. முதலாளித்துவ வழிப்பட்ட திரட்டலின் வரலாற்று ரீதியான போக்கு). பக்கம் 39

27 இறுதிநிலைப் பயன்பாட்டுத் தத்துவம்—ஆஸ்திரியக் கருத்துப் பிரிவினர் என்பவர்கள் முன்வைத்த விஞ்ஞானக் கேடான பொருளாதாரத் தத்துவம். உழைப்பின் அளவைக் கொண்டு பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் மார்க்ஸின் தத்துவத்துக்கு எதிராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உதித்தது இது. இந்தத் தத்து

வப்படி மதிப்பின் தோற்றுவாய் இதன் பயன்பாடுதான், உழைப்பு அல்ல. இங்கு நிர்ணயமான முக்கியத்துவம் உடையது கடைசி அலகின் பயன்பாடே ஆகும். (ஒரு உடைமையாளரிடம் பத்து ரொட்டித் துண்டுகள் இருந்தால், இது பத்தாவது துண்டின் பயன்பாடு ஆகும்.) ''இறுதிநிலைப் பயன்பாடு'' மனிதனின் உடனடியாயில்லாத தேவைகளை நிறைவேற்றுகிறது. முதலாளித்துவ அமைப்பில் உழைப்புச் சக்தி சுரண்டப்படுவதை மூடி மறைக்கும் சாதனங்களில் ஒன்று என்ற வகையில் ''இறுதிநிலைப் பயன்பாடு'' பற்றிய தத்துவம் முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தில் விரிவாக வழங்கி வருகிறது. பக்கம் 39

28 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 3 (அத்தியாயம் 47. முதலாளித்துவ நில வாடகையின் தோற்றமுறை. 4. பண வாடகை). பக்கம் 45

29 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 24. துவக்கக்காலத் திரட்டல் எனப்படுவது. 5. இயந்திரத் தொழில்மீது விவசாயப் புரட்சியின் எதிர் விளைவு). பக்கம் 45

30 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1 (அத்தியாயம் 23. முதலாளித்துவ வழிப்பட்ட திரட்டலின் பொது விதி. 4. சார்புநிலை மிகை மக்கள் தொகைப் பெருக்கு நிலவுவதன் வெவ்வேறு வடிவங்கள்). பக்கம் 45

31 கார்ல் மார்க்ஸ் எழுதிய 1848 முதல் 1850 வரையிலான பிரான்ஸில் வர்க்கப் போராட்டம் (3. 1849 ஜூன் 13ன் பின்விளைவுகள்). பக்கம் 46

32 கார்ல் மார்க்ஸ் எழுதிய லூயி போனப்பார்த்தின் பதினெட்டாவது புரூமேர் (அத்தியாயம் 7). பக்கம் 46

33 கார்ல் மார்க்ஸ் எழுதிய **1848 முதல் 1850 வரையிலான பிரான்ஸில் வர்க்கப் போராட்டம்** *(3. 1849 ஜூன் 13ன் பின்விளைவுகள்).* *பக்கம் 46*

34 கார்ல் மார்க்ஸ் எழுதிய **மூலதனம், தொகுதி 3** *(அத்தியாயம் 47. முதலாளித்துவ நில வாடகையின் தோற்ற முறை. 5. வாரச் சாகுபடிப் பண்ணையும் விவசாயியின் சிறு நில உடைமையும்).* *பக்கம் 47*

35 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய **பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் விவசாயப் பிரச்சினை** *(அத்தியாயம் 2).* *பக்கம் 53*

36 *1863 ஏப்ரல் 9ந் தேதி கா. மார்க்ஸ் ஃபி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 55*

37 *1851 பிப்ரவரி 5ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 56*

38 *1857 டிசெம்பர் 17ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 56*

39 *1858 அக்டோபர் 7ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 57*

40 *1863 ஏப்ரல் 8ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 57*

41 *1863 ஏப்ரல் 9ந் தேதி கா. மார்க்ஸ் ஃபி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 57*

42 *1866 ஏப்ரல் 2ந் தேதி கா. மார்க்ஸ் ஃபி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 57*

43 *1869 நவம்பர் 19ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.* பக்கம் 57

44 *1881 ஆகஸ்டு 11ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.* பக்கம் 57

45 *1815ம் ஆண்டு முதல் ஆஸ்திரியா, பிரஷ்யா, ருஷ்யா, இவற்றின் கூட்டுக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்த கிராக்கவ் குடியரசில் நடந்த தேசிய விடுதலை ஜனநாயக எழுச்சி இங்கே குறிக்கப்படுகிறது. எழுச்சியின் போது கிளர்ச்சிக்காரர்கள் தேசிய அரசாங்கத்தை நிறுவினர்கள். இந்த அரசாங்கம், நிலப்பிரபுத்துவக் கட்டாயத் தொண்டு முறையை ரத்து செய்துவிட்டதாகவும் விவசாயிகளுக்கு ஈடு இன்றி நில உடைமை வழங்கியிருப்பதாகவும் ஓர் அறிக்கை வெளியிட்டது. தேசியத் தொழிற்கூடங்கள் நிறுவுவது பற்றியும் அவற்றில் சம்பள உயர்வு பற்றியும் குடிமக்களின் சமத்துவத்தை நிலைநாட்டுவது பற்றியும் வேறு அறிக்கைகளில் அது பிரகடனம் செய்தது. என்றபோதிலும் விரைவில் எழுச்சி ஒடுக்கப்பட்டுவிட்டது.* பக்கம் 58

46 கார்ல் மார்க்ஸ் எழுதிய முதலாளி வர்க்கமும் புரட்சி எதிர்ப்பும் *(அத்தியாயம் 2).* பக்கம் 58

47 *1856 ஏப்ரல் 16ந் தேதி கா. மார்க்ஸ் ஃபி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.* பக்கம் 59

48 *1865 ஜனவரி 27ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.* பக்கம் 59

49 *1865 பிப்ரவரி 5ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க.* பக்கம் 60

50 *1863 ஜூன் 11, 1863 நவம்பர் 24, 1864 செப்டெம்பர் 4, 1865 ஜனவரி 27, 1867 அக்டோபர் 22, 1867 டிசெம்*

பர் 6 தேதிகளில் ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதங்களையும், 1863 ஜூன் 12, 1864 டிசெம்பர் 10, 1865 பிப்ரவரி 3, 1867 டிசெம்பர் 17 தேதிகளில் கா. மார்க்ஸ் ஃபி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதங்களையும் பார்க்க. பக்கம் 60

51 1871 ஏப்ரல் 12ந் தேதி கா. மார்க்ஸ் குகல்மனுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 60

52 சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம், 1878ம் ஆண்டில் பிஸ்மார்க் அரசாங்கத்தால் ஜெர்மனியில் செய்யப்பட்டது. தொழிலாளர், சோஷலிஸ இயக்கத்தை ஒடுக்குவதே இதன் நோக்கம். இந்தச் சட்டத்தின் பேரால் சமூக-ஜனநாயகக் கட்சியின் எல்லா நிறுவனங்களும் வெகுஜனத் தொழிலாளர் நிறுவனங்களும் தொழிலாளர் பத்திரிகைகளும் மூடப்பட்டன, சோஷலிஸ நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சமூக-ஜனநாயகவாதிகள் தொல்லைப் படுத்தப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர். இடைவிடாது தீவிரமடைந்து வந்த வெகுஜனத் தொழிலாளர் இயக்கத்தின் வற்புறுத்தலின் விளைவாக சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் 1890ம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது. பக்கம் 61

53 1877 ஜூலை 23, 1877 ஆகஸ்டு 1, 1879 செப்டெம்பர் 10 தேதிகளில் கா. மார்க்ஸ். ஃபி. எங்கெல்ஸுக்கு எழுதிய கடிதங்களையும், 1879 ஆகஸ்டு 20, 1879 செப்டெம்பர் 9 தேதிகளில் ஃபி. எங்கெல்ஸ் கா. மார்க்ஸுக்கு எழுதிய கடிதங்களையும் பார்க்க. பக்கம் 61

54 ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் என்ற கட்டுரைக்குத் தலைக்குறிப்பாக வி. இ. லெனின் கொடுத்திருக்கும் சொற்கள் ருஷ்யக் கவிஞர் நிக்கலாய் அலெக்ஸேயெவிச் நெக்ராஸவின் தோப்ரலியூபவின் நினைவு என்ற கவிதையிலிருந்து எடுக்கப்பட்டவை. பக்கம் 62

55 ஃபிரீட்ரிஷ் எங்கெல்ஸ் எழுதிய ஜெர்மனியில் விவசாயிகளின் போர் என்பதன் முன்னுரை. பக்கம் 66

56 அரசியல் பொருளாதாரம் பற்றிய விமர்சனவுரைக்கு ஒரு நகல் என்ற ஃபி. எங்கெல்ஸின் கட்டுரை இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 70

57 டூரிங்குக்கு மறுப்பு. திருவாளர் ஒய்கேன் டூரிங் அவர்கள் விஞ்ஞானத்தில் நிகழ்த்திய கவிழ்ப்பு என்ற ஃபி. எங்கெல்ஸின் நூல் இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 72

58 கற்பனவாத சோஷலிஸமும் விஞ்ஞான சோஷலிஸமும் என்ற ஃபி. எங்கெல்ஸின் நூல் ருஷ்ய மொழியில் இந்தத் தலைப்புடன்தான் 1892ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஃபி. எங்கெல்ஸின் டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலின் மூன்று அத்தியாயங்கள் இந்த நூலின் அடிப்படையாக இருந்தன. பக்கம் 72

59 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய லூத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும். பக்கம் 72

60 ஃபி. எங்கெல்ஸின் ருஷ்ய ஜாராட்சியின் வெளிநாட்டுக் கொள்கை என்ற கட்டுரையை வி. இ. லெனின் இங்கே குறிப்பிடுகிறார். இந்தக் கட்டுரை சோத்ஸியல்-தெமொக்ராத்தின் முதல் இரண்டு இதழ்களில் வெளியாயிற்று.

சோத்ஸியல்-தெமொக்ராத் — இலக்கிய-அரசியல் பார்வையீட்டுச் சஞ்சிகை. ''உழைப்பு விடுதலைக்'' குழுவினரால் இது வெளிநாடுகளில் (லண்டன்-ஜினீவா) 1890-1892ம் ஆண்டுகளில் பிரசுரிக்கப்பட்டது. மார்க்ஸியக் கருத்துக்களை ருஷ்யாவில் பரப்புவதில் இது பெரும் பங்கு ஆற்றியது. மொத்தம் நான்கு இதழ்களே வெளியாயின. பக்கம் 73

61 குடியிருப்புப் பிரச்சினை குறித்து என்ற ஃபி. எங்கெல்ஸின் கட்டுரையை வி. இ. லெனின் இங்கே குறிக்கிறார்.

பக்கம் 73

62 இங்கே குறிக்கப்படுபவை ஃபி. எங்கெல்ஸின் ருஷ்யாவில் சமுதாய உறவுகள் பற்றி என்ற கட்டுரையும் இந்தக் கட்டுரையின் பின்னுரையும் ஆகும். ருஷ்யாவைப் பற்றி ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் (ஜினீவா, 1894) என்ற நூலில் இவை உள்ளன.

பக்கம் 73

63 மிகுதி மதிப்புத் தத்துவங்கள் என்ற கா. மார்க்ஸின் நூலை, ஃபி. எங்கெல்ஸின் குறிப்புக்கு இணங்க மூலதனத்தின் நான்காம் தொகுதி என்று வி. இ. லெனின் குறிப்பிடுகிறார். இந்த நூல் 1862-1863ம் ஆண்டுகளில் எழுதப்பட்டது. மூலதனத்தின் இரண்டாம் தொகுதியின் முன்னுரையில் ஃபி. எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''இந்தக் கையெழுத்துப் பிரதியின் (மிகுதி மதிப்புத் தத்துவங்கள்—பதிப்பாசிரியர்) விமர்சனப் பகுதியை மூலதனத்தின் நான்காம் தொகுதியாகப் பிற்பாடு வெளியிடுவதற்காக நிறுத்திவைத்துக் கொள்கிறேன். 2வது 3வது தொகுதிகளில் ஏற்கெனவே ஆராய்ந்து தீர்க்கப்பட்டுள்ள ஏராளமான இடங்கள் இதிலிருந்து நீக்கப்படும்'' (கா. மார்க்ஸ், மூலதனம், தொகுதி 2, 1955, பக்கம் 2). ஆனால் மூலதனத்தின் நான்காம் தொகுதியைப் பதிப்புக்குத் தயார் செய்ய எங்கெல்ஸுக்கு இயலவில்லை. மிகுதி மதிப்புத் தத்துவங்கள் கா. காவுத்ஸ்கியால் செப்பம் செய்யப்பட்டு முதன் முதலில் ஜெர்மன் மொழியில் 1905, 1910ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. இந்தப் பதிப்பில் மூலவாசகத்தின் விஞ்ஞான ரீதியான வெளியீட்டின் அடிப்படைத் தேவைகள் மீறப்பட்டன. மார்க்ஸியத்தின் பல முக்கியமான கருத்துக்கள் திரிக்கப்பட்டன. 1862-1863ம் ஆண்டுகளின் மூலக் கைப்பிரதிக்கு முற்றிலும் இணங்க மிகுதி மதிப்புத் தத்துவங்கள் (மூலதனத்தின் 4ம் தொகுதி) சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக்

கட்சி மத்தியக் குழுவைச் சார்ந்த மார்க்ஸிய-லெனினியக் கழகத்தினல் 1955—1961ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. பக்கம் 73

64 1884 அக்டோபர் 15ந் தேதி ஃபி. எங்கெல்ஸ் இயோ. ஃபி. பெக்கருக்கு எழுதிய கடிதம் இங்கே குறிக்கப்படுகிறது. பக்கம் 74

65 கார்ல் மார்க்ஸ் எழுதிய **சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தின் பொது விதிகள்; கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை**யின் 1890ம் ஆண்டு ஜெர்மன் பதிப்புக்கு ஃபி. எங்கெல்ஸ் எழுதிய முகவுரை. பக்கம் 75

66 **மார்க்ஸியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும்** என்ற கட்டுரையைக் கார்ல் மார்க்ஸின் 30வது மரண தினத்தை ஒட்டி வி.இ. லெனின் எழுதினர். பக்கம் 77

67 **புருதோனியம்**—மார்க்ஸியத்துக்கு முரணுன சிறு முதலாளித்துவப் போக்கு. பிரெஞ்சு அராஜகவாதியான ழொஸேப் புருதோன் இதன் சித்தாந்தவாதி. பெரிய முதலாளித்துவ உடைமைகளைப் புருதோன் சிறு முதலாளித்துவக் கருத்தோட்டத்திலிருந்து கண்டித்து விமர்சனம் செய்தார். சின்னஞ்சிறு தனிவுடைமையாளர்களை என்றும் நிலைத்து நீடிக்கச் செய்ய நினைத்து, ''மக்கள்'' வங்கிகளையும் ''பரிமாற்ற'' வங்கிகளையும் அமைக்க வேண்டுமென்று கூறினர். இவற்றின் துணை கொண்டு தொழிலாளர்கள் உற்பத்திச் சாதனங்களைப் பெற்று தொழில் வினைஞர்களாகித் தமது உற்பத்திப் பொருள்கள் ''நியாய விலைக்கு'' விற்பனையாவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள முடியுமென்று வாதாடினர். பாட்டாளி வர்க்கத்திற்குள்ள வரலாற்றுப் பணியைப் புரிந்து கொள்ளத் தவறிய அவர், வர்க்கப் போராட்டத்தையும் பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தையும் நிராகரித்தார். அராஜகவாதியான அவர் அரசே

தேவையில்லை என்றார். முதலாவது அகிலத்தில் புரூதோன்வாதிகள் தமது கருத்துக்களைப் புகுத்த முயற்சி செய்ததற்கு எதிராக மார்க்ஸும் எங்கெல்ஸும் விடாப்பிடியான போராட்டம் நடத்தினர். மார்க்ஸ் தமது மெய்யறிவின் வறுமை எனும் நூலில் புரூதோன்வாதத்தைத் தீவிரமாகக் கண்டித்து விமர்சனம் செய்தார். மார்க்ஸும் எங்கெல்ஸும் அவர்களுடைய ஆதரவாளர்களும் முதலாவது அகிலத்தில் புரூதோன்வாதிகளுக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் காரணமாக மார்க்ஸியம் புரூதோன்வாதத்தின் மீது முழு வெற்றி பெற்றது.

பக்கம் 88

68 குறிப்பு 13ஐப் பார்க்க. பக்கம் 88

69 பெர்ன்ஷ்டைன்வாதம் — சர்வதேசச் சமூக-ஜனநாயக இயக்கத்தில் மார்க்ஸியத்துக்கு விரோதமான, சந்தர்ப்பவாதப் போக்கு; பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மனியில் தோன்றியது. திருத்தல்வாதப் போக்கின் மிகவும் வெளிப்படையான பிரதிநிதியாகிய பெர்ன்ஷ்டைன் என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

1896-98ல் பெர்ன்ஷ்டைன் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் சித்தாந்த வெளியீடான *Die Neue Zeit* [''புதிய காலம்''] என்ற சஞ்சிகையில் ''சோஷலிஸத்தின் பிரச்சினைகள்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரைத் தொடர் எழுதினார். புரட்சிகர மார்க்ஸியத்தின் தத்துவஞான, பொருளாதார, அரசியல் அடிப்படைகளை மறுபரிசீலனைக்கு உட்படுத்தினார். ''சோஷலிஸத்தை விஞ்ஞான அடிப்படையில் வைத்திடும் சாத்தியப்பாடு மறுக்கப்பட்டது, சோஷலிஸத்தின் அவசியத்தையும் தவிர்க்கவொண்ணாதத்தன்மையையும் வரலாறுவழிப்பட்ட பொருள்முதல்வாதப் பார்வை நிலையிலிருந்து மெய்ப்பித்துக் காட்டும் சாத்தியப்பாடும் மறுக்கப்பட்டது. வளர்ந்து வரும் வறுமையாக்கப்படல் எனும் விஷயமும், பாட்டாளிமயமாக்கும் நிகழ்வுப் போக்கும், முதலாளித்துவ முரண்பாடுகள் கடுமையாதலும் மறுக்கப்பட்டது; ''இறுதி இலட்சியம்''

எனும் கருத்துருவமே தவறானது என்று பிரகடனப்படுத்தப்பட்டது, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எனும் கருத்து முற்றாக நிராகரிக்கப்பட்டது. கோட்பாடு நிலையிலே மிதவாதத்துக்கும் சோஷலிஸத்துக்கும் இடையேயுள்ள எதிர்நிலை மறுக்கப்பட்டது. வர்க்கப் போராட்டம் பற்றிய தத்துவம் மறுக்கப்பட்டது...'' (லெனின், **என்ன செய்ய வேண்டும்?**) சமூக-ஜனநாயகவாதத்தைச் சமுதாயப் புரட்சிக் கட்சியாயிருப்பதை விட்டு சமுதாயச் சீர்திருத்தவாதக் கட்சியாக மாற்ற வேண்டும் எனும் நோக்கத்துடன் மார்க்ஸியத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பது பெர்ன்ஷ்டைனிய நோக்கமாகும். லெனினைத் தலைவராகக் கொண்ட புரட்சிகர மார்க்ஸிய வாதிகளாகிய போல்ஷிவிக்குகள் பெர்ன்ஷ்டைனியத்துக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் எதிராக உறுதியுடன் போராடினர்.

பக்கம் 89

70 நவீன-காண்ட்டியவாதிகள் — முதலாளித்துவத் தத்துவ ஞானத்திலுள்ள பிற்போக்குப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இது 19ம் நூற்றாண்டின் நடுவில் ஜெர்மனியில் தோன்றியது. காண்ட்டின் தத்துவஞானத்தில் மிகவும் பிற்போக்கானவையாக இருந்த கருத்துமுதல்வாதக் கூறுகளைக் ''காண்ட்டுக்குத் திரும்பு'' என்பதாய் முழங்கி நவீன-காண்ட்டியவாதிகள் உயிர்ப்பிக்க முயன்றனர், வரலாற்று வழிப்பட்ட இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை எதிர்த்தனர். எங்கெல்ஸ் தமது **லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்** எனும் நூலில் நவீன-காண்ட்டியவாதிகளைத் ''தத்துவார்த்தப் பிற்போக்குவாதிகள்'' என்றும் இழிந்த கதம்பவாதிகள், ஒட்டுத்தையல்வாதிகள் என்றும் வர்ணித்தார். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியில் இருந்த நவீன-காண்ட்டியவாதிகள் (பெர்ன்ஷ்டைன், ஷ்மித், மற்றவர்) மார்க்ஸியத் தத்துவஞானத்தையும், மார்க்ஸின் பொருளாதாரத் தத்துவத்தையும் வர்க்கப் போராட்டம் பற்றிய போதனையையும் விமர்சனம் செய்தார்கள். ''சட்டபூர்வமான மார்க்ஸியவாதிகளாகிய'' ஸ்துருவே,

புல்காக்கவ், முதலானேர் ருஷ்யாவில் நவீன-கான்ட்டிய வாதத்தின் பிரதிநிதிகளாக இருந்தனர்.

தமது தத்துவஞான நூல்களில் லெனின் நவீன-கான்ட்டியவாதத்தின் தத்துவஞானம் இயற்கையையும் சமுதாயத்தையும் பற்றிய விஞ்ஞான அறிவுக்குப் பகைமையானது என்று சுட்டிக்காட்டினுர், அதன் வர்க்கச் சாராம்சம் முதலாளித்துவச் சித்தாந்தம் என்று அம்பலப் படுத்தினுர். பக்கம் 90

71 கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், தொகுதி 1, (இரண்டாவது பதிப்பின் பின்னுரை). பக்கம் 90

72 அதற்குச் சில காலத்துக்குப்பின் வி.இ. லெனின் பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும் எனும் நூலே எழுதினுர். இது 1909 மே மாதத்தில் வெளிவந்தது. இந்நூலில் லெனின் பக்தானவையும் பிற சந்தர்ப்பவாதிகளேயும் மற்றும் அவர்களுடைய தத்துவஞான ஆசிரியர்களாகிய அவெஞரியஸையும் மாஹையும் கடுமையாக விமர்சித்தார். அதில் லெனின் மார்க்ஸியத்தின் தத்துவார்த்த அடிப்படைகளேப் பாதுகாத்து மேலும் வளப் படுத்தினுர். மேலும், எங்கெல்ஸ் மறைவுக்குப்பின் லெனினது நூல் வெளிவந்த வரையுள்ள காலப்பகுதியில் விஞ்ஞானம், குறிப்பாக இயற்கை விஞ்ஞானம், அடைந்துள்ள எல்லாச் சாதனேகளேயும் லெனின் இந்நூலில் பொருள்முதல்வாத முறையில் பொதுமைப்படுத்தினுர். பக்கம் 91

73 காடேட்டுகள் — கான்ஸ்டிட்யூஷனல்-டெமாகிரடிக் கட்சியின் உறுப்பினர்கள். இக்கட்சி 1905ல் நிறுவப்பட்டது. ருஷ்ய மிதவாத-முடியாட்சிவாத முதலாளி வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள், முதலாளித்துவப் படிப்பாளர் பகுதியினர் அதில் சேர்ந்திருந்தனர். உழைக்கும் மக்களே ஏமாற்றுவதற்காக ''மக்கள் சுதந்திரக் கட்சி'' என்று பகட்டாகப் பெயரிட்டுக் கொண்ட அவர்கள்

சட்டரீதியான முடியாட்சியைக் கோருவதற்கு மேல் செல்லவில்லை. மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சியின் சமரசப்பட முடியாத பகைவர்களாகச் செயல் புரிந்தார்கள். எல்லா ஆயுதந்தாங்கிய புரட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் வெளிநாட்டுத்தலையீட்டாளர்களின் படையெடுப்புக்களிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். வெளிநாட்டுத் தலையீட்டாளர்களும் வெள்ளைப் படையினரும் தோற்கடிக்கப்பட்ட பிறகு காடேட்டுகள் வெளிநாடுகளுக்கு ஓடி, சோவியத் அரசுக்கு எதிரான தங்களது புரட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. பக்கம் 96

74 **மில்லிரண் போக்கு**—பிரெஞ்சு சோஷலிஸ்டுச் சீர்திருத்தவாதி மில்லிரண்டின் [Millerand] பெயரைப் பெற்ற சந்தர்ப்பவாதப் போக்கு. 1899ல் மில்லிரண் பிரெஞ்சுப் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டு முதலாளி வர்க்கத்தின் ஜனவிரோதக் கொள்கையைச் செயல்படுத்த உதவினார். இது சீர்திருத்தவாதமும் துரோகமும் ஆகும் என்று லெனின் கூறினார். பக்கம் 97

75 **சுத்தமான மார்க்ஸியவாதிகள்** — மார்க்ஸியத்தைத் திரித்துப் புரட்ட முனைந்த திருத்தல்வாதத்தை எதிர்த்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள். பக்கம் 98

76 **கெட்டின் ஆதரவாளர்கள்** [Guesdists]—19ம் நூற்றுண்டின் இறுதியிலும் 20ம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் ழூல் கெட்டு, போல் லஃபார்க் ஆகியோர் தலைமையில் செயல்பட்ட புரட்சிகர மார்க்ஸியப் போக்கு. 1901ல் ழூல் கெட்டு தலைமை தாங்கிய புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் ஆதரவாளர்கள் பிரான்ஸின் சோஷலிஸ்டுக் கட்சியில் ஒன்றுப்பட்டனர் (இக்கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் தலைவருடைய பெயரில் கெட்டுவாதிகள் என்று அழைக்கப்பட்டனர்). 1905ல் கெட்டுவாதிகள் சீர்திருத்தவாத

வழிப்பட்ட பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் ஒன்றுப் பட்டனர்.

ழொரேஸ் ஆதரவாளர்கள் [Jaurésists]—பிரெஞ்சு சோஷலிஸ்டு ழான் ழொரேஸின் ஆதரவாளர்கள். ழான் ழொரேஸ் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தின் வலது சாரி, சீர்திருத்தவாதப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். ''விமர்சன சுதந்திரம்'' என்று கூறி ழொரேஸ்வாதிகள் மார்க்ஸியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று கோரினர்கள், பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று உபதேசித்தார்கள். 1902ல் அவர்கள் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர்; இக்கட்சி சீர்திருத்த வாதப் போக்கைக் கடைப்பிடித்தது. பக்கம் 98

77 புரூஸ்வாதிகள் [Broussists[—அல்லது சாத்தியப்பாடுவாதிகள்—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் 1880-90களில் தோன்றிய சிறு முதலாளித்துவப் போக்கு. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் அவர்கள் மறுத்தனர்; தொழிலாளர் இயக்கத்தின் குறிக்கோளை மறைக்க முயற்சித்தனர்; தொழிலாளர் போராட்டத்தைச் ''சாத்தியப்பாடுள்ள'' [possible] நோக்கங்களை அடைவதற்கான வரம்புக்குள் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் என்று கோரினர் (அதிலிருந்து ''சாத்தியப்பாடுவாதிகள்'' எனும் பெயர் தோன்றியது). பிற்பாடு சாத்தியப்பாடுவாதிகளில் பெரும்பாலோர் சீர்திருத்தவாத வழிப்பட்ட பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள். பக்கம் 98

78 பிரிட்டிஷ் சமூக-ஜனநாயகச் சம்மேளனம் [The Social-Democratic Federation] 1884ல் நிறுவப்பட்டது. சீர்திருத்த வாதிகளும் (ஹைண்ட்மனும் ஏனையோரும்) அராஜகவாதிகளும் மற்றும் ஆங்கிலேயே சோஷலிஸ்டு இயக்கத்தின் இடதுசாரிப் பிரிவினராகிய புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளும் மார்க்ஸியவாதிகளும் (கிவேல்ச், மான், ஏவ்லிங், எலியனேர் மார்க்ஸ்-ஏவ்லிங் முதலியோர்)

இதில் இருந்தனர். இச்சம்மேளனத்தின் வறட்டுத் தத்துவ வாதத்தையும் சிறுகுழுவாதத்தையும் எங்கெல்ஸ் கண்டித்து இது பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்திலிருந்து பிரிந்து நிற்பதற்காகவும், தொழிலாளர் இயக்கத்தின் சிறப்பு இயல்புகளைப் புரிந்து கொள்ள முடியாதிருப்பதற்காகவும் இதை விமர்சித்தார். சமூக-ஜனநாயகச் சம்மேளனத்துக்கு 1907ல் சமூக-ஜனநாயகக் கட்சி என்று பெயரிடப்பட்டது. இக்கட்சி சுயேச்சைத் தொழிற் கட்சியின் இடதுசாரிக் கூறுகளுடன் சேர்ந்து 1911ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி ஆயிற்று. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்படுவதற்கு 1920ல் பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு ஒற்றுமைக் குழுவும் முக்கியப் பங்காற்றின. பக்கம் 98

79 **பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி [The Independent Labour Party]**—*1893ல், நாட்டில் வேலைநிறுத்தப் போராட்டமும் தொழிலாளர் கட்சி முதலாளித்துவக் கட்சிகளிலிருந்து சுயேச்சையாகச் செயல்பட வேண்டும் எனும் இயக்கமும் தீவிரமடைந்தபோது, இது சீர்திருத்த வாத நிறுவனமாய்த் தோன்றியது. ''புதிய தொழிற் சங்கங்களின்'' உறுப்பினர்களும் பழைய தொழிற் சங்கங்களில் பலவற்றின் உறுப்பினர்களும் மற்றும் ஃபேபியன்களால் கவரப்பட்ட படிப்பாளர் பகுதியினரும் சிறு முதலாளி வர்க்கத்தினரும் அதில் சேர்ந்து கொண்டனர். கியேர் ஹார்டி இக்கட்சிக்குத் தலைமை தாங்கினார். உற்பத்தி, வினியோகம், பரிமாற்றம் ஆகியவற்றின் சாதனங்கள் எல்லாவற்றையும் பொது உடைமையாக்க வேண்டும் என்றும் எட்டு மணி வேலை நாள் வேண்டும் என்றும் குழந்தைகளின் உழைப்பைத் தடை செய்ய வேண்டும் என்றும் சமூகக் காப்பீடும் வேலையில்லாத நேரங்களில் நிதி உதவியும் நிறுவப்பட வேண்டும் என்றும் கோரும் போராட்டம் அவர்களுடைய வேலைத்திட்டத்தில் உள்ளது.*

தொடக்கத்திலிருந்தே அது முதலாளித்துவச் சீர்திருத்தவாதக் கொள்கையைப் பின்பற்றியது, நாடாளு

மன்றப் போராட்டத்திலும் மிதவாதக் கட்சியுடனுன நாடாளுமன்ற உடன்பாடுகளிலுமே முதன்மையாகக் கவனம் செலுத்தி வந்தது. "உண்மையில் அது முதலாளி வர்க்கத்தைச் சார்ந்திருக்கும் சந்தர்ப்பவாதக் கட்சி" என்றும் சோஷலிஸத்திலிருந்து அது "சுயேச்சையானது" என்றும் மிதவாதத்தை அது மிகவும் "சார்ந்திருக்கிறது" என்றும் லெனின் பிரிட்டிஷ் சுயேச்சை தொழிற் கட்சியைப் பற்றி எழுதினுர். பக்கம் 98

80 முழுமையாளர்கள் [integralists] ஒரு வகைச் சிறு முதலாளித்துவ சோஷலிஸமான "முழுமையான" சோஷலிஸம் என்பதன் ஆதரவாளர்கள். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியில் மையவாதப் போக்கினராய் இருந்த இவர்கள் இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் சில பிரச்சினைகளில் சீர்திருத்தவாதிகளை எதிர்த்துப் போராடினர். பிற் போக்கு முதலாளித்துவப் பிரிவினருடன் ஒத்துழைப்பது குறித்து இந்தச் சீர்திருத்தவாதிகள் கடைக்கோடியான சந்தர்ப்பவாத நிலையை அனுசரித்தனர். பக்கம் 98

81 மென்ஷிவிக்குகள்—ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதத்தில் சிறு முதலாளித்துவ, சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள், தொழிலாளி வர்க்கத்தில் முதலாளித் துவக் கருத்துக்களைப் புகுத்தியவர்கள். ஆகஸ்டு 1903ல் நடந்த ருஷ்யாவின் சமூக-ஜனநாயகவாதத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேராயத்தில்தான் மென்ஷிவிக்குகளுக்கு இந்தப் பெயர் கிடைத்தது. கட்சியின் தலைமை உறுப்புக்களுக்கு நடந்த தேர்தலில் அவர்கள் சிறுபான்மையிலிருந்தனர் (மென்ஷின்ஸ்த்வோ); லெனின் தலைமை தாங்கிய புரட்சிகரச் சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மையினராயிருந்தனர் (போல்ஷின்ஸ்த்வோ). போல்ஷிவிக்குகள், மென்ஷிவிக்குகள் என்ற பெயர்கள் இவ்வாறு ஏற்பட்டன. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்த மென்ஷிவிக்குகள் முயன்ருர்கள்; தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஒரு சந்தர்ப்பவாதப் போக்கைக்

கொண்டு வந்தனர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் வெளிப்படையாகவே எதிர்ப்புரட்சிக் கட்சி ஆயினர்; சோவியத் ஆட்சியதிகாரத்தைக் கவிழ்ப்பதற்கான சதிகளையும் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தி அவற்றில் பங்கு கொண்டனர்.

பக்கம் 98

82 "புரட்சிகர சிண்டிக்கலிஸம்" — 19ம் நூற்றுண்டின் இறுதியில் சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தோன்றிய சிறு முதலாளித்துவ, அரை அராஜகவாதப் போக்கு. அவர்கள் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அவசியத்தை மறுத்தனர்; கட்சியின் தலைமைப் பாத்திரத்தையும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தேவையையும் நிராகரித்தனர்; புரட்சி இல்லாமலே தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களது பொது வேலைநிறுத்தத்தின் மூலம் முதலாளித்துவத்தை வீழ்த்திவிடலாம், பொருளாதாரத்தைத் தமது பிடிக்குள் கொண்டுவந்து விடலாமென்று கருதினர். "பல நாடுகளில் புரட்சிகர சிண்டிக்கலிஸம் சந்தர்ப்பவாதத்திலிருந்தும் நாடாளுமன்ற மடமைத்தனத்திலிருந்தும் நேரடியாகவும் தவிர்க்க முடியாததாகவும் தோன்றியது" என்று லெனின் சுட்டிக்காட்டினுர்.

பக்கம் 98

83 இப்பதிப்பின் பக்கம் 8ஐப் பார்க்க. பக்கம் 102

84 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய கற்பனுவாத சோஷலிஸமும் விஞ்ஞான சோஷலிஸமும் எனும் நூலின் ஆங்கிலப் பதிப்பின் முன்னுரை. பக்கம் 103

85 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய டூரிங்குக்கு மறுப்பு (1878), லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் (1888), கற்பனுவாத சோஷலிஸமும் விஞ்ஞான சோஷலிஸமும் எனும் நூலின் ஆங்கிலப் பதிப்பின் முன்னுரை (1892) ஆகிய நூல்களை வி. இ. லெனின் இங்கே குறிக்கிருர். பக்கம் 104

86 ஃபி. எங்கெல்ஸ் எழுதிய லூத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும் (அத்தியாயம் 2). பக்கம் 106

87 வேஹி—எதிர்ப்புரட்சி மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தினரை ஒட்டிய காடேட்டு (குறிப்பு 73ஐப் பார்க்க) எழுத்தாளர்களின் கட்டுரைத் தொகுதி. இது 1909 வசந்தத்தில் வெளிவந்தது. ருஷ்யப் படிப்பாளர் பகுதியினரைப் பற்றிய கட்டுரைகளில் ருஷ்யாவின் புரட்சிகர-ஜனநாயக இயக்கத்தின் மரபுகளை அவதூறு செய்தது, 1905ம் ஆண்டுப் புரட்சி இயக்கத்தின் மீது வசைமாரி பொழிந்தது. ஜார் அரசாங்கம் ''தனது சிறைச்சாலைகளையும் துப்பாக்கிகளையும்'' கொண்டு முதலாளி வர்க்கத்தினரை ''பொது மக்களுடைய வெறியிலிருந்து'' காப்பாற்றியதற்காக அதற்கு நன்றி தெரிவித்தது. பக்கம் 112

88 ஒத்ஸோவ்வாதம்—''திருப்பியழைத்தல்'' என்று பொருள்படும் ருஷ்யச் சொல்லே இதன் மூலம். 1905-07ம் ஆண்டுகளில் நடந்த ருஷ்யப் புரட்சி தோல்வியுற்ற பின் போல்ஷிவிக்குகளில் ஒரு சிறு பகுதியினரிடையே (பக்தானவ், அலெக்ஸீன்ஸ்கி, லுனச்சார்ஸ்கி, மற்றவர்கள்) தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்கு. ஒத்ஸோவ்வாதிகள் போராட்டத்தின் சட்டபூர்வமான வடிவங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அரசாங்க டூமா எனும் சட்டமன்றத்திலிருந்து சமூக-ஜனநாயகவாத உறுப்பினர்களைத் திருப்பியழைக்க வேண்டும் என்றும் தொழிற்சங்கங்களிலும் மற்ற சட்டபூர்வமான தொழிலாளர் நிறுவனங்களிலும் வேலை செய்ய வேண்டாம் என்றும் கோரினர். பக்கம் 117

89 வரலாற்றில் கார்ல் மார்க்ஸ் தத்துவத்துக்கு விதிக்கப்பட்ட வருங்காலம் எனும் கட்டுரையை கார்ல் மார்க்ஸின் 30ம் மறைவுநாளையொட்டி லெனின் எழுதினர்.

பக்கம் 117

90 டிரைஃபஸ் வழக்கு—பிரெஞ்சு ஜெனரல் படைக்காரியாலய இராணுவ அதிகாரியான டிரைஃபஸ் என்ற யூதர்

மீது பிரெஞ்சு இராணுவ அதிகாரிகளைச் சேர்ந்த பிற்போக்கு, முடியாட்சி ஆதரவு வட்டாரத்தினரால் ஆத்திரமூட்டுவதற்கென்று 1894ல் தொடுக்கப்பட்ட ஒரு பொய் வழக்கு. அந்நிய நாட்டுக்காக வேவு பார்த்ததாகவும், அரசுக்குத் துரோகம் செய்ததாகவும் டிரைஃபஸ் மீது பொய்க்குற்றம் சுமத்தப்பட்டது. இராணுவ விசாரணைக்குப் பிறகு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பிரான்ஸில் யூத-எதிர்ப்பு வெறியைத் தூண்டிவிடுவதற்காகவும், குடியரசு ஆட்சிமுறையைத் தாக்குவதற்காகவும் ஜனநாயக உரிமைகளை ஒழிப்பதற்காகவும் இந்தப் பொய்வழக்கை பிரெஞ்சு பிற்போக்காளர்கள் பயன்படுத்தினர். முற்போக்கு அறிவுஜீவிகள் (எ. ஸோலா, ழா. ழொரேஸ், அ. பிரான்ஸ் முதலியோர்) டிரைஃபஸ் குற்றமற்றவர் என வாதித்ததன் பயனுகவும், பரந்துகிளர்ந்த வெகுஜன இயக்கத்தின் விளைவாகவும் அவர் 1899ல் மன்னிக்கப்பட்டார், 1906ல் அவர் குற்றமற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டு, இழந்த உரிமைகளைத் திரும்பவும் பெற்ருர். பக்கம் 127

ஸாபெர்ன் சம்பவம்—நவம்பர் 1913ல் ஸாபெர்ன் (அல்ஸேஸ் பகுதி) நகரில் நடைபெற்றது. அல்ஸேஸ் மக்களிடம் ஒரு பிரஷ்ய அதிகாரி மிருகத்தனமான முறையில் நடந்து கொண்டதால் விளைந்தது. ஸ்தல, பெரும்பாலும் பிரெஞ்சு, மக்கள் பிரஷ்ய இராணுவ ஆட்சியாளருக்கெதிராகக் கொதித்து எழுந்தனர். பக்கம் 127

"பண்பாட்டு, தேசியச் சுயாட்சி"—தேசியப் பிரச்சினையில் சந்தர்ப்பவாத வேலைத்திட்டம். 1890-1900களில் ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளான ஓ. பௌவர், கா. ரென்னர் இருவராலும் முன்வைக்கப்பட்டது. இதன் சாராம்சம் வருமாறு: ஒரு நாட்டிலுள்ள ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள், நாட்டின் எந்தப் பகுதியில் அவர்கள் வாழ்ந்தாலும் சரியே, சுயாட்சி உரிமை கொண்ட தேசிய யூனியனுக அமைவார்கள். பள்ளிக்கூட விவகாரத்தையும் (வெவ்வேறு தேசிய இனத்தினரின்

குழந்தைகளுக்குத் தனித்தனிப் பள்ளிகள்) பிற கல்வி, பண்பாட்டுத் துறைகளையும் அரசு அதன் நிர்வாகத்தில் முழுமையாக ஒப்படைக்கும். இந்த வேலைத்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு தேசிய இனக்குழுவுக்கு உள்ளும் மதகுருமார் செல்வாக்கும், பிற்போக்குத் தேசியச் சித்தாந்தத்தின் செல்வாக்கும் வலுப்பட வகை செய்திருக்கும்; தேசிய இன அடையாளப்படி தொழிலாளிகளின் பிளவைத் தீவிரப்படுத்தி, தொழிலாளி வர்க்கத்தை ஒழுங்கமைப்பதைக் கடினமாக்கியிருக்கும். ''உள்ளும் புறமும் முதலாளித்துவத் தன்மை கொண்ட, உள்ளும் புறமும் பொய்யான'' கருத்தே அதன் அடிப்படை என்றும் ''தனிப்பட்ட அரசாங்க நிறுவனத்தின் வாயிலாக எல்லாத் தேசிய இனங்களையும் வலுவாகவும் நிலையாகவும் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறு பிரித்து விடுவதே அந்தக் கருத்து'' என்றும் லெனின் சுட்டிக் காட்டினார்.
பக்கம் 128

93 ஃபி. எங்கெல்ஸ் ஃபி. ஸோர்கேக்கு எழுதிய கடிதம் (1886 நவம்பர் 29) பார்க்க.
பக்கம் 133

94 சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்—ஒரு சிறு முதலாளித்துவக் கட்சி, 1901ம் ஆண்டின் இறுதியிலும் 1902ம் ஆண்டின் தொடக்கத்திலும் இக்கட்சி உருவாகியது. பாட்டாளி வர்க்கத்துக்கும் சிறு உடைமையாளருக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அவர்கள் காணவில்லை; விவசாயிகளுக்குள் நிலவும் வர்க்கப் பிளவையும் பகைமையையும் மறைக்க முயற்சித்தார்கள்; புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தனர்.

1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளும் முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் எதிர்ப்புரட்சிகரமான இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களும் அவ்வரசாங்

கத்தில் அமைச்சர் பதவிகளை வகித்தனர் (கேரென்ஸ்கி, செர்னேவ், அவ்க்ஸேன்தியெவ்).

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் வெளிப்படையாக எதிர்ப்புரட்சிப் போக்கைக் கடைப்பிடித்தார்கள், முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள், வெளிநாட்டுத் தலையீட்டாளர்கள் ஆகியோருடன் கூட சேர்ந்து கொண்டு சோவியத் அரசுக்கு எதிராகப் போராடினுர்கள். பக்கம் 136

95 கியோத்தே எழுதிய ஃபாவஸ்ட் நாடகத்தில் மெஃபிஸ்தோஃபில் சொல்வதை லெனின் மேற்கொள் கூறினுர். பக்கம் 137

96 **அரசியல் நிர்ணய சபை** 1918 ஜனவரி 5ல் சோவியத் அரசாங்கத்தால் கூட்டப்பட்டது. மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு முன்பு அதற்கான தேர்தல்கள் பெரும்பாலும் நடத்தப்பட்டன. எனவே அதன் உறுப்பினர் அமைவு நாட்டின் வளர்ச்சியின் முந்தைய கட்டத்திற்குரிய நிலையை, அதாவது மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் மற்றும் காடேட்டுகள் ஆட்சியில் இருந்த நிலையைப் பிரதிபலித்தது. சோவியத் ஆட்சியதிகாரத்தை நிறுவுவதிலும் சோவியத் அரசாங்கம் பிறப்பித்த ஆணைகளிலும் பிரதிபலித்த பெருவாரியான மக்களது சித்தத்துக்கும், நகர, கிராமப்புற முதலாளி வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலித்த சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், மென்ஷிவிக்குகள், காடேட்டுகளின் கூட்டணி கடைப்பிடிக்கும் கொள்கைக்கும் இடையிலிருந்த பெரும் பிளவை இதில் காண முடிந்தது. போல்ஷிவிக்குகள் முன்வைத்த ''சுரண்டப்பட்ட உழைப்பாளி மக்களுடைய உரிமைப் பிரகடனத்தை'' அரசியல் நிர்ணய சபை விவாதிக்க மறுத்தது; சோவியத்துகளின் இரண்டாவது பேராயத்தால் சமாதானம், நிலம், சோவியத்துகளுக்கு ஆட்சியதிகாரம் அனைத்தையும் அளித்தல் ஆகியவை பற்றி நிறைவேற்றிய ஆணைகளையும் அங்கீகரிக்க மறுத்தது. அரசியல் நிர்ணய சபை

யின் நடவடிக்கைகள் உழைப்பாளி மக்களின் நலன்களுக்கு விரோதமானது என்று இது காட்டியது. ஆகவே 1918 ஜனவரி 6ல் வெளியிட்ட அனைத்துருஷ்ய மத்தியச் செயற் குழுவின் தீர்மானத்தின்படி அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது. பக்கம் 139

97 ''மேன்மை தங்கிய ஜார் மன்னரின் எதிர்த்தரப்பு'' என்னும் தொடர் காடேட்டுக் கட்சியின் தலைவர் மில்யூக் கோவினுடையது. லண்டன் நகர மேயர் 1909 ஜூன் 19ல் (ஜூலை 2) அளித்த விருந்தில் சொற்பொழிவாற்று கையில் மில்யூக்கோவ் கூறியதாவது: ''...ருஷ்யாவில் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தைக் கட்டுப்பாடு செய்யும் சட்டமன்றம் ஒன்று இருக்கும் வரை, ருஷ்ய எதிர்த்தரப்பு மேன்மை தங்கிய ஜார் மன்னரின் எதிர்த் தரப்பாய் இருக்குமே ஒழிய, மேன்மை தங்கிய ஜார் மன்னருக்கு எதிர்த்தரப்பாய் இராது'' (ரேச், இதழ் 167, 1909 ஜூன் 21 [ஜூலை 4]). பக்கம் 141

98 ''ஜார் ஒழிக, தொழிலாளர் அரசாங்கமே வேண்டும்''—போல்ஷிவிக்-எதிர்ப்புக் கோஷம். முதன்முதல் 1905ல் பார்வுஸால் பிரகடனம் செய்யப்பட்டது. நிரந்தரப் புரட்சி—விவசாயிகள் சேராத புரட்சி—என்கிற திரோத்ஸ்கியின் ''தத்துவத்தின்'' அடிப்படையாய் அமைந்த கோஷம் இது. இந்தத் ''தத்துவம்'' முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியானது வெகுஜன இயக்கத்துக்குப் பாட்டாளி வர்க்கம் தலைவனாய்ச் செயல்படு கையில் சோஷலிஸப் புரட்சியாய் வளர்ந்திடும் என்னும் லெனினுடைய தத்துவத்துக்கு எதிராய் முன்வைக்கப் பட்டது. பக்கம் 141

99 கார்ல் மார்க்ஸ் எழுதிய பிரான்ஸில் உள்நாட்டுப் போர். சர்வதேசத் தொழிலாளர் சங்க பொது அவையின் பேருரை; பிரான்ஸில் உள்நாட்டுப் போர் எனும் மார்க்ஸின் நூலுக்கு ஃபி. எங்கெல்ஸ் எழுதிய முன்னுரை. பக்கம் 142

100 லெனின் இங்கு குறிப்பிடுவது பிளெஹானவின் அராஜக வாதமும் சோஷலிஸமும் எனும் பிரசுரம். முதலில்

இது ஜெர்மன் மொழியில் 1894ல் பெர்லினில் வெளிவந்தது. பக்கம் 143

101 லஸ்ஸால்வாதிகள் — ஜெர்மன் சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டு ஃபெர்டினென்ட் லஸ்ஸாலின் ஆதரவாளர்கள், ஜெர்மன் தொழிலாளர்களது பொதுச் சங்கத்தின் உறுப்பினர்கள். இச்சங்கம் 1863ல் நிறுவப்பட்டது. அதன் முதலாவது தலைவரே லஸ்ஸால். அதன் வேலைத் திட்டத்தையும் அதன் போர்த்தந்திரத்தின் அடிப்படைக் கூறுகளையும் லஸ்ஸால் வகுத்திட்டார். சங்கத்தின் அரசியல் வேலைத்திட்டம் அனைத்து மக்கள் வாக்குரிமைக்காகப் போராடவும், அதன் பொருளாதார வேலைத் திட்டம் அரசாங்க மானிய உதவி பெற்ற தொழிலாளர் பொருளுற்பத்திக் கழகங்களுக்காகப் போராடவும் அறைகூவின. தொழிலாளர் பொருளுற்பத்திக் கழகங்களை நிறுவுவதற்குப் பிரஷ்ய அரசைப் பயன்படுத்த முடியும் என்று அவர் கருதினார். மார்க்ஸின் சொற்களின்படி லஸ்ஸால் ''பிரஷ்ய முடியரசின் அரசாங்கச் சார்புள்ள சோஷலிஸத்தை'' உபதேசித்தார். மார்க்ஸும் எங்கெல்ஸும் லஸ்ஸாலியத் தத்துவத்தையும் போர்த்தந்திரத்தையும் நிறுவன ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளையும் ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செயல்பட்டு வரும் சந்தர்ப்பவாதப் போக்காகுமென்று அடிக்கடி கடுமையாய்க் கண்டித்து வந்தனர். பக்கம் 145

102 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், அத்தியாயம் 4. பக்கம் 148

103 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், அத்தியாயம் 4. பக்கம் 149

104 கார்ல் மார்க்ஸ் எழுதிய பிரான்ஸில் உள்நாட்டுப் போர், பிரிவு 3. பக்கம் 152

105 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், அத்தியாயம் 1. பக்கம் 157

106 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், அத்தியாயம் 1. பக்கம் 159

107 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், அத்தியாயம் 1. பக்கம் 160

108 கார்ல் மார்க்ஸ் எழுதிய கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், அத்தியாயம் 1. பக்கம் 162

109 ஷைலாக்—ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகரத்து வணிகன் நாடகத்தில் வரும் பாத்திரம். பேராசையும் பழிவெறியும் கொண்ட கடுவட்டிக்காரன். பக்கம் 164

110 மதப் பாடசாலை வாழ்க்கைச் சித்திரங்கள் எனும் புத்தகத்தில் நி.கி. பொமியாலோவ்ஸ்கி பழைய ருஷ்யாவின் மதப் பாடசாலைகளின் மாணவர்களினுடைய வாழ்க்கையைச் சித்திரித்தார். பக்கம் 164

111 இங்குக் குறிக்கப்படுகிறது ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேராயம். அதில் முரணின்றி புரட்சிகரப் போக்கைக் கடைப்பிடிக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் (லெனினியவாதிகள்) கட்சியின் சந்தர்ப்பவாதப் பிரிவினருக்கும் இடையே பிளவு ஏற்பட்டது (குறிப்பு 81ஐப் பார்க்க).
பக்கம் 175

112 இங்குக் குறிக்கப்படுகிறது 1922 ஜனவரியிலிருந்து 1944 ஜூன் வரை மாஸ்கோவில் வெளிவந்த தத்துவஞான-

பொருளாதார மாதச் சஞ்சிகையாகிய பத் ஸ்ஞமினெம் மார்க்சிஸ்மா *[''மார்க்ஸிய பதாகையின் கீழ்'']*.

பக்கம் 206

113 *ஃபி.* *எங்கெல்ஸ்* *எழுதிய* நாடுகடத்தப்பட்டோரின் இலக்கியங்கள். *பக்கம் 210*

பெயர்க் குறிப்பு அகராதி

அவெனுரியஸ் [Avenarius], ரீஹார்டு *(1843-1896)—ஜெர்மன் முதலாளித்துவத் தத்துவஞானி. பெர்க்லி, ஹியூம் ஆகியோரின் அகநிலைக் கருத்துமுதல்வாதத்துக்குப் புத்துயிர் அளித்து வந்த அனுபவவாத விமர்சனப் போக்கின் மூலவர்களில் ஒருவர்.—106*

ஆட்லெர் [Adler], விக்தர் *(1852-1918) — ஆஸ்திரியச் சமூக-ஜனநாயகவாதத்துக்கு அடிகோலியவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். 1880-90ம் ஆண்டுகளில் ஆட்லெர் எங்கெல்ஸுடன் உறவு கொண்டிருந்தார், ஆனால் எங்கெல்ஸ் காலமானதுமே சீர்திருத்தவாதத்துக்குத் தாவிவிட்டு, சந்தர்ப்பவாதத் தலைவரானார்.—73*

எங்கெல்ஸ் [Engels], ஃபிரீட்ரிஹ் *(1820-1895) — 5, 8—10, 14, 15, 17—21, 24, 26, 43, 52—56, 59,62—64, 66—68, 70—76, 79, 88, 92, 101, 102, 104—106, 108, 117,133, 142, 144—146, 153, 162, 166, 171, 210, 211*

எபிக்கூரஸ் [Epicurus], *(கி.மு. சுமார் 341-சுமார் 270)—தொன்மைக்கால கிரேக்கப் பொருள்முதல்வாதத் தத்துவஞானி, நாஸ்திகர்.—6*

ஏவ்லிங், எலியனோர் — *பார்க்க: மார்க்ஸ், எலியனோர்*

ஐன்ஷ்டைன் [Einstein], அல்பேர்த் *(1879-1955)—மாபெரும் தத்துவத் துறைப் பௌதிகவியலாளர், சார்பியல் தத்துவத்தின் மூலவர்.—208, 215*

ஃபாயர்பாக் [Feuerbach], லுத்விக் *(1804-1872)*—ஜெர்மன் பொருள்முதல்வாதத் தத்துவஞானி, நாஸ்திகர். ஃபாயர்பாகின் பொருள்முதல்வாதம் அளவறுத்தது, தியானத் தன்மை கொண்டது என்றாலும் அது மார்க்ஸியத் தத்துவத்தின் சித்தாந்தத் தோற்றுவாய்களில் ஒன்றாகத் தொண்டு ஆற்றியது.—6—8, 14, 15, 17, 72, 79, 102, 103, 105, 107

ஃபெஹ்னர் [Fechner], குஸ்தவ் தியாதோர் *(1801-1887)*—ஜெர்மன் இயற்கைவியலாளர், கருத்துமுதல்வாதத் தத்துவஞானி.—103

ஃபோக்ட் [Vogt], கார்ல் *(1817-1895)* — ஜெர்மன் இயற்கை விஞ்ஞானி, விஞ்ஞானக்கேடான பொருள்முதல்வாதி, சிறு முதலாளித்துவ ஜனநாயகவாதி. பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களைப் பழிதூற்றி வேட்டையாடுவதில் தீவிரமாகப் பங்கு கொண்டவர்களில் ஒருவர். —17

கல்ச்சாக் [Kolchak], அலெக்ஸாந்தர் வசீலியெவிச் *(1873-1920)*—ஜார் காலத்திய கடற்படைத் தலைவர்; முடியரசுவாதி; 1918-19ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்; ஆன்டான்டின் (நேசநாடுகளின்) கையாள். 1920ல் அவர் கைது செய்யப்பட்டு இர்க்கூத்ஸ்க் நகரின் புரட்சிக் கமிட்டியின் கட்டளையின் படி சுடப்பட்டார்.—199, 200

கார்னெலிஸன் [Cornelissen], கிரிஸ்டியன் — டச்சு அராஜகவாதி, பி.அ. கிரப்போத்கினைப் பின்பற்றியவர். மார்க்ஸியத்தை எதிர்த்துப் போராடினார்.—166

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854-1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். தொடக்கத்தில் மார்க்ஸியவாதி; பிற்காலத்தில் மார்க்ஸியத்துக்குத் துரோகமிழைத்து, சந்தர்ப்பவாதத்தின் அபாயகரமான, கேடுகெட்ட மையவாதத்தின் (காவுத்ஸ்கிவாதத்தின்) தத்துவாசிரியர் ஆனார்.—129, 130

காண்ட் [Kant], இம்மானுவேல் *(1724-1804)*—ஜெர்மன் தத்துவஞானி. மூலச்சிறப்புள்ள ஜெர்மன் கருத்துமுதல்வாதத்தின் மூலவர். கருத்துமுதல்வாதத்துடன் பொருள்முதல்வாதத்தின் அம்சங்களை இணைப்பது காண்ட்டின் அறிவுத் தத்துவத்திற்கு இயல்பான தன்மையாகும். புறநிலையாக நிலவும் ''தானேயாகிய பொருள்களை'' ஒப்புக்

கொள்வதில் இவை வெளியிடப்படுகின்றன.—11, 16, 90, 103

கிரப்போத்கின் [Kropotkin], பியோத்தர் அலெக்ஸேயெவிச் (1842-1921)—அராஜகவாதத்தின் முக்கியத் தலைவர்களிலும் சித்தாந்தவாதிகளிலும் ஒருவர்.—166

கிராவ் [Graves], ழான் (1854-1939)—பிரெஞ்சுச் சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டு; அராஜகவாதத்தின் ஒரு தத்துவாசிரியர்.—166

கிஸோ [Guizot], ஃபிரான்ஸுவா (1787-1874)—பிரெஞ்சு முதலாளித்துவ வரலாற்று ஆசிரியர், அரசறிஞர். 1840முதல் 1848 பிப்ரவரி புரட்சிவரை உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை உண்மையில் உருவாக்கி நடத்தியவர் அவரே. பெரும் முதலாளி வர்க்கத்தினரின் நலன்களை அவர் வெளியிட்டார்.—27

குகல்மன் [Kugelmann], லூத்விக் (1830-1902)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, கார்ல் மார்க்ஸின் நண்பர். 1848-49ல் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சியில் பங்கெடுத்துக்கொண்டவர். முதலாவது அகிலத்தின் உறுப்பினர். 1862 முதல் 1874 வரை மார்க்ஸுக்குக் கடிதங்களை எழுதினார். அவற்றில் ஜெர்மனியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவித்தார். 1902ல் *Die Neue Zeit* (''புதிய காலம்'') என்னும் சஞ்சிகையில் இக்கடிதங்கள் முதன்முதலாக வெளியிடப்பட்டன.—60, 103

குச்கோவ் [Guchkov], அலெக்ஸாந்தர் இவானவிச் (1862-1936)—பெரிய ருஷ்ய முதலாளி, அக்டோபரிஸ்டுகளின்—இது ருஷ்யாவில் முதலாளி வர்க்கத்தினரின், நிலப்பிரபுகளின் ஒரு கட்சி—அமைப்பாளர், தலைவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் முதல் முதலாளித்துவத் தற்காலிக அரசாங்கத்தில் இராணுவ, கடற்படை அமைச்சராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப்பின் எதிர்புரட்சித் தலைவர், பின்பு நாடுகடந்து ஓடிவிட்டார்.—137, 142

குரூன் [Gruen], கார்ல் (1817-1887)—ஜெர்மன் சிறு முதலாளித்துவப் பொதுத்துறை எழுத்தாளர். 1840ம் ஆண்டுகளின் நடுவில், மார்க்ஸ், எங்கெல்ஸ் சொற்களின்படி ''ஜெர்மன் சிறு முதலாளித்துவக் கருத்துக்களின் வெளியீடான'' ''மெய்யான சோஷலிஸம்'' என்கிற இயக்கத்தின் முக்கியமான பிரதிநிதிகளில் ஒருவர்.—102

கெட்டு [Guesde], ழூல் *(1845-1922)*—*பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம், இரண்டாவது அகிலம் இவற்றின் மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர்.—98*

கே [Ghe], அலெக்ஸாந்தர் யூ. *(1879-1919)*—*ருஷ்ய அராஜகவாதி. அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியை ஆதரித்தார்.—166*

கோன்ட் [Kont], ஒகூஸ்ட் *(1798-1857)*—*பிரெஞ்சு முதலாளித்துவத் தத்துவஞானி, சமுதாய விஞ்ஞானி, நேர்காட்சிவாதத்தின் மூலவர்.—103*

செர்னிஷேவ்ஸ்கி [Chernyshevsky], நிக்கலாய் கவ்ரீலவிச் *(1828-1889)*—*ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதிகளின் தலைசிறந்த முன்னோடிகளில் ஒருவர்; பொருளாதாரவாதி, தத்துவஞானி, எழுத்தாளர்.—207*

செர்னோவ் [Chernov], விக்தர் மிஹாய்லவிச் *(1876-1952)*—*சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களிலும் தத்துவாசிரியர்களிலும் ஒருவர்.—165*

சோர்கே [Sorge], ஃபிரீட்ரிஹ் *(1828-1906)* — *ஜெர்மன் சோஷலிஸ்ட். அமெரிக்க, சர்வதேசத் தொழிலாளர், சோஷலிஸ இயக்கத்தின் பிரபல தலைவர். முதலாவது அகிலத்தின் செயலூக்கமுள்ள உறுப்பினர்களில் ஒருவர். மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் நண்பர், கூட்டாளி.—61*

ச்ஹெயீத்ஸே [Chkheidze], நிக்கலாய் செமியோனவிச் *(1864-1926)*—*மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிஸப் புரட்சியைத் தொடர்ந்து ஜியார்ஜியாவின் அரசியல் நிர்ணய சபையின் (எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கம்) தலைவரானார். பிறகு வெளிநாடுகளில் குடியேறினார்.—136, 141*

டித்ஸ்கென் [Dietzgen], இயோஸிப் *(1828-1888)*—*ஜெர்மன் தொழிலாளி, சமூக-ஜனநாயகவாதி, தத்துவஞானி. இயக்கவியல் பொருள்முதல்வாத நிலையை சொந்த முயற்சியில் வந்தடைந்தவர். இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றிய அவரது கருத்துக்களில் சில தவறானவையாயினும் ''தொழிலாளரின் சுயேச்சையான அறிவு'' என்ற முறையில் அவர் மிகச்சிறந்த, வியப்பூட்டும் பல கருத்துக்களை முன்வைத்தார் என்று மார்க்ஸ் கூறினார்.—208*

டித்ஸ்கென் [Dietzgen], **ஒய்கென்** *(1862-1930)*—இயோஸிப் டித்ஸ்கெனின் புதல்வர். அவருடைய நூல்களை வெளியிட்டவர். ''இயற்கையியல் ஒருமைவாதம்'' என்கிற தமது தத்துவார்த்தக் கண்ணோட்டம் பொருள்முதல் வாதத்தைக் கருத்துமுதல்வாதத்துடன் இணக்கம் செய்ய முடியும் என்று அவர் கருதினார். இயோஸிப் டித்ஸ்கெனின் தத்துவஞானத்தின் பலவீனமான அம்சங்களைக் கொண்டு மார்க்ஸியத்தை நிறை செய்ய வேண்டும் என்பது அவரது கருத்து. முடிவில் பொருள்முதல்வாதம், இயக்கவியல் இரண்டையும் மறுக்கும் நிலையை அடைந்தார்.—208

டிரேவ்ஸ் [Drevs], **ஆர்த்தூர்** *(1865-1935)*—ஆதிக் கிறுத்துவத்தின் ஜெர்மன் வரலாற்றாசிரியர். தமது நூல்களில் அவர் இயேசு கிறிஸ்து உண்மையில் வாழ்ந்தவர் என்பதை மறுத்தார். ஆனால் கிறுத்துவ மதத்தின் வறட்டுவாதச் சூத்திரத்தையும், மதம் வழிப்பட்ட தப்பெண்ணங்களையும் கருத்துமுதல்வாத நிலையில் நின்று விமர்சித்தார்.—212, 213

டிரைஃபஸ் [Dreyfus], **அல்ஃபிரேட்** *(1859-1935)*—பிரெஞ்சு இராணுவத் தலைமையகத்தில் அதிகாரி, யூதர், தேசத் துரோகம் புரிந்ததாகப் பொய்க் குற்றம் சாட்டப் பெற்று 1894ல் கடுங்காவல் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டார். இதனை எதிர்த்து பிரான்ஸில் தொழிலாளி வர்க்கத்தினர், முற்போக்கு அறிவுத் துறையினர் ஆகியோர் நடத்திய இயக்கத்தின் விளைவாக 1899ல் அவருக்கு மன்னிப்பு கொடுக்கப்பட்டது.—127

டூரிங் [Dühring], **ஒய்கென்** *(1833-1921)*—ஜெர்மன் தத்துவஞானி, பொருளாதாரவாதி. டூரிங்கின் தத்துவஞானக் கருத்துக்கள் நேர்காட்சிவாதம், இயக்க மறுப்பு இயல் பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் ஆகியவற்றின் கதம்பக் கலவையாக விளங்கியது.—14, 17, 52, 72, 79, 88, 92, 103—105

திமிர்யாஸெவ் [Timiryazev], **அர்க்காதி கிலிமேன்தியெவிச்** *(1880-1955)* — பேராசிரியர், பௌதிகவியல்-கணிதவியல் அறிஞர். 1921ல் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். 1955 ஜனவரி வரை மாஸ்கோவிலுள்ள லமனோஸவ் அரசுப் பல்கலைக்கழகத்தில் பௌதிகவியலின் வரலாற்றுப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார்.—215

தியெரி [Theirry], **ஒகுஸ்தேன்** *(1795-1856)—பிரெஞ்சு மிதவாத-முதலாளித்துவ வரலாற்று ஆசிரியர்.—27*

தியேர் [Thiers], **அடோல்ப்** *(1797-1877)—பிரெஞ்சு முதலாளித்துவ வரலாற்று ஆசிரியர், அரசறிஞர், உள்நாட்டுப் போரை மூட்டியவர்களிலும் பாரிஸ் கம்யூனை நசுக்கியவர்களிலும் ஒருவர்.—27*

துகான்-பரனோவ்ஸ்கி [Tugan-Baranovski], **மிஹயீல் இவானவிச்** *(1865-1919)—ருஷ்ய முதலாளித்துவப் பொருளாதாரவாதி. —159*

தெனீக்கின் [Denikin], **அன்தோன் இவானவிச்** *(1872-1947)—ஜார் காலத்திய ஜெனரல், வெளிநாட்டுத் துருப்புக்கள் ருஷ்யாவில் தலையிட்டு வந்த போதும் உள்நாட்டுப் போரின் போதும் (1918-20) ஆங்கிலேய, பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கையாள். தெற்கு ருஷ்யாவில் வெள்ளைப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். அவருடைய படைகள் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டபின்) 1920 மார்ச் மாதம்) வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—199, 200*

த்ஸெரெத்தேலி [Tsereteli], **இராக்லி கியோர்கியெவிச்** *(1882-1959)—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917ம் ஆண்டில், முதலாளித்துவத் தற்காலிக அரசாங்கத்தில் தபால், தந்தி அமைச்சர், பிற்காலத்தில் உள்துறை அமைச்சர். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிற்பாடு ஜார்ஜியாவின் எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர். ஜார்ஜியாவில் சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்டதும் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார். —136, 141, 165*

நிக்கலாய், இரண்டாவது [Nicolas II], *(1868-1918)—ருஷ்யாவின் கடைசிப் பேரரசர் (1894-1917).—134*

பக்கூனின் [Bakunin], **மிஹயீல் அலெக்ஸாந்திரவிச்** *(1814-1876)—ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதி. அராஜகவாதத் தத்துவாசிரியர்களில் ஒருவர். முதலாவது அகிலத்தில் மார்க்ஸியத்தின் கடும் பகைவராக நடந்து கொண்டார். ஹேக் நகரில் 1872ம் ஆண்டு நடந்த காங்கிரஸில் பிளவு நடவடிக்கைகளுக்காக முதலாவது அகிலத்திலிருந்து விலக்கப்பட்டார்.—11, 88*

பக்தானவ் [Bogdanov], (மலினோவ்ஸ்கி) அலெக்ஸாந்தர் அலெக்ஸாந்திரவிச்) *(1873-1928)—ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதி,*

தத்துவஞானி, சமூகவியலாளர், பொருளாதாரவாதி, தத்துவஞானப் பிரச்சினைகளில் மாஹ்ற வகைப்பட்ட அக நிலை-கருத்துமுதல்வாதக் கருத்தமைப்பான "அனுபவ ஒருமைவாதம்" என்பதை மார்க்ஸியச் சொற்களைக் கொண்டு வகுக்க முயன்றார்.—91

பஸாரவ் [Bazarov], **(ருத்னிவ்) விளதிமிர் அலெக்ஸாந்திரவிச்,** *1874-1939)*—ருஷ்யத் தத்துவஞானி, பொருளாதார வாதி; *1896*ம் ஆண்டிலிருந்து சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கு கொண்டு வந்தார். ருஷ்யாவில் பிற்போக்கு தாண்டவமாடி வந்த காலத்தில் *(1907-10)* போல்ஷிவிக்குகளின் அணியை விட்டுவிலகி மார்க்ஸியத் தத்துவஞானத்தை மாஹ்ற நிலையில் நின்று திருத்திய திருத்தல் வாதிகளில் ஒருவராக இருந்தார். தமது வாழ்வின் கடைசி ஆண்டுகளில் இலக்கிய, தத்துவஞான நூல்களை மொழி பெயர்த்து வந்தார்.—91

பிராக்கே [Bracke], **வில்ஹெல்ம்** *(1842-1880)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி. சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் (ஐசனஹர்கள்) மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருடன் நண்பராக இருந்தார்.—145

பிளான் [Blanc], **லூயி** *(1811-1882)*—பிரெஞ்சுச் சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டு, வரலாற்றியலாளர். முதலாளித்துவத்தில் வர்க்க முரண்பாடுகள் இணக்கம் காண முடியாதவை என்பதை மறுத்து, பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்தவர்; முதலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதை ஆதரித்தவர்.—141

பிளெஹானவ் [Plekhanov], **கியோர்கி வலென்தினவிச்** *(1856-1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவர். ருஷ்யாவில் மார்க்ஸியத்தை முதன் முதலாகப் பிரசாரம் செய்தவர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் 2வது காங்கிரஸுக்கு *(1903)*ப் பிறகு பிளெஹானவ் சமரசப் போக்கையும் சந்தர்ப்பவாத நிலையையும் கடைப்பிடித்தார். அப்புறம் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். பிற்போக்கு தாண்டவமாடி வந்த ஆண்டுகளில் *(1907-1910)* மார்க்ஸியத்தை மாஹ்ற முறையில் திரிப்பதையும் கலைப்புவாதத்தையும் எதிர்த்தார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு அவர் சாதகமாயில்லை, எனினும் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. —72, 91, 143, 144, 207.

பிஸ்மார்க் [Bismarck], ஓட்டோ *(1815-1898)*—*பிரஷ்ய, ஜெர்மன் அரசறிஞர். 1862ம் ஆண்டில் பிரஷ்யாவின் முதல் அமைச்சர்-அதிபர், வெளித்துறை அமைச்சர். ஜெர்மானியப் பேரரசின் முதல் சான்ஸலர் (1871-1890). பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனியைப் பலவந்த முறையில் ஒன்றிணைத்தார். சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டத்தைப் பிறப்பித்தார் (1878-1890).—8, 60*

பீஸ்லி [Beesly], எடுவார்டு ஸ்பென்ஸர் *(1831-1915)*—*ஆங்கிலேய வரலாற்றுசிரியர், நேர்காட்சிவாதத் தத்துவ ஞானி. பிரெஞ்சு நேர்காட்சிவாதியாகிய கோன்ட் என்பவரின் கருத்துக்களை இங்கிலாந்தில் பரப்புவதிலும் அவரது நூல்களை ஆங்கில மொழியில் பெயர்ப்பதிலும் ஈடுபட்டார்.—103*

புருக்கேர் [Brouckère], லூயி தே *(1870-1951)*—*பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர்களில், சித்தாந்தவாதிகளில் ஒருவர்; முதலாவது உலகப் போருக்கு முன் அதன் இடதுசாரிப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். முதலாவது உலகப் போரின் போது (1914-18) சமூக-தேசிய வெறியர்.—98*

புருதோன் [Proudhon], பியேர் ஜொஸேப் *(1809-1865)*—*பிரெஞ்சு சிறு முதலாளித்துவப் பொதுத்துறை எழுத்தாளர், பொருளாதாரவாதி, சமூகவியல் அறிஞர்; அராஜகவாதத்துக்கு அடிகோலியவர்களில் ஒருவர்.—9, 11, 88*

புஹ்னர் [Büchner], லுத்விக் *(1824-1899)*—*ஜெர்மன் முதலாளித்துவ உடலியல் விஞ்ஞானி, தத்துவஞானி. விஞ்ஞானக்கேடான பொருள்முதல்வாதிகளில் ஒருவர்.—17, 103*

பெபெல் [Bebel], ஔகுஸ்ட் *(1840-1913)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகம், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கம் ஆகியவற்றின் மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் திருத்தல்வாதத்தையும் சீர்திருத்தவாதத்தையும்எதிர்த்துத் தீவிரமாகப் போராடினர்.—145, 146, 153*

பெர்ன்ஷ்டைன் [Bernstein], எடுவார்டு *(1850-1932)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் கடைக்கோடிச் சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர். திருத்தல்வாதம், சீர்திருத்தவாதம் ஆகியவற்றின் தத்துவாசிரியர்.—89, 97*

பேம்-பாவர்க் [Böhm-Bawerk], **ஒய்கென்** *(1851-1914)—முதலாளித்துவப் பொருளாதாரவாதி. அரசியல் பொருளாதாரத்தில் "ஆஸ்திரிய மரபு" எனப்படும் போக்கின் பிரதிநிதிகளில் ஒருவர். இலாபம் என்பது தொழிலாளி வர்க்கத்தினரைச் சுரண்டுவதன் காரணமாகத் தோன்றியது என்று கூறும் மார்க்ஸியத்தின் மிகுதி மதிப்பு பற்றிய தத்துவத்தை எதிர்த்து எழுதிய நூல்களில் இன்றிய, வருங்காலச் செல்வங்களைப் பற்றிய அகநிலை மதிப்பீடுகளில் ஏற்படும் வேறுபாட்டின் காரணமாக இலாபம் விளைகிறதே அல்லாமல் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதின் காரணமாக அல்ல என்று வாதாடினார். பேம்-பாவர்க்கின் பிற்போக்குக் கருத்துக்கள் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறது.—92, 95*

பொமியலோவ்ஸ்கி [Pomyalovsky], **நிக்கலாய் கெராஸிமவிச்** *(1835-1863) — ருஷ்ய எழுத்தாளர், ஜனநாயகவாதி. ருஷ்யாவின் எதேச்சாதிகார-அதிகாரவர்க்கப் பழக்க வழக்கங்களையும் வன்முறைகளையும் தான்தோன்றித்தனத்தையும் தமது நூல்களில் தாக்கினார்.—164*

பௌவர் [Bauer], **எட்கார்** *(1820-1886)—ஜெர்மன் பொதுத்துறை எழுத்தாளர், இளம் ஹெகலியவாதி. புருனோ பௌவரின் சகோதரர்.—69*

பௌவர் [Bauer], **ஓட்டோ** *(1882-1938)—ஆஸ்திரியச் சமூக-ஜனநாயகவாதம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். பௌவர் முதலாளித்துவ-தேசியவாதத் தத்துவமாகிய "பண்பாட்டு-தேசியச் சுயாட்சிக்கு" அடிகோலியவர்களில் ஒருவர்.—128*

பௌவர் [Bauer], **புருனோ** *(1809-1882)—ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி. பிரபல இளம் ஹெகலியவாதிகளில் ஒருவர்.* **புனிதக் குடும்பம் அல்லது விமர்சனவகைப்பட்ட விமர்சனத்தின் விமர்சனம். புருனோ பௌவர் வகையறுக்களுக்கு எதிராக** *(1844),* **ஜெர்மன் சித்தாந்தம்** *(1845-1846) என்ற நூல்களில் கா. மார்க்ஸும் ஃபி. எங்கெல்ஸும் பௌவரின் கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தை விமர்சித்தார்கள். —6, 7, 69*

மார்க்ஸ் [Marx], **எலியனோர்** *(1855-1898) — ஆங்கிலேய, சர்வதேசத் தொழிலாளர் இயக்கத் தலைவி. மார்க்ஸின் இளைய மகள். எ. ஏவ்லிங்கின் மனைவி.—13*

மார்க்ஸ் [Marx], **கார்ல்** *(1818-1883]—5—15, 17—22, 24—29, 31—37, 39—44, 48, 52—66, 69—85,*

87—92, 94, 99—104, 106, 117, 133, 142—149, 152, 156—162, 166, 167, 184, 185, 211, 216, 217

மார்க்ஸ் [Marx], லௌரா (1845-1911)—பிரான்ஸின் தொழிலாளர் இயக்கத் தலைவி. கார்ல் மார்க்ஸின் புதல்வி. போல் லபார்கின் மனைவி.—13

மார்க்ஸ் [Marx], ஜென்னி (திருமணத்திற்குமுன் வான் வெஸ்ட்ஃபாலென்) (1814-1881)—கார்ல் மார்க்ஸின் மனைவி, அவருடைய நம்பிக்கைக்குகந்த தோழி, துணைவி.—8, 13

மார்க்ஸ் [Marx], ஹென்ரிஹ் (1782-1838)—கார்ல் மார்க்ஸின் தகப்பனார். வழக்குரைஞர், பின்னர் டிரியர் நகரில் நீதித்துறை ஆலோசனையாளர். மிதவாதக் கருத்துக்களை ஆதரித்தார்.—6

மாஜினி [Mazzini], ஜுஸேப்பே (1805-1872) — முதலாளித்துவ ஜனநாயகவாதி. இத்தாலியத் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர்கள், சித்தாந்தவாதிகளில் ஒருவர். இத்தாலியைச் சுதந்திர முதலாளித்துவக் குடியரசாகக் ''கீழிருந்து'' ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை மாஜினி முன்வைத்தார். புரட்சியெழுச்சியைப் போராட்டத்தின் பிரதானச் சாதனமாக அவர் கருதினார். எனினும் சதியாலோசனைப் போர்த்தந்திரத்தை மேற்கொள்வதும் குடியானவர்களின் நலன்களைப் புறக்கணிப்பதும் மாஜினிக்கு இயல்பாயிருந்தன. ''உழைப்பும் மூலதனமும் ஒத்துழைப்பதன்'' வாயிலாகத் தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் கற்பனாவாதச் சிறு முதலாளித்துவத் திட்டத்தை மாஜினி பிரசாரம் செய்து பரப்பினார்.—11

மாஹ் [Mach], எர்னஸ்ட் (1838-1916)—ஆஸ்திரிய பௌதிக விஞ்ஞானி, தத்துவஞானி; அகநிலைக் கருத்துமுதல்வாதி, அனுபவவாத விமர்சனப் போக்கின் மூலவர்களில் ஒருவர்.—106

மில்லிரண் [Millerand], அலெக்ஸாந்தர் எத்தியேன் (1859-1943)—பிரெஞ்சு அரசியல்வாதி. 1880ம் ஆண்டுகளில் சிறு முதலாளித்துவ மிதவாதி; 1890ம் ஆண்டுகளில் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தின் சந்தர்ப்பவாதப் போக்குக்குத் தலைமை தாங்கினார். 1899ல் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தின் உறுப்பினரானார்.—97

மின்யே [Mignet], ஃபிரான்ஸுவா ஒகூஸ்ட் (1796-1884)—மிதவாதப் போக்கு கொண்ட பிரெஞ்சு முதலாளித்துவ வரலாற்று ஆசிரியர்.—27

முல்பெர்கர் [Mühlberger], ஆர்த்தூர் *(1847-1907)*—*ஜெர்மன் சிறு முதலாளித்துவப் பொதுத் துறை எழுத்தாளர், புரூதோனின் ஆதரவாளர்; மருத்துவர்.—88*

மொலிஷோட் [Moleschott], யாக்கப் *(1822-1893)*—*ஹாலந்து நாட்டு அறிஞர், உடலியல் விஞ்ஞானி. விஞ்ஞானக் கேடான பொருள்முதல்வாதத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர்.—17*

மோஸ்த் [Most], இயோஹான் *(1846-1906)*—*ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, பின்னர் அராஜகவாதி. 1860களில் தொழிலாளர் இயக்கத்துடன் இணைந்து கொண்டார். 1878ம் ஆண்டில் சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு, நாடுகடந்து இங்கிலாந்துக்கும் அப்புறம் (1882) அமெரிக்காவுக்கும் போனார். அங்கே அராஜகவாதப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தார். —61*

ரிக்கார்டோ [Ricardo], டேவிட் *(1772-1823)* — *ஆங்கிலேய பொருளாதாரவாதி, மூலச்சிறப்புள்ள முதலாளித்துவ அரசியல் பொருளாதாரவாதத்தின் மிகப் பெரிய பிரதிநிதிகளில் ஒருவர்.—42, 81*

ரூகே [Ruge], ஆர்னால்டு *(1802-1880)*—*ஜெர்மன் பொதுத் துறை எழுத்தாளர், இளம் ஹெகலியவாதி, முதலாளித்துவ தீவிரவாதி. —8, 70*

ரென்னர் [Renner], கார்ல் *(1870-1950)*—*ஆஸ்திரிய அரசியல்வாதி; ஆஸ்திரியாவில் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவரும் தத்துவாசிரியருமாவார். முதலாளித்துவ-தேசியவாதத் தத்துவமாகிய ''பண்பாட்டு, தேசியச் சுயாட்சி'' என்பதற்கு அடிகோலியவர்களில் ஒருவர்.—128*

ரோட்பெர்டஸ்-இயாகெட்ஸோவ் [Rodbertus—Jagetzov], இயோஹான் கார்ல் *(1805-1875)* — *ஜெர்மன் விஞ்ஞானக்கேடான பொருளாதாரவாதி, அரசியல்வாதி. பிரஷ்ய ''அரசு சோஷலிஸம்'' என்ற பிற்போக்குக் கருத்தைப் பரப்பியவர்.—42*

லபார்க், லௌரா—*பார்க்க: மார்க்ஸ், லௌரா*

லப்ரியோலா [Labriola], அர்த்தூரோ *(1873-1959)*—*இத்தாலிய அரசியல்வாதி, வழக்கறிஞர், பொருளாதாரவாதி; இத்தாலியில் சிண்டிக்கலிஸ இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர். சிண்டிக்கலிஸம் பற்றிய பல தத்து*

வார்த்த நூல்களை எழுதினார். அந்நூல்களில் அவர் மார்க்ஸியத்தைச் "சீர்செய்து", தமது வேலைத்திட்டமாகிய "புரட்சிகர சிண்டிக்கலிஸத்தை" மார்க்ஸியத்துடன் இணைக்க முயற்சி செய்தார்.—*98*

லஸ்ஸால் [Lassale], ஃபெர்டினாண்டு *(1825-1864)*—ஜெர்மன் சிறு முதலாளித்துவ சோஷலிஸ்டு; அனைத்து ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தை *(1863)* நிறுவியவர்களில் ஒருவர். இந்தச் சங்கம் நிறுவப்பட்டது தொழிலாளர் இயக்கத்துக்குச் சாதகமாக இருந்தது. ஆயினும் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லஸ்ஸால் அதைச் சந்தர்ப்பவாதப் பாதையில் செலுத்தினார். லஸ்ஸாலின் தத்துவார்த்த, அரசியல் கருத்துக்களை மார்க்ஸும் எங்கெல்ஸும் கடுமையாக விமர்சித்தார்கள்.—*11, 59, 145, 146, 157—159*

லாகர்டேல் [Lagardelle], யுபேர் *(1874-1958)*—பிரெஞ்சுச் சிறு முதலாளித்துவ அரசியல்வாதி, அராஜக-தொழிற்சங்கவாதி.—*98*

லாங்கே [Lange], ஃபிரீட்ரிஹ் அல்பேர்ட் *(1828-1875)*—ஜெர்மன் முதலாளித்துவத் தத்துவஞானி, நவீனகான்ட்டியவாதி, பொருள்முதல்வாதம், சோஷலிஸம் இரண்டின் பகைவர்.—*103*

லிவோவ் [Lvov], கியோர்கி யெவ்கேனிவிச் *(1861-1925)*—ருஷ்யாவில் பெரிய நிலப்பிரபு, காடேட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்; *1917*ம் ஆண்டில் மார்ச்சு முதல் ஜூலை வரை தற்காலிக அரசாங்கத்தில் தலைமை அமைச்சராகவும் உள்துறை அமைச்சராகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு நாடுகடந்து வாழ்ந்தார்.—*137, 141, 142*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], வில்ஹெல்ம் *(1826-1900)*—ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியத் தலைவர். ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிறுவியர், தலைவர்களில் ஒருவர். *1875* முதல் வாழ்க்கை முடிவுவரை லீப்க்னெஹ்ட் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினராகவும் அதன் மைய வெளியீடான *Vorwärts*இன் பொறுப்பாசிரியராகவும் இருந்தார். முதலாவது அகிலத்தின் நடவடிக்கைகளிலும் இரண்டாவது அகிலத்தை அமைப்பதிலும் லீப்க்னெஹ்ட் தீவிரப் பங்கு கொண்டார்.—*60*

லொங்கே [Longuet], ஜென்னி *(1844-1883)*—சர்வதேசத் தொழிலாளர் இயக்கத் தலைவி. கார்ல் மார்க்ஸின் மூத்த

பெண். ஷார்ல் லொங்கேயின் மனைவி. பாட்டாளிவர்க்கச் சர்வதேசியவாத நிலையில் நின்று பத்திரிகைகளுக்கு எழுதினாள்.—13

வண்டர்வேல்டே [Vandervelde], **எமீல்** *(1866-1938)*—பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர். இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டுத் தலைமைக் குழுவின் தலைவர். கடைக்கோடிச் சந்தர்ப்பவாதப் போக்கைக் கடைப்பிடித்தார். முதலாவது உலகப் போர் நடந்த ஆண்டுகளில் *(1914-18)* சமூக-தேசியவெறியர். முதலாளித்துவ அரசாங்கத்தில் பங்கு கொண்டார்.—98

வில்லிஹ் [Willich], **ஔகுஸ்ட்** *(1810-1878)*—பிரஷ்யஇராணுவ அதிகாரி. கம்யூனிஸ்டுச் சங்கத்தின் உறுப்பினர். 1849ம் ஆண்டில் நடந்த பாடேன்-பிஃபால்த்ஸ் எழுச்சியில் பங்கு கொண்டவர். 1850ம் ஆண்டு கம்யூனிஸ்டுச் சங்கத்திலிருந்து பிளவுபட்டுப் பிரிந்த குறுங்குழுவாத-குருட்டுச் சாகஸவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்.—59.

வீப்பர் [Vipper], **ரோபெர்த் யூரியெவிச்** *(1859-1954)*—பெயர் பெற்ற ருஷ்ய வரலாற்றாசிரியர்.—212

வெஸ்ட்ஃபாலென் [Westphalen], **ஃபெர்டினண்டு ஓட்டோ வில்ஹெல்ம்** *(1799-1876)*—பிற்போக்கான பிரஷ்ய அரசறிஞர். பிரஷ்ய நிலப்பிரபுத்துவ உயர்குடியினரில் ஒருவர். முடியரசுவாதி. கார்ல் மார்க்ஸின் மனைவி ஜென்னி வெஸ்ட்ஃபாலெனின் சகோதரர். 1850-58ம் ஆண்டுகளில் பிரஷ்ய உள்துறை அமைச்சர்.—8

ழொரேஸ் [Jaurés], **ழான்** *(1859-1914)*—பிரெஞ்சு, சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தின் ஒரு முக்கியத் தலைவர். *L'Humanité* என்னும் பத்திரிகையின் நிறுவகரும் தலைமை ஆசிரியருமாவார். பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாத வலதுசாரிப் பிரிவின் தலைவர். அதே சமயம் இராணுவவாதத்தை எதிர்த்து ஊக்கத்துடன் போராடினார். முதலாவது உலக போரின் முன்னாள் *(1914-1918)* இராணுவவாதிகள் கூலிக்கு அமர்த்திய கொலையாளால் படுகொலை செய்யப்பட்டார்.—98

ஸஸூலிச் [Zasulich], **வேரா இவானவ்னா** *(1849-1919)*—ருஷ்யாவின் நரோத்னிக் (சிறு முதலாளித்துவப் போக்குள்ள ருஷ்யப் புரட்சி இயக்கம்), பின்னர் சமூக-ஜனநாயக இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்ட தலைவி. பிற்காலத்தில் மென்ஷிவிஸ நிலையை மேற்கொண்டார்.—73

ஸ்தெக்லோவ் [Steklov], **யூரி மிஹாய்லவிச்** *(1873-1941)*—*ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதி, ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸுக்குப் (1903) பிறகு போல்ஷிவிக்குகளை நெருங்கி வந்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து "புரட்சிகரப் பாதுகாப்புவாத" நிலையைப் பற்றி நின்றார், பிறகு போல்ஷிவிக்குகளின் பக்கம் சேர்ந்தார். —136, 141*

ஸ்மித் [Smith], **ஆதாம்** *(1723-1790]*—*ஆங்கிலேய பொருளாதாரவாதி, மூலச்சிறப்புள்ள முதலாளித்துவ அரசியல் பொருளாதாரவாதத்தின் மிகப் பெரிய பிரதிநிதிகளில் ஒருவர்.—36, 81*

ஷாப்பர் [Schapper], **கார்ல்** *(1812-1870)*—*ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைவர். கம்யூனிஸ்டுச் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினர். 1848-1849ல் நடந்த புரட்சியில் பங்கு ஆற்றியவர். 1850ல் கம்யூனிஸ்டுச் சங்கம் பிளவுபட்ட போது "இடதுசாரிக்" குழுவின் தலைவர்களில் ஒருவர். 1856ல் மறுபடி மார்க்ஸுடன் நெருக்கமாகச் சேர்ந்து கொண்டார்.—59*

ஷெலிங் [Schelling], **ஃபிரீட்ரிஹ் வில்ஹெல்ம்** *(1775-1854)*—*மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் பிரதிநிதி, புறநிலைக் கருத்துமுதல்வாதி.—102*

ஷ்டைன் [Stein], **லோரென்ட்ஸ்** *(1815-1890)*—*ஜெர்மன் வழக்கறிஞர், அரசமைப்பு முறைகளை ஆராய்ச்சி செய்யும் வரலாற்று ஆசிரியர், விஞ்ஞானச் சிறப்பற்ற பொருளாதாரவாதி.—21*

ஹக்ஸ்லி [Huxley], **தாமஸ் ஹென்ரி** *(1825-1895)*—*ஆங்கிலேய இயற்கை விஞ்ஞானி. சார்லஸ் டார்வினின் நெருங்கிய கூட்டாளி, அவருடைய போதனையை மக்களிடையே பரப்பியவர். தத்துவஞானத்தில் தாம் ஹியூமைப் பின்பற்றுபவர் என்று ஹக்ஸ்லி கருதினார். ஆனால் திண்ணமான இயற்கை விஞ்ஞானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கையில் ஹக்ஸ்லி பொருள்முதல்வாத நிலையை மேற்கொண்டார்.—17, 102, 106, 107*

ஹியூம் [Hume], **டேவிட்** *(1711-1776)*—*ஆங்கிலேய தத்துவஞானி, அகநிலைக் கருத்துமுதல்வாதி, அறியொணாவாதி. —16, 103, 106*

ஹெகல் [Hegel], கியோர்க் வில்ஹெல்ம் ஃபிரீட்ரிஹ் *(1770-1831)—மாபெரும் ஜெர்மன் தத்துவஞானி, புறநிலைக் கருத்து முதல்வாதி. இயக்கவியலை மிக விரிவான, ஆழமான முறையில் செப்பம் செய்தார்; இது தத்துவஞானத்துக்கு ஹெகல் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொண்டாகும். இயக்கவியல் பொருள்முதல் வாதத்தின் தத்துவார்த்தத் தோற்றுவாய்களில் ஒன்றாகப் பயன் பட்டது.—6, 12, 14, 15, 18—20, 65, 66, 79, 90, 103, 105, 216, 217*

ஹோலியோக் [Holyoak], ஜார்ஜ் ஜேக்கப் *(1817-1906)—ஆங்கிலேய கூட்டுறவு இயக்கத் தலைவர், சீர்திருத்த வாதி.—57*

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசகநேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1
87/89, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1
சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8

முன்னேற்றப் பதிப்பகம்

தமிழ் மொழியில் சோவியத் நூல்கள்

லெனின், வி. இ. என்ன செய்ய வேண்டும்?

1901ஆம் ஆண்டின் இறுதியிலும் 1902 ஆம் ஆண்டின் துவக்கத்திலும் எழுதப்பட்ட இந்நூல், அனைத்துலகிலும் ருஷ்யாவிலும் நடைபெற்ற சமூக-ஜனநாயக இயக்கத்தில் சந்தர்ப்பவாதம், திருத்தல்வாதம் ஆகியவற்றை எதிர்த்து எழுதப்பட்டது. அதில் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்திற்கு விஞ்ஞானக் கம்யூனிசத் தத்துவத்தின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்படுகிறது; தொழிற்சங்கவாதக் கொள்கைக்கும் மெய்யான புரட்சிகரப் பாட்டாளி வர்கக்க் கொள்கைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகிறது.

தொழிலாளர் இயக்கத்தில் கட்சி ஒழுங்கமைப்பு செய்து தலைமைதாங்கும் புரட்சிகரச் சக்தியாகும் என்ற கோட்பாடு நூலின் அடிப்படைக் கருத்தாகும். புதிய வகைக் கட்சியைப் பற்றிய கோட்பாடுகளை லெனின் வகுத்தளித்தார்.

நூலில் பதிப்பாளர் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

லெனின், வி. இ. ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகவாதத்தின் இரண்டு போர்த்தந்திரங்கள்

1905ஆம் ஆண்டில் ஜூன்-ஜூலையில் எழுதப்பட்ட இந்நூலில் லெனின் மார்க்சியக் கட்சியின் போர்த்தந்திர அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கினார்; மென்ஷிவிக் கட்சியினரின் சிறுமுதலாளித்துவப் போர்த்தந்திரக் கோட்பாடுகளைத் தாக்கி முறியடித்தார். முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்திற்குள்ள தலைமைப் பாத்திரம் பற்றியும், ஜார் மன்னர் ஆட்சியைக் கவிழ்த்து ஜனநாயகக் குடியரசை நிறுவுவதற்கு அனைத்து மக்களின் ஆயுதமேந்திய எழுச்சி மிகவும் முக்கியமான வழியாகும் என்னும் கருத்தைப் பற்றியும், தற்காலிகப் புரட்சி அரசாங்கம் பற்றியும், பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயிகளின் புரட்சி-ஜனநாயகச் சர்வாதிகாரம் பற்றியும் விளக்கி எழுதினார்; சோஷலிசப் புரட்சியின் புதிய தத்துவத்தையும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக மாறிச் செல்வதைப் பற்றிய தத்துவத்தையும் உருவாக்கினார்.

நூலின் இறுதியில் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.